
நீ வருவாய்
என...
பிரேமா

# நீ வருவாய் என...

பிரேமா

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.


## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : நீ வருவாய் என... |
| ஆசிரியர் | : பிரேமா |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : மே, 2017 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 412 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.180.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : கே.வி.எஸ். ஆப்செட்,<br>சென்னை-14. |

## முன்னுரை

அன்பார்ந்த வாசகர்களே!

உங்களை என்னுடைய இருபதாவது கதையில் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். என்னுடைய மின்னஞ்சல் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கும் விமர்சனங்களுக்கும், உங்களுடைய தொடர் ஆதரவிற்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கதைக்கும் உங்களின் மேலான கருத்துக்களை என்னுடைய மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்து என்னை ஊக்கப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பதின் பருவத்தில் தன் தந்தையையும் தாயையும் இழந்து அநாதையாய் தவிக்கும் இக்கதையின் நாயகி எப்படி தனது அன்பால் உறவுகளை வென்று தன்னை சுற்றிலும் ஒரு உறவுக் கோட்டையை அமைத்தாள் என்பதே இக்கதை. என் கதையை படிக்கும் வாசகர்கள் சந்தோஷமாய் உணர வேண்டும் என்பதே என்னுடைய ஆசை. அப்படிப்பட்ட கதை கருவை மட்டுமே தேர்ந்தெடுத்து நான் என் கதைகளை எழுதிக் கொண்டிருக்கிறேன். அந்த வகையில் இந்த கதையும் உங்களை மகிழ்விக்கும் என நம்புகிறேன்.

எனக்கு தொடர்ந்து ஊக்கமும் ஆதரவும் அளிக்கும் அருணோதயம் திரு.அருணன் ஐயா அவர்களுக்கு நான் என்றென்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்புடன்,

**பிரேமா**

premaarumugam@yahoo.com

## ஆசிரியரின் பிற வெளியீடுகள்

1) காத்திருந்தேன் உனது காதலுக்காக
2) நீயில்லாமல் நானில்லை
3) யாதுமாகி என்னுள் நின்றாய்
4) உயிரே உனக்காக
5) வரமாய் வந்த தளிரே
6) மனசெல்லாம் நீயே
7) மாயம் செய்தாயோ
8) இதயத்திலே அமர்வாய்
9) என்னை ஆளும் உறவே
10) என்றும் மகிழ்வுடன்
11) எங்கிருந்தோ வந்தான்
12) மையல் கொண்டேனடி
13) நிழலாய் தொடர்வேன்
14) இனியொரு பிரிவில்லை
15) நின்னை மறவேன் நின்னை பிரியேன்
16) நேசத்திலே நெஞ்சம்
17) மனதை திருடி விட்டாய்
18) தொடரும் உறவிதுவோ
19. தள்ளிப் போகாதே!

# நீ வருவாய் என...

## 1



**கா**லையில் கண் விழிக்கும் பொழுதே ஜோதி மிக உற்சாகமாய் உணர்ந்தாள். இன்று முதல் அவள் கல்லூரிக்கு செல்ல போகிறாள். உற்சாகத்திற்கு கேட்கவா வேண்டும்?

மாணவப் பருவத்தில் மிகவும் முக்கியமானதும் சந்தோஷமானதும் கல்லூரிப் பருவம் தான். பள்ளிகளில் விதிக்கப்படும் தடைகள் பல இங்கு இருக்காது. நாம் அனைவருமே திரும்பி சென்று வாழ நினைக்கும் காலகட்டம் அது தானே!



சுரிதாரில் துப்பட்டாவை பின் செய்து கொண்டு முதுகு தாண்டி வளர்ந்திருந்த கூந்தலை பின்னலிட்டு கொண்டு எவ்வித முகப் பூச்சும் இல்லாமல் சிறிய பொட்டை மட்டும் ஒட்டிக் கொண்டு தன் கல்லூரிக்கு கிளம்பினாள்.

ஜோதி தன் வகுப்பிற்கு வழி கேட்டு அதை கண்டு பிடித்து அந்த வகுப்பறைக்குள் நுழைந்தாள். புதிதாய் நுழைபவளை அனைவரும் ஏறிட்டுப் பார்த்தனர். ஜோதிக்கு கூச்சமாக இருந்தது.

எங்கு சென்று அமர்வது என்று அவள் தடுமாறிக் கொண்டிருக்க ஒருத்தி நகர்ந்து ஜோதிக்கு இடமளித்தாள்.

ஜோதி அங்கே அமர்ந்து கொண்டு அவளை பார்த்து புன்னகைத்து, ''தாங்க்ஸ். நான் ஜோதி. உன் பேர் என்ன?'' என்றாள்.

''நான் கீர்த்தி. என்று அவள் தன் வலது கையை ஜோதியிடம் நீட்டினாள்.

அவளது கை பற்றி குலுக்கி, ''நீங்களெல்லாம் என் கூட எப்படி பழகுவீங்களோன்னு கொஞ்சம் நெர்வஸா வந்தேன். இந்த நிமிஷம் என்னோட பயத்தை பொடி பொடியாக்கிட்ட கீர்த்தி. அதுக்கு ஒரு ஸ்பெஷல் தாங்க்ஸ்.'' என்றாள்.

''கீர்த்தியை நம்பினோர் கைவிடப்படார்.'' என்று அவள் தன் வலது கையை உயர்த்திக் காட்டி ஆசீர்வதித்தாள்.

ஆசிரியர் வரவும் அன்றைய பொழுது இறக்கை கட்டி பறக்க ஆரம்பித்தது. முதல் நான்கு வகுப்புகள்

முடிவடையும் முன் ஜோதி ஒரு விஷயத்தை உணர்ந் தாள். மாணவர்களில் சிலர் தன்னை சைட் அடிப்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

'இது என்னடா புது சிக்கல்!' என்பது போல் தன் நெற்றியை தட்டிக் கொண்டவள் மதிய இடைவேளை யின் போது அவர்களிடம் பேசிவிடத் தீர்மானித்தாள்.

ஆசிரியர் பாடம் நடத்துவதற்காக சிறிய மேடை ஒன்று எல்லா வகுப்புகளிலும் போடப்பட்டு இருக்கும். அதில் ஏறி நின்று அங்கு போடப்பட்டு இருக்கும் மேஜையின் பின்னே நின்று தான் ஆசிரியர் பாடம் நடத்துவார். ஜோதியும் மேடை ஏறி மேஜையின் முன் நின்று பேச ஆரம்பித்தாள்.

''பிரண்ட்ஸ்! என் பேர் ஜோதின்னு இந்நேரத்திற்கு உங்க எல்லோருக்கும் தெரிஞ்சு இருக்கும். நான் லேட்டரல் என்ட்ரி மூலம் நேரடியா செகண்ட் இயரில் உள்ளே நுழைஞ்சு இருக்கேன். நான் டென்த் முடிச்ச உடனே டிப்ளமோ ஜாயின் பண்ணினேன். அப்புறமா ரெண்டு வருஷம் வேலைக்கு போனேன்.

''நான் எல்.கே.ஜி சேரும் போதே எனக்கு நாலு வயசு. ஆக மொத்தம் நான் உங்களை விட ஒரு மூணு வயசு பெரியவளா இருப்பேன். நீங்க யாரும் எனக்கு மரியாதை கொடுக்கணும்னு நான் இதை சொல்லலை. உங்களுக்கு என்னை பத்தி தெரியணும்ல. அதுக்கு தான் சொன் னேன்.'' என்று கூறிவிட்டு இறங்கினாள்.

'மூணு வயசு பெரியவளான என்னை சைட் அடிச்சு உங்க நேரத்தை வீணாக்காதீங்க. நீங்களே புரிஞ்சு நடந்துக்கோங்க' என்று சொல்லாமல் சொன்னாள்.



சில மாணவர்களின் முகம் பியூஸ் போன பல்ப்பாய் மாறியதை கண்டுகொள்ளாமல் தன் வேலைகளை பார்க்க ஆரம்பித்தாள்.

ஜோதியின் தாய் தகப்பன் இருவருமே இவ்வுலகில் இல்லை. ஜோதியின் தந்தை, தன் நண்பனின் திரு மணத்திற்கு சென்ற இடத்தில் மணப்பெண்ணின் தோழியின் மேல் காதல் கொண்டு அவளை தன் வீட் டாரை எதிர்த்துக் கொண்டு மணம் செய்தார். ஜோதி யின் தாய் வீட்டிலும் அந்த திருமணத்தை ஆதரிக்க வில்லை.

ஜோதியின் பெற்றோர் இருவருமே வசதியான குடும்பத்தை சேர்ந்தவர்கள். வீட்டை எதிர்த்து கொண்டு வந்ததால் நடுத்தர வாழ்க்கையை வாழ ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு இடையே இருந்த அன்பும் காதலும் அவர்களை மகிழ்வுடன் வாழ வைத்தது.

ஜோதியின் தந்தை சந்திரன் ஒரு அலுவலகத்தில் வேலை பார்த்து வந்தார். அவள் தாய் வீட்டையும் ஜோதியையும் பார்த்துக் கொண்டார். வருடங்கள் ஏற ஏற அவர்களது பொருளாதார தரமும் உயர்ந்தது.

சந்திரன் கடன் வாங்கி வீட்டை கட்டி முடித்தார். அதனால் அவர்கள் வாடகை வீட்டில் இருந்து சொந்த வீட்டிற்கு சென்றனர். அந்தக் கடன் அடைந்ததும் திரும்பவும் கடன் வாங்கி முன் பக்கம் ஒரு கடையும் மாடியையும் கட்டி முடித்து இரண்டையும் வாடகைக்கு விட்டார்.

சொந்தமாக தொழில் தொடங்கி பெரிய ஆளாய் வரப் போகிறோம் என்று நினைத்து அவர் ஆரம்பித்த

தொழில் சரிவை சந்திக்க சந்திரன் நிலை குலைந்தார்.

ஜோதி அப்பொழுது பத்தாம் வகுப்பு தேர்வு எழுதி விட்டு விடுமுறையில் இருந்தாள். சந்திரன் தன் மனைவியிடம் புலம்பிக் கொண்டிருந்ததை ஜோதி தற்செயலாய் கேட்க நேர்ந்தது.

''இப்படி சொதப்பும்னு நான் எதிர்பார்க்கலைம்மா. இப்ப என்ன பண்ணுறது?''

''பணம் தானேங்க போச்சு. அதுக்கு ஏன் இவ்வளவு வருத்தப்படுறீங்க? நாம நம்ம வாழ்க்கையை எதிலே இருந்து தொடங்கினோம்னு உங்களுக்கு ஞாபகம் இருக்கா? பூஜ்ஜியத்தில் இருந்து. ஆனா இப்போ... நாம தங்கி இருக்க சொந்தமா ஒரு வீடு இருக்கு. மாடியையும் கடையையும் வாடகைக்கு விட்டிருக்கோம்.''

''அதுக்கு வாங்கின லோனை நான் இன்னும் அடைக்கலை. நான் தொழிலில் அந்த பணத்தை தொலைக்காமல் இருந்தால் அந்த பணம் ஜோதியின் படிப்பு செலவுக்கு யூஸ் ஆகி இருக்கும். நான் என் பெண்ணை இஞ்சினியர் ஆக்கணும்னு நினைச்சேன். ஆனா இப்போ பாரு... அவளை எப்படி படிக்க வைக்க போறேன்? எப்படி நல்ல மாப்பிள்ளையை தேடி கல்யாணம் பண்ணி வைக்க போறேன்?'' என்று வருந்திக் கொண்டிருந்ததை கேட்ட ஜோதி வந்த சுவடு தெரியாமல் தன் அறைக்குள் சென்று படுத்துக் கொண்டாள்.

தீவிர யோசனைக்கு பின் ஜோதி ஒரு முடிவிற்கு வந்தாள். அடுத்த நாள் மாலை தன் தந்தையை அழைத்துக் கொண்டு கோவிலுக்கு சென்றாள்.



''அப்பா! நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்.''

''நீ அம்மாவை கழட்டி விட்டுட்டு என் கூட ஜோடி போடும் போதே அது எனக்கு புரிஞ்சுதுடா குட்டி. அப்பாகிட்ட என்ன கேட்கணும்? உனக்கு என்ன வேணும்?''

''நீங்களும் அம்மாவும் நேத்து பேசினதை நான் கேட்டேன்பா.'' என்றதும் அவர் முகம் மாறியது.

''நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டீங்களே! நான் டென்த் எக்ஸாம் ரொம்ப நல்லா பண்ணி இருக்கேன்பா. கண்டிப்பா நிறைய மார்க் வாங்குவேன். பேசாமல் நான் டிப்ளமோ கோர்ஸ் பண்ணுறேன். நான் எடுக்கப் போகும் மார்க்கிற்கு எனக்கு கவர்மெண்ட் காலேஜில் சீட் கிடைக்கும். மூணு வருஷம் டிப்ளமோ முடிச்ச பின்னாடி ரெண்டு வருஷம் வேலை பார்க்கிறேன். அதுக்கு அப்புறமா நான் இஞ்சினியரிங் பண்ணுறேன்பா.

''இந்த அஞ்சு வருஷத்திலே நான் படிக்கிறதுக்கு தேவையான பணத்தை உங்களால சம்பாதிக்க முடியாதா? அஞ்சு வருஷத்திலே உங்க லோனும் அடைஞ்சுடும். நானும் சம்பாதிச்சு பணம் சேர்ப்பேன். என்னை படிக்கவும் வைக்கலாம். எனக்கு நல்ல முறையிலே கல்யாணமும் பண்ணி தரலாம். யோசிங்கப்பா.'' என்று சொன்னாள்.

ஸ்கூல் பீஸை விட பாலிடெக்னிக் காலேஜ் பீஸ் கம்மி என்பதால் மகளது யோசனையை ஏற்றுக் கொள்வது என்ற முடிவிற்கு சந்திரன் வந்தார்.

சந்திரன் தான் முன்பு வேலை பார்த்த கம்பெனிக்கே சென்று வேலை கேட்டார். அவரின் கடின உழைப்பும் நேர்மையும் அந்த முதலாளிக்கு என்றுமே பிடித்தமான ஒன்று என்பதால் அவர் எந்தக் கேள்வியும் கேட்காமல் சந்திரனை திரும்பவும் வேலைக்கு சேர்த்துக் கொண்டார்.

அதனால் அவர்களது வாழ்க்கை இயல்பு நிலைக்கு திரும்பியது. அவள் படிப்பை முடிக்கும் தருவாயில் அவர்களது வீட்டின் மேல் உள்ள கடன் முற்றிலுமாக அடைக்கப்பட்டது.

இனி எல்லாமே வளர்ச்சி தான் என்று அவர்கள் ஆனந்தம் அடைந்தார்கள். ஆனால் தகப்பனும் மகளும் போட்ட கணக்கை இறைவன் மாற்றி அமைத்தான்.

ஜோதி டிப்ளமோ கோர்ஸ் முடித்த பொழுது சந்திரன் சாலை விபத்தில் அநியாயமாய் இறந்து போனார். சந்திரன் தவறுதலாய் சாலையை கடந்ததால் அவரது இறப்பிற்கு நஷ்ட ஈடு கூட கிடைக்கவில்லை. தந்தையின் இறப்பிற்கு பின் வீட்டு பொறுப்பை ஏற்க வேண்டிய நிலை ஜோதிக்கு ஏற்பட்டது.

அவளுக்கு கேம்பஸில் நல்ல வேலை கிடைத்தது. ஜோதி அந்த வேலையில் சேர்ந்தாள்.

அப்பொழுது ஒரு நாள் ஒரு பெரியவர் ஜோதியை பார்க்க வந்தார். தன் பெயர் பிரகாஷ் என்றும் அவர் தான் அவளுடைய தந்தை வழி பாட்டனார் என்றும் தெரிவித்தார். அவளை தன்னோடு வரும்படி அழைத்தார்.

ஆனால் அழைப்பு அவளுக்கு மட்டுமே! அவளின் அம்மாவிற்கு இல்லை என்பதை அறிந்த ஜோதி அவருடன் செல்ல மறுத்து விட்டாள்.



சந்திரன் இறந்ததில் இருந்து அவள் தாய் ஓட்டுக்குள் சுருண்ட நத்தையாய் மாறிப் போனார். ஜோதி தான் அவரை இழுத்து வைத்து பேசிக் கொண்டிருப்பாள். ஜோதி ஜோக் சொன்னால் கூட அளவாய் புன்னகைப்பார். அவ்வளவு தான்.

‘எனக்காக தான் அம்மா இன்னும் உயிரோட இருக்காங்களோ! இல்லைன்னா எப்பவோ அப்பா கூடவே போய் இருப்பாங்களோ?’ என்று ஜோதி எண்ணும் அளவிற்கு தான் அவள் அம்மாவின் நடவடிக்கைகள் அமைந்தன.

சந்திரன் இறந்து இரு வருடங்கள் முடியும் முன்பு ஜோதியின் தாயும் இறந்தார். தூக்கத்திலேயே அவரது மரணம் நிகழ்ந்தது.

தந்தையின் ஆசைப்படி இஞ்சினியர் ஆக வேண்டும் என ஜோதி தீர்மானித்தாள். தன் மூன்று வருட கல்லூரி படிப்பிற்கு ஆகும் செலவு தன் பெயரில் வங்கியில் இருந்த காரணத்தால் அவள் கல்லூரியிலும் சேர்ந்து விட்டாள்.

இது தான் இத்தனை வருடங்களாய் ஜோதியின் வாழ்வில் நடந்த கதை.

ஜோதியின் வீட்டின் முன்பு இருந்த கடையில் இருந்தவர்கள் அதை காலி செய்துவிட்டு சென்றனர். ஜோதி அங்கே டிவி, மிக்ஸி போன்ற எலக்ட்ரானிக் சாதனங்களை ரிப்பேர் செய்து தரும் கடை ஒன்றை நடத்த ஆரம்பித்தாள்.

காலையில் கல்லூரிக்கு சென்று வருபவள் மாலையில் கடையில் வேலை செய்ய ஆரம்பித்தாள்.

பத்தாயிரம் ரூபாய் பணம் செலவு செய்து செகண்ட் ஹாண்டில் ஒரு ஸ்கூட்டி வாங்கினாள். அதில் தான் கல்லூரிக்கு சென்று வந்தாள்.

காலை மற்றும் மதிய சாப்பாட்டை கல்லூரியில் சாப்பிட்டு விடுவாள். இரவு மட்டுமே வீட்டில் சாப் பிடுவாள். சில சமயம் பழங்கள் சாப்பிட்டு படுத்துக் கொள்வாள். பாக்கெட் மாவு வாங்கி சில நேரம் தோசை சுடுவாள்.

எப்பொழுதாவது சாதம் வைப்பாள். ஆனால் முழு சமையலாக எல்லாம் செய்ய மாட்டாள். குழம்பு வைத்தாள் என்றால் அப்பளம் பொறித்துக் கொண்டு சாப்பிட்டு விடுவாள். இல்லை காய் செய்து அதையே சாதத்தில் பிசைந்து சாப்பிட்டுக் கொள்வாள். மொத் தத்தில் சிக்கனமாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

கல்லூரியில் கீர்த்தி அவளுக்கு நெருங்கிய தோழி யாய் மாறினாள். ஜோதி, கீர்த்தி, கண்ணன் மூவரும் லேப் மேட்டாக இருந்தனர்.

ஜோதி தங்களை விட வயதில் பெரியவள் என நினைத்த சில மாணவர்கள் அவளை மரியாதையாய் கூப்பிட ஆரம்பித்தார்கள். சிலர் ஜோதியின் பேச்சை கேட்டு திருத்திக் கொண்டார்கள். வெகு சிலர் மட்டும் மாறவில்லை. அவர்களில் கண்ணனும் ஒருவன்.

‘‘ஆளு பார்க்க தடி மாடு மாதிரி இருக்கான். இவன் என்னை வாங்க போங்கன்னு கூப்பிட்டு உசுரை வாங்குறான்.’’ என்று ஜோதி கீர்த்தியிடம் அலுத்துக் கொள்ளுவாள்.



ஜோதி என்ன திட்டினாலும் அவன் கண்டு கொள் வதே இல்லை. மூவரின் நட்பும் பலமாய் இறுகியது.

ஜோதியின் தாத்தா அவ்வப்போது எட்டிப் பார்ப்பார். தாத்தாவிற்கும் பேத்திக்கும் இடையே வார்த்தை போர் மூளும்.

‘‘இப்பவாச்சும் நான் சொல்லுறதை கேளு ஜோதி. என் கூட கிளம்பி வா. தாத்தா சொத்து உனக்கு தான். நீ கஷ்டப்பட வேண்டாம்.’’

‘‘எங்க அப்பா வேண்டாம்னு சொன்ன சொத்தை நான் எப்படி ஏத்துக்குவேன்?’’

‘‘சரி சொத்தை ஏத்துக்க வேண்டாம். என் கூட கிளம்பி வந்துடு.’’

‘‘எங்க அப்பா இறந்த உடனே வந்து என்னையும் எங்க அம்மாவையும் சேர்த்து கூப்பிட்டு இருந்தால் நீங்க சொந்தத்துக்கு மதிப்பு குடுக்குறீங்கன்னு நான் நினைச்சு இருப்பேன். ஆனா நீங்க என்ன சொன்னீங்க... எங்க அம்மா வேணாம். நான் மட்டும் போதும்னு சொன்னீங்க. அப்புறம் நான் எப்படி உங்க கூட வருவேன்?’’

‘‘உங்க அம்மா தான் இத்தனை பிரச்சனைக்கும் காரணம். என்னால அவளை எப்படி எங்க வீட்டுக்கு கூட்டிட்டு போக முடியும்?’’

‘‘எங்க அம்மா அப்பா கல்யாணம் செஞ்சது உங்களுக்கு பிடிக்கலை. அந்த கல்யாணத்தின் மூலமா வந்த என்னை மட்டும் எதுக்கு ஏத்துக்க நினைக்கிறீங்க? என்னையும் உதறி போட்டுட்டு போய் வேற வேலை இருந்தால் பாருங்க. எங்க அம்மா இல்லாமல் நான்

எப்படி இந்த பூமியில் வந்து குதிச்சேன்? பெருசா பேச வந்துட்டார்.''

''அப்போ இந்த தாத்தா கூட வர மாட்டே!''

''நான் பிறந்தப்போவே 'நான் தான் உன் தாத்தான்னு' வந்து நீங்க நின்னிருக்கணும். ஆனா நீங்க அப்படி வந்து நிக்கலை. இல்லை எங்க அப்பா போன பின்னால வந்து எங்க ரெண்டு பேரையும் கூட்டிட்டு போய் இருக்கணும். அதையும் செய்யலை.

''இப்போ வந்து நீ வா. என் சொத்தை ஏத்துக்கோ. அதுக்கு அப்புறமா நான் ஊருக்கும் உலகத்துக்கும் உன்னை என் பேத்தின்னு அறிமுகப்படுத்துறேன்னு சொன்னால்... நான் வரணுமா? அதெல்லாம் முடியாது. எங்க அம்மா அப்பாவை ஏத்துக்காத உங்க சொத்தும் எனக்கு வேண்டாம். உங்க சொந்தமும் எனக்கு வேண்டாம்.''

''நீயா ஒரு நாள் தாத்தா நீங்க எனக்கு வேணும்னு வந்து நிக்க தான் போறே! அப்ப தான் நான் இந்த ஊருக்கு முன்னாடி உன் தாத்தான்னு சொல்லுவேன். அது வரைக்கும் சொல்ல மாட்டேன்.''

''என்ன சவாலா? உங்க சவாலை நானும் ஏத்துக் கிறேன்.'' என்றதும் அவள் தாத்தா விருட்டென்று கிளம்பி சென்று விட்டார்.

''இந்த வயசிலும் பிடிவாதம் பிடிக்கிறதை பாரு! இப்பவே இப்படின்னா... அப்போ எப்படி இருந்திருப் பார்? பாவம் எங்க அப்பா.'' என்று தன் தாத்தாவை திட்டிக் கொண்டே தன் வேலைகளை தொடர்ந்தாள்.



மாடி வீட்டு வாடகையும், ரிப்பேர் கடை வருமானமும் அவளுக்கு பணத் தட்டுப்பாடு ஏற்பட விடவில்லை.



## 2

ஜோதி மூன்றாம் வருட படிப்பில் ஆறாவது செமஸ்டரில் இருந்தாள்....

அப்பொழுது ஒரு நாள் கல்லூரியில் எதிரே நடந்து வந்த ஒருவனை கண்டு, 'யாருடா இவன் செம ஸ்மார்ட்டா இருக்கான். ஸ்டூடண்ட் மாதிரி தெரிய லையே! லெக்சரரா இருப்பானோ? எந்த டிபார்ட் மெண்ட்டா இருக்கும்?' என யோசித்தாள்.

அன்றே அதற்கான விடையும் அவளுக்கு கிடைத்தது.

'ஆஹா! இவன் எங்க டிபார்ட்மெண்ட் சாரா? பைனல் இயருக்கு கிளாஸ் எடுத்துக்கிட்டு இருக்கான். அப்போ அடுத்த வருஷம் எனக்கும் வருவான். இவனை பார்க்கிறதுக் காகவே எனக்கு சீக்கிரமா அடுத்த செமஸ்டர் தொடங் காதான்னு இருக்கே!' என்று எண்ணிக் கொண்டாள்.

'எப்படி இத்தனை நாள் இவன் என் கண்ணிலே மாட்டலை? ஒருவேளை இப்போ தான் இந்த காலேஜில் ஜாயின் பண்ணி இருப்பானோ!'

'அப்படியே இருந்தாலும் நடுவிலா ஜாயின் பண்ணி இருப்பான். எனக்கு சிக்த் செமஸ்டர் ஆரம்பிச்சு ரெண்டு

மாசம் ஆச்சே! அப்போ ரெண்டு மாசமா நான் தான் இவனை மிஸ் பண்ணிட்டேன் போல' என்று நினைத்துக் கொண்டாள்.

அவன் ஸ்ரீதர். இக்கதையின் நாயகன். இருபத்தி யெட்டு வயது வாலிபன். அவன் ஐ.ஐ.டியில் எம்.டெக் முடித்து பி.ஹெச்.டியும் முடித்து டாக்ட்ரேட் வாங்கினான். அதன் பின்பே ஜோதியின் கல்லூரியில் இரு மாதங்களுக்கு முன்பு வேலையில் சேர்ந்திருந்தான்.

அன்று மாலை ஸ்ரீதர் தன் காரில் ஏறி வீடு நோக்கி சென்றான். வாயில் காவலாளி கேட்டை திறக்கவும் வீட்டிற்குள் காரை செலுத்தினான். அதை வீடு என்று சொல்ல முடியாது. பங்களா என்று தான் சொல்ல வேண்டும்.

குறைந்தது ஐந்து கார்கள் நிறுத்தும் அளவிற்கு அங்கே இடமிருந்தது. அவர்கள் வீட்டில் ஏற்கனவே மூன்று கார்கள் உண்டு.

முன்பக்கம் ஒரு அலுவலக அறை உண்டு. வெளி யாட்கள் யார் வந்தாலும் அவர்களை வீட்டில் உள்ளே அனுமதிக்காமல் அங்கேயே வைத்து பேசி அனுப்பி விடுவது அந்தக் குடும்பத்து வழக்கம்.

நன்கு தெரிந்தவர்களையும் உறவினர்களையும் மட்டுமே வீட்டின் உள்ளே அனுமதிப்பர். வீடு மொத்தமும் ஏசி செய்யப்பட்டு இருக்கும்.

மிகப் பெரிய வரவேற்பறையில் எழுபது இஞ்ச் தொலைக்காட்சி இருந்தது. வரவேற்பறையில் சதுரமாய் நான்கு பக்கமும் சோபாக்கள் போடப்பட்டு நடுவில் கார்ப்பெட் விரிக்கப்பட்டு இருக்கும்.



கீழ் தளத்தில் அவனது பெற்றோர்களின் அறை, சமையல் அறை, சாப்பாட்டு அறை, விருந்தினர்களுக் கென்று ஒரு அறை உண்டு. மாடியில் வலது புறம் ஸ்ரீதரின் அறை. இடது புறம் அவனது அண்ணனின் அறை. அதற்கு மேல் இரு விருந்தினர் அறைகள் உண்டு.

ஸ்ரீதர் தன் காரை உரிய இடத்தில் நிறுத்திவிட்டு தனது மடிகணினி பையை எடுத்துக் கொண்டு கை விரலில் கார் சாவியை சுழற்றிக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்தான்.

அவன் அம்மா தெய்வநாயகி எதிர்ப்பட்டார்.

''காபி சாப்பிடுறியா ஸ்ரீதர்?''

''நோம்மா. எனக்கு பிளாக் டீ தான்.''

''ஏன்டா வயிறு எதுவும் சரியில்லையா?''

''சும்மா தான். உடம்பு சரியில்லைன்னா தான் பிளாக் டீ குடிக்கணுமா என்ன?''

அவர் தந்த டீயை ஸ்ரீதர் பருகிக் கொண்டு இருக்கும் பொழுது மாடியில் இருந்து அவன் அண்ணி தாரிகா இறங்கி வந்தாள்.

மாலை ஐந்தரை மணிக்கெல்லாம் ஸ்ரீதர் வீட்டில் இருப்பதை கண்ட தாரிகா பொறாமையோடு, ''சில பேரை மாதிரி வேலைக்கு போனோமா வந்தோமான்னு இந்த தருணுக்கு இருக்க தெரியலையே!'' என்று சப்தமாக புலம்பினாள்.

இது தன்னை குறித்த இடக்கு பேச்சு என்பதை புரிந்த கொண்ட ஸ்ரீதர், ''அண்ணி! உங்களுக்கு தருண் உங்க

கூடவே இருக்கணும்னா அவனை போன் பண்ணி வர சொல்லுங்க.'' என்றான்.

''வீட்டுக்கு இப்பவே வந்துட்டால் ஆபீஸ் வேலையை யார் பார்ப்பாங்க?''

''தெரியுதுல்ல... அப்புறம் எதுக்கு புலம்புறீங்க?''

''உங்களை மாதிரி ஜாலியா அவரால இருக்க முடியலையே.''

''நான் அளவா சம்பாதிச்சா போதும்னு இருக்கேன். அப்போ தருணும் கொஞ்சமா சம்பாதிச்சால் உங்களுக்கு ஓகேவா? அவன் சம்பாதிப்பதை உங்ககிட்ட தானே கொண்டு வந்து தரான். என்கிட்டயோ இல்லை அம்மா கிட்டயோ தரலை இல்ல...'' என்றதும் தாரிகா வாயை மூடிக் கொண்டாள்.

இவ வாயை மூட வைக்க இப்படி தான் பேசி ஆகணும் என்று தெய்வநாயகி நினைத்துக் கொண்டார்.

அப்பொழுது மாடியில் இருந்து அங்கே வந்த அவன் அண்ணன் மகள் தீப்தி, ''சித்து! இந்த டிரஸ் உங்களுக்கு சூப்பரா இருக்கு.'' என்றாள்.

அவள் தன் சித்தப்பாவை சித்து என்று செல்லமாய் சுருக்கி தான் அழைப்பாள்.

''யாரோ ஓவரா ஐஸ் வைக்கிற மாதிரி தெரியுது. தீபு குட்டிக்கு சித்துகிட்ட இருந்து என்ன வேணும்?''

''நாம வெளியே போகலாமா?''

''அதானே பார்த்தேன். நீ காரியவாதி ஆச்சே!''

''ப்ளீஸ் சித்து. ஐஸ் கிரீம் வாங்கி தாங்க.''



''சரி வா போகலாம்.'' என்றவன் அவளை அழைத்துக் கொண்டு வெளியேறினான்.

அவர்கள் வெளியே சுற்றி விட்டு வந்த பொழுது அவன் தந்தை அன்பரசு வீடு திரும்பி இருந்தார்.

''தீபு குட்டி! எங்கே போயிட்டு வரீங்க?'' என்று அன்பரசு கேட்டார்.

''நானும் சித்துவும் அவுட்டிங் போயிட்டு வரோம்.''

''அவுட்டிங்கா? எங்கே? பொம்மை கடைக்கா? இல்ல ஐஸ் கிரீம் கடைக்கா? என் பிள்ளைங்களோட சம்பாத் தியத்தை கரைக்கிறதுக்குன்னே வந்திருக்க.'' என்று அவர் செல்லமாக மிரட்ட

''தாத்தா! எனக்கு வேலை இருக்கு. நான் ரூமுக்கு போறேன்.'' என்று சொல்லிவிட்டு தீப்தி மாடியேறி சென்றுவிட்டாள்.

''முளைச்சு மூணு இலை விடலை. வேலை செய்யுறா ளாம். அலட்டலை பாரு!''

''யாருப்பா அலட்டுறா?'' என்று கேட்டுக் கொண்டே தருண் அங்கே வந்தான்.

''வேற யாரு உன் பொண்ணு தான்.''

''என் பொண்ணு சமத்து குட்டி. என் பொண்டாட்டியை சொல்லுங்க... அவள் ஒரு அலட்டல் பேர்வழி தான்.'' என்று தருண் கூறவும், அன்பரசு சுற்றிலும் பார்வை யிட்டார்.

''யாரைப்பா தேடுறீங்க?''

''தாரிகா இங்கே எங்கேயாவது நிக்கிறாளான்னு பார்த்தேன்.''

''அவ வீட்டில இல்லைப்பா. இப்போ தான் எதிரே உங்க காரிலே போய்கிட்டு இருப்பதை பார்த்தேன்.''

''என் காரிலா? என்கிட்ட கேட்கவே இல்லை.'' என்று அன்பரசுவும்,

''வெளியே போறேன்னு ஒரு வார்த்தை சொல்லிட்டு போனாளான்னு பாருங்க.'' என்று தெய்வநாயகியும் குறைபட்டனர்.

''அவளை பத்தி நல்லா தெரிஞ்சு இருந்தும் இத்தனை வருஷங்கள் கழிச்சும் அவகிட்ட இருந்து இதெல்லாம் எதிர்பார்த்தால் நாம தான் முட்டாளுங்க.'' என்று தருண் அலுத்துக் கொண்டான்.

''இந்நேரத்துக்கு அப்புறம் எங்கேடா போறாள்?''

''யாருக்கும்மா தெரியும்? கேட்டால் ஷாப்பிங்னு சொல்லுவாள்.''

''தீபு குட்டி ஸ்கூல் போகும் போது வெளியே சுத்துறாள். அது பரவாயில்லை. அவ வீட்டிலே இருக்கும் போதாவது தாரிகாவும் வீட்டிலே இருக்கலாமில்ல...''

''வீட்டிலே இருந்தால் மட்டும் தீபு குட்டியை பார்த்துக்க போறாளா என்ன. விடுங்கம்மா.''

''இவளுக்கு எப்போ புத்தி வரும்?''

''அது இந்த ஜென்மத்தில் வரும்னு எனக்கு தோணலை.''

''வர போகிற மருமகளாவது இவளை மாதிரி அலட்டல் பேர்வழியா இல்லாமல் குடும்பத்தை அனுசரிச்சு போகிறவளா வரணும்.''



''இப்போ சொன்னீங்க பாருங்க. அது வேணா நடக்க சான்ஸ் இருக்கு. சாமியை நல்லா கும்பிடுங்க.'' என்று சொல்லிவிட்டு தருண் தன் அறை நோக்கி சென்றான்.

அவர்களின் பேச்சை கேட்டுக் கொண்டு ஸ்ரீதர் அங்கு தான் அமர்ந்திருந்தான்.

'அகல்யா அம்மா எதிர்பார்ப்பது போல் அனுசரணை யான பொண்ணா இருப்பாளா?' என்று ஸ்ரீதர் யோசிக்க ஆரம்பித்தான்.

அகல்யா ஸ்ரீதரின் காதலி. இன்னும் சரியாக சொல்வ தென்றால் ஸ்ரீதரை காதலிக்கும் பெண்.

ஆம்! அவள் தான் ஸ்ரீதரை பல வருடங்களாக உருகி உருகி காதலிக்கிறாள்.

ஸ்ரீதர் பி.டெக் படித்த கல்லூரியில் தான் அவளும் படித்தாள். ஸ்ரீதருக்கு இரண்டு வருட ஜூனியர். படிக்கின்ற காலத்திலேயே ஸ்ரீதர் மேல் காதல் வயப் பட்டு அவனை பற்றி அத்தனை செய்திகளையும் சேகரித்து கொண்டு இருந்திருக்கிறாள்.

அவனது புகைப்படங்கள் அடங்கிய தொகுப்பை கொண்டு வந்து அவனிடம் நீட்டி அவனை பற்றி அனைத்தையும் கூறி இத்தனை வருடங்கள் அவனுக் காக அவள் காத்திருப்பதாக கூறிய பொழுது ஸ்ரீதருக்கு ஆச்சரியமாக இருந்தது.

'என்னையும் ஒருத்தி உருகி உருகி காதலித்து இருக்கிறாளே!' என்று கொஞ்சம் கர்வமாகவும் இருந்தது.

'அகல்யாக்கு அதிர்ந்து கூட பேசத் தெரியாது. அவள் அம்மா கூட கண்டிப்பா அனுசரிச்சு போவாள். அம்மா!

கவலையே படாதீங்க! உங்களுக்கு ஒரு சூப்பர் மருமகளை நான் கொண்டு வரேன்' என்று ஸ்ரீதர் தன் மனதிற்குள் கூறிக் கொண்டான்.



## 3

கல்லூரியில் ஜோதிக்கு ஸ்ரீதரை பார்க்கும் பொழு தெல்லாம் ஒரு பரவசம் உண்டானது.

'என்னடா இது புதுசா இருக்கு. நாம யாரையும் இப்படி நினைச்சதில்லையே! இவன் மட்டும் என்ன ஸ்பெஷல்?'

'ஜோதி! உன் நிலைமை உனக்கு நல்லா தெரியும். மனசை அலைபாய விடாதே! உன் அப்பாவோட லட்சியத்தை நிறைவேற்றுவது தான் உன்னோட முக்கிய கடமையா இருக்கணும்' என்று தனக்கு தானே அறிவுறுத்திக் கொண்டாள்.

'அப்படி எல்லாம் திசை மாறிட மாட்டேன். வயசு கோளாறு. கொஞ்சம் பார்க்கிற மாதிரி இருக்கான்ல... அதான் அவனை பார்க்கும் போதெல்லாம் ஒரு ஃபீலிங். மத்தபடி இந்த காலேஜை விட்டுட்டு போன பின்னால அவன் நினைப்பு கூட எனக்கு வராது. நான் தெளிவான பொண்ணு தான்' என்று தன் மனதை திடப்படுத்திக் கொண்டாள்.



ஆறாவது செமஸ்டர் முடியும் தருவாயில் நான்காம் வருட பீஸை கட்டி விட சொன்னார்கள். தேர்வுகள் நடந்து கொண்டிருந்ததால் ஜோதிக்கு பணம் கட்ட நேரம் வாய்க்கவில்லை. தேர்வுகள் முடிந்த பின் பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டுவிட்டாள்.

இதற்கு முன்பு பீஸை ஒரு முறை பணமாக கொண்டு வந்து கல்லூரியில் கட்டினாள். அடுத்த முறை டிடியாக எடுத்து வந்து செலுத்தினாள்.

விடுமுறை வெறும் நான்கு நாட்களே விடப்பட்டது. வங்கிக் கணக்கில் இருந்து பணத்தை எடுத்து டிடியாக மாற்ற நினைத்தாள். ஆனால் அவளால் பணத்தை மட்டுமே எடுக்க முடிந்தது. நேரம் முடிவடைந்த காரணத் தால் டிடி எடுக்க முடியவில்லை.

மறுநாள் திரும்ப வரலாம் என நினைத்து வீட்டிற்கு சென்றாள். வீட்டிற்கு சென்று பணத்தை பத்திரப்படுத் தலாம் என நினைத்து கைப்பைக்குள் கை விட்டு பார்த்தாள்.

அங்கே வெறும் இருபதாயிரம் ரூபாய் தான் இருந்தது. லட்ச ரூபாயை காணவில்லை.

திரும்ப திரும்ப பையை சரி பார்த்தாள். அதிர்ச்சியில் சில நொடிகள் சிலையாய் நின்றாள்.

'அச்சோ எங்கே போச்சு? எங்கே தொலைச்சேன்? வண்டியில் வரும் போது பையில் இருந்து விழுந் துடுச்சா? இல்ல பேங்கில் பைக்குள் வைக்கும் போதே கீழே விழுந்துடுச்சா?

'வரும் வழியில் கடைக்கு போனேனே... அங்கே யாராச்சும் பிக் பாக்கெட் அடிச்சுட்டாங்களா? எங்கே போச்சு? பீஸ் எப்படி கட்டுவேன்?

'நான் ரெண்டு வருஷம் வேலை பார்த்து சம்பாதிச்சதில் மிச்சம் பண்ணியது ப்ளஸ் அம்மா இறந்த பின்னால இருக்கிற தங்கம் எல்லாத்தையும் வித்து காசாக்கி பேங்கில் போட்ட பணம் மூணு வருஷ பீஸ் கட்ட சரியா இருக்கும்னு தானே தைரியமா காலேஜ் சேர்ந்தேன். இப்போ லட்ச ரூபாய்க்கு நான் எங்கே போவேன்?

'அம்மா! அப்பா! என்னை காப்பாத்துங்க!' என்று வேண்டிக் கொண்டு தன் வீட்டில் இருந்து வங்கி வரை திரும்ப சென்று பார்த்தாள்.

பணம் போன இடம் தான் தெரியவில்லை. அங்கேயே ஒரு மூலையில் சோர்ந்து போய் அமர்ந்து விட்டாள்.

ஐந்து நிமிடங்கள் கழித்து தன்னை தேற்றிக் கொண்டு வீட்டிற்கு திரும்பினாள். வீட்டில் வந்து ஏதேனும் தங்க நகை விற்காமல் விடுபட்டு போய் இருக்கிறதா என்று பார்த்தாள்.

அவளின் அம்மாவின் சின்ன மூக்குத்தியும் சிறு தோடும் மட்டுமே எஞ்சி இருந்தன. 'என் கழுத்திலே இருக்கிற செயின் ஒன்றில் இருந்து ஒன்றரை சவரன் இருக்கலாம். காதுல உள்ள தோடையும் கழட்டினாலும் ஐம்பதாயிரம் தேத்துறது கஷ்டமே!

'இன்னும் ஐம்பதாயிரத்துக்கு நான் எங்கே போவேன்?

'ஆண்டவா! இது என்ன சோதனை? அப்பா! எனக்கு வழி காட்டுங்கப்பா!' என்று வேண்ட ஆரம்பித்தாள்.

'தாத்தாவிடம் உதவி கேட்போமா? அவரை விட்டால் வேற யார் இருக்கா?' என நினைத்து அவருக்கு போன் செய்தாள்.



போன் ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டு இருக்கிறது என்று வந்தது.

எக்ஸாம் நடக்குதுன்னு ஒரு மாசத்துக்கு மேல டிவி ரிப்பேர் வேலையும் பார்க்கலை. அதனால கை இருப்பு சுத்தமா இல்லை. பணத்துக்கு நான் என்ன செய்ய போகிறேன் என்று தவித்தாள்.

அங்கே ஸ்ரீதர் வீட்டில்...

அன்பரசு தன் நண்பன் தேவசகாயத்துடன் போனில் பேசிக் கொண்டு இருந்தார்.

''சொல்லு தேவா. நான் விசாரிக்க சொன்னதை விசாரிச்சுட்டியா?''

''வேலை முடிஞ்சது அன்பரசு. ஸ்ரீதர் ஒரு பொண்ணை லவ் பண்ணுறது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை அவள் நல்லவள் இல்லைங்கிறது. அவளுக்கு உன் பணத்து மேல தான் குறி. உன் பையனை காப்பாத்திக்க பாரு. நான் சிங்கப்பூர் போயிட்டு வந்து உன்னை நேரில் பார்க்கிறேன்.'' என்றவர் மேலும் சில நொடிகள் பேசிவிட்டு வைத்தார்.

'ஸ்ரீதர் லவ் பண்ணுறான்னு கேள்விப்பட்ட போது எனக்கு ஆச்சரியமா இருந்துச்சு. என் பிள்ளை என்கிட்ட தன் காதலை சொல்லாமல் மறைக்கிறானா? நான் அப்படியா என் பிள்ளைகளை வளர்த்தேன்னு அதிர்ச்சியா கூட இருந்துச்சு.

'தாரிகா மாதிரி இன்னொரு பொண்ணு என் குடும்பத்துக்குள் வந்துடக் கூடாதேன்னு தான் ஸ்ரீதர் லவ் பண்ணுற பொண்ணை பத்தி விசாரிக்க சொன்னேன்.

ஆனால் தேவா அந்த பொண்ணு பணத்தாசை பிடித் தவள்னு குண்டு போடுறான். இதுக்கு தாரிகா எவ் வளவோ பரவாயில்லை. இப்போ என்ன செய்யலாம்?' என யோசித்தார்.

ஸ்ரீதரை கூப்பிட்டு விசாரிக்க முடிவு செய்தார். அவனை அழைத்து அருகே அமர்த்திக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

''ஸ்ரீதர்! நீ லவ் பண்ணுறியா?''

''உங்களுக்கு யாருப்பா சொன்னா?''

''இப்போ அது முக்கியமில்லை. இதை ஏன் நீ என்கிட்ட சொல்லலை?''

''சொல்லலாம்னு தான்பா இருந்தேன். அவ ரொம்ப நல்ல பொண்ணுப்பா. உங்களுக்கு அவளை கண்டிப்பா பிடிக்கும். நான் அவளை நம்ம வீட்டுக்கு கூட்டிட்டு வரட்டுமா?''

''என்னால நீ கூட்டிட்டு வர பொண்ணை எல்லாம் மருமகளா ஏத்துக்க முடியாது ஸ்ரீதர்.'' என்றதும் ஸ்ரீதர் அதிர்ந்தான்.

''அதையும் மீறி அந்த பெண்ணை தான் கல்யாணம் பண்ணுவேன்னு நீ சொன்னால்... என்னோட சொத்தில் சல்லி காசு கூட உனக்கு தர மாட்டேன். இந்த வீட் டில இருக்கிற உரிமையும் உனக்கு கிடையாது. நீ வெளியே போயிடலாம். இதுக்கெல்லாம் சம்மதம்னா... நீ அந்த பொண்ணையே தாராளமா கல்யாணம் பண்ணிக்கோ.''

''அப்பா! ப்ளீஸ்...'' என்றவனை கை காட்டி தடுத்து.



''நான் சொன்னால் சொன்னது தான். நீ யோசிச்சு நல்ல முடிவா எடு.'' என்றதும் ஸ்ரீதர் விருட்டென அந்த இடம் விட்டு நகர்ந்தான்.

'இதை இப்படியே விட முடியாது. என் பையனை விட்டுடுன்னு அந்த பொண்ணை மிரட்டிப் பார்ப் போமா?' என நினைத்தவர் மீண்டும் தேவசகாயத்திடமே உதவி கேட்டார்.

''ஆள் வச்சு அந்த பெண்ணை நான் மிரட்ட சொல்லுறேன். சொத்து கிடைக்காதுன்னு தெரிஞ்சால் அவளே விலகிடுவாள். நீ கவலையை விடு அன்பரசு.'' என்று அவர் கூறினார்.

மறுநாள் ஜோதி வங்கிக்கு சென்று தன் வீட்டின் பேரில் கடன் கிடைக்குமா என்று கேட்டு பார்த்தாள்.

''உங்க அப்பாவுக்கு நீங்க ஒரே வாரிசு தான்னும் உங்க அப்பா டெத் சர்ட்டிபிகேட் இதெல்லாம் குடுத்து அப்ளை பண்ணினால் ஒரு மாசத்துக்குள்ள கிடைக்க ஏற்பாடு பண்ணலாம்மா.'' என்றார்.

''ஒரு மாசம் ஆகுமா? அவ்வளவு நாள் என்கிட்ட இல்லையே. பீஸ் கட்ட லாஸ்ட் டேட்டுக்கு இன்னும் ஒரு வாரம் கூட இல்லையே.''

'முதல்ல அப்பாவோட டெத் சர்ட்டிபிகேட் இருக்கா? ஆக்ஸிடெண்ட்ல செத்ததால அதை எங்கே போய் வாங்கணும்? யாரை பார்க்கணும்? அதுக்கு எவ்வளவு நாள் ஆகும். எனக்கு காலேஜ் வேற திறந்துடுவாங்களே! என்ன பண்ணுறது?' என்று தடுமாறினாள்.

''சார்! எஜுகேஷன் லோன் போட்டால்...?''

''அது இதை விட டைம் எடுக்கும்மா.'' என்றதும் சோர்ந்து போய் வீட்டிற்கு வந்தாள்.

தனியார் நிதி நிறுவனம் ஒன்றை அணுகி வீட்டின் மேல் கடன் வாங்கலாம் என முடிவு செய்து அங்கே சென்றாள்.

''இங்கே கடன் வாங்கிறது ரொம்ப ரிஸ்க். எக்ஸ்ட்ராவா ஒரு பத்திரத்தில் கையெழுத்து வாங்குவாங்க. பணத்தை கட்ட முடியலைன்னா கொஞ்சம் அசந்தாலும் சொத்தை விற்க வேண்டிய நிலை ஏற்படும்'' என இருவர் பேசிச் சென்றதை கேட்டவள் பயந்து போய் வீடு திரும்பினாள்.

''இது வீடா? எங்க அப்பா அம்மாவோட நினைவிடம்! இதை எப்படி என்னால் விற்க முடியும்?'' என தவித்தாள்.

'அப்பா! உங்களுக்கு ஏன்பா நெருங்கின பிரண்ட்ஸ்னு யாருமே இல்லை? இப்போ எனக்கு கைட் பண்ண கூட ஆள் இல்லை. சொந்தமும் இல்லாமல் பிரண்ட்ஸ்னு யாரும் இல்லாமல்... கொடுமையா இருக்குப்பா.

'எனக்கு இருக்கிற ஒரே பெஸ்ட் பிரண்டு கீர்த்தி தான். நான் மூணு வயசு மூத்தவள்னு மத்தவங்க எல்லாம் க்ளோஸா பழக மாட்டாங்க. கீர்த்தி மட்டும் தான் நல்லா பேசுவாள். அவளும் அவ தங்கையும் காலேஜ் படிக் கிறதால அவளோட அப்பா கஷ்டப்பட்டு தான் காலேஜ் பீஸ் கட்டுறதா அவ எப்போதும் சொல்லுவாள்.'

'கேம்பஸில் வேலை வாங்கி எங்க அப்பா கடனை அடைக்கணும் என்று சொல்லிக்கிட்டே இருப்பாள். அதனால அவகிட்ட கேட்க முடியாது. வேற யாரிடம் கேட்பது?'



கீர்த்திக்கு அடுத்ததாக அவளது நினைவிற்கு வந்தது கண்ணனின் முகம் தான்.

அவனும் ஜோதியை போல் கஷ்டப்பட்ட குடும் பத்தில் இருந்து வந்தவன் என்பதால் அவனிடம் கேட்க முடியாது என்ற முடிவிற்கு வந்தாள்.

இதுவரை யாரிடமும் பண உதவி கேட்டுப் பழக்கம் இல்லாததால் யாரையும் அணுகி கேட்பதற்கு ஜோதிக்கு கூச்சமாக இருந்தது. வேறு வழியின்றி உடன் படிக்கும் தோழியின் வீட்டிற்கு சென்றாள்.

''என்ன இது அதிசயமா என் வீட்டுக்கெல்லாம் வந்திருக்கே! நான் உன்னை இன்வைட் பண்ணவே இல்லையே?'' என்று ஆரம்பமே அதிரடியாக இருந்தது.

''சும்மா தான். இந்தப் பக்கம் வந்தேன்.'' என்று ஜோதி சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவளது வகுப்பை சேர்ந்த மேலும் நான்கு தோழிகள் அங்கே வந்தனர்.

''ஜோதியை நீ இன்வைட் பண்ணினாயா?'' என்று தான் அவர்களும் கேட்டார்கள்.

ஜோதி விழிக்கவும் அனைவரும் ஒன்றாய் வெளியே சுற்ற பிளான் போட்டிருப்பதாக கூறினார்கள்.

''ஓ ஸாரி! எனக்கு அது தெரியாது. நான் ஜஸ்ட் ஹாய் சொல்ல வந்தேன். இப்போ கிளம்பிடுவேன்'' என்று ஜோதி சொல்லிக் கொண்டு இருக்கும் போதே,

அந்த வீட்டு வேலைக்காரி தன் குழந்தைக்கு உடம்பு சரி இல்லை என்று இரண்டாயிரம் ரூபாய் கடன் வேண்டுமென கேட்டு வந்து நின்றாள்.

அதெல்லாம் தர முடியாது என்று அவளை அனுப்பி வைத்த பின் அந்த ஐவரும் சேர்ந்து கடன் வாங்கு பவர்களை பற்றி மட்டமாக பேச ஜோதிக்கு உடல் கூசி தான் போயிற்று.

''ஓகே பிரண்ட்ஸ். நீங்க என்ஜாய் பண்ணுங்க. காலேஜில் பார்க்கலாம்.'' என்று சொல்லிவிட்டு வந்து விட்டாள்.

'இவளுங்க அஞ்சு பேரும் நல்ல பணம் படைச்சவங்க தான். ஆனா எல்லோரும் ஒண்ணு போல இல்ல இருக்காங்க. இவங்களையும் விட்டால் வேறு யாரை கேட்பது?'

திரும்ப திரும்ப தாத்தாவிற்கு முயற்சி செய்து கொண்டே இருந்தாள். ஆனால் பலன் தான் இல்லை.

'அவரோட அட்ரஸை அவரும் சொன்னதில்லை. நானும் கேட்டதில்லை. இது வரைக்கும் அவரை தேடிப் போய் நான் பார்த்ததில்லை. அவரா தான் அப்பப்போ வருவார். இப்போ முக்கியமா எனக்கு தேவைப்படுறார். ஆனா கண்ணு முன்னாடி வராமல் ஆட்டம் காட்டுறாரே!' என்று நொந்து போனாள்.



## 4

அப்பா! உங்க சொத்து எனக்கு தேவை இல்லை. நான் விடுதலை பத்திரத்தில் கைையெழுத்து போட்டுக்



கொண்டு வந்திருக்கேன். இந்தாங்க. என்ன வேணா எழுதிக்கோங்க.'' என்று சொல்லிவிட்டு ஸ்ரீதர் தன் அறை நோக்கி சென்றான்.

பையனின் ரோஷத்தை கண்ட அன்பரசு புன்ன கைத்து கொண்டார்.

'இவன் காதலிக்கு இந்த பணத்து மேல் தானே குறி. இனி ஸ்ரீதர் வாழ்க்கை காப்பாற்றப்படும்' என அவர் நினைத்துக் கொண்டார்.

ஸ்ரீதர் அகல்யாவை அலைபேசியில் அழைத்து, ''அகல்யா! எங்க அப்பாக்கு நம்ம லவ் மேட்டர் தெரிஞ்சு போச்சு. சொத்து தர முடியாதுன்னு மிரட்டினார். உங்க சொத்து வேண்டாம்னு விடுதலை பத்திரத்தில் கையெழுத்து போட்டு குடுத்துட்டேன். நாம சீக்கிரமா கல்யாணம் பண்ணிக்கலாம்.'' என்றான்

''நாம நேரிலே மீட் பண்ணி பேசலாம் ஸ்ரீதர். நாளைக்கு வரீங்களா?'' என்று கேட்டவள் நேரத்தையும் இடத் தையும் முடிவு செய்து விட்டு போனை வைத்தாள்.

மறுநாள் அகல்யாவை காபி ஷாப்பில் வைத்து ஸ்ரீதர் சந்தித்தான்.

''சொல்லு அகல்யா. நாம எப்போ கல்யாணம் பண்ணிக்கலாம்?''

''அதுல ஒரு சிக்கல் இருக்கு ஸ்ரீதர். நீங்க போன் பண்ணின உடனே அம்மாகிட்ட நான் நம்ம கல்யாண விஷயமா பேசலாம்னு போனேன். அப்போ எங்க அம்மா ஒரு அதிர்ச்சியான விஷயம் சொன்னாங்க.''

''அதிர்ச்சியான விஷயமா? என்ன அது?''

‘‘எங்க அம்மாவுக்கு ஜாதகத்திலே நம்பிக்கை ரொம்ப உண்டு. என் ஜாதகத்தை பார்த்ததில் எனக்கு ரெண்டாம் தாரமா கல்யாணம் பண்ணி போகிறதில் தான் யோகம் இருக்காம். அப்படி என்னை செகண்ட் வைஃபா கட்டிக் குடுத்தால் தான் என்னோட வாழ்க்கை நல்லா இருக்கு மாம். எனக்கு அப்படி மாப்பிள்ளை தான் பார்க்க போறேன்னு எங்க அம்மா ஸ்ட்ரிக்ட்டா சொல்லிட் டாங்க..’’

‘‘நீ மறுத்து சொல்ல வேண்டியது தானே.’’

‘‘நான் மறுத்து பார்த்தேன் ஸ்ரீதர். உனக்கு இருபத்தி யாறு வயசாகுது. கல்யாணம் ஆகி ஒரே வருஷத்தில் டிவோர்ஸ் வாங்கின எவனையாவது கட்டி வைக்கிறேன். அவனுக்கு ஒரு முப்பது வயசு இருந்தால்... உனக்கும் அவனுக்கும் வயசு வித்தியாசம் அதிகம் இருக்காதுன்னு சொல்லுறாங்க. ரெண்டாவது வைஃபா நான் எப்படிம்மா கல்யாணம் பண்ணிப்பேன்னு கேட்டால்.. இந்த காலத் திலே இதெல்லாம் சகஜம். நான் ஜாதகம் சொல்லுறதை தான் கேட்பேன்னு சொல்லுறாங்க.’’

‘‘இப்போ என்ன செய்யுறது?’’

‘‘நைட் எல்லாம் யோசிச்சு பார்த்ததில் எனக்கு ஒரு பிளான் தோணுச்சு ஸ்ரீதர்.’’

‘‘என்ன பிளான்?’’

‘‘நான் எங்க அம்மாகிட்ட உங்களை பத்தி இப்போ வரைக்கும் எதுவும் சொன்னதில்லை. பேசாமல் உங் களுக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகி டிவோர்ஸ் ஆகிடுச் சுன்னு சொன்னால்.. எங்க அம்மா உங்களுக்கு என்னை கட்டி குடுத்துடுவாங்க.’’



‘‘சூப்பர் பிளான் அகல்யா.’’

‘‘வெயிட் பண்ணுங்க ஸ்ரீதர். எங்க அம்மா வாய் வார்த்தையை நம்ப மாட்டாங்க.’’

‘‘அச்சோ! அப்போ என்ன பண்ணுறது?’’

‘‘பணம் குடுத்து ஒரு பொண்ணை செட் பண்ணு வோம். ரிஜிஸ்டர் ஆபீஸ்ல சைன் பண்ண கையோட டிவோர்ஸ் அப்ளிகேஷன்லயும் சைன் வாங்கிடுவோம். பேருக்கு ஒரு தாலியை கட்டி போட்டோ எடுத்துட்டு எல்லாத்தையும் அரை மணி நேரத்துல கலைச்சிடலாம். சட்டப்படி டிவோர்ஸ் ஆகிடுச்சுன்னு சில மாசம் கழிச்சு காட்டினால் எங்க அம்மா நம்பி தானே ஆவாங்க.’’

‘‘உங்க அம்மா நம்புறது இருக்கட்டும். நீ சொல்லுற பிளானுக்கு எந்த பொண்ணு ஒத்துக்குவாள்?’’

‘‘துணை நடிகைகளுக்கு இதெல்லாம் சாதாரணம் ஸ்ரீதர். கேமராக்கு முன்னாடி நடிக்கிறதை கேமரா இல்லாமல் நடிச்சுட்டு போயிடுவாங்க.’’

ஸ்ரீதர் யோசிக்க ஆரம்பித்தான்.

‘ஏற்கனவே அப்பா ஒரு பக்கம் முறைச்சுக்கிட்டு இருக் கார். இவ என்னன்னவோ பிளான் பண்ணுறாள். இதெல் லாம் நடக்கிற காரியமா? அப்படி ஒரு கல்யாணம் அவசியம் பண்ணனுமா?’

‘‘ஸ்ரீதர்! நீங்க அமைதியா இருக்கிறதை பார்த்தால் எனக்கு உடம்பெல்லாம் பதறுது. நீங்க என்னை கை விட்டுட மாட்டீங்க தானே! உங்களுக்காக தான் நான் இத்தனை வருஷமா காத்திருந்தேன். நீங்க எனக்கு

கிடைக்கலைன்னால் நான் உயிரோடவே இருக்க மாட்டேன்.'' என்றவள் கண்ணீர் விட ஆரம்பித்தாள்.

"ஐயோ அகல்யா! பப்ளிக் பிளேஸில் உட்கார்ந்துட்டு கண்ணீர் விடாதே!''

"உங்களுக்காக எத்தனையோ வருஷம் காத்திருந்தேன். இன்னும் சில மாசம் என்னால காத்திருக்க முடியும். ஆனால் நீங்க கிடைக்கவே மாட்டீங்கன்னா... அதை மட்டும் என்னால தாங்கிக்க முடியாது. உங்களுக்கு விருப்பம் இல்லைன்னா இப்பவே நேரடியா சொல் லிடுங்க.''

பத்து நிமிடங்கள் ஸ்ரீதர் அமைதியாய் அமர்ந்திருந் தான். அகல்யா தன் கண்களில் இருந்து வழியும் நீரை துடைத்துக் கொண்டே அவனை பாவமாய் பார்த்து கொண்டிருந்தாள்.

"எனக்கு இதுல சுத்தமா இஷ்டமில்லை. இதான் உன் விருப்பம்னா அப்படியே செய்வோம்.''

"ரொம்ப தாங்க்ஸ் ஸ்ரீதர். பொண்ணை நான் ஏற்பாடு பண்ணுறேன். நீங்க தாலி மட்டும் வாங்கிட்டு வாங்க.''

"தாலி அவசியமா?''

"என்ன ஸ்ரீதர் இப்படி கேட்கிறீங்க? தாலி கட்டுற போட்டோவை காட்டி தான் எங்க அம்மாவை வேற மாப்பிள்ளை பார்க்க விடாமல் என்னால தடுத்து வைக்க முடியும். உங்க டிவோர்ஸ் கேஸ் கோர்ட்டில் இருக்குன்னு சொல்லி வெயிட் பண்ண வைக்க முடியும்.''

''சரி உன் இஷ்டம்.'' என்று மனமே இல்லாமல் சொல்லிவிட்டு நகர்ந்தான்.



அன்று இரவு அகல்யா போன் செய்து, ''பொண்ணை ரெடி பண்ண சொல்லி தெரிஞ்சவர்கிட்ட சொல்லி இருக்கேன். அவர் சின்னத்திரை ஏஜென்ட். அதனால நாளைக்கு பேசி ஏற்பாடு பண்ணுறேன்னு சொல்லி இருக்கார். நாளை மறுநாள் நீங்க ரிஜிஸ்டர் ஆபீஸ் வர வேண்டி இருக்கும்.'' என்றாள்.

''ரெண்டே நாளில் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ண முடியுமா?''

''பணம் இருந்தால் இந்த உலகத்திலே எல்லாம் முடியும். எனக்கு நம்ம கல்யாணம் சீக்கிரமா நடக்கணும். அதுக்கு இந்த நாடகக் கல்யாணம் சீக்கிரமா நடக்கணும். அவ்வளவு தான்.''

''ம்ம்ம்..'' என்று ஸ்ரீதர் சுரத்தே இல்லாமல் முணு முணுத்துவிட்டு வைத்தான்.

அகல்யா சொன்ன சின்னத்திரை ஏஜென்ட், ''ஒரு அம்பதாயிரம் பணம் தந்தால் தான்மா ஆள் கிடைக்கும்.'' என்றார்.

''அரை மணி நேரத்துக்கு அவ்வளவு பணமா?''

''ரிஜிஸ்டர் கல்யாணம்னு சொல்லுறீங்க. பின்னாடியே டிவோர்ஸ் கேஸ்னு சொல்லுறீங்க. அப்போ கோர்ட்டுக்கு அலைய வேண்டி இருக்கும். ஒன் டைம் பேமெண்ட் குடுத்திடுங்க.'' என்றதும் சரி என்று சம்மதித்தாள்.

''எனக்கு கமிஷன் தனியா தந்துடணும்.''

''வாங்கி தரேன் சார். நீங்க ஆளை மட்டும் நாளைக்கே ரெடி பண்ணிடுங்க. ரொம்ப அர்ஜென்ட்டா செஞ்சு முடிக்க வேண்டி இருக்கு.'' என்றாள்.

'சட்டப்படி கல்யாணம், கூடவே டைவர்ஸ் என்றால் கல்யாணம் ஆகாத பொண்ணுங்களை தான் கேட்டு பார்க்கணும். யார் ஒத்துக்குவாங்கன்னு தெரியலை. ஒரே நாளிலே கண்டுபிடிச்சு குடுக்க சொல்லுதே இந்த பொண்ணு.' என்று புலம்பிக் கொண்டே அவரும் தனக்கு தெரிந்த துணை நடிகைகளிடம் பேசி பார்த்தார்.

கோர்ட் கேஸ்னு அலையணும். இதெல்லாம் தேவை இல்லாத வேலை என அனைவரும் மறுத்துவிட்டனர். ஒரே ஒரு பெண் மட்டும் ஒத்துக் கொண்டாள்.

"காலையிலே ரிஜிஸ்டர் ஆபீஸ் வந்துடும்மா."

"பணத்தை உடனே குடுத்துடுவீங்களா?"

"ஆமாம்மா. கையோடு பணம் வாங்கிட்டு போயிட லாம்."



## 5

மறுநாள் ஸ்ரீதர் தன் குடும்பத்தினருக்கு தெரியாமல் போலியாய் திருமணம் செய்து கொள்ள இருந்த நாள்.

அன்று ஜோதியின் தகப்பனார் இறந்த நாள். அவள் குளித்து முடித்து கோவிலுக்கு சென்று கடவுளை தரிசித்தாள்.

ஒரு ஓரமாய் அமர்ந்து கொண்டு தன் தந்தையிடம் மானசீகமாய் பேச ஆரம்பித்தாள்.



'அப்பா! நீங்க என்னை விட்டுட்டு போனதை என்னால இப்போ வரைக்கும் ஜீரணிக்க முடியலை. அம்மாவோட மறைவு நான் எதிர்பார்த்த ஒண்ணு தான். நீங்க போன உடனே அவங்க உடைஞ்சு போயிட்டாங்க.'

'அவங்க அதிக நாள் என்னோடு இருப்பாங்கன்னு எனக்கு தோணவே இல்லை. நீங்களும் அவங்களும் வாழ்ந்த வாழ்வு அப்படி! நீங்களும் அவங்களை பிரிஞ்சு இருக்க முடியாமல் அவங்களை உடனே அழைச்சுக் கிட்டீங்க.'

'ஆனா என்னை மட்டும் எப்படிப்பா இப்படி தவிக்க விடுறீங்க? நான் உங்க பொண்ணு இல்லையா? உங்க செல்ல ஜோதி இல்லையா? இந்த பிரச்னைக்கு என்ன தீர்வு?' என்று மனதிற்குள் மன்றாடிக் கொண்டிருந்தாள்.

அவளது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு கை அவளது தோளை தட்டியது.

கண் திறந்து பார்த்தாள். அவளின் பக்கத்து வீட்டு மனிதர். அவர் தான் அகல்யா சொன்ன சின்னத்திரை ஏஜெண்ட்.

''என்னம்மா பிரச்சனை? எதுக்கு தனியா உட்கார்ந்து அழுதுகிட்டு இருக்கே?''

'இவர்கிட்ட என் பிரச்சனையை சொன்னால் பணம் தரலைன்னாலும் ஏதாச்சும் ஐடியா சொன்னால் கூட போதுமே' என நினைத்தவளாய் தன் பிரச்சனையை அவரிடம் பகிர்ந்தாள்.

''ஜோதி! உனக்கு பணம் தேவை. எனக்கு கையெழுத்து போட ஒரு பொண்ணு தேவை. எனக்கு

தெரிஞ்ச ஒரு பொண்ணு அகல்யான்னு பேரு. அவ பொய்யாய் ஒரு கல்யாணம் பண்ணி பார்க்க நினைக் கிறாள். அதுக்கு ஒரு துணை நடிகை ஏற்பாடு செய்ய சொல்லி இருந்தாள். நானும் ஏற்பாடு பண்ணினேன். அந்த பொண்ணு இப்போ போன் பண்ணி வீட்டுல ஒத்துக்க மாட்டேங்கிறாங்கன்னு சொல்லுறாள். அகல்யாகிட்ட சொன்னால் தாம் தூம்னு குதிக்கிறாள்.'' என்றவர் அகல்யாவின் காதலையும் அவள் அம்மாவின் ஜாதக நம்பிக்கையையும் விளக்கினார்.

''இப்போ நான் என்ன பண்ணனும்?''

''ரிஜிஸ்டர் மேரேஜ். கூடவே விவாகரத்து பத்திரத் திலும் கையெழுத்து போடணும். அவ்வளவு தான். நடுவிலே ஒரு தடவை மட்டும் கோர்ட் போகிற மாதிரி இருக்கும். நீ காலேஜ் படிப்பை முடிக்கிறதுக்குள்ள உனக்கு சட்டப்படி விவாகரத்து கிடைச்சுடும். ஐம்ப தாயிரம் பணம் தரதா சொல்லுறாங்க.'' என்று விளக்கி னார்.

'அப்பா! இது தான் நீங்க எனக்கு காட்டுற வழியா? என்னை இஞ்சினியர் ஆக்கிறது தான் உங்க லட்சியம். இப்போ நான் பொய்யான கல்யாணத்தை பண்ணி உங்க லட்சிய கனவை நிறைவேத்தணுமா? இல்ல படிச்சது போதும்னு விட்டுடட்டுமா? என்ன செய்யட்டும்? எனக்கு வழி காட்டுங்கப்பா.'

''என்னம்மா ஜோதி முடிவு பண்ணின?''

''ம்ம்ம் வரேன் அங்கிள். ஆனால் ஒருவேளை மனசுக்கு பிடிக்கலைன்னால் அப்படியே திரும்பிடுவேன்.''



''சரிம்மா. உன்னோட சர்ட்டிபிகேட் ஜெராக்ஸ், ஐடென்ட்டிட்டி புரூப் இருந்தால் எடுத்துட்டு வா.'' என்றதும் வீட்டிற்கு சென்று எடுத்துக் கொண்டு பதிவு அலுவலகத்திற்கு வந்தாள்.

அங்கே அகல்யா டென்ஷனோடு காத்துக் கொண் டிருந்தாள். ஸ்ரீதர் யாருக்கு வந்த விருந்தோ என்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஜோதி! நீ இங்கே நில்லும்மா. ஒரு நிமிஷம் அந்த அகல்யாகிட்ட போய் பேசிட்டு வந்துடுறேன்.'' என்றவர் அகல்யாவை நோக்கி சென்றார்.

''என்ன சார் பொண்ணு எங்கே?''

''பொண்ணை கூட்டிட்டு வந்துட்டேன். பணம் எங்கே?'' என்றதும் அவள் ஸ்ரீதரை பார்த்தாள்.

ஸ்ரீதர் பணம் அடங்கிய கவரை கொடுத்தான். ஸ்ரீதரை கண்ட ஜோதி அதிர்ந்தாள்.

'கடைசியில் நான் செய்ய போகும் இந்த பொம்மை கல்யாணம் என் மனம் கவர்ந்தவனுடனா? அவன் தன் காதலியோடு சேர்வதற்கு நான் உதவி செய்யணுமா? இது தான் என் விதியா?'

ஜோதியிடம் வந்த அவள் பக்கத்து வீட்டு மனிதர், ''ஜோதி! இதுல பணம் இருக்கு. எண்ணிப் பாரு. உன் னோட சர்ட்டிபிகேட்டை தா!'' என்று கேட்டு வாங்கிக் கொண்டு சென்றார்.

பத்து நிமிடத்தில் அவளை உள்ளே அழைத்து சென்றார். சட்டப்படி இருவரும் ரிஜிஸ்டர் செய்வதற் கான திருமண பதிவேட்டில் கையெழுத்திட்டனர்.

உடனே ஸ்ரீதர் தன் கையில் இருந்த ஃபைலை ஜோதியிடம் நீட்டினான்.

“இதுலயும் சைன் போடுங்க.'' என்றான்.

அவள் வாங்கி அதை படித்து பார்த்தாள். ஒன்று... விவாகரத்து பத்திரம். ஒரு கசந்த முறுவலோடு அதில் கையெழுத்திட்டாள்.

அடுத்தது... ‘இது ஒரு நாடக கல்யாணம். இதை சாக்காய் வைத்து நான் எந்த விதத்திலும் பணம் பெற முயற்சிக்க மாட்டேன்’ என்பதை பல சட்ட பாயிண்ட் டோடு விளக்கி இருந்த பத்திரம்.

‘இதுல எல்லாம் தெளிவா தான் இருக்கான்’ என நினைத்துக் கொண்டே அதிலும் கையெழுத்திட்டு அவனிடம் நீட்டினாள்.

''நான் போகலாமா?'' என்று ஜோதி கேட்டாள்.

“அவசரப்படக் கூடாது. மாலை மாத்த வேண்டாமா?” என்று கேட்ட அகல்யா மாலையை கொண்டு வந்து ஸ்ரீதரிடம் கொடுத்தாள்.

ஸ்ரீதர் தன் கழுத்தில் தானே மாலையை அணிந்து கொண்டான். இன்னொரு மாலையை ஜோதியின் கையில் கொடுத்தான்.

‘இறைவா! எனக்கு இன்னும் எத்தனை சோதனையை பாக்கி வைத்திருக்கிறாய்?’ என்று ஜோதி மனதினில் புலம்பிக் கொண்டே அந்த மாலையை கையில் வாங்கி தானே அணிந்து கொண்டாள்.

அவர்களை இணைத்து புகைப்படம் எடுத்த அகல்யா, “ஸ்ரீதர்! ம்ம்ம்..'' என்று ஊக்கினாள்.



‘போட்டோ எதுக்கு எடுக்கிறாங்க? இது என் வாழ்க்கையிலே என்ன சிக்கலை உண்டாக்கும்?’ என ஜோதி சிந்தித்து கொண்டு இருக்க ஸ்ரீதர் அவள் கழுத்தில் தாலி கட்டினான்.

தன் கழுத்தில் விழுந்த தாலியை நம்ப முடியாத அதிர்வோடு ஜோதி பார்த்தாள்!

அந்த பக்கத்து வீட்டு மனிதரும் அதிர்ந்து தான் போனார். ஏனெனில் அகல்யா அவரிடம் தாலி கட்டுவது பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

‘துணை நடிகை என்றால் நாடகத்தின் ஒரு பகுதி என்று ஒதுக்கி இருப்பாள். ஆனால் இவளோ படிக்கின்ற சிறு பெண். இந்த அகல்யா இப்படி பண்ணிட்டாளே!’ என்று அவர் பதறி போய் நின்றிருந்தார்.

அவரின் அதிர்ந்த முகமே அவருக்கும் இது பற்றி தெரிவிக்கப்படவில்லை என்பது ஜோதிக்கு புரிந்து போனது.

தாலி கட்டிய கையோடு ஸ்ரீதர் வெளியேறி இருந் தான். அவன் பின்னே அகல்யாவும் சென்றாள்.

''ஸாரிம்மா ஜோதி! என்கிட்ட தாலி பத்தி அந்த பொண்ணு ஒண்ணும் பேசலை. வாம்மா போய் என் னன்னு கேட்போம்.'' என்று ஜோதியை இழுத்துக் கொண்டு அவர் வெளியே வந்தார்.

அங்கே அகல்யா வயிற்றை பிடித்துக் கொண்டு சிரித்துக் கொண்டிருந்தாள்.

''இப்போ எதுக்கு அகல்யா இப்படி சிரிக்கிறே?'' என்று ஸ்ரீதர் கேட்டுக் கொண்டு இருந்தான்.

"உன்னை போல ஒரு முட்டாளை பார்த்து சிரிக்காமல் என்ன செய்ய சொல்லுறே ஸ்ரீதர்? நான் உன்னை பல வருஷமா காதலிச்சேன்னு சொன்னால் நம்புறே! உனக்காக உயிரை விட்டுடுவேன்னு சொன்னா நம்புறே! எங்க அம்மா என்னை ரெண்டாம் தாரமா தான் கல்யாணம் பண்ணி தருவாங்கன்னு சொன்னா நம்புறே! நீ ஒரு படிச்ச முட்டாள் ஸ்ரீதர்!"

"வாட் டூ யூ மீன்?"

"நான் உன்னை காதலிச்சதே இல்லை. நான் உனக்கு வலை வீசியது உங்க அப்பாவோட சொத்துக்காக. ஆனா நீ அந்த சொத்து வேணாம்னு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துட்டே. அப்போ நீ ஒரு செல்லாக் காசு.

"உன்னை கல்யாணம் பண்ண எனக்கு என்ன கிறுக்கா பிடிச்சு இருக்கு? ஏதோ என்னால முடிஞ்சது... உனக்கு ஏத்த ஒரு ஜோடியை பார்த்து உனக்கு கல்யாணம் பண்ணி வச்சுட்டேன்." என்றவள் நிற்காமல் சென்று கொண்டே இருந்தாள்.

'நான் ஏமாந்துட்டேனா? புத்தகத்தை படிக்க தெரிந்த எனக்கு மனுஷங்களை படிக்க தெரியலையா? அவ்வளவு ஏமாளியா நான்?' என்று ஸ்ரீதர் உறைந்து போய் நின்றிருந்தான்.

ஜோதிக்கு அவனை பார்க்க பாவமாக இருந்தது.

'எப்படி கம்பீரமா இருக்கான். இவன் படிப்பு என்ன... இதெல்லாம் இந்த பொண்ணு கண்ணுல படலையா? கேவலம் சொத்துக்காகவா இவனை போய் வேணாம்னு சொல்லிட்டு போறாள்?'



அவன் கையில் வைத்திருந்த ஃபைல் நழுவி விழுவது கூட தெரியாமல் ஸ்ரீதர் வெளியேறி போய் கொண்டே இருந்தான். ஜோதி அந்த ஃபைலை எடுத்துக் கொண்டு தன் வீட்டிற்கு சென்றாள்.

'அப்பா! அம்மா! நான் எப்படி ஃபீல் பண்ணுறேன்னு எனக்கு சொல்ல தெரியலை. என்னோட மனசிலே சலனத்தை உண்டு பண்ணினவன் கையால தாலியை வாங்கி, சட்டப்படி மனைவியாவும் ஆகிட்டேன்.

விவாகரத்து பத்திரம் இப்போ என் கையிலே! இதை கிழிச்சு போட்டுட்டால் மட்டும் நடந்தது நிஜக் கல்யாணம் ஆகிடாது.

'அப்பா! இன்னைக்கு நீங்க என்னை விட்டு பிரிஞ்சு நாள். இதே நாளில் என் மனம் கவர்ந்தவன் என் வாழ்க் கையில் நுழையுறான்னா அதுக்கு என்ன அர்த்தம்? அவனுக்கும் எனக்குமான சொந்தம் தொடங்கப் போகுதுன்னா? உங்களோட இடத்திலே இருந்து அவன் என்னை பாதுகாப்பான்னு சொல்ல வரீங்களா?' என்று குழம்பிப் போய் அமர்ந்திருந்தாள்.

அகல்யாவால் தான் ஏமாற்றப்பட்டதை ஸ்ரீதரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

அவன் அகல்யாவை உருகி உருகி காதலிக்கவில்லை. அவளது காதலை ஏற்றுக் கொண்டான். அவ்வளவு தான்.

இந்த மூன்று மாதப் பழக்கத்தில் அவர்கள் பெரிதாய் சந்தித்து கொண்டதுமில்லை. உருகி உருகி காதல் வசனம் பேசியதுமில்லை. அதனால் அவள் தனக்கு இல்லை என்பது அவனுக்கு வருத்தத்தை அளிக்க வில்லை.

ஆனால் அவள் தன்னை முட்டாளாக்கியதை தான் அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

'இவளுக்காக எங்க அப்பாவை பகைச்சுக்க இருந்தேனே! வீட்டை விட்டு வெளியேறி இருந்தால் என் குடும்பமும் அவர்களின் பாசமும் பறிபோய் இருக்கும். நல்ல வேளை நான் செஞ்ச இந்த முட்டாள்தனமான வேலை யாருக்கும் தெரியாது. இதை இப்படியே மறைச்சுடுவோம். யாருக்கும் சொல்ல வேண்டாம்' என தீர்மானித்தான்.

பதிவு திருமணம் முடித்த மறுநாள் மாலை ஆறு மணிக்கு மேல்.

''ஸ்ரீதர்! இங்கே வா! நான் உன்கிட்ட கொஞ்சம் பேசணும்.'' என்று அன்பரசு கோபமாக அழைக்க, ஸ்ரீதர் அவர் அருகே வந்து அமைதியாக நின்றான்.

''உனக்கு என்னை பார்த்தா ஒரு அப்பாவா தோணலை இல்ல? வயசான காலத்திலே இவன் எதையாச்சும் கத்திக்கிட்டு இருப்பான்னு நினைச்சுட்ட அப்படி தானே?''

''நான் அப்படி எல்லாம் நினைக்கலைப்பா. நான் என்னைக்கும் உங்க பிள்ளைப்பா.''

''ஆனா நீ பண்ணி இருக்கிற காரியம் வேற மாதிரி இல்ல சொல்லுது.''

''இல்லைப்பா...'' என்றவனை தன் கை நீட்டி பேச வேண்டாம் என தடுத்தார்.

ஸ்ரீதரின் காதலை பற்றியோ, அவனுக்கு சொத்து தர மாட்டேன் என்று தான் மிரட்டியது பற்றியோ, அவன் விடுதலை பத்திரம் எழுதி நீட்டியது பற்றியோ அன்பரசு தன் குடும்பத்தினரிடம் தெரிவிக்கவில்லை.



தெய்வநாயகி அவர்களுக்கு இடையே வந்து நின்றதும் அன்பரசு தன் மனைவியை முறைத்தார்.

''உன்னை யாரும் இப்போ இங்கே சமரசம் பண்ண கூப்பிடலை. ஒரு ஓரமா நின்னு வேடிக்கை பார்க்கிறதா இருந்தால் இங்கே நில்லு. இல்லையா கொஞ்ச நேரத்துக்கு வெளியே எங்கேயாச்சும் போயிட்டு வா, தெய்வா.''

''இல்லைங்க நான் ஒண்ணும் சொல்லலை.'' என்று கணவரிடம் கூறியவர், ''என்னடா ஸ்ரீதர் பண்ண? அப்பா எதுக்கு கோபிச்சுக்கிறார்?'' என்று மகனிடம் கேட்டார்.

'இவர் செய்யக் கூடாதுன்னு சொன்ன விஷயம் அந்த அகல்யாவை கல்யாணம் பண்ணக் கூடாதுன்னு தான். நான் தான் அவளை கல்யாணம் பண்ணலையே! நான் வேற என்ன தப்பு செஞ்சேன்? சும்மா ஸ்கூல் பையன் மாதிரி நிக்க வச்சு கேள்வி கேட்கிறார்.

'இந்தக் காலத்திலே தீபு குட்டியை கூட எங்க அண்ணனால இப்படி நிக்க வச்சு கேள்வி கேட்க முடியாது. இவர் என்னடான்னா காலேஜ் லெக்சரரான என்னை போய்...' என்ற கடுப்போடு ஸ்ரீதர் நின்று கொண்டிருந்தான்.

''நான் உனக்கு சொத்து தர மாட்டேன்னு மிரட்டினதையும் மீறி நீ அந்த பொண்ணை கல்யாணம் பண்ணி இருக்க. அப்போ என் பேச்சுக்கு என்னடா மதிப்பு?'' என்று அன்பரசு காட்டமாக கேட்டார்.

‘கல்யாணமா? அதான் அகல்யா ஓடிப் போயிட்டாளே! நான் எப்போ கல்யாணம் பண்ணினேன்?’ என நினைத்துக் கொண்டான்.

‘‘நான் ஒண்ணும் கல்யாணம் பண்ணலைப்பா. உங்ககிட்ட யாரோ தப்பா சொல்லி இருக்காங்க.’’ என்று மட்டும் சொன்னான்.

‘‘அப்போ இது என்ன?’’ என்றவர் தபால் உறை ஒன்றை அவனிடம் நீட்டினார்.

அவன் அதை தன் கையில் வாங்கி உள்ளே இருந்த வற்றை வெளியே இழுத்தான். அவனும் ஜோதியும் திருமணம் செய்து கொண்ட பொழுது எடுத்த புகைப் படங்கள்.

அவன் அதிர்ச்சியின் உச்ச கட்டத்திற்கு சென்றான்.

அப்பொழுது தருணும் தாரிகாவும் அங்கே வந்தனர். அவன் கையில் இருந்ததை வாங்கி தாரிகா பார்த்தாள்.

‘‘பரவாயில்லைங்க. உங்க தம்பி சிக்கனமா கல்யாணம் பண்ணி இருக்கார். இப்பெல்லாம் சில பேர் கல் யாணத்தை புது விதமா நடத்தணும்னு ஆசைப்பட்டு பிளைட்டில, ஷிப்லன்னு நடத்துறாங்க. இன்னும் சிலர் ரொம்ப சிம்பிளா நடத்திட்டு அந்தக் கல்யாணத்தை நடத்த தேவைப்படும் பணத்தை சோஷியல் சர்வீஸுக்கு யூஸ் பண்ணுறாங்க.

‘‘இந்த புதுமையான கல்யாணங்களில் பொண்ணு மாப்பிள்ளை வீட்டை சேர்ந்தவங்க கண்டிப்பா கலந்துப் பாங்க. ஆனா உங்க தம்பி புரட்சிகரமா கல்யாணம் பண்ணி இருக்கார் போல! அதான் நம்ம யாரையுமே கூப்பிடலை.’’ என்று தாரிகா கிண்டல் செய்தாள்.



அந்த புகைப்படங்களை கண்ட தருண் அதிர்ந்தான். ‘நீயாடா இப்படி பண்ணின?’ என்று தம்பியை முறைத்துக் கொண்டு நின்றிருந்தான்.

புகைப்படங்களை பார்த்த தெய்வநாயகியால் நம்பவே முடியவில்லை. ‘தன் மகனா? ஸ்ரீதரா?’ என்று தொய்ந்து போய் சோபாவில் அமர்ந்து விட்டார்.

ஸ்ரீதருக்கு என்ன செய்வது? அவர்களிடம் என்ன சொல்லி சமாளிப்பது என்று ஒன்றும் புரியவில்லை.

‘நடந்த நாடக கல்யாணத்தை யாரு கனகாரியமா போட்டோ எடுத்து அப்பாவுக்கு அனுப்பினாங்க? வேற யாருடா? எல்லாம் அந்த அகல்யா பண்ண வேலை தான். போனவள் சும்மா போகாமல் திரியை கொளுத்தி போட்டுட்டு போய் இருக்காள்.

‘இப்போ நான் என்ன செய்யணும்? இது நாடகக் கல்யாணம்னு சொல்லணுமா? அப்படி சொன்னால் இவங்க எல்லோரும் என்னை நம்புவாங்களா? நம்புறது இருக்கட்டும்... எதுக்கு நாடகம் நடத்தினேன்னு கேட்டால் உண்மையை சொல்ல முடியுமா?

‘உண்மையை நான் சொன்னால்... இந்த அண்ணி என்னை கேலி பண்ணியே ஒரு வழி பண்ணிடுவாங் களே! இன்னைக்கு மட்டும் இல்லை. என் ஆயுசுக்கும் சொல்லிக் காட்டுவாங்க.’

‘என்ன சொல்லுறதா இருந்தாலும் நிதானமா யோசிச்சு, என்னை பாதிக்காத மாதிரி ஒரு பதிலை தயார் செய்து

சொல்லணும்.' என நினைத்தவன் அங்கே இருந்து விருட்டென நகர்ந்து தன் அறைக்குள் சென்று அடைந்து கொண்டான்.

அவனின் நாடகத் திருமணத்தில் எடுத்த புகைப்படம் கீழேயே இருந்தது. அவன் கையில் கடித உறை மட்டும் இருந்தது. அதை பார்க்க பார்க்க அவனுக்கு அகல்யாவின் மேல் வெறியாக வந்தது.

அப்பொழுது அந்த கடித உறை தடிமனாக இருப்பதை பார்த்து அவன் அதில் இருந்ததை வெளியே இழுத்தான்.

அது அவனின் திருமண சான்றிதழ்.

'ஓ மை காட்! அப்பா இதையும் பார்த்துட்டாரா? இப்ப நான் என்ன செய்யுறது? அந்த பொண்ணு யாரு என்னன்னு கூட தெரியாதே!' என்ற பொழுது அவனை யும் அறியாமல் அவனது பார்வை அந்த சான்றிதழில் விழுந்தது.

ஜோதி என்ற பெயரை பார்த்தவன், இந்த பொண்ணு யாரோ எவரோ? மூணு மாசம் பழகின அகல்யாவே என்னை நல்லா ஏமாத்தினாள். இவள் எந்த புற்றில் உள்ள பாம்போ? நடிக்க வந்தவள் தானே! இந்நேரம் தாலியை கழட்டி எறிஞ்சுட்டு வேற வேலையை பார்க்க போயி ருப்பாள். அப்பாவிடம் என்ன சொல்ல வேண்டும்?' என யோசிக்க யோசிக்க அவன் மண்டை காய்ந்தது.

அந்த டிவோர்ஸ் அப்ளிகேஷனை எங்கே வச்சேன் என்று அப்பொழுது தான் அதை பற்றிய சிந்தனை அவனுக்கு வந்தது.



யோசித்து பார்த்தும் நினைவிற்கு வரவில்லை என்றதும், 'அச்சோ! அதை வேற தேடணுமா?' என்று அலுத்துக் கொண்டான்.

அப்பொழுது அவனது கைப்பேசி அலறியது. யார் என்று கூட பார்க்காமல் எடுத்து இயக்கி காதில் வைத்தான். அகல்யா தான் பேசினாள்.

''என்ன ஸ்ரீதர் உங்க வீட்டுல குண்டு வெடிச்சதா? உங்க அப்பா என்னை ஆள் வச்சு மிரட்டினார். என் பையனை விட்டுடு. இல்லைன்னா நடக்கிறதே வேறன்னு. அவரை அப்படியே சும்மா விட்டுட முடியுமா என்ன... அதான் ஒரு துணை நடிகையை செட் பண்ணி உனக்கு கல்யாணம் பண்ணி வச்சுட்டேன்.

''இப்போ நீயும் உங்க அப்பாவும் கேட்கிற எல்லோர் கிட்டயும் என்ன சொல்லுறீங்கன்னு பார்க்க எனக்கு ஆசையா தான் இருக்கு. ஆனா எனக்கு வேற மாப்பிள்ளை செட் ஆகிட்டான். அதனால நான் இப்போ பிஸி! வெறும் புத்தக புழுவா இருக்காதே ஸ்ரீதர். முதல்ல நல்லவங்க கெட்டவங்க யாருன்னு படி. பை.'' என்று சொல்லிவிட்டு வைத்தாள்.

ஸ்ரீதர் கோபத்தின் உச்சியில் இருந்தான். தன்னை நிலைப்படுத்திக் கொண்டு நிதானமாக யோசித்த பொழுது அவனுக்கு ஒரே ஒரு விஷயம் மட்டும் புரிந்தது.

அது என்னவென்றால் ஸ்ரீதர் தான் காதலித்த பெண்ணை தான் மணந்து கொண்டிருப்பதாக அன்பரசு நம்புகிறார் என்ற விஷயம் தான் அது!



# 6

மறுநாள் ஸ்ரீதர் முதல் ஆளாய் வீட்டை விட்டு வெளியேறி சென்றுவிட்டான். சாப்பாடு கூட வெளியிலே பார்த்துக் கொண்டான். கல்லூரிக்கு சென்றான்.

அன்று தான் ஜோதிக்கு நான்காம் வருட படிப்பு ஆரம்பம் ஆகிறது. ஏழாவது செமஸ்டரின் முதல் நாள். மனம் நிறைய குழப்பத்தோடு ஜோதி கல்லூரிக்கு வந்தாள்.

ஜோதியின் வகுப்பிற்கு பாடம் எடுப்பதற்காக ஸ்ரீதர் வந்தான்.

''டியர் ஸ்டூடண்ட்ஸ்! ஐயாம் ஸ்ரீதர். எம்.டெக். பி.ஹெச்.டி. இந்த செமஸ்டரும் அடுத்த செமஸ்டரும் நான் உங்களுக்கு கிளாஸ் எடுப்பேன். சோ உங்க எல்லோரையும் நான் அவசியம் தெரிஞ்சு வச்சுக்கணும். ஒவ்வொருத்தரா எழுந்து உங்களை அறிமுகப்படுத்திக் கோங்க.'' என்றதும்,

ஒவ்வொருவராக எழுந்து தங்களை பெயரை சொல்லி விட்டு அமர்ந்தார்கள். சிலர் தாங்கள் வாங்கிய மார்க்கை கூட சொல்லிவிட்டு அமர்ந்தனர்.

''ஐயாம் ஜோதி!'' என்று எழுந்து நின்றவளை பார்த்து ஸ்ரீதரின் தேகம் பதறியது.



'இவள் தானே அன்னைக்கு ரிஜிஸ்டர் ஆபீஸ் வந்தவள். அன்னைக்கு எனக்கு முகம் சரியா பதியலை. ஆனால் நேத்து போட்டோவில் பார்த்த முகம் இவள் தான். கண்டிப்பா இவள் தான். பெயரும் ஒண்ணா இருக்கே! அச்சோ! இவள் துணை நடிகை இல்லையா? என் ஸ்டூடண்டா? எப்படி இப்படி ஒரு தப்பு நடந்துச்சு?'

அனைவரும் தங்களை அறிமுகப்படுத்தி முடித்திருந் தனர். இந்த மனநிலையில் தன்னால் இன்று வகுப்பை ஆரம்பிக்க முடியாது என ஸ்ரீதர் நினைத்தான்.

''ஓகே ஸ்டூடண்ட்ஸ்! நான் அடுத்த கிளாஸில் இருந்து பாடம் எடுக்கிறேன். இப்போ நான் கிளம்புறேன்.'' என்று சொல்லிவிட்டு வெளியேறினான்.

'அவகிட்டே பேசணுமே! எப்படி பேசுறது?' என்று அவன் யோசித்துக் கொண்டே தனக்கு ஒதுக்கப்பட்டு இருக்கும் அறைக்குள் நுழைந்தான்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் விவாகரத்து பேப்பர் அடங்கிய அவனுடைய ஃபைலை நீட்டிக் கொண்டு ஜோதி அவன் முன் வந்து நின்றாள்.

''நீ ஸ்டூடண்டா? சினிமா நடிகை இல்லையா? நீ எப்படி அன்னைக்கு வந்தே?'' என்று எடுத்த எடுப்பிலே அவன் ஆரம்பித்தான்.

அவனை தீர்க்கமாக பார்த்துக் கொண்டே, ''இந்த வருஷ காலேஜ் பீஸை கட்டுறதுக்காக நான் பேங்கில் இருந்து பணத்தை எடுத்துட்டு வீட்டுக்கு போனேன். அப்போ நான் பணத்தை மிஸ் பண்ணிட்டேன். என்னால பணத்தை அரேஞ் பண்ண முடியலை.'' என்றாள்.

‘‘அதுக்காக இப்படி பண்ண உனக்கு எப்படி மனசு வந்துச்சு?’’

‘‘Beggars are not choosers. எனக்கு வேற எந்த ஆப்ஷனும் இல்லை.’’

‘‘உங்க அப்பா அம்மா....’’ என்று அவன் சந்தேகமாய் இழுக்க,

‘‘எனக்கு யாரும் கிடையாது. ரெண்டு பேருமே இறந்துட்டாங்க.’’ என்று மட்டும் சொன்னாள்.

‘‘ரிஜிஸ்டர் ஆபீஸுக்கு எப்படி வந்தே?’’

‘‘நீங்க என் பக்கத்து வீட்டு அங்கிள்கிட்ட தான் ரிஜிஸ்டர் மேரேஜுக்கு சைன் பண்ண ஒரு பொண்ணு வேணும்னு கேட்டு இருந்தீங்க போல! அவர் தான் என்னை கூட்டிட்டு வந்தார்.’’

‘‘சைன் பண்ண பொண்ணா? அங்கே தாலி கட்டுற சீன் நடக்க போகுதுன்னு தெரியாமலா வந்தே!’’

‘‘அந்த அங்கிள் தாலி கட்டுறது பத்தி ஒரு வார்த்தை கூட என்கிட்ட சொல்லலை. அவருக்கும் அந்த விஷயம் தெரியாதுன்னு தான் சொன்னார்.’’

‘‘ஓ மை காட்! அன்னைக்கு என்ன நடந்துச்சுன்னா...’’ என்று ஸ்ரீதர் விளக்கம் சொல்ல ஆரம்பித்தான்.

‘‘எனக்கு எல்லாம் தெரியும். நானும் அங்கே தான் இருந்தேன். நீங்க அவளை நம்பி ஏமாந்தீங்க.’’ நான் உங்களை நம்பி ஏமாந்தேன். என்றதும் ஸ்ரீதர் மனதினில் அடிவாங்கினான்.

‘‘நம்ம பிரச்னையை பேசி சரி பண்ணலாம். இங்கே வச்சு எதுவும் பேச முடியாது. சாயங்காலம் காபி ஷாப்புக்கு வா.’’ என்றவன் அவளை போக விட்டான்.



அவள் வெளியேறப் போகும் நேரம், ‘‘ஜோதி! பீஸ் கட்டிட்டியா?’’ என்று கேட்டான்.

அவள் இல்லை என்றதும் தன் முன் இருந்த கணினியை இயக்கி அவளுக்கான பீஸை அவனே கட்டினான்.

அவன் கட்டி முடித்ததும் அவள் தன் பையில் இருந்து அவன் கொடுத்த பணக் கவர், வங்கியில் எடுத்த பணத்தில் காணாமல் போகாமல் இருந்த இருபதாயிரம் மற்றும் தன்னுடைய சிறுசிறு நகைகள் அடங்கிய டப்பாவையும் அவனிடம் நீட்டினாள்.

‘‘இதெல்லாம் என்ன?’’

‘‘இந்த பீஸ் கட்டுவதுக்காக என்கிட்ட இருந்த கடைசி சொத்து. நான் கூடிய சீக்கிரம் உங்க கடனை அடைச் சுடுறேன்.’’

‘‘இந்த பணக் கவரை எதுக்கு நீ திருப்பி குடுக்கிறே?’’

‘‘இதுக்கு கூலியா நீங்க குடுப்பீங்க. நான் அதை வச்சுக்கணுமா?’’ என்று கேட்டு தன் கழுத்தில் தொங்கிய தாலியை எடுத்து அவள் காட்டவும் அவன் அதிர்ந்தான்.

‘‘நீ இதை கழட்டி எறியலையா?’’ என்று கேட்கும் பொழுதே தன் கேள்வியில் இருந்த அபத்தத்தை உணர்ந்தான்.

‘‘ஸாரி. நான் துணை நடிகையை ஏற்பாடு பண்ண சொன்னேனா... அந்தப் பொண்ணு தாலியை கழட்டி இருப்பாள்னு...’’ என்று சொல்ல வந்ததை சொல்ல முடியாமல் தடுமாறினான்.

''நான் இப்போ என்ன பேசினாலும் தப்பா தான் முடியும். நான் சொல்லுற காபி ஷாப்புக்கு கண்டிப்பா வந்துடு. உன் போன் நம்பரை தா.'' என்று கேட்டு வாங்கிக் கொண்டு அவளை அனுப்பி வைத்தான்.

''இவள் இப்போ வரை தாலியை கழட்டலைன்னால்... என்ன அர்த்தம்? கழட்டி எறியும் உத்தேசம் இல்லைன்னு தானே அர்த்தம் ஆகுது.''

'டேய் ஸ்ரீதர்! நாடகக் கல்யாணங்கிற பேரிலே இப்படி நிஜக் கல்யாணத்தை நடத்தி இருக்கியே! இப்போ என்ன செய்ய போறே? ஒரு பக்கம் அப்பா. இன்னொரு பக்கம் ஜோதி. ரெண்டு பேருக்கும் நீ தான் பதில் சொல்லி ஆகணும்.'

'பேசாமல் நடந்த கல்யாணத்தை உண்மை ஆக்கிடுவோமா? அது தானே நான் அந்த பெண்ணிற்கு செய்யும் நியாயம் ஆகும்? ஆனா அகல்யாகிட்ட இருந்து தப்பி ஜோதி வலையில் விழும் நிலைமை வந்துடுமோ?'

'இதை நீ அந்தப் பொண்ணு கழுத்திலே தாலி கட்டும் முன்னாடி யோசிச்சு இருக்கணும். இப்போ யோசிச்சு ஒரு பிரயோஜனமும் இல்லை' என்று மனசாட்சி இடித் துரைத்தது.

'அந்த அகல்யா கழுத்திலேயே தாலி கட்ட நினைச்ச ஆள் தானே நீ! அந்த அகல்யாவை விட மோசமா உலகத்திலே எந்த பெண்ணும் இருக்க மாட்டாள். அதனால நீ எந்த பொண்ணு கழுத்திலே வேணாலும் நம்பி தாலி கட்டலாம்' என்று தன்னை தானே கேலி செய்தது மனம்.



'இவள் இப்போ தான் பைனல் இயருன்னா... வயசு இருபது தானே இருக்கும். ஐயோ என்னை விட எட்டு வயது சின்ன பெண்ணா? முதல்ல அவளை பத்தின டெடெய்ல்ஸ் கலெக்ட் பண்ணுவோம்' என நினைத்தவன் ஸ்டூடண்ட் பற்றிய தகவல்கள் அடங்கிய சைட்டை திறந்து படிக்க ஆரம்பித்தான்.

அதில் அவளை பற்றிய அனைத்து விவரங்களும் இருக்காது என்றாலும்... அவள் பிறந்த தேதி, அவள் லேட்டரல் என்ட்ரி மூலம் இரண்டாம் வருடத்தில் உள்ளே நுழைந்தது, அவளுடைய மதிப்பெண்கள் இப்படி அவனால் தெரிந்து கொள்ள முடிந்தது.

'அப்பாடா! இருபத்தி மூணு வயசு ஆகுது. என்னை விட அஞ்சு வயசு தான் சின்னப் பொண்ணு. நாட் பேட்.' என்று நினைத்துக் கொண்டான்.

இது வரை அவள் நல்ல பெயரை தான் சம்பாதித்து இருந்தாள். எந்த பிளாக் மார்க்கும் இல்லை என்று தெரிந்து கொண்டான்.

அன்று மாலை காபி ஷாப்பில் அவளை சந்தித்தான்.

எடுத்த எடுப்பிலேயே, ''என்னை கல்யாணம் பண்ணிக்கிறியா?'' என்று கேட்டான்.

''அப்போ அன்னைக்கு நடந்ததுக்கு பேரு என்ன?''

''என்னை பொறுத்தவரை அது ஒரு ஜோடிக்கப்பட்ட கல்யாணம் ஜோதி. ஒரு நாடகம். ஒரு துணை நடிகைக்கு இது மாதிரி பல சீன் நடந்து இருக்கும்னு நான் அசால்ட்டா இருந்தேன். ஆனா இப்படி படிக்கிற பொண்ணு கழுத்துல அதை கட்டுவேன்னு நானே எதிர்பார்க்கலை.

''அந்த அகல்யா சும்மா போகாமல் அந்த கல்யாணத்தை போட்டோ எடுத்து எங்க அப்பாக்கு அனுப்பிட்டு போயிட்டாள். எங்க அப்பா நேத்தே அந்த போட்டோவை காட்டி என்ன ஏதுன்னு விசாரிச்சார். நான் உன்கிட்ட ஒரு உண்மையை சொல்லணும் நேத்து போட்டோவில் பார்த்ததால் தான் எனக்கு உன்னை அடையாளம் தெரிஞ்சது.'' என்றதும் அவள் முறைத்துப் பார்த்தாள்.

''உன் சைடில் இருந்து பார்த்தால் தப்பு தான். ஆனா நீ என் பக்கம் நின்னு யோசிச்சு பாரு.''

''அப்படி யோசிச்சதனால் தான் உங்க மேல போலீஸ்ல புகார் சொல்லாமல் கையை கட்டிக்கிட்டு சும்மா இருக்கேன்.''

''உனக்கு தாலியை கழட்ட மனசில்லை. நாம ஏன் நடந்த கல்யாணத்தை நிஜமாக்க கூடாது. நீ யோசிச்சு பதில் சொல்லு. ஆனா நீ பதில் சொன்ன பின்னால தான் என்னால என் வீட்டுக்கு போக முடியும்.''

''ஏன் அப்படி?''

''வீட்டுக்கு போனால் எங்க அப்பா என்னை கேள்வி கேட்பார். ஒண்ணு நான் ஒரு பொண்ணு பேச்சை நம்பி இன்னொரு பொண்ணை மோசம் செய்த கதையை சொல்லணும். இல்லைன்னா... நீ தான் நான் லவ் பண்ணின பொண்ணுன்னு எங்க அப்பாவை நம்ப வைக்கணும். ரெண்டிலே எதை சொல்லுறதா இருந்தாலும் அது உன்னோட முடிவு தெரிஞ்ச பின்னால தான் எங்க அப்பாகிட்ட பேச முடியும்.''



''நான் தான் நீங்க லவ் பண்ணின பொண்ணுன்னு உங்க அப்பா எப்படி நம்புவார்?''

''அவர் அகல்யாவை பார்த்ததில்லை. அவளோட பேரும் அவருக்கு தெரியலை. நான் லவ் பண்ணின பொண்ணை தான் கல்யாணம் பண்ணினதா எங்க அப்பா நம்பிக்கிட்டு இருக்கார்.''

தன் கழுத்தில் தாலி ஏறிய நொடியில் இருந்து ஜோதி யோசித்துக் கொண்டு தான் இருக்கிறாள். அதனால் அவள் ஸ்ரீதரிடம் தன் முடிவை தெரிவிக்க ஆரம்பித்தாள்.

''ரிஜிஸ்டர் மேரேஜ் என்பது ஜஸ்ட் ஒரு கையெழுத்து. அதுவும் டிவோர்ஸ் அப்ளை பண்ணி நான் காலேஜ் படிப்பை முடிக்கும் முன் எல்லாம் சால்வ் ஆகிடும்னு எங்க பக்கத்து வீட்டு அங்கிள் சொன்னதால தான் நான் அன்னைக்கு வந்தேன். ஆனா தாலியை என்னால சாதாரணமா எடுத்துக்க முடியலை. எங்க வீட்டுல என்னை அப்படி வளர்க்கலை.'' என்றாள்.

'பொய் சொல்லாதே ஜோதி! இதே ஸ்ரீதர் தவிர வேற யாராவது தாலி கட்டி இருந்தால் நீ இப்படியா அதை கழட்டாமல் இருப்பே! அன்னைக்கே கட்டியவன் முகத்திலே விட்டெறிஞ்சுட்டு வந்திருக்க மாட்டே!'

'தாலி கட்டின காரணத்துக்காக அவன் பின்னாலே போக நினைக்கிற அந்தக் கால பெண்ணா நீ?'

'என் சம்மதம் இல்லாமல் என் கழுத்திலே தாலி கட்ட நீ யாருடான்னு அவன் சட்டை காலரை பிடிக்கிற இந்த கால பொண்ணு தானே! உனக்கு ஸ்ரீதரை பிடிக்கும். அதனால அவன் கட்டின தாலியை கழட்ட மனசில்லை.'

'அதுவும் அவன் அகல்யாவை காதலிக்கலை. அவளால ஏமாற்றப்பட்ட ஒரு அப்பாவின்னு தெரிஞ்ச பின்னால அவன் கூட அவன் மனைவியா வாழ ஆசைப் படுறே! இதை நீ ஒப்பனா சொல்லாமல் ஃபிலிமா காட் டுறே!' என்ற மன்சாட்சியின் குரலை காதில் வாங்கிக் கொள்ளாமல் ஸ்ரீதரையே பார்த்துக் கொண்டு அமர்ந் திருந்தாள்.

ஸ்ரீதர் யோசனையில் மூழ்கி இருந்தான்.

''என்ன யோசிக்கிறீங்க?''

''நீ உன்னை பத்தின டீடெய்ல்ஸ் சொல்லு. நான் என்னை பத்தி சொல்லுறேன். எங்க அப்பா உன்னை கூட்டிட்டு வர சொல்லுவார். நம்மளை பத்தி விசாரிப் பார். ரெண்டு பேரும் தத்து பித்துன்னு உளறி மாட்டிக்கக் கூடாது.'' என்றதும் இருவரும் தங்களை பற்றிய விவரங் களை பரிமாறிக் கொண்டார்கள்.

ஜோதி ஸ்ரீதரிடம் தன் தாத்தாவை பற்றி எதையும் தெரிவிக்கவில்லை. இதுவரை அவரை பற்றி யாரிடமும் சொன்னதில்லை. அதே போல் ஸ்ரீதரிடமும் அவள் சொல்லவில்லை.

''நான் உன்கிட்ட ஒரு விஷயம் தெளிவுபடுத்த விரும்புறேன். இந்த மூணு மாசத்தில் நான் அந்த அகல்யாவை ஒரு நாலஞ்சு தடவை காபி ஷாப்பில் மீட் பண்ணி இருப்பேன். மத்தபடி அவ கூட சேர்ந்து நான் வெளியே எங்கேயும் போனதில்லை. என் விரல் நுனி கூட அவள் மேல் பட்டதில்லை.

''ஒரு தடவை கிஃப்ட் வாங்கி தரேன்னு கடைக்கு கூப்பிட்டேன். என்கிட்ட நல்லவள் வேஷம் போட



நினைச்சிருப்பாள் போல... நீங்க தான் என்னோட மிகப் பெரிய கிஃப்ட்னு டயலாக் விட்டுட்டு ஒண்ணும் வேணாம்னு சொல்லிட்டாள்.''

சில நொடிகள் அங்கே அமைதி நிலவியது.

''இது என்னோட போன் நம்பர். உன்னோட போட் டோஸ் சிலதை என்னோட வாட்ஸ் அப் நம்பருக்கு அனுப்பு. இப்போ நாம ரெண்டு பேரும் சேர்ந்து போட்டோ எடுத்துக்கலாம்.'' என அவன் மடமடவென திட்டமிட ஆரம்பித்தான்.

''உங்ககிட்ட...'' என்று கேட்க வந்ததை கேட்காமல் அவள் தயங்க...

''சும்மா கேளு ஜோதி. உனக்கு என்ன டவுட்?'' என்றான்.

''இல்ல அந்த அகல்யா போட்டோ எதுவும் உங்க போனில் இருக்கா?''

''போட்டோ இல்லையே ஜோதி. நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து போட்டோ எதுவும் எடுக்கலை. அவள் போட்டோவையும் நான் கேட்டு வாங்கலை.''

'என்னடா இது... என்னை பார்த்த அரை மணி நேரத்திலே செல்பி எடுத்த ஆள் பேசுற பேச்சா இது! நம்ப முடியலையே!' என்பது போல் அவள் பார்க்க...

''நம்ப முடியலை இல்ல. நிஜமா அவள் எனக்கு எந்த போட்டோவும் அனுப்பலை. நான் ஒரு தடவை போட்டோ எடுப்போம்னு சொன்னதுக்கு அவ தட்டி கழிச்சுட்டாள். ஒருவேளை என்னை கழட்டி விட நினைச்சால் எந்த எவிடன்ஸும் என்கிட்ட சிக்கி இருக்கக் கூடாதுன்னு நினைச்சு இருக்கலாம்.''

''ம்ம்ம் அதுக்கு பாஸிபிலிட்டி நிறைய. அவள் என்ன வேணா செய்வாள். சச் எ கன்னிங் லேடி! இவ்வளவு படிச்ச நீங்க அவ பேச்சை எப்படி நம்பினீங்க?''

''ஒண்ணு நான் அவ்வளவு அப்பாவியா இருக்கணும். இல்லை அவள் அந்த அளவுக்கு திறமையான நடிகையா இருக்கணும்.'' என்றதும் அவள் மெதுவாய் சிரித்தாள்.

''நான் நிஜமா அப்பாவி தான்மா. என்னை நம்பு. பியூச்சரில் நீயே பார்க்க தான் போறே... இந்த ஸ்ரீதர் யாரு என்னன்னு...'' என்றதும் புன்னகைத்தாள்.

''காலையில் என்னை நம்பி எப்படி அவ்வளவு பணம் குடுத்தீங்க? இத்தனைக்கும் நீங்க என் பேரிலே பணம் கட்டுற சமயம் நான் தாலியை கழட்டாமல் தான் இருக்கேங்கிற விஷயம் கூட உங்களுக்கு தெரியாது.''

''அது வேற இது வேற ஜோதி. ஒரு பைனல் இயர் ஸ்டூடண்ட் பீஸ் கட்டாமல் தவிக்கிறதை என்னால பார்த்துக்கிட்டு சும்மா இருக்க முடியாது. எங்க அப்பாவும் அண்ணனும் பிசினஸ் பண்ணுறாங்க. என்னையும் அந்த சைட் தான் எங்க அப்பா இழுக்க பார்த்தார். ஆனா எனக்கு டீச்சிங்ல தான் இன்ட்ரெஸ்ட். படிக்கிறதுக்கு எனக்கு அவ்வளவு பிடிக்கும்.''

''இந்த சின்ன வயசிலே டாக்ட்ரேட் முடிச்சதில் இருந்தே அது தெரியுது. அப்போ யாரு வந்து உங்க கிட்ட பணம் கேட்டாலும் தூக்கி குடுத்துடுவீங்களா?''

''ம்ம்ம் காலேஜ் பீஸுக்காக ஒரு பொண்ணு தன் வாழ்க்கையை பணையம் வைக்கிற அளவுக்கு துணிஞ்சு இருக்காள்னா... அவளுக்கு எந்த அளவுக்கு பணக் கஷ்டம் இருக்கும்னு நினைச்சு தான் நான் உனக்காக உடனே பணம் கட்டினேன்.



''நாட்டிலே பாதி பேர் பணக் கஷ்டத்தில் தான் இருக்காங்க. அவங்க எல்லோருக்கும் போய் என்னால பண உதவி செய்ய முடியாது. ஆனா என்னை சுத்தி இருக்கிறவங்களுக்கு என்னால முடிஞ்ச பண உதவியை நான் கண்டிப்பா செய்வேன்.''

''நான் காலையிலே உங்ககிட்ட கொடுத்த அந்த டிவோர்ஸ் பேப்பர்ஸ் அடங்கிய ஃபைல்... அதை பத்திரமா வச்சுக்கோங்க. அந்த அகல்யாவை கல்யாணம் பண்ண எப்படி ஒரு வேகத்தில முடிவு எடுத்தீங்களோ... அதே வேகத்தை தான் இந்தக் கல்யாணத்திலும் நீங்க காட்டுறீங்க.

''ஒருவேளை இவளை ஏன்டா கல்யாணம் பண்ணி ணோம்ன்னு நீங்க நினைக்கிற அளவுக்கு நான் நடந்துக் கிட்டால்... அந்த டிவோர்ஸ் அப்ளிகேஷனை ஃபைல் பண்ணிடுங்க. அதனால அதை அவசரப்பட்டு கிழிச்சு போட்டுடாதீங்க.''

''உன்னை கல்யாணம் பண்ண எடுத்த முடிவு அவசரத்தில் எடுத்தது இல்ல. அவசியத்துல எடுத்தது. நான் பண்ணின தப்பை சரி செய்ய எடுத்த முடிவு. அந்த டிவோர்ஸ் பேப்பர்ஸை போகிற வழியில் யார் கண் ணிலும் படாமல் கிழிச்சு போடணும்னு தான் இருந்தேன். ம்ம்ம் நீ சொல்லுற மாதிரி இதுலயாவது அவசரம் காட்டாமல் இருக்கேன்.''

வாழ்வை தொடங்கும் முன் அந்த வாழ்க்கையை முடிப்ப தற்கான வழியை யோசிக்கும் தம்பதியர் இவர்களாகத் தான் இருப்பார்கள்.

அவன் தனது பையில் இருந்து காலையில் அவள் கொடுத்த சிறுசிறு நகைகள் அடங்கிய டப்பாவையும் அவளது பணமான இருபதாயிரத்தையும் எடுத்து கொடுத்தான்.

''இதை ஏன் திருப்பி தரீங்க?''

''இனிமேல் உனக்கு நான் தானே காலேஜ் பீஸ் கட்டணும்? அதனால அது கடனும் இல்லை. நீ திருப்பி தர வேண்டிய அவசியமும் இல்லை. அதான் உன் நகையையும் பணத்தையும் உன்கிட்ட திருப்பி தரேன். கழுத்து செயினை கூட கழட்டிட்ட போல! முதல்ல அதை எடுத்து போடு.'' என்றான்.

அவளும் அதை எடுத்து மாட்டிக் கொண்டாள். அவன் அவளது வீடு வரை உடன் சென்றான்.

அங்கே சுவற்றில் தொங்கிக் கொண்டிருந்த அவளது தாய் தந்தையின் புகைப்படத்தை பார்த்தான். அவர்கள் முன் சென்று சில நொடிகள் கண்களை மூடி கைகளை கூப்பி வேண்டினான்.

அவனின் இந்த செயல் ஜோதியை ரொம்பவே நெகிழ்த்தியது.

''ஓகே பை ஜோதி. அப்பாகிட்ட பேசிட்டு நைட் உனக்கு போன் பண்ணுறேன்.'' என்றவன் கிளம்பி சென்றான்.

அவன் சென்றதும், ''அப்பா! அம்மா! நான் செய்யுறதை நீங்க முழு மனசோடு ஏத்துக்குவீங்கன்னு நம்புறேன். உங்களோட ஆசீர்வாதம் எனக்கு எப்பவும் இருக்கணும்.'' என்றாள்.





# 7

ஜோதி வீட்டில் இருந்து கிளம்பிய ஸ்ரீதர் தன் வீடு நோக்கி சென்றான். அவனது வரவிற்காய் அன்பரசு காத்துக் கொண்டிருந்தார்.

ஸ்ரீதர் வீட்டிற்குள் நுழைந்ததும் அவனை தங்கள் அறைக்கு கூட்டி சென்றார். வீணாக தாரிகாவிற்கு மெல்லுவதற்கு அவல் தர வேண்டாம் என்று நினைத்தார். தெய்வநாயகியும் அந்த அறையில் தான் இருந்தார்.

''நான் நேத்து கேட்டதுக்கு இப்போ வரைக்கும் நீ பதில் சொல்லலை ஸ்ரீதர்.''

''ஸாரிப்பா. உங்க பேச்சை என்னால கேட்க முடியலை. என்னால நான் லவ் பண்ணின பொண்ணை அம்போன்னு விட முடியலை. என்னால ஒரு பெண்ணோட பாவத்தை வாங்கி கட்டிக்க முடியாது.''

''பாவத்தை கட்டிக்க முடியாதுன்னு அவளையே கட்டிக்கிட்டியா? அவ பேரு ஜோதின்னு மேரேஜ் சர்ட்டிபிகேட்ல பார்த்தேன். அவ என்ன செய்யுறாள்?''

''எங்க காலேஜ்ல தான்பா படிக்கிறாள்.''

''படிக்கிற சின்ன பொண்ணு மனசையாடா கலைச்சே!''

''அவ டிப்ளமோ முடிச்சுட்டு வந்து இருக்காள். அவளுக்கு வயசு இருபத்தி மூணு ஆகுது.''

''கல்யாணம் தான் பண்ணிக்கிட்ட இல்ல. அப்புறம் எதுக்கு அவளோட வீட்டிலே விட்டு வச்சு இருக்கே? அவங்க அப்பா அம்மாவுக்கு பயப்படுறாளா?''

''அவளுக்கு அம்மா அப்பா கிடையாது. அவ உங்களுக்கு பயந்துகிட்டு தான் இங்கே வர மாட்டேங்கிறாள். உங்களை எதிர்த்து கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்புன்னு ஃபீல் பண்ணுறாள். நல்ல பொண்ணுப்பா அவள். அவளை எப்படி நான் விட முடியும்?'' என்று ஸ்ரீதர் அள்ளி விட்டான்.

''நானும் அம்மாவும் அவளையே உனக்கு கட்டி வைக்கிறதுன்னு முடிவு பண்ணிட்டோம். உன்னோட லவ்வரை உன்கிட்ட இருந்து பிரிக்கலாம். ஆனா மனைவியை எப்படி பிரிக்கிறது? அந்த பெண்ணோட அம்மா அப்பா பேரை எழுதி தா. பத்திரிகையில் போடணும்.

''இந்த ஞாயிற்றுக்கிழமை உங்களுக்கு நம்ம குல தெய்வம் கோவிலில் வச்சு கல்யாணம். அடுத்த நாளே சென்னையில் ஹோட்டலில் வச்சு ரிசப்ஷன்.'' என்று அவனுக்கு மேல் அவர் திட்டங்களை அடுக்கிக் கொண்டே போக ஸ்ரீதருக்கு மூச்சு வாங்கியது.

''கல்யாணம் அவ்வளவு சீக்கிரம் நடக்கணுமாப்பா?''

''வேலை மெனக்கெட்டு யாரோ உன் கல்யாண செய்தியை எனக்கு வத்தி வைக்கிறாங்கன்னா... நாம அதை உலகத்துக்கு உடனே சொல்லி ஆகணும்டா.



ஜோதியை பத்தி சொல்லு!'' என்றதும் அவன் கூற ஆரம்பித்தான்.

''இவள் இன்னொரு தாரிகாவா இல்லாமல் இருந்தால் சரி.'' என்று தெய்வநாயகி வாய்விட்டு புலம்பினார்.

'இவள் தாரிகாவிற்கு மேல பெரிய ஆள். உனக்கு தான் தெய்வா தெரியலை. இப்போதைக்கு உனக்கு தெரியாமல் இருப்பதே நல்லது.' என்று அன்பரசு தன் மனதிற்குள் நினைத்துக் கொண்டார்.

அன்பரசுவிற்கு அவரது நண்பர் தேவசாகயம் ஊருக்கு செல்லும் அவசரத்தில் சில விஷயங்களை மட்டுமே சொல்லிவிட்டு சென்றிருந்தார்.

அந்த பெண்ணுக்கு ஸ்ரீதர் மேல் அக்கறை இல்லை. உன் சொத்து மேல தான் குறி. இப்போ தான் மூணு மாசமா லவ் பண்ணுறாங்க. ரெண்டு பேரும் ஒரே காலேஜ். இந்த விஷயங்களை தான் தெளிவுபடுத்தி இருந்தார்.

மூணு மாச பழக்கம்... ஸ்ரீதர் அந்தக் கல்லூரியில் சேர்ந்து சில மாசங்கள் தான் ஆகிறது. அதனால் அது ஜோதி விஷயத்தில் ஒத்துப் போனது. அதே போல ஒரே கல்லூரி என்ற விஷயமும் ஜோதிக்கு பொருந்திப் போனதால் அன்பரசால் பெண் மாற்றப்பட்ட விஷயத்தை கண்டுபிடிக்க முடியவில்லை.

இரவு ஜோதியிடம் தங்கள் கல்யாணம் மற்றும் ரிசப்ஷன் விஷயத்தை ஸ்ரீதர் சொன்னான்.

''ஸாரி ஜோதி! இந்த தேதி நமக்கு சரி வருமான்னு எங்க அப்பா என்கிட்ட கேட்கலை. இது தான் தேதின்னு அறிவிக்கிறார். கல்யாணம் கோவிலில் நடக்கப் போகுது. உனக்கு தேதி ஒத்து வருமா?''

''ஒண்ணும் பிரச்சனை இல்லை.''

''நீ யாரை எல்லாம் கல்யாணத்துக்கு கூப்பிடப் போறே? உனக்கு எத்தனை இன்விடேஷன் வேணும்?''

''நான் தான் சொன்னனேன்ல. அப்பா அம்மாவுக்கு உறவுகள்னு யாரும் இல்லை. பிரண்ட்ஸை மட்டும் தான் ரிசப்ஷனுக்கு கூப்பிடணும். ஆனா அதுலயும் ஒரு சிக்கல். ஏற்கனவே நான் எல்லோரையும் விட மூணு வயசு பெரியவள். இப்போ கல்யாணமும் ஆனது தெரிஞ்சால்... அது சரியா வருமான்னு தெரியலை.

''அதுவும் இல்லாமல் நீங்களும் அங்கே தான் வொர்க் பண்ண போறீங்க. அதான் காலேஜ்ல யார்கிட்டயும் சொல்ல வேண்டாம்னு பார்க்கிறேன். என் ஸ்கூல் பிரண்ட்ஸ் மற்றும் டிப்ளமோ பிரண்ட்ஸை மட்டும் தான் கூப்பிடுவேன்.''

''நீ சொல்லுறது கரெக்ட் ஜோதி. நானும் இப்போ தான் இந்த காலேஜில் சேர்ந்தேன். அப்போ நானும் பிரின்ஸிபாலையும் ஹெச்.ஓ.டியையும் மட்டும் கூப்பிடு றேன். அப்புறம் நம்ம டிபார்ட்மென்ட்ல லெக்சரர் அஸ்வின் இருக்கான்ல அவன் என்னோட ஸ்கூல் மேட். அதனால அவனை மட்டும் கூப்பிடுறேன். அவன் விஷயத்தை வெளியே சொல்ல மாட்டான்.''

''ஓகே. நீங்க சொல்லுற மாதிரியே செய்யுங்க.'' என்றதும் சில பல விஷயங்களை தெளிவுபடுத்தி விட்டு அவன் அழைப்பை துண்டித்தான்.

தன் திருமணத்தை தாத்தாவிடம் தெரிவிக்க எண்ணி ஜோதி மீண்டும் அவருக்கு முயன்று பார்த்தாள். ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டுள்ளது என்றே வந்தது.



'எங்கே போனாருன்னு தெரியலை. இந்த ரெண்டு வருஷத்திலே நான் இவருக்கு போன் பண்ணி பேசினதே இல்லை. ஆனா எனக்கு அவர் முக்கியமா தேவைப்படும் பொழுது ஆள் காணாமல் போயிட்டார்.'

'என் கல்யாணத்துக்கு என் சார்பா நீங்க வரீங்களா தாத்தான்னு கேட்டு பார்ப்போம்னு நினைச்சா... அதுக்கு கூட குடுத்து வைக்கலை.'

'ஒருவேளை இதான் என் அப்பாவோட விருப்பமா? எங்க அப்பாவை நான் வேண்டாம்னு ஒதுக்கி வச்ச மாதிரி நீயும் ஒதுக்கி வைன்னு சொல்லுறாரோ?' என்று நினைத்துக் கொண்டாள்.

தன்னிடம் ஸ்ரீதர் திருப்பிக் கொடுத்த இருபதாயி ரத்தை வைத்து ஜோதி சின்ன ஜரிகை கரையிட்ட இரு பட்டு புடவைகளை வாங்கினாள். திருமணத்திற்கு என்று மேலும் சில பொருட்களை வாங்கிக் கொண்டாள்.

'நான் வாங்கிற சுரிதார் எல்லாம் சூப்பரா ஆனா மலிவா இருக்குன்னு கீர்த்தி எப்போ பாரு சொல்லுவாள். ஆனால் புடவை விலை ஏகத்துக்கு இருக்கு. எல்லோரும் இவ்வளவு செலவு பண்ணியா புடவை வாங்கி கட்டு றாங்க?' என நினைத்து கொண்டாள்.

அவர்களின் திருமணத்திற்கு இடையில் இருந்த ஒரு வாரம் இருவருமே வழக்கம் போல் கல்லூரிக்கு வந்து சென்றனர். அதிகப்படியான பார்வை பரிமாற்றம் எதுவும் அவர்களிடையே நடைபெறவில்லை.

ஸ்ரீதர் வகுப்பில் பாடம் எடுப்பதை ஜோதி பிரமிப் பாய் பார்ப்பாள்.

அவன் பாடத்தை மிகத் தெளிவாக விளக்குவான். அரை மணி நேரம் விளக்குவான். மீதி பத்து நிமிடங்கள் அவர்களின் சந்தேகங்களை நிவர்த்தி செய்வான்.

சில நேரம் சின்ன விவாதத்தை தொடங்கி வைத்து அவர்களது அறிவாற்றலை விரிவாக்கினான். அந்த ஒரே வாரத்தில் அனைவரும் அவனது வகுப்பை விரும்ப ஆரம்பித்து விட்டனர்.

ஒரு நாள் மாலை ஸ்ரீதர் அவளை நகைக்கடைக்கு அழைத்து சென்றான்.

"இங்கே எதுக்கு வந்திருக்கோம்?"

"உனக்கு கொஞ்சம் நகை வாங்கணும் ஜோதி. நம்ம கல்யாணத்துக்கு முதல் நாள் நீ எதை போடுவே?"

"இப்பெல்லாம் யாருங்க ஒரிஜினல் நகை போடுறா? என்கிட்ட டூப்ளிகேட் செட் இருக்கு. அதை வச்சு நான் சமாளிச்சுடுவேன்."

"இல்ல ஜோதி சிம்பிளா மட்டும் வாங்குவோம்."

"ப்ளீஸ் ஸ்ரீதர். எனக்கு என்னமோ மாதிரி இருக்கு. என்னை பணத்தால் அடிக்கிற மாதிரி இருக்கு. உரிமை இல்லாத பொருளை தொடுற ஃபீலை எனக்கு தராதீங்க."

அவளது மனநிலையை புரிந்து கொண்டவன் அவளை வற்புறுத்தவில்லை.

'எனக்கு மனைவியா மாறின பிறகு அவளுக்கு தேவையானதை நான் வாங்கி தந்துக்கிறேன். அப்போ அவளால் மறுக்க முடியாது தானே' என நினைத்தான்.

ஸ்ரீதர் தங்களிடம் சொல்லிக் கொள்ளாமல் திருமணம் செய்ததால் தருண், அன்பரசு மற்றும் தெய்வநாயகி



ஆகிய மூவரும் அவன் மேல் கோபமாக தான் இருந்தனர். ஆனால் அந்த கோபத்தை அவன் மேல் அவர்கள் வைத்திருந்த பாசம் வென்றதால் நடந்ததை ஏற்றுக் கொண்டு அவனிடம் சகஜமாக பேசினர்.

தருண் தன் மனைவியிடம் ஒரு விஷயத்தை தெளிவாக விளக்கினான். ஸ்ரீதர் ஏற்கனவே ஜோதி கழுத்தில் தாலி கட்டிய விஷயத்தை தாரிகா வெளியே சொன்னால் அன்றோடு அவள் தன் தாய் வீட்டிற்கு சென்றுவிட வேண்டும் என்பதே அது!

எப்பொழுதாவது கோபப்படும் தருணிற்கு அடங்கியே பழக்கப்பட்ட தாரிகாவும் தன் வாய்க்கு பெரிய பூட்டை போட்டுக் கொண்டாள்.

சனிக்கிழமை மதியமே ஜோதியை அழைத்துக் கொண்டு குலதெய்வம் கோவில் இருக்கும் ஊருக்கு பயணமானார்கள். பயணத்தின் போது ஸ்ரீதர் முன்னிருக்கையில் இருந்தான்.

அவள் அருகே ஸ்ரீதரின் உறவினர்கள் சிலர் அமர்ந்திருந்தார்கள். யாரும் அவளிடம் பேச முற்படவில்லை. அவளுக்கும் யாரிடம் என்ன பேசுவது என்று தெரியாத காரணத்தால் அமைதியாக வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தாள்.

'இப்படி யாருமே இல்லாமல் தனியா வந்து மாட்டிக் கிட்டோமோ?' என்று கூட அவளுக்கு தோன்றியது.

'நான் இருக்கேன். கவலைப்படாதே!' என்று ஸ்ரீதர் குறுஞ்செய்தி அனுப்பி வைத்தான். அதை படித்ததும் அவளது முகம் தெளிந்தது.

'இவன் ஒருத்தன் என் பக்கத்தில் இருந்தால் போதும். நான் இந்த உலகத்தையே எதிர்த்து நின்னுடுவேன்' என்ற மனோ தைரியம் உண்டானது.

'தாங்க்ஸ் ஃபார் யுவர் டைம்லி மெசேஜ்' என்று அவனுக்கு பதில் அனுப்பி வைத்தாள்.

அன்று இரவு தூங்கப் போகும் முன் ஸ்ரீதர் அவளை தனிமையில் சந்தித்தான்.

''என்ன வேணும்?''

''அன்னைக்கு நான் கட்டிய தாலியை கழட்டி தா. யாராச்சும் பார்த்தால் வம்பா போயிடும்.''

அவள் தயங்கி நிற்கவும்...

''சென்ட்டிமெண்ட்டா அதை கழட்டக் கூடாதுன்னு தோணுதா?'' என்று கேட்டான்.

அவள் ஆமாம் என்று தலையாட்டவும், ''நாளைக்கு உனக்கு அலங்காரம் பண்ணுறேன்னு ஏகப்பட்ட பேர் உன் பக்கத்துல இருந்து உன்னை பார்த்துக்கிட்டு இருப்பாங்க. நாம மாட்டிக்குவோம். இப்போ என்ன உனக்கு தாலியை கழட்ட கூடாது அவ்வளவு தானே. இன்னைக்கு ஒரு நைட் வேணா அது என் கழுத்துல தொங்கட்டும்.'' என்றதும் அவள் அவனை விநோதமாகப் பார்த்தாள்.

''பொய் சொல்லலை. நிஜமா தான் சொல்லுறேன். என் கழுத்திலே இருக்கட்டும். காலையில் அதை பொட்டலமா கட்டி என் பாக்கெட்டில் வச்சுக்கிறேன். கோவில் உண்டியலில் போட்டுடலாம்.'' என்றதும் வேறு வழியின்றி தன் தாலியை கழட்டி கொடுத்தாள்.



அவன் சொன்னது போல் தன் கழுத்தில் போட்டுக் கொண்டு அங்கே இருந்து விரைந்து சென்று விட்டான்.

'சோ சுவீட்டுடா நீ! உன்னை கட்டிக்க நான் எத்தனை பிறவியில் தவம் செஞ்சேனோ?' என்று ஜோதி மகிழ்ச்சியில் மூழ்கிப் போனாள்.

'இந்த குணத்தை விடவா பணம் காசு பெருசு? அந்த லூசு அகல்யாக்கு இது புரியலையே!'

'ஹேய் லூசு ஜோதி! அவளுக்கு மட்டும் இது புரிஞ்சு இருந்தால் இன்னைக்கு ஸ்ரீதர் உனக்கு கிடைச்சு இருக்க மாட்டான்.'

'என் ஸ்ரீதர் எனக்கு தான். நான் அவனை யாருக்கும் விட்டு தர மாட்டேன்' என்ற நினைப்போடு தூங்க சென்றாள்.

மறுநாள் உறவினர்களின் மத்தியில் கோவிலில் வைத்து அவர்களது திருமண சடங்குகள் தொடங்கியது.

தாலியை கையில் எடுத்த ஸ்ரீதர் குனிந்து அவளை பார்த்தான். அவளும் நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள்.

இருவரது இதழ்களிலும் புன்னகை தவழ்ந்தது. ஊரில் உள்ள அனைத்து தெய்வங்களையும் வேண்டிக் கொண்டு ஸ்ரீதர் அவளது கழுத்தில் தாலி கட்டினான்.

மகனது புன்னகையை கண்ட அன்பரசு தான் நினைச்சதை சாதிச்சுட்டோம்னு சிரிக்கிறானா? என்று ஒரு நிமிடம் கோபப்பட்டார்.

பின் 'எது எப்படி இருந்தாலும் அவன் என் பையன். அவன் நல்லபடியாக வாழ வேண்டும்!' என இறைவனை பிரார்த்திக்க ஆரம்பித்தார்.

மணமக்கள் இருவரும் அன்பரசுவையும் தெய்வநாயகியையும் விழுந்து வணங்கி ஆசி பெற்றனர். தருண் தம்பியின் கை பிடித்து குலுக்கி வாழ்த்து தெரிவித்தான்.

சாமி கும்பிடப் போகும் பொழுது ஸ்ரீதர் ஜோதியிடம் அந்த தாலி பொட்டலத்தை கொடுத்தான். அவள் தன் கையாலே அதை உண்டியலில் செலுத்தினாள்.

தாலி கட்டிய சில மணி நேரத்தில் அவர்கள் அனைவரும் சென்னை நோக்கி பயணப்பட்டனர். இம்முறை ஸ்ரீதர் அவள் அருகில் தான் அமர்ந்திருந்தான்.

ஆனால் அருகே நிறைய உறவினர்கள் இருந்ததால் அவர்களால் பேசிக் கொள்ள முடியவில்லை. பொதுப்படையான ஒன்றிரண்டு பேச்சுக்கள் மட்டும் பேசிக் கொண்டனர். அவன் அருகே அமர்ந்து இருந்ததே அவளுக்கு தேவையான மனநிம்மதி கிட்டியதால் அவளும் அதற்கு மேல் எதையும் எதிர்பார்க்கவில்லை.

ஆலம் சுற்றி ஸ்ரீதரின் வீட்டிற்குள் ஜோதி அழைத்து செல்லப்பட்டாள். அந்த வீட்டின் பிரம்மாண்டம் அவளை மிரட்டியது.

'அச்சோ! ஸ்ரீதர் இவ்வளவு வசதியானவனா? இந்த குடும்பத்தோட என்னால ஒட்டிப் பழக முடியுமா?' என்ற சந்தேகம் அவளுக்கு எழுந்தது.

அன்று இரவு ஸ்ரீதரின் அறைக்கு ஜோதி அனுப்பி வைக்கப்பட்டாள்.

அவனது அறைக்குள் நுழைந்தவள், 'இதுக்கு பேரு பெட் ரூமா? இதுவே தனி வீடு மாதிரி இருக்கு' என்று பார்த்துக் கொண்டிருந்தாள்.



உள்ளே நுழைந்ததும் படிப்பதற்கு பெரிய மேஜையும் அதை ஒட்டி புக் ஷெல்பும் இருந்தது. இன்னொரு புறம் சோபா போடப்பட்டு இருந்தது. பெரிய தொலைக்காட்சி ஒன்று சுவரில் மாட்டப்பட்டு இருந்தது. பெரிய படுக்கையும் அதை ஒட்டி ஒரு குளியலறையும் இருந்தது. ஒரு பக்க சுவர் முழுவதும் கப்போர்ட் இருந்தது.

''வா ஜோதி! உள்ளே வராமல் என்ன ஆராய்ச்சி பண்ணிக்கிட்டு இருக்கே!''

''உங்க வீட்டோட பிரம்மாண்டம் என்னை மிரட்டுதுங்க. பயமா இருக்கு.'' என்று அவள் தன் மனதை மறைக்காமல் சொன்னாள்.

''என்ன பயம்?'' என்று அவன் ஆச்சரியமாய் கேட்க,

''இங்கே இருக்கிறவங்க எல்லாம் என்னை மதிச்சு பேசுவாங்களான்னு தான் பயமா இருக்கு. நான் இந்த வீட்டுக்கு கழுத்திலே போட்டு இருக்கிற ஒரு பவுன் செயினும் காதிலே போட்டு இருக்கும் ஒற்றை தோடோடும் வந்திருக்கேன். என்கிட்ட வேற எந்த பணமும் கிடையாது. எங்க வீடு மட்டும் தான் என்னோட ஒரே சொத்து.''

அவளது கை பிடித்து தன் அருகே அமர்த்திக் கொண்டவன், ''என் மேல பாசத்தை காட்டு. என்னை நல்லா கவனிச்சுக்கோ. அது போதும் ஜோதி. எனக்கு எப்பவுமே பணத்து மேல பெரிய அட்ராக்ஷன் இருந்ததில்லை. என்னால என் மனைவி பிள்ளைகளை பார்த்துக்கிற அளவுக்கு சம்பாதிக்க முடியும்.

''இந்த வீடு முழுக்க முழுக்க எங்க அப்பாவின் பணத்தால் உருவாக்கப்பட்டது. நீ மட்டும் இல்லை. நானும் இந்த சொத்துக்கு சம்பந்தமில்லாத ஆள் தான். அதனால வீணா கவலைப்படாதே!''

''அவர் உங்க அப்பா. அதனால நீங்க இங்கே உரிமையோடு தங்கலாம்.''

''நீ என்னோட வைஃப் தானே? அப்போ நான் இருக்கிற இடத்திலே நீயும் உரிமையோடு இருக்கலாம். இதை உன் மனசிலே ஏத்திக்கோ. நீ இப்படி இன்பீரியரா ஃபீல் பண்ணினால் எங்க அண்ணி உன்னை தூக்கி போட்டு மிதிச்சுக்கிட்டு போய்கிட்டே இருப்பாங்க.

''இந்த வீட்டுலயே நீ பார்த்து பயப்பட வேண்டிய ஒரே ஆள் எங்க அண்ணி தான். அவங்களை சமாளிக்கணும்னா நீ ஸ்ரீதர் மனைவிங்கிற விஷயத்தை மனசிலே நல்லா பதிய வச்சுக்கோ. இந்த வீட்டுல அவங்களுக்கு இருக்கிற எல்லா உரிமையும் உனக்கும் இருக்குன்னு நீ முதல்ல நம்பு. எல்லாம் சரியா வரும்.

''அண்ணி தவிர மீதி இருக்கிற எல்லோரும் மனுஷங்களை மதிக்க தெரிஞ்சவங்க. பணத்தை பெருசா எடுத்துக்க மாட்டாங்க. எங்க வீட்டுல உள்ளவங்களையும் உன் பாசத்தால் உன் பக்கம் வளைச்சு போடு.'' என்றதும் அவள் தன் தலையை ஆட்டி சம்மதித்தாள்.

''நம்மளோட வாழ்க்கையை நாம இன்னைக்கு தொடங்க வேண்டாம். நீ முதல்ல உன் காலேஜ் படிப்பை முடிக்கணும். அது வரைக்கும் நாம பிரண்ட்ஸா இருப்



போம்! இந்த இடைப்பட்ட காலத்தில் நாம ஒருத்தரை ஒருத்தர் காதலிப்போம்! இப்போதைக்கு பிரண்ட்ஸ் ஓகேவா?'' என்று கேட்டு அவன் தன் வலது கையை அவள் முன் நீட்டினான்.

'ஸ்ரீதர் தன்னை கடமையாக மட்டுமே மணம் புரிந்து இருக்கிறான். அவன் மனதில் தன் மேல் காதல் வந்த பின்பே வாழ்க்கையை தொடங்க வேண்டும் என்பது தான் ஜோதியின் விருப்பமும்.

அதனால் அவளுக்கும் தன் வாழ்க்கையை அன்று தொடங்க சம்மதம் இல்லாததால் அவனுடைய திட்டத்திற்கு சந்தோஷமாக ஒத்துக் கொண்டு அவனது கைப் பற்றி குலுக்கினாள்.

''சரி தூங்கலாம். நாளைக்கு வேற ரிசப்ஷன் மேடையிலே நிக்கணும். அப்பாவோட பிசினஸ் சர்க்கிள் ஆட்கள் எல்லாம் வருவாங்க. அதனால கூட்டம் அதிகமா இருக்கும். நீ இந்தப் பக்கம் படு. நான் அந்தப் பக்கம் படுக்கிறேன். என்றவன் படுத்து தூங்கிப் போனான்.

ஜோதிக்கு தான் தூக்கம் வருவேனா என்றது. அந்த வீட்டு மனிதர்களை பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள்.

எல்லோரையும் என் பக்கம் வளைச்சு போடுற அளவுக்கு எனக்கு அவ்வளவு சாமர்த்தியம் இருக்கா? எனக்கு ஒரு வேலையும் உருப்படியா செய்ய தெரியாது. இதுல எப்படி என் மாமியாரை நான் கவர் பண்ணுறது? என கவலைப்பட்டாள்.

# 8



காலையில் எழுந்து குளித்து முடித்து கீழே வந்தாள். வீடு நிறைய ஆட்கள் இருந்தார்கள். யாரிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் சிறிது நேரம் அமர்ந்திருந் தாள்.

அனைவரையும் பார்த்து எவ்வளவு நேரம் தான் ஈ என்று இளித்துக் கொண்டு இருக்க முடியும் என நினைத் தவள் மெல்ல நழுவி மாடியேறி வந்தாள்.

"என்ன ஆச்சு? எல்லோர் கூடவும் இருக்கப் போறேன்னு போனே! போன வேகத்திலே திரும்பி வந்துட்டே!" என்று ஸ்ரீதர் விசாரித்தான்.

"இந்த சிங்கம் சிங்கிள் ஆளை தான் சமாளிக்கும். அங்க ஒரு ஊரே இருக்கு." என்றதும் பக்கென்று சிரித்தான்.

"இன்னைக்கு ரிசப்ஷன் முடிஞ்சதும் எல்லோரும் போயிடுவாங்க. அது வரைக்கும் நீ இந்த ரூமுக்குள் ளயே இரு. எனக்கு வெளியே கொஞ்சம் வேலை இருக்கு. நான் கிளம்புறேன்." என்றதும் அவள் முகம் மாறியது.

"உனக்கு போர் அடிக்காமல் இருக்க உனக்கு சூப்பர் கம்பேனியனை ஏற்பாடு செஞ்சுட்டு போறேன்."



என்றவன் வெளியே சென்று தன் அண்ணன் மகளை அழைத்துக் கொண்டு வந்தான்.

"தீபுக்குட்டி! நீ சித்தி கூட இரு. சித்து வெளியே போய் உனக்கு சாக்லேட் வாங்கிட்டு வரேன்." என்று சொல்லிவிட்டு சென்றான்.

அவன் தனக்காக பார்த்து பார்த்து செயல்படுவதை கண்டு அவளுக்கு சந்தோஷமாக இருந்தது. அவன் திரும்பி வந்து பார்த்த பொழுது ஜோதியும் தீப்தியும் ராசியாகி இருந்தனர்.

"சித்து! எனக்கு ஸ்ரீ சித்தியை ரொம்ப பிடிச்சு இருக்கு." என்று தீப்தி கூறினாள்.

"ஸ்ரீ சித்தியா? அவளை ஜோதி சித்தின்னு கூப்பிட வேண்டியது தானே?" என்று ஸ்ரீதர் கேட்கவும், ஜோதி முறைத்தாள்.

"அவளா ஒண்ணை கண்டுபிடிச்சு இருக்காள். ஏன் உங்க பேரை நான் யூஸ் பண்ணக் கூடாதா?"

"அம்மா தாயே! தெரியாமல் கேட்டுட்டேன். உன் உக்கிரத்தை கொஞ்சம் குறை. அப்படியே காளி தேவியை பார்க்கிற மாதிரியே இருக்கு."

தன் சித்தப்பாவிடம் இருந்து சாக்லேட்டுகளை பெற்றுக் கொண்ட தீப்தி வெளியே ஓடிவிட்டாள். ஸ்ரீதர் புத்தகத்தை தூக்கிக் கொண்டு அமர்ந்தான்.

"இப்போ உட்கார்ந்து என்ன படிக்க போறீங்க?"

"நாளைக்கு ஃபர்ஸ்ட் அவர் உன் கிளாஸுக்கு தான் வரணும். அதான் நோட்ஸ் எடுக்கிறேன்." என்றான்.

"உங்க கிளாஸ்மேட்ஸ் எல்லோரும் என்னை பத்தி என்ன சொல்லுறாங்க?"

"ஸ்ரீதர் சார் மாதிரி எல்லா சாரும் இருந்துட்டால் we will start to love our course" என்று சொல்லுறாங்க.

"அப்படியா? Thanks for the compliment."

"நீங்க செம பிரில்லியண்ட்டுன்னு பேசிக்கிறாங்க. ஆளும் ஸ்மார்ட்டா இருக்கீங்களாம். என் பக்கத்திலே உட்கார்ந்து இருக்கிற கீர்த்தி என் டார்லிங் ஸ்ரீதர்னு உங்களை கொஞ்சிக்கிட்டே இருக்காள்."

"என்னது டார்லிங்கா?!" என்று ஸ்ரீதர் அவளை ஆச்சரியத்துடன் பார்த்தான்.

"அவளுக்கு எல்லோருமே டார்லிங் தான். டார்லிங் விராட் கோலி, டார்லிங் சூர்யா, டார்லிங் ரன்பீர் கபூர். இப்படி அவளோட டார்லிங் லிஸ்ட் ரொம்ப பெருசு." என்றதும் ஸ்ரீதர் குனிந்து தன் வேலையை தொடர ஆரம்பித்தான்.

அன்று இரவு ரிசப்ஷன் மேடையில் தீப்தி ஜோதியை விட்டு அகலவில்லை. ஜோதிக்கு அது மிகப் பெரிய ஆறுதலாய் இருந்தது.

மறுநாள் காலையில் ஸ்ரீதர் தன் காரில் கல்லூரிக்கு சென்றுவிட்டான். தங்களின் உறவு யாருக்கும் தெரியக் கூடாது என்ற காரணத்தால் தனித்தனியே கல்லூரிக்கு வந்து செல்வது என்று அவர்கள் முடிவு செய்திருந் தார்கள்.

புது இடம் என்பதால் ஜோதி கொஞ்சம் தடுமாறி இரு பஸ் மாறி கல்லூரிக்கு சென்றாள். அவள் வகுப்பிற்கு



வந்த பொழுது ஸ்ரீதர் வகுப்பை தொடங்கி இருந் தான்.

"கம் இன்!" என்று அவளை உள்ளே வர அனுமதித் தவன் தன் பாடத்தை தொடர ஆரம்பித்தான்.

அன்றைய வகுப்பு முடியப் போகும் தருவாயில் ஸ்ரீதர் வருகை பதிவேட்டில் குறிக்க ஆரம்பித்தான். அவன் நம்பர்களை சொல்லிக் கொண்டே வர மாணவர்கள் 'எஸ் சார்' என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஜோதியின் நம்பரை அவன் சொல்லவே இல்லை என்றதும் ஜோதி குழம்பினாள்.

அவன் முடிக்கும் வரை பொறுமை காத்தவள் மெது வாக எழுந்து நின்று, "Sir! you didn't call my number." என்றாள்.

"நீங்க பத்து நிமிஷம் லேட்டா வந்தீங்க இல்ல. So I have marked you absent." என்றவன் கிளம்பி சென்று கொண்டே இருந்தான்.

'அடப்பாவி புருஷா! நீ இவ்வளவு சின்சியரா இருக்கணுமா?' என்று ஜோதி மனதிற்குள் திட்டிக் கொண்டே அமர்ந்தாள்.

"ஹேய் ஜோதி! என் டார்லிங் ஸ்ரீதரை நீ மனசிலே திட்டுற தானே!" என்று கீர்த்தி கேட்கவும்,

"மகளே! நானே செம கடுப்பில் இருக்கேன். நீ ஏதாச்சும் பேசினே. கொலை பண்ணிடுவேன் பார்த்துக்கோ!" என்று ஜோதி மிரட்டினாள்.

"இன்னைக்கு ஏன் ஜோதி லேட்? உன் ஸ்கூட்டி பஞ்சரா?"

''இல்ல கீர்த்தி. நான் வீடு மாறிட்டேன்.''

''ஏன் பழைய வீட்டுக்கு என்ன ஆச்சு? அது உன் சொந்த வீடு தானே?''

''ம்ம்ம் அங்க கொஞ்சம் சரியா வரலை. அதான் வாடகைக்கு விட்டுட்டேன். ஒரு அபார்ட்மெண்ட்டில் வாடகைக்கு போய் இருக்கேன்.''

'தனியா இருக்கும் பெண். தனி வீட்டில் இருப்பதை விட அடுக்கு மாடி குடி இருப்பில் இருப்பது தான் பாதுகாப்பு' என நினைத்த கீர்த்தியும் அதற்கு மேல் கேள்வி கேட்கவில்லை.

ஜோதிக்கு தன் ஸ்கூட்டி இருந்தால் வசதியாக இருக்கும் தான். ஆனால் தன்னுடைய பழைய ஸ்கூட்டி ஸ்ரீதர் வீட்டின் ஆடம்பரத்தோடு ஒத்துப் போகாது என நினைத்தே அவள் ஸ்ரீதரின் வீட்டிற்கு அதை கொண்டு வரவில்லை.

அன்று மாலை வகுப்புகள் முடிந்து அவள் கல்லூரியை விட்டு வெளியேறும் பொழுது அவளது அலைபேசி கிணுகிணுத்தது.

வெகுநாட்களுக்கு பின் அவளது தாத்தாவின் எண் ஒளிர்வதை கண்டவள் அதை இயக்கி உற்சாகமாய், ''ஹே தாத்து! உங்களை பார்த்து பேசி எவ்வளவு நாள் ஆச்சு. சடனா எங்கே காணாமல் போயிட்டீங்க?'' என்றாள்.

''அப்படியே நேரா நடந்து வா. நான் உனக்காக காரில் காத்துக்கிட்டு இருக்கேன்.'' என்றவர் அழைப்பை துண்டித்தார்.



'தாத்தா செம கோபமா பேசுறார். என்ன ஆச்சுன்னு தெரியலையே' என நினைத்தவள் நடந்து சென்று அவரது காரில் ஏறிக் கொள்ள கார் சீறிப் பாய்ந்தது.

''எப்படி இருக்கீங்க தாத்து?''

தீப்தியின் 'சித்து'வை கேட்டதில் இருந்து ஜோதிக்கு தன் தாத்தாவை 'தாத்து' என்று கூப்பிட ஆசை வந்துவிட்டது.

அவர் அவளை திரும்பி பார்த்து முறைத்தார்.

''ஒண்ணு நல்லா இருக்கேன்னு சொல்லுங்க. இல்லையா நான் நல்லா இல்லைன்னு சொல்லுங்க. இப்படி எல்லாம் முறைக்கக் கூடாது.''

அவர் அதற்கும் பதில் சொல்லவில்லை என்றதும் அவள் அமைதியாய் வெளியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

ஒரு ஹோட்டலின் ரூஃப் கார்டனுக்கு அழைத்து சென்றார். அங்கே இவர்கள் இருவரை தவிர வேற யாருமே இல்லை. எதிர் எதிரே அமர்ந்தார்கள்.

''என்ன விஷயம் தாத்து? செம கோபத்தில் இருக்கீங்க?''

''நான் என்ன செத்தா போயிட்டேன்? யாரை கேட்டு இப்படி ஒரு கல்யாணம் பண்ணினே?''

''என் கல்யாண விஷயம் உங்களுக்கு எப்படி தெரிஞ்சது? நான் உங்களுக்கு போன் பண்ணினேன். ஸ்விட்ச் ஆஃப்னு வந்துச்சு.''

“ஏற்கனவே என் பொண்டாட்டி போயிட்டாள். என் சின்ன மகன்... அதான் உங்க அப்பன் அவனும் என்னை விட்டுட்டு போயிட்டான். இருக்கிற ஒரே மகனும் இதயக் கோளாறுன்னு படுத்துட்டான். அதை பார்த்து எனக்கு ஹார்ட் அட்டாக் வந்துடுச்சு. நானும் படுத்துட்டேன். ஒரு பதினைஞ்சு நாள் உன்னை கவனிக்கலைன்னா நீ இப்படி ஒரு காரியம் பண்ணிடுவியா?”

“ஹார்ட் அட்டாக்கா? இப்போ எப்படி இருக்கீங்க?”

“ப்ச் நல்லா இருக்க போய் தான் உன்னை தேடி வந்திருக்கேன். இப்படி ஒரு கல்யாணம் உனக்கு தேவையா? அவன் உன்னை கேட்காமல் தாலியை கட்டினால் தூக்கி அவன் முகத்திலேயே எறிய வேண்டியது தானே!”

“தாத்து! என் கல்யாணத்தை பத்தி தேவை இல்லாமல் பேசாதீங்க. ஐ லவ் மை ஸ்ரீதர். என்னோட கல்யாணம் என் முழு சம்மதத்தோட நடந்தது. அப்புறம் பதினைஞ்சு நாள் என்னை கவனிக்கலைன்னு சொல்லு நீங்க... மீதி நாள் எல்லாம் என் பக்கத்திலே இருந்து கவனிச்சீங்களா என்ன?

“நான் அந்த வீட்டுக்கு எதுவும் கொண்டு போகலை. நகை நட்டு பாத்திரம் பண்டம்னு எதுவுமே கொண்டு போகலை. என் மாமனாரும் மாமியாரும் அதை எல்லாம் எதிர்பார்க்கவும் இல்லை. இதை விட ஒரு பொண்ணுக்கு நல்ல வாழ்க்கை எப்படி அமையும்?

“என் வசதிக்கும் ஸ்ரீதர் வசதிக்கும் ஏணி வச்சால் கூட எட்டாது. இருந்தாலும் எங்க கல்யாணத்தை எங்க மாமா



சிறப்பா நடத்தி வச்சார். என் புகுந்த வீட்டு மனுஷங்களை தப்பா பேசாதீங்க.”

பத்து நிமிடங்கள் இருவரும் முறைத்துக் கொண்டே அமர்ந்திருந்தனர்.

“சரி நடந்தது நடந்து போச்சு. நான் நாளைக்கு வந்து சீர் செய்யவா?”

“சீரா? நீங்களா? எதுக்கு?” என்றதும் திரும்பவும் முறைத்தார்.

“நீங்க தானே சொன்னீங்க... நானா தாத்தா வேணும்னு ஓடி வரும் போது தான் என்னை ஏத்துக்கிட்டு ஊர் உலகத்துக்கு முன்னாடி வருவேன்னு சவால் விட்டீங்களே! ஞாபகம் இல்லையா?”

“அதுக்காக இப்படி யாரும் இல்லாத அநாதையா உன் மாமியார் குடும்பத்துக்கு முன்னாடி நிக்க போறியா?”

“எங்க அம்மா அப்பா நிலைமைக்கு முன்னாடி என் நிலைமை ரொம்ப சாதாரணம் தாத்து! இன்னைக்கு எனக்காக என் ஸ்ரீதர் இருக்கார். ஒவ்வொரு விஷயத்திலும் அவ்வளவு அனுசரணையா நடந்துக்கிறார். அவர் இருக்கும் போது நான் எப்படி அநாதை ஆவேன்?

“ஆனா எங்க அம்மா அப்பாக்கு அன்னைக்கு இருக்க வீடு கிடையாது. அடுத்த வேளை சாப்பாட்டுக்கு சம்பாதிக்க வேலை கிடையாது. ஒரு பிரண்ட்கிட்ட கடன் வாங்கி தான் எங்க அப்பா எல்லாத்தையும் சமாளிச்சார். அன்னைக்கு உங்களுக்கு எங்க அப்பாவை பார்த்து பரிதாபம் வரலை இல்ல...”

'இவகிட்ட நான் எப்போ பேசினாலும் இவளுக்கு என்னை குறை சொல்ல தான் தெரியும்' என்பது போல் முகத்தை திருப்பிக் கொண்டு பிரகாஷ் அமர்ந்திருந் தார்.

'வயசுல பெரியவர். எப்பவோ செஞ்ச தப்பை இப்போ சொல்லிக் காட்டணுமா? இப்ப தான் ஹார்ட் அட்டாக் வேற வந்திருக்குன்னு சொல்லுறார். அவரை கஷ்டப்படுத்திட்டு என்னால நிம்மதியா இருக்க முடியுமா?'

'எனக்கு இருக்கிற ஒரே ரத்த சம்பந்தம் இவர் தானே! நான் என்ன திட்டினாலும் அப்பப்போ என்னை பார்க்க ஓடி வரார் தானே! என்ன பொண்ணு நான்' என்று ஜோதிக்கு தன் மேலேயே கோபம் எழுந்தது.

அவள் எழுந்து தன் தாத்தாவின் அருகே சென்று அவரது முகத்தை தன் பக்கம் திருப்பி, ''ஸாரி தாத்து! மனசிலே பட்டத்தை டக்குன்னு சொல்லிட்டேன். இனிமேல் யோசிச்சு பேசுறேன். உங்களை கஷ்டப்படுத் திட்டு என்னால நிம்மதியா இருக்க முடியாது தாத்து! பெரியவங்களை எடுத்து எறிஞ்சு பேச எங்க வீட்டுல எனக்கு சொல்லித் தரலை.

''இப்ப என்ன உங்களுக்கு எனக்கு சீர் செய்யணும். அவ்வளவு தானே. செய்யுங்க. ஆனா இப்போ வேண் டாம். நீங்க முன்னாடியே சொன்ன மாதிரி நீங்க தான் என் தாத்தான்னு நானே என் மாமனார் மாமியாருக்கு ஒரு நாள் அறிமுகப்படுத்துவேன். அன்னைக்கு செய் யுங்க.



''நம்ம ரெண்டு பேருக்கும் இடையிலே இருப்பது ரத்த சம்பந்தம் தாத்து! அதை அவ்வளவு ஈஸியா வெட்டி விட முடியாது.

''எங்க அம்மாவை கடைசி வரைக்கும் நீங்க ஏத்துக் கலைங்கிற கோபம் எனக்கு இருக்கு தாத்து. அது மறைய கொஞ்ச நாள் ஆகும். இவ்வளவு நாளும் சின்ன பொண்ணா இருந்துட்டேன். இப்ப தானே ஒரு வீட்டுக்கு மருமகளா போய் இருக்கேன்.

''இனிமேல் என் மனசு பக்குவப்படலாம். அப்போ உங்க பக்கம் இருக்கிற நியாயம் எனக்கு புரியலாம். அப்போ உங்களை முழு மனசோடு நான் ஏத்துக்கலாம். கொஞ்சம் வெயிட் பண்ணுங்க தாத்து.''

அவர் அப்பொழுதும் அமைதியாய் இருக்க...

''நான் இவ்வளவு சொல்லுறேன். கொஞ்சமாவது சிரிக்கிறீங்களா? அப்புறமா நான் அழுவேன் தாத்து!'' என்று மிரட்டியதும் புன்னகைத்தார்.

''இப்படியே சிரிச்சுக்கிட்டே இருங்க. இப்பவாச்சும் உங்க ஹெல்த் பத்தி சொல்லுங்க. டாக்டர் என்ன சொன்னார்?'' என்றதும் பேத்தியிடம் தன் உடல்நிலை குறித்து விளக்கினார்.

''ஒழுங்கா மாத்திரை சாப்பிடுங்க. நேரம் ஆச்சு கிளம்பலாமா?'' என்றதும் அவர்கள் கிளம்பினர்.

''சரியான கஞ்ச பிசினாரி தாத்து நீங்க! சாப்பிட ஏதாச்சும் வாங்கி தந்தீங்களா? எனக்கு செம பசி தெரியுமா?'' என்று அவள் கேட்பதற்கும் ஒரு ஆள் வந்து ஒரு பார்சலை நீட்டுவதற்கும் சரியாக இருந்தது.

'எப்படி?' என்பது போல் அவளது தாத்தா பிரகாஷ் ஒரு கெத்து பார்வை பார்க்க... தெரியாமல் சொல்லிட்டேன். தப்பு! என்பது போல் அவள் தன் கன்னங்களை தட்டிக் கொண்டாள்.

காரில் உட்கார்ந்து அவள் சாப்பிட்டுக் கொண்டே தன் கல்யாண கதைகளை அளக்க ஆரம்பித்தாள். அவள் வீடு இருக்கும் தெரு முனையில் அவளை இறக்கி விட்டுவிட்டு அவர் சென்றார்.



## 9

ஜோதி தன் தாத்தாவை பற்றி எண்ணிக் கொண்டே வீடு வந்தாள். தங்கள் அறைக்குள் நுழைந்தவள் தாத்தாவை பற்றிய சிந்தனையில் ஸ்ரீதரிடம் பேசாமல் அமைதியாக இருந்தாள்.

''என்ன ஜோதி காலையிலே ஆப்செண்ட் போட்டுட்டேன்னு கோபமா இருக்கியா?''

''ம்ம்ம் அதெல்லாம் இல்லை. நீங்க சொன்ன பிறகு தான் எனக்கு அந்த விஷயமே ஞாபகம் வருது. புது ஏரியாவா அதான் பஸ் பிடிச்சு வர லேட் ஆகிடுச்சு. நாளைக்கு கரெக்ட் டைம்க்கு போயிடுவேன்.''



''நான் காலேஜ் பஸ்க்கு பீஸ் கட்டிட்டேன் ஜோதி. அதனால நாளையில் இருந்து நீ பஸ்ல போகலாம். இந்தா ரெசிப்ட்.'' என்றதும்,

''தாங்க்ஸ்.'' என்று வாங்கிக் கொண்டாள்.

அவள் தன் இரவு உடையை எடுத்துக் கொண்டு குளியலறை நோக்கி செல்ல ஸ்ரீதர் அவளை தடுத்து நிறுத்தினான்.

''ஜோதி! நான் இந்த ரூமுக்குள்ள மட்டும் தான் பெர்முடாஸ் போடுவேன். கீழே சாப்பிட போகிறதா இருந்தால் கூட நைட் பேண்ட் மாத்திட்டு தான் போவேன். அண்ணி முன்னாடி பெர்முடாஸ் போட மாட்டேன். அதே மாதிரி நீயும் இந்த ரூமுக்குள்ளே நைட் டிரஸ் போட்டுக்கோ.''

''ஸாரி! ஸாரி! நான் ஏதோ ஞாபகத்தில் நைட் டிரஸை கையில் எடுத்துட்டேன். ஸாரி.''

''எதுக்கு இத்தனை ஸாரி கேட்கிறே? ஃப்ரீயா விடு.''

அவள் அந்த இரவு உடையை வைத்துவிட்டு முகம் மட்டும் கழுவி வந்தாள்.

காலையில் தெய்வநாயகியும் அன்பரசுவும் அவளிடம் சரியாக முகம் கொடுத்து பேசவில்லை. இரு நாட்கள் வீடு முழுவதும் உறவினர்கள் இருந்ததால் அவர்களின் இந்த ஒதுக்கம் தெரியவில்லை.

ஆனால் இன்று வெளியாட்கள் யாரும் இல்லாததால் ஜோதியால் அவர்களின் ஒதுக்கத்தை புரிந்து கொள்ள முடிந்தது.

'அவங்க என்னை அகல்யாவா நினைக்கிறாங்க. நான் அவள் இல்லைன்னு சொன்னால் வீணா ஸ்ரீதரோட ஏமாந்த கதை எல்லாம் சொல்ல வேண்டி வரும். நான் நல்ல பொண்ணு தான்னு நம்ம நடத்தையால் காட்டு வோம். அதுக்கு நாம அவங்க பக்கத்திலே நெருங்கி போகணும். இப்படி ஓரமா மாடியிலே ஒதுங்கினால் சரியா வராது' என்று முடிவு செய்தாள்.

ஸ்ரீதர் குளியலறையில் இருந்தான். இவள் தன் புத்தக பையை எடுத்துக் கொண்டு கீழே இறங்கி சென் றாள்.

அந்த வீட்டோடு இருக்கும் சமையலாள் தாயம்மா இவளை கண்டதும், ''டீ குடிக்கிறீங்களாம்மா?'' என்று கேட்டார்.

தாத்தா வாங்கி தந்த சமோசா கட்லெட்டை மொக்கி இருந்ததால் அவளுக்கு வயிறு டொம்மென்று இருந்தது. அதனால் அவள் ஒரு இஞ்சி டீ குடிக்க வேண்டும் என்று நினைத்தாள்.

''எனக்கு இஞ்சி டீ வேணும். நானே போட்டுக்கிறேன்." என்றவள் சமையலறைக்கு சென்று டீ போட்டு கொண்டாள்.

புதிய மருமகள் சமையலறையில் என்ன செய்கிறாள் என்று எட்டிப் பார்த்த தெய்வநாயகியை பார்த்து ஜோதி புன்னகைத்தாள். அவர் பட்டும் படாமலும் ஒரு புன் னகையை உதிர்த்து விட்டு சென்றார்.

'இந்த வீட்டிலே உன் பாடு கொஞ்சம் கஷ்டம் தான் போல ஜோதி! சமாளிச்சு உன் பேரை நிலைநாட்டு!'



என்று தன்னை தானே தட்டிக் கொடுத்துக் கொண்டவள் டீயுடன் சாப்பாட்டு மேஜைக்கு சென்றாள்.

டீயை குடித்து முடித்தவள் தன் புத்தக பையில் இருந்து புத்தகத்தை எடுத்துக் கொண்டு சோபா போடப்பட்டிருக்கும் இடத்தில் கார்ப்பெட் மேல் அமர்ந்தாள்.

அங்கே இருந்த குட்டையான டீ பாயை தன்னுடைய மேஜையாக்கி கொண்டு அதன் மேல் தன் புத் தகத்தையும் நோட்டையும் வைத்துக் கொண்டு எழுத ஆரம்பித்தாள்.

''இங்கே என்ன பண்ணுறே?'' என்று அங்கே வந்த ஸ்ரீதர் கேட்டான்.

''பார்த்தால் தெரியலையா... ரெக்கார்ட் எழுதுறேன்.''

''நம்ம ரூமிலே உட்கார்ந்து எழுத வேண்டியது தானே?''

''உங்க வீட்டுல எல்லோரும் இப்படி தான் தனித்தனி தீவா இருப்பீங்களா? தனி ரூம். தனி டிவி. எப்போ தான் எல்லோரும் ஒண்ணா உட்கார்ந்து பேசுவீங்க?'' என்றதும் ஸ்ரீதர் அங்கே நின்றிருந்த தந்தையையும் தாயையும் அவஸ்தையாய் பார்த்தான்.

அவள் அவனிடம் பதிலை எதிர்பார்க்காமல் குனிந்து எழுத ஆரம்பித்தாள். அவளை கண்ட தீப்தி துள்ளி குதித்து ஓடி வந்தாள்.

''ஸ்ரீ சித்தி! என்ன பண்ணுறீங்க?''

''சித்தி ஹோம் வொர்க் பண்ணுறேன்டா புஜ்ஜு.''

''நானும் இங்கே வந்து பண்ணட்டுமா?''

''உங்க அம்மா ஒண்ணும் சொல்ல மாட்டாங்களா?''

''அவங்க வீட்டுல இல்லையே.''

''அப்போ நீயும் இங்கே வா.'' என்றதும் அவள் தன் புத்தக பையை எடுக்க ஓடினாள்.

தீப்திக்கு ஏதுவாக ஒரு மேஜை வேண்டுமே என்று ஜோதி சுற்று முற்றும் பார்த்தாள். அங்கே பிளவர் வாஷ் வைப்பதற்காக ஒரு அலங்கார ஸ்டூல் போடப்பட்டு இருந்தது.

அது தீப்தியின் உயரத்திற்கு சரியாக வரும் என நினைத்தவள், ''அதை நான் எடுத்துக்கட்டுமா?'' என்று அந்த ஸ்டூலை சுட்டிக்காட்டி தெய்வநாயகியிடம் கேட்டாள்.

அவர் சரி என தலையாட்டியதும் அதை எடுத்துக் கொண்டு வந்து தன்னருகே போட்டாள்.

''எனக்கொரு பெட் ஷீட் வேணும்.'' என்று மீண்டும் தெய்வநாயகியிடம் கேட்கவும் அவர் கொண்டு வந்து தந்தார்.

''தாங்க் யூ அத்தை.'' என்று வாங்கி சென்றாள்.

மீண்டும் தன் இடத்தில் அமர்ந்து கொண்டு தன்னருகே அந்த கார்ப்பெட் மேலே அந்த பெட் ஷீட்டை எட்டாய் மடித்து போட்டாள். தீப்தி தன் பையுடன் அங்கே வந்தாள்.

''புஜ்ஜு! உன் பிளேஸ் ரெடி. சிட் ஹியர்.''

''நாம ஏன் சித்தி தரையிலே உட்காரணும்?''



''இப்படி உட்கார்ந்தால் உடம்புக்கு நல்லது. இது ஒரு ஆசனம்.''

''அப்படின்னா?''

''ஆசனம்னா எக்சர்சைஸ்.''

''ஓ! அப்போ சரி.'' என்றவள் அவள் அருகே உட்கார்ந்து தன் நோட்டை வெளியே எடுத்தாள்.

''எனக்கு டூ ஹோம் வொர்க் இருக்கு சித்தி. உங்களுக்கு?''

''எல்.கே.ஜி பொண்ணுக்கு ரெண்டு ஹோம் வொர்க் தராங்களா? பாவம்டா புஜ்ஜு நீ. எனக்கு ஒண்ணு தான். ஆனா அதை முடிக்க சித்திக்கு நிறைய நேரம் ஆகும்.

''மிஸ் என்னை standing line போட சொல்லி இருக்காங்க.''

ஆங்கில எழுத்துக்களை எழுத பழகுவதற்கு முன் அதற்கு அடித்தளமான நேர் கோட்டை தான் ஒரு பக்கம் முழுவதும் தீப்தியை அவளது டீச்சர் போட சொல்லி இருந்தார்.

அதை வளைக்காமல் நேராக போடுவது எப்படி என்று ஜோதி சொல்லிக் கொடுத்தாள். தீப்தியும் நேர் கோட்டை போட ஆரம்பித்தாள். அவளை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே ஜோதி தன் வேலையை தொடர்ந்தாள்.

ஐந்தே நிமிடத்தில், ''ஸ்ரீ சித்தி! முடிச்சுட்டேன்.'' என்று தீப்தி தன் நோட்டை காண்பித்தாள்.

''சூப்பர்டா புஜ்ஜு. ஆனா இந்த ரெண்டு மட்டும் ஓவரா டில்லி டூ மும்பை போகுதே! இதை மட்டும்

இன்னொரு தடவை போடுங்க.'' என்று அவள் அந்த இரண்டையும் அழித்துவிட்டு நோட்டை நீட்டினாள்.

அந்த சின்ன குட்டியும் சமர்த்தாக தன் தலையை ஆட்டி வாங்கிக் கொண்டது.

அவர்கள் இருவரின் நடவடிக்கையை அன்பரசுவும் தெய்வநாயகியும் தங்கள் அறையில் இருந்து மாறி மாறி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பத்து நிமிடங்கள் தாண்டியதும் அன்பரசு வரவேற்பறை சோபாவில் ஒரு ஓரமாய் வந்து அமர்ந்தார். தன் முதுகிற்கு பின்னால் அமர்ந்திருந்தவரை ஜோதி கவனிக்கவில்லை.

''ஸ்ரீ சித்தி! நான் முடிச்சுட்டேன். இது ஓகேவா?''

''சூப்பர். ரெண்டாவது ஹோம் வொர்க் என்ன?''

''ரைம்ஸ் படிக்கணும். நாம ரெண்டு பேரும் படிப்போமா?''

''சித்திக்கு இன்னும் வேலை முடியலையே! ஒண்ணு பண்ணு. மேலே உன் சித்து சும்மா தான் உட்கார்ந்து இருப்பார். அவர் கூட சேர்ந்து ரைம்ஸ் படி.''

''சித்து எப்போ பாரு படிச்சுக்கிட்டே இருப்பார். போய் கேட்டால் திட்டுவார்.''

''உங்க சித்து டாக்ட்ரேட்டும் பண்ணிட்டார். இதுக்கு மேல படிக்க ஒண்ணும் இல்லை. இதுக்கும் மேல படிச்சா அவர் தன் தலையை பிச்சுக்கிட்டு தெருவிலே சுத்த வேண்டி வந்துரும். அப்புறம் சித்தி பாடு தான் திண்டாட்டம் ஆகிடும். அதனால நீ சித்துவை சொல்லித் தர சொல்லு.''



'' சித்து திட்டினால்...?''

''அவர் ஒரு ஆள். நாம ரெண்டு பேர். நாம ரெண்டு பேரும் சேர்ந்து திட்டலாம். புக்கை தூக்கிட்டு ஓடு.'' என்றதும் அதை கேட்டுக் கொண்டிருந்த அன்பரசு புன்னகைத்துக் கொண்டார்.

சற்று நேரத்திற்கெல்லாம் கையில் ஒரு புத்தகத்தோடு ஸ்ரீதர் அவள் முன்னே வந்து நின்று, ''என்னை ரைம்ஸ் சொல்லித் தர சொன்னியா?'' என்று கேட்டான்.

''ஆமாம். சொன்னேன்.'' என்று அவள் கொஞ்சம் கூட அலட்டாமல் கூறவும், அவன் கடுப்பானான்.

''நான் M.Tech. Ph.d.''

''சோ வாட்? ஸ்கூல் ரைம்ஸ் படிக்காமலே டிகிரி வாங்கிட்டீங்களா என்ன?''

''எனக்கு நோட்ஸ் எடுக்கிற வேலை இருக்கு ஜோதி.''

''அரை மணி நேர கிளாஸ் எடுக்க ஆறு மணி நேரமா நோட்ஸ் எடுப்பீங்க? இதுல IITன்னு பெருமை வேற...''

''நான் எப்போவாச்சும் உன்கிட்ட அப்படி சொன்னேனா?''

''நீங்க சொன்னதில்லை தான். ஆனா இந்த கீர்த்தி இல்ல... அவ தான் எப்போ பாரு என் ஸ்ரீதர் டார்லிங் IITல படிச்சவராக்கும்னு சொல்லிக்கிட்டே இருப்பாள். அதை கேட்டு கேட்டு என் காது புளிச்சு போச்சு. இன்னைக்கு கிளாஸில் எனக்கு நீங்க ஆப்சென்ட் மார்க் பண்ணிட்டு போயிட்டீங்களா... உங்களை மனசிலே

கூட திட்ட விட மாட்டேங்கிறாள். எல்லாம் என் காலக் கொடுமை.'' என்று நிமிர்ந்தே பார்க்காமல் அவள் புலம்பினாள்.

''என்ன ஆச்சு பதிலை காணோம்?'' என்று கேட்டுக் கொண்டே அவள் நிமிர...

அவன் தன் விரல் கொண்டு அவள் பின்னே அமர்ந்து இருக்கும் தந்தையை சுட்டிக் காட்டினான். திரும்பிப் பார்த்தவள் அன்பரசுவை கண்டதும் படக்கென்று திரும்பிக் கொண்டு கணவனை முறைத்தாள்.

''முதல்லயே சொல்ல மாட்டீங்களா?'' என்று முணு முணுத்தாள்.

''தீபுக்குட்டி! இங்கே வா! தாத்தா உனக்கு ரைம்ஸ் சொல்லித் தரேன்.'' என்று பேத்தியை அழைத்துக் கொண்டு அன்பரசு தன் அறை நோக்கி நகர்ந்தார்.

''நாம இங்கேயே படிக்கலாம் தாத்தா.''

''சித்திக்கு டிஸ்டர்பன்ஸா இருக்கும். வா நாம தாத்தா ரூமுக்கு போகலாம்.'' என்று கூட்டிச் சென்றார்.

அவர்கள் சென்றதும் ஸ்ரீதரும் அங்கேயே அமர்ந்து தன் நோட்ஸ் எடுக்கும் வேலையை பார்க்க ஆரம் பித்தான்.

ஓரக் கண்ணால் கணவனை சைட் அடித்துக் கொண்டே ஜோதி தன் வேலையை தொடர்ந்தாள்.

'இவன் கையிலே ஒரு புக் கிடைச்சால் புத்தர் ஆகிடுவானோ! கொஞ்சமாச்சும் நிமிர்ந்து பார்க்கிறானா பாரு! கட்டின பொண்டாட்டி என்னையே இவன் சைட்



அடிக்க மாட்டேங்கிறான். இவன் எங்கே அந்த அகல்யாவை சைட் அடிச்சு இருக்க போறான். அதான் சொத்து போனதும் இந்த சாமியார் எனக்கு வேண்டாம்னு அவள் ஓடிட்டாள் போல' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டாள்.

பத்து நிமிடங்கள் கழித்து திரும்பி வந்த தீப்தி, ''ஸ்ரீ சித்தி! நான் ரைம்ஸ் படிச்சுட்டேன்.'' என்றாள்.

''சூப்பர் புஜ்ஜு. அப்போ டிவி பாருங்க.''

''டிவில உங்களுக்கு என்ன கார்ட்டூன் பிடிக்கும்?''

''எனக்கு டாம் அண்ட் ஜெர்ரி பிடிக்கும்.''

''நான் அதை பார்த்ததில்லையே!''

''நாளைக்கு பார்க்கலாம். சித்தி இப்போ எழுதுறேன்.'' என்றவள் தன் வேலையை தொடர்ந்தாள்.

சாப்பிட்டு முடித்ததும் மேலே ஏறி சென்றனர். வரவேற்பிற்கு பின் வந்த முதல் நாள் இப்படிக் கழிந்தது.

இரவில் ஸ்ரீதரின் அருகே படுத்தால் தனக்கு தூக்கம் வருமோ என முதல் நாள் ஜோதி தயங்கினாள். ஆனால் அவன் அருகே இருப்பது பாதுகாப்பு உணர்வை தந்து கொண்டிருப்பதால் அதன் பின் அவன் அருகே படுக்க அவள் சங்கடப்படவில்லை.

மறுநாள் ஜோதி தன் அத்தை மாமாவிடம் சொல்லிக் கொண்டு கல்லூரிக்கு கிளம்பினாள். கல்லூரிப் பேருந்தில் ஏறி சரியான நேரத்திற்கு கல்லூரியை அடைந்தாள்.

அன்று மாலை ஜோதிக்கு எழுதும் வேலை எதுவும் இல்லாததால் அன்று தீப்திக்கு அவளே பாடம்

சொல்லித் தந்தாள். முன் தினம் போல் இருவரும் கார்ப்பெட் மேல் அமர்ந்து கொண்டு படித்துக் கொண் டிருந்தனர்.

அப்போது அங்கே வந்த தாரிகா, ''உன் வீட்டுல உட்கார சோபா இல்லாமல் தரையிலே உட்கார்ந்து இருப்பே! அதுக்காக என் பொண்ணை எதுக்கு தரை யிலே உட்கார வைக்கிறே?'' என்று கேட்டாள்.

'இப்படி தேளாய் கொட்டிக் கொண்டு கேட்டால் என்ன பதில் சொல்ல?' என ஜோதி விழிக்க அவளுக்கு பதிலாய் தீப்தி பதில் சொன்னாள்.

''எங்க மிஸ் தான் இப்படி உட்கார்ந்தால் எக்சர் ஸைன்னு சொன்னாங்க.''

''என்னவோ பண்ணு.'' என்ற தாரிகா வீட்டை விட்டு வெளியேறினாள்.

''ஏன்டா புஜ்ஜு பொய் சொன்னே?''

''உங்க பேரை சொன்னால் மம்மி உங்களை திட்டு வாங்க.'' என்றதும் ஜோதி வருத்தமாய் முறுவலித்து அவளது தலையை தடவிக் கொடுத்தாள்.

நடந்த அனைத்தையும் தெய்வநாயகி பார்த்துக் கொண்டு தான் இருந்தார்.

தீப்தியை பாடம் எழுத வைத்து ரைம்ஸ் பாட வைத்து முடித்ததும் தொலைக்காட்சியை இயக்கி அவர்கள் இருவரும் பார்க்க ஆரம்பித்தார்கள்.

''ஸ்ரீ சித்தி! எனக்கு டாம் அண்ட் ஜெர்ரி காட்டு றேன்னு சொன்னீங்களே!''



''இதோ வச்சு இருக்கேன் பாரு.'' என்று தன்னிடம் உள்ள பென் ட்ரைவை டிவியில் இணைத்து அதை ஓட விட்டாள்.

That's my mommy என்ற தலைப்பு வந்ததும், ''இது என்ன கதை?'' என்று தீப்தி கேட்டாள்.

ஒரு நிமிடம் ரிமோட் மூலம் அந்த படத்தை நிறுத்தி வைத்துவிட்டு... தீப்தியை தூக்கி தன் மடியில் அமர்த்திக் கொண்டு ஜோதி கதை சொல்ல ஆரம்பித்தாள்.

''இதுல டாம்னு ஒரு கேட், அப்புறம் ஜெர்ரின்னு ஒரு எலி வரும். எப்பவும் அது ரெண்டும் பைட் பண் ணிக்கிட்டே இருக்கும். எப்பவும் ஜெர்ரி தான் ஜெயிக்கும். இந்த சீரியல் that's my mommy. இதுல ஒரு வாத்தோட முட்டை டாம் கேட் பக்கத்திலே உருண்டு வந்துடும். அதுல இருந்து வெளியே வரும் குட்டி டக் டாம் தான் தன்னோட அம்மான்னு நினைச்சுக்கும்.''

''டக்கோட அம்மா கேட்டா?''

''ஆமா அது அப்படி தான் தப்பா நினைச்சுக்கும். அந்த பூனை அந்த வாத்தை சமைச்சு சாப்பிட டிரை பண்ணிக்கிட்டே இருக்கும். அந்த வாத்தை டாம்கிட்ட இருந்து ஜெர்ரி காப்பாத்திக்கிட்டே இருக்கும்.

''ஒரு புக் எடுத்துட்டு வந்து அதுல உள்ள வாத்து போட்டோவை காட்டி உங்க அம்மா இப்படி தான் இருக்கும்னு ஜெர்ரி எக்ஸ்பிளைன் பண்ணும். ஆனா அந்த குட்டி டக் நம்பாது.

''டாம் தான் தன்னோட அம்மான்னு சாதிக்கும். கடைசியில் டாம்க்கு அந்த குட்டி டக் மேல பாசம்

வந்துடும். டக்கை ரிவர்கிட்ட கூட்டிட்டு போய் நீந்த கத்து குடுக்கும். இப்போ படத்தை பார்க்கிறியா?" என்று கேட்டு படத்தை ஓடவிட்டாள்.

தீப்தி சிரித்து ரசித்து அதை பார்த்துக் கொண்டிருந் தாள். வெளியில் இருந்து வீட்டுக்குள் வந்த யாரையும் அவர்கள் கண்டு கொள்ளவில்லை.

''சித்தி இன்னொரு தடவை.'' என்றதும் மீண்டும் அதை ஓட்டிப் பார்த்தார்கள்.

''நாளைக்கு வேற ஒண்ணு காட்டுவீங்களா?''

''என் புஜ்ஜுக்கு டெய்லி ஒண்ணு காட்டுறேன்.''

''அந்த டக்கோட செம காமெடி இல்ல... அதோட அம்மா கேட்டாம். ஆமா சித்தி உங்க அம்மா எங்கே இருக்காங்க?''

''என்னோட அம்மாவும் அப்பாவும் சாமிகிட்ட போயிட் டாங்க.''

''அப்போ நீங்க ஏன் சாமிகிட்ட போகலை?''

'ஐயோ! என்ன இப்படி கேட்டுட்டாள்!' என்று தன் அறை வாயிலில் நின்று கொண்டிருந்த அன்பரசுவும், சாப்பாட்டு மேஜையின் அருகே நின்றிருந்த தெய்வ நாயகியும், தருணும் பதறினர்.

''எங்க அம்மாவும் அப்பாவும் சாமிகிட்ட போகும் போது என்னை விட்டுட்டு போயிட்டாங்க. சித்திக்கும் சாமிகிட்ட போக வழி தெரியலை. அதான் சித்தி இன்னும் இங்கேயே இருக்கேன்.''



'' நீங்க போக வேண்டாம் சித்தி. அப்புறமா எனக்கு யார் டாம் அண்ட் ஜெர்ரி கதை சொல்லுவாங்க?''

தன் கண்களில் துளிர்த்த நீரை துடைத்துக் கொண்டே, ''அப்போ உனக்கு கதை சொல்ல தான் நான் இன்னும் இந்த உலகத்திலே இருக்கேனா? அது சரிடா புஜ்ஜு.'' என்று சொல்லி முறுவலித்தாள்.

''சித்தி போய் சித்துவை பார்த்துட்டு வரேன்.'' என்று சொல்லி மாடியேறி தங்கள் அறைக்குள் நுழைந்தாள்.

கணவனின் அருகே இருந்தால் தன் மனநிலை சரியாகும் என்று நினைத்தே அவள் தங்கள் அறைக்கு வந்தாள்.

''என்னங்க மேடம் எல்.கே.ஜி பாடம் படிச்சு முடிச் சாச்சா? கொஞ்சம் இஞ்சினியர் பாடத்தையும் படிக் கலாமில்ல.''

''எக்ஸாம்க்கு முதல் நாள் படிக்கிறவன் தான் இஞ் சினியர். தினமும் படிச்சால் அவன் ஸ்ரீதர்.''

''அடிங்க!'' என்று அவன் பொய்யாய் கை ஓங்க.

ஒன்றும் சொல்லாமல் அவன் அருகே இருந்த சேரில் அமர்ந்து கொண்டாள். அந்த மேஜை மேல் தலையை சாய்த்துக் கொண்டாள்.

''என்ன ஆச்சு? தூக்கம் வருதா?''

''இல்ல. சும்மா தான். உங்களுக்கு டிஸ்டர்பன்ஸா இருக்கா?''

''அப்படி எல்லாம் இல்லை.'' என்றவன் தன் வேலையை பார்க்க ஆரம்பித்தான்.

'ஆமாடா! நீயாவது நான் பக்கத்துல வந்ததுக்காக டிஸ்டர்ப் ஆகிறதாவது!' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டு இருந்தவள் உறங்க ஆரம்பித்தாள்.

பத்து நிமிடங்களில் தன் வேலையை முடித்த ஸ்ரீதர் அவளை திரும்பிப் பார்க்க... அவள் தூங்கிக் கொண்டிருப்பதை கண்டு,

''தூக்கம் வருதான்னு கேட்டால் இல்லைன்னு சொன்னாள். இப்போ நல்லா தூங்கிக்கிட்டு இருக்காள்.'' என்று திட்டிக் கொண்டே கீழே சென்றான்.

ஜோதி புறப்பட்டு சென்றதுமே தருண் தன் பெண்ணிடம் 'இது போன்ற கேள்விகளை இனி ஜோதியை பார்த்து கேட்கக் கூடாது' என்று சொல்லி புரிய வைத்திருந்தான்.

ஸ்ரீதர் கீழே வரவும் அனைவரும் அவன் முகத்தையே ஆர்வமாய் பார்த்தனர்.

''என்ன ஆச்சு? இப்போ எதுக்கு எல்லோரும் என்னையே பார்க்கிறீங்க?''

''ஜோதி என்னடா சொன்னாள்? அழுதாளா?''

''அவ எதுக்கு அழணும்?''

''மேலே வந்து உன்கிட்ட என்னடா சொன்னாள்?''

''நான் நோட்ஸ் எடுத்துக்கிட்டு இருந்தேன். என் பக்கத்திலே வந்து உட்கார்ந்து மேஜை மேலே தலை வச்சு தூங்கிட்டாள். என்ன ஆச்சு?'' என்றதும் தருண் நடந்ததை விவரித்தான்.

''அவ அதை சாதாரணமா எடுத்து இருப்பாள். நீங்க எல்லோரும் சீரியஸ் ஆகிட்டீங்க. போய் வேலையை



பாருங்க.'' என்று ஸ்ரீதர் சொன்னதும், அனைவரும் கலைந்து சென்றனர்.



## 10

ஒரு நாள் மாலை அன்பரசுவை தேடி அவரது நண்பர் தேவசகாயம் வந்திருந்தார். ஜோதி அருகில் இருக்கும் கடைக்கு செல்ல எண்ணி மாடியில் இருந்து கிளம்பி வந்தாள்.

அன்பரசுவும் தேவசகாயமும் வரவேற்பறையில் அமர்ந்து தேநீர் அருந்திக் கொண்டே பேசிக் கொண்டிருந்தனர். தெய்வநாயகி வீட்டில் இல்லை. அதனால் அன்பரசுவிடம் சொல்லிவிட்டு செல்வதற்காக ஜோதி அவர் முன் வந்து நின்றாள்.

''பக்கத்து கடை வரைக்கும் போயிட்டு வரேன் மாமா.'' என்று சொல்லிவிட்டு சென்றாள்.

ஜோதி வெளியேறியதும் தேவசகாயம் அன்பரசுவிடம், ''யாருடா இந்த பொண்ணு? நான் ஊரிலே இல்லாத சில நாளில் இந்த பொண்ணை தத்து எடுத்து இருக்கியா?'' என்று கேட்டார்.

''இவள் தான் என்னோட சின்ன மருமகள்.''

''ஸ்ரீதர் மனைவியா? அவன் லவ் பண்ணின பொண்ணை தானே கட்டி வச்சதா சொன்னே.''

''ஆமாடா.''

''அவளா இவள்? பார்த்தால் அப்பாவியா தெரியுறாள். ஆனால் எனக்கு வந்த ரிப்போர்ட் என்ன சொல்லுச்சு... இவ சரியான கேடி. ஆக்டிங் குவின். செமையா நடிச்சு தான் நம்ம ஸ்ரீதரை ஏமாத்தி இருக்காள். என்னையே ஒரு நிமிஷம் அப்பாவின்னு நினைக்க வச்ச இவள் எவ்வளவு பெரிய ஆளா இருக்கணும்? வீட்டிலே எப்படி நடந்துக் கிறாள்?''

''நீ சொன்னதுக்கும் இவளுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கும் போல இருக்கு.''

''என் பசங்க விசாரிச்சு ஒரு விஷயம் சொன்னால் அது தப்பாகாது. உனக்கு அந்த ரிப்போர்ட்டை கூட தராமல் நான் சிங்கப்பூர் போயிட்டேன்ல. ஒரு நிமிஷம் இரு. என் ஆபீஸுக்கு போன் பண்ணி விசாரிக்கிறேன்.'' என்றவர் ஐந்து நிமிடங்கள் பேசிவிட்டு வைத்தார்.

''என் பசங்க உறுதியா சொல்லுறாங்க. உன் மருமகள் அகல்யா சரியான சாய்ஸ் கிடையாதுன்னு.''

''என்னடா உளறுறே? என் மருமகள் பேரு ஜோதி.''

''நம்ம ஸ்ரீதர் லவ் பண்ணின பொண்ணு பேரு அகல்யா. அவன் யூ.ஜி படிக்கும் போது அவனோட ஜூனியர்.''

''ஜோதி இப்போ தான் பைனல் இயர் படிச்சுக்கிட்டு இருக்காள். ஸ்ரீதர் இப்போ வேலை பார்க்கிற காலேஜில் தான் படிக்கிறாள்.''



''எங்கேயோ தப்பு நடந்து இருக்கு அன்பரசு. என்ன ஏதுன்னு விசாரி.'' என்றவர் சில நிமிடங்களில் விடை பெற்றார்.

வெளியே சென்று வந்த ஜோதி அன்பரசுவின் அறை கதவை தட்டி உள்ளே வர அனுமதி வாங்கிக் கொண்டு அறைக்குள் நுழைந்தாள். தெய்வநாயகியும் அங்கு தான் இருந்தார்.

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி வெளியே போன நான் எடுத்துட்டு போன பணம் பத்தாதுன்னு தோணின தால உடனே திரும்ப வந்தேன். அப்போ உங்க பிரண்டு உங்ககிட்ட சொன்ன விஷயத்தை நான் கேட்டுட்டேன். ஸ்ரீதர் காதலிச்ச அகல்யா நான் இல்லை. என்ன நடந் துச்சுன்னா....'' என்று மடமடவென்று நடந்ததை சொல்லி முடித்தாள்.

'இப்படி கூட நடக்குமா?' என்று அவர்கள் இருவரும் அதிர்ந்து போய் இருந்தனர்.

கதையை சொல்லி முடித்தவள் மடமடவென மேலே ஏறிச் சென்றாள். ஸ்ரீதர் அறையில் தான் இருந்தான். நடந்ததை அவனிடம் விளக்கினாள்.

''உங்களை காட்டிக் கொடுக்கணும்னு நான் நினைக் கலை ஸ்ரீதர். ஆனா உங்க அப்பா அந்த அங்கிளை விட்டு நடந்ததை துப்பறிய சொல்லுவாரோன்னு பயந்து தான்... வீட்டு விஷயம் வீட்டோட முடியட்டும்னு நினைச்சு தான் சொல்லிட்டு வந்துட்டேன். ஐயாம் ஸாரி.''

''என்னைக்கு இருந்தாலும் சொல்லி தானே ஆகணும். நான் போய் அவங்க ரெண்டு பேரையும் பார்த்துட்டு வரேன்.'' என்ற ஸ்ரீதர் கீழே இறங்கி சென்றான்.

தங்கள் அறைக்குள் நுழைந்த மகனை அன்பரசு தீப்பார்வை பார்த்தார்.

''இவ்வளவு பெரிய விஷயம் நடந்து இருக்கு. ஏன்டா என்கிட்ட சொல்லலை?''

''நீ பண்ணின தப்புக்கு இத்தனை நாளும் நான் அந்த பொண்ணை இல்ல தப்பா நினைச்சேன். காதல்ங்கிற பேரிலே என் பையனை பிரிக்க வந்தவள்னு நினைச்சு சரியா முகம் குடுத்து கூட பேசலையே!'' என்று தெய்வ நாயகி புலம்பினார்.

''நீயாச்சும் அப்படி தான் நினைச்சே! நான் என்ன தெரியுமா நினைச்சேன். நம்ம சொத்தை ஆட்டையை போட எப்போ என்ன சதி செய்வாளோன்னு பயந்துக் கிட்டு இருந்தேன்.'' என்று அன்பரசு புலம்பினார்.

''ஜோதி மட்டும் தீபு குட்டி கூட பாசமா பழகாமல் இருந்திருந்தால் நான் என்னைக்கோ வார்த்தையை விட்டு இருப்பேன். அப்புறமா அவ முகத்தில் இந்த ஜென்மத்தில் என்னால முழிச்சு இருக்க முடியுமா? கடவுளே! என்னை காப்பாத்திட்டே!''

''நானும் கூட தீபு குட்டிட்ட அவ பழகிறதை வச்சு தான் எதுவும் கோபமா பேசலை.'' என்று இருவரும் மாறி மாறி புலம்பினார்கள்.

அவர்களின் திட்டுக்களை வாங்கிக் கொண்டு ஸ்ரீதர் அமைதியாய் தலை குனிந்து நின்றிருந்தான்.



''இந்த விஷயம் தாரிகாவுக்கு தெரிய வேண் டாம்.''

''ம்ம்ம் சரி.'' என்று சொல்லிவிட்டு ஸ்ரீதர் வெளி யேறினான்.

மறுநாளில் இருந்து அன்பரசுவும் தெய்வநாயகியும் ஜோதியிடம் அனுசரணையாய் நடக்க ஆரம்பித்தனர்.

ஜோதிக்கு எப்பொழுது பீரியட்ஸ் வந்தாலும் வயிற்று வலி அதிகமாக இருக்கும். அதனால் அவள் சில மணி நேரங்களுக்கு சுருண்டு படுத்து விடுவாள்.

அன்று கல்லூரியில் இருந்து வீடு திரும்பியவள் தீப்தியுடன் கூட நேரம் செலவு செய்யாமல் தங்கள் அறையிலே முடங்கினாள். அவள் தன் உடலை குறுக்கி வயிற்றை அமுக்கிக் கொண்டு படுத்திருந்தாள்.

விஷயம் கேட்டறிந்த ஸ்ரீதர் அதற்கு ஏதேனும் கை வைத்தியம் உள்ளதா என்று இணைய தளத்தில் ஆராய்ச்சி செய்தான்.

வேப்பிலையை மையாய் அரைத்து மோருடன் சேர்த்து காலையில் பருகினால் வலி மட்டுப்படும் என்று போட்டிருந்ததை படித்துவிட்டு வேப்பிலையை தேடிச் சென்றான்.

வேப்பிலையோடு வீட்டிற்கு வந்தவன், ''தாயம்மா! இதை காலையில் சீக்கிரமா அரைச்சு வைங்க. நான் வந்து எடுத்துக்கிறேன்.'' என்றான்.

மகனது அக்கறையை கண்ட தெய்வநாயகி புன் னகைத்துக் கொண்டார்.

அன்று இரவு அவள் அருகே படுத்த ஸ்ரீதர் அவளது தலையையும் முதுகையையும் விடாது வருடிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

'வலி வயித்துல. இவர் என்னடான்னா என்னோட முதுகையும் தலையையும் தடவுறார்' என அவள் முதலில் தன் மனதோடு கிண்டல் தான் செய்தாள்.

ஆனால் நேரம் ஆக ஆக அவனது வருடல் அவனது பாசத்தை அவனது அக்கறையை அவளுக்கு வெளிப் படுத்த... அது அவளது வலியின் அளவை குறைத்தது என்றே சொல்ல வேண்டும்.

நம்முடைய எல்லா வலிகளுக்கும் நம் மனம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. நமக்கு வலிக்கவில்லை. நம்மால் இந்த வலியை தாங்க முடியும் என்று மனம் நம்பினால் மட்டுமே நம்மால் அந்த வலியை கடந்து செல்ல முடியும்.

'உன் வலியை என்னால் வாங்கிக் கொள்ள முடிய வில்லை என்றாலும் உன் வலி என்னை வலிக்க செய் கிறது. உனக்காக நான் இருக்கிறேன்' என்று ஸ்ரீதர் காட்டிய அந்த அக்கறை அவளது மனோபலத்தை அதிகரிக்கவே செய்தது.

வெகு காலத்திற்கு பிறகு அன்று அவள் மிக நிம்மதி யுடன் அந்த இரவை கடந்தாள். எப்பொழுதும் வலி யினால் விழி நீர் சிந்த உறங்கியே பழக்கப்பட்டு இருந்த வளின் விழிகள் இன்றும் நீரால் நிறைந்தன.

வலியினால் அல்ல! ஆனந்தத்தால்!



மறுநாள் காலை அவன் மோரையும் அரைத்த வேப் பிலை விழுதையும் கொண்டு வந்து கொடுத்து அவளை விழுங்க சொன்னான்.

''ஸ்ரீதர்! நேத்து நீங்க தன் தலையை தடவும் போது... வயிறு வலிக்குது. இவர் தலையை தடவுறாருன்னு முதல்ல கிண்டல் பண்ணினேன். ஆனா அப்புறமா எவ்வளவு ஆறுதலா ஃபீல் பண்ணினேன் தெரியுமா. எனக்கு கசப்புன்னால் சுத்தமா பிடிக்காது. ஆனா எனக்காக நீங்க எடுத்த எபோர்ட்டுக்காக கண்டிப்பா சாப்பிடுறேன்.'' என்றவள் அதை வாங்கி விழுங்கினாள்.

''இன்னைக்கு லீவ் போடுறியா ஜோதி?''

''தேவையில்லை. எனக்கு பழகிடுச்சு. ரொம்ப நேரம் நிக்கிறது மட்டும் தான் கஷ்டம். இன்னைக்கு லேப் இல்லை. அதனால சமாளிச்சுடுவேன். தாங்க்ஸ் ஸ்ரீதர்.'' என்றவள் கல்லூரிக்கு புறப்பட்டு சென்றாள்.

ஒரு நாள் மாலை ஸ்ரீதரை தேடி அகல்யா அவனது வீட்டிற்கு வந்தாள். தன்னுடைய நிச்சயதார்த்த பத்திரி கையை கொடுத்துவிட்டு ஸ்ரீதரை கொஞ்சம் வெறுப் பேத்தி விட்டு செல்லலாம் என நினைத்தே அவனை தேடி வந்தாள்.

அவளது பெயரை கேட்டுக் கொண்ட வாயில் காவலாளி ஸ்ரீதரை அழைத்து, ''சார்! உங்களை தேடி அகல்யான்னு ஒரு பொண்ணு வந்திருக்கு. உள்ளே விடட்டுமா?'' என்று கேட்டான்.

'அவ எதுக்கு என்னை பார்க்க வந்திருக்காள்? கண்டிப்பா நல்ல விஷயமா இருக்காது. இவளை

நம்புறதுக்கு நான் ஒண்ணும் பழைய ஸ்ரீதர் இல்லைன்னு காட்ட வேண்டாமா? வீட்டிலே வச்சு பார்த்துடலாம்' என முடிவு செய்தான்.

''ஆபீஸ் ரூமில் உட்கார வைங்க. நான் வரேன்.'' என்றதும் காவலாளியும் அவளை வீட்டிற்குள் அனுப்பாமல் அலுவலக அறையில் அமர வைத்தார்.

ஸ்ரீதர் தன் அறையில் இருந்து கீழே இறங்கி வந்தான். ஜோதியும் தீப்தியும் வரவேற்பறை சோபாவில் அமர்ந்து இருந்தனர்.

''ஜோதி! ஒரு கெஸ்ட் வந்திருக்காங்க. நீ மட்டும் ஆபீஸ் ரூமுக்கு வா.'' என்று சொல்லிவிட்டு ஸ்ரீதர் அலுவலக அறை நோக்கி செல்ல ஜோதியும் அவனை பின் தொடர்ந்தாள்.

அவர்கள் இருவரும் அகல்யாவிற்கு எதிரே உள்ள சோபாவில் அமர்ந்தனர். அகல்யாவை பார்த்த ஜோதி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

''என்ன விஷயம் அகல்யா?'' என்று ஸ்ரீதர் சாதாரணக் குரலில் கேட்டான்.

''உன்னை உங்க அப்பா வீட்டை விட்டு துரத்தாமல் அந்த பொண்ணு கூடவே கல்யாணம் பண்ணி வச்சுட்டாருன்னு கேள்விப்பட்டேன். அந்த கல்யாணம் நடக்க முக்கிய சூத்திரதாரியே நான் தானே! அதான் நீயும் உன் முட்டாள் பொண்டாட்டியும் எப்படி இருக்கீங்கன்னு பார்த்துட்டு போகலாம்னு வந்தேன்.''

''எங்களுக்கு என்ன... நாங்க நல்லா இருக்கோம். ஆமா என் வைஃப் முட்டாள்னு உனக்கு யார் சொன்னா?



எனக்கு தெரிஞ்சு அவ இது வரைக்கும் நல்ல பர்சென்டேஜ் தான் மெயின்டெயின் பண்ணிக்கிட்டு இருக்காள். கிளாஸில் செம அட்டென்ட்டிவ்வா இருக்காள். அவளோட லெக்சரரா நான் அவளுக்கு நல்ல சர்டிபிகேட் தான் குடுப்பேன்.''

'ஒரு சின்ன திரை நடிகைக்கும் பொறியியல் கல்லூரிக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்?' என்று அகல்யா குழம்பினாள்.

''என்ன முழிக்கிறே? ஜோதி என்னோட ஸ்டூடண்ட்.'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது தெய்வநாயகி காபி கோப்பையுடன் அங்கே வந்தார்.

''அம்மா! இவள் பேர் அகல்யா. நான் பி.டெக் படிக்கும் போது எனக்கு ஜூனியர்.'' என்றதும் தெய்வநாயகிக்கு அவள் யார் என்று புரிந்து போனது.

''வீட்டுக்கு கெஸ்ட் வந்திருக்காங்கன்னு தீபு குட்டி சொன்னாள். இங்கே வந்து பார்த்தால் வேஸ்ட் ஆளுங்களை உள்ள உட்கார வச்சு பேசிக்கிட்டு இருக்கீங்க. போட்ட காபியை வேஸ்ட் பண்ண வேண்டாம். நீ குடிக்கிறியா ஸ்ரீதர்?'' என்றதும் வாங்கி கொண்டான்.

''ஆளுக்கு பாதி காபி குடிப்போமா?'' என்று ஜோதியை பார்த்து அவன் கேட்க அவள் சந்தோஷமாக தலை அசைத்தாள்.

''முதல்ல நீ குடி.'' என்று அவளிடம் நீட்டினான்.

''அம்மா! நம்ம அப்பா எப்பவும் ஒரு விஷயம் சொல்லுவார் இல்ல. நம்மளோட அனுபவம் நமக்கு

நிறைய பாடம் கத்துக் குடுக்கும். அதே போல நாம செய்யுற தப்பும் நமக்கு சில பாடங்களை கத்து குடுக்கும்னு. அந்த விதத்திலே பார்த்தால் மனுஷங்களை எடை போடுற பாடத்தை இவ தான் எனக்கு கத்து குடுத்தாள். ஒரு விதத்திலே இவ எனக்கு குரு.''

''ஸ்ரீதர்! அப்பா ஒரு விஷயம் சொன்னார். நான் உன்கிட்ட சொல்ல மறந்துட்டேன். இவ உன்கிட்ட ஒரு விஷயம் சொன்னாள் இல்ல.. இவங்க அம்மா இவளை ரெண்டாந்தாரமா தான் கல்யாணம் பண்ணி தர போறதா... அது கிட்டத்தட்ட பலிச்சுடுச்சு.

''இவ கல்யாணம் பண்ண போகிற மாப்பிள்ளைக்கு முப்பத்து நாலு வயசாம். சொட்டை தலையா அரை கிழவனா இருக்கான் போல! பணக்காரன்னு சம்மதம் சொல்லி இருக்காள். ஆனா நம்ம வசதியோடு பார்க்கிற போது அவன் கம்மி தான்.'' என்று தெய்வநாயகி போட்டு தாக்கினார்.

ஜோதி பாதி காபியை குடித்துவிட்டு ஸ்ரீதரிடம் கொடுத்தாள். அவன் அதை வாங்கி பருக ஆரம்பித்தான்.

'எங்களோட அன்னியோன்யத்தை பாரு!' என்று அவன் சொல்லாமல் சொல்லிக் காட்டுவதையும், தெய்வநாயகி தன்னை மட்டுமாய் பேசுவதையும் கண்ட அகல்யா நொந்து போய் ஒன்றும் பேசாமல் அந்த இடத்தில் இருந்து வெளியேறினாள்.

''அம்மா! சும்மா சொல்லக் கூடாது. பின்னீட்டீங்க போங்க!''

''என் பிள்ளை வாழ்க்கையை ஒருத்தி கெடுக்க பார்த்தாள்னா அவளை சும்மா விட முடியுமா? நான்



கும்பிடுற சாமி தான் உனக்கு ஜோதியை கட்டி வச்சு நம்ம எல்லோரையும் காப்பாத்திட்டார்.'' என்றதும் ஜோதியும் ஸ்ரீதரும் புன்னகைத்தனர்.

அடுத்த வாரத்தில் ஒரு நாள் ஜோதி கல்லூரியில் இருந்து வந்த பொழுது சமையலறையில் வியர்க்க விறுவிறுக்க தெய்வநாயகி முறுக்கு பிழிந்து கொண் டிருந்தார்.

''நீங்க ஏன் அத்தை தனியா வேலை பார்க்கிறீங்க? தாயம்மா இல்லையா?''

''அவளுக்கு உடம்பு சரி இல்லை. அதான் நானா பார்க்கிறேன்.''

''அப்போ இன்னொரு நாள் செய்ய வேண்டியது தானே. இல்லைன்னா கடையிலே வாங்க வேண்டியது தானே.''

''இந்த முறுக்கு எல்லோருக்கும் பிடிக்கும் ஜோதி. கடையிலே இது போல கிடைக்காது.''

''தள்ளுங்க. எனக்கு பிழிய வருதான்னு டிரை பண்ணி பார்க்கிறேன்.'' என்று முயன்று பார்த்தாள்.

பழக்கம் இல்லாத வேலை.. அவளுக்கு செய்ய வரவில்லை. ''ஸாரி அத்தை'' என்று கூறி ஒதுங்கிக் கொண்டாள்.

அவள் வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டு எட்டு மணிக்கு தீப்தியுடன் கார்ட்டூன் பார்த்துக் கொண் டிருந்த பொழுது தெய்வநாயகி அங்கே வந்து அமர்ந் தார்.

அவரிடம் இருந்து முனகல் சப்தம் வரவும், ''என்ன ஆச்சு அத்தை?'' என்று ஜோதி விசாத்தாள்.

''வலது கை வலிக்குதும்மா.''

''ம்ம்ம் பத்து முறுக்கு போட்டால் பரவாயில்லை. பத்து ஊருக்கு முறுக்கு போட்டால் அப்படி தான் வலிக்கும்.'' என்று கிண்டல் செய்த ஜோதி தொலைக் காட்சியை நிறுத்திவிட்டு வந்தாள்.

''இங்கே வந்து உட்காருங்க.'' என்று சோபாவின் ஓரத்தில் தெய்வநாயகியை அமர வைத்து அவரது கையை திண்டில் வைக்க செய்தாள்.

பின் ஒரு பிளாஸ்டிக் சேரை எடுத்துக் கொண்டு வந்து போட்டு அவர் அருகே அமர்ந்து அவரது கையை லேசாக பிடித்து விட ஆரம்பித்தாள்.

''என்னம்மா பண்ணுறே?''

''அத்தை! எனக்கு முறுக்கு தான் பிழிய வராது. ஆனா இந்த மசாஜை நான் எங்க அம்மாக்கு அடிக்கடி பண்ணுவேன். உங்க வலி சரியாகுதா இல்லையான்னு மட்டும் பாருங்க.''

அவள் செய்வதை பார்த்துக் கொண்டிருந்த தீப்தி, ''ஸ்ரீ சித்தி! நானு! நானு!'' என்றாள்.

''நீ பாட்டியோட இடது கையை பிடிச்சு விடு.'' என்றதும் தீப்தியும் தன் பிஞ்சு கரங்களால் பாட்டியின் கையை பிடித்து விட்டாள்.

அப்பொழுது அங்கே வந்த தாரிகா ஜோதியிடம், ''நீ தான் அன்னாடம் காய்ச்சி. அத்தையை கவர் பண்ண



இப்படி ஏதாச்சும் வேலை செய்யணும். என் பொண்ணை எதுக்கு செய்ய வைக்கிறே?'' என்று திட்டினாள்.

கூட்டுக் குடும்பத்தில் குழப்பம் வேண்டாம் என நினைத்து ஜோதி அமைதியாக இருந்தாள். பதில் சொல்ல வாய் திறந்த தெய்வநாயகியையும் தன் பார்வையால் தடுத்து விட்டாள்.

அவள் பதில் சொல்லப் போவதில்லை என்றதும் தாரிகா, ''தீபு! மாடிக்கு வா!'' என்றாள்.

''நான் இங்கே தான் இருப்பேன்.'' என்று தீப்தி தன் தாயுடன் செல்ல மறுத்தாள்.

''எக்கேடோ கெட்டு ஒழி.'' என்று குழந்தையை திட்டிவிட்டு தாரிகா மாடியேறி சென்று விட்டாள்.

''இவள் எல்லாம் என்ன ஜென்மமோ?'' என்று தெய்வநாயகி வருத்தப்பட்டார். ஜோதி தனக்கு தெரிந்த கதை ஒன்றை தீப்திக்கு சொல்லிக் கொண்டே மாமியாருக்கு மசாஜ் செய்து கொண்டிருந்தாள்.

அப்பொழுது சாப்பிடுவதற்காக அங்கே வந்த அவர்கள் வீட்டு ஆண்கள், ''என்ன நடக்குது இங்கே?'' என்றனர்.

''பாட்டிக்கு மசாஜ் பண்ணுறோம்.''

''எதுக்கு?''

''பாட்டிக்கு கை வலிக்குது. அதான்.''

''தடிதடியா ரெண்டு ஆம்பிளை பிள்ளைகளை பெத்தேன். ஒரு நாளாவது என்னை இப்படி கவனிச்சு

இருக்கானுங்களா. ஆனா என் ரெண்டு தங்கமும் என்னை என்னமா கவனிக்கிறாங்க.'' என்று தெய்வநாயகி மருமகளையும் பேத்தியையும் கொஞ்சினார்.

ஜோதி மாமியாரின் காதில் எதையோ ஓத...

''அதானே! அம்மா கஷ்டபட்டு முறுக்கு செஞ்சு இருக்காங்களே.. அதை சாப்பிட்டுட்டு நாலு வார்த்தை நல்லதா சொல்லுவோம்னு தோணுச்சா? நல்லா நொட்டை சொல்லிக்கிட்டு சாப்பிட்டானுங்க.'' என்று தெய்வநாயகி வறுத்தெடுக்க...

அந்த வீட்டு ஆண்கள் விழி பிதுங்கி நிற்க... ஜோதி தன் சிரிப்பை அடக்க... அதைக் கண்ட தீப்தி சப்தமாக சிரித்தாள்.

''லேடிஸ் கூட்டணி பலமா இருக்கே!'' என்று அன்பரசு முணுமுணுத்தார்.

''அம்மா! நாங்க செய்யலைன்னா என்ன... அதான் உங்களை பார்த்துக்க அண்ணன் தன் பெண்ணையும் நான் என் வைஃபையும் அனுப்பி இருக்கோம்ல. அப்பா தான் அவர் பங்குக்கு யாரையும் அனுப்பலை. வேணா உங்களுக்கு சேவகம் பண்ணுவதற்காக அப்பாவுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வைப்போமா?'' என்று ஸ்ரீதர் கேட்டான்.

''அடிடா அவனை!'' என்று தெய்வநாயகி சிலிர்த்து எழுந்ததும், அந்த இடமே கலகலப்பு கூடமாய் மாறியது.





# 11

ஒரு நாள் மாலை கல்லூரியில் இருந்து தன் நண்பனை பார்க்க சென்ற ஸ்ரீதர் சற்று தாமதமாவே வீட்டிற்கு வந்தான். அவன் தன் அறைக்குள் நுழைந்த பொழுது அவனுக்கு ஒரு நிமிடம் ஒன்றும் புரிய வில்லை.

பாட்டும் ஆட்டமுமாக அவனது அறை இருந்தால் அவன் குழம்ப மாட்டானா? தீப்தியும் ஜோதியும் பாட்டை போட்டுக் கொண்டு குத்தாட்டம் போட்டுக் கொண்டிருந்தனர்.

''என்ன இது?'' என்று கேட்டவனுக்கு சிறு விளக்கம் அளித்த ஜோதி அவனை அறையில் இருந்து வெளி யேற்றினாள்.

''எல்லாம் என் நேரம்.'' என்று புலம்பிக் கொண்டே அவன் வரவேற்பறைக்கு வந்து சேர்ந்தான். தாரிகா தவிர வீட்டு உறுப்பினர்கள் அனைவரும் அங்கே தான் இருந்தனர்.

''என்னடா ஒரே சத்தமா இருக்கு?'' என்று தெய்வ நாயகி கேட்டார்.

''ரெண்டு பிசாசுகளும் குத்தாட்டம் போடுதுங்கம்மா.''

''வாயிலே போடுவேன். யாரைடா பிசாசுங்கிற... அவங்க இந்த வீட்டு மகாலஷ்மிங்கடா.'' என்று தெய்வநாயகி கூறினார்.

''வர வர இந்த வீட்டுல நமக்கெல்லாம் மவுசு இல்லாமல் போச்சுடா தருண்.'' என்று புலம்பிய ஸ்ரீதர், ''ரூமிலே இடம் இல்லை. வெளியே போங்கன்னு ரெண்டு பேரும் என்னை வெளியே தள்ளிட்டாங்கடா.'' என்றான்.

''கொஞ்ச நேரம் இங்கே உட்கார்ந்து இரு. இப்ப என்ன கெட்டு போச்சு?'' என்று தருண் சொல்லவும்,

''உன் ரூம் எப்பவும் அமைதியா இருக்குல்ல. அதனால நீ இதுவும் பேசுவ. இன்னமும் பேசுவ.'' என்று அலுத்துக் கொண்ட ஸ்ரீதர்,

''எதுக்கு இப்படி வீட்டுல குதியாட்டம் போடுறீங் கன்னு கேட்டால்... Stress bursterன்னு சொல்லுறாள். எல்.கே.ஜி குழந்தைக்கு என்னடா ஸ்ட்ரெஸ் இருக்க முடியும்?'' என்றான்.

''ம்ம்ம் தாரிகாவுக்கு பொண்ணா பிறந்தால் எந்த வயசா இருந்தாலும் ஸ்ட்ரெஸ் வரும். ஜோதி வந்த பின்னால தான்டா நம்ம தீபு முகத்திலே ஒரு உற்சாகம் வந்திருக்கு. நம்ம யாருக்கும் அவ லெவலுக்கு இறங்கி போய் பழகத் தெரியலை. தாரிகாவுக்கு எப்பவுமே தீபு மேல அக்கறை இல்லை.'' என்று தருண் வருத்தப் பட்டான்.

அண்ணனை தோளோடு அணைத்துக் கொண்ட ''ஸ்ரீதர், விடுடா. எல்லாம் சரியாகிடும்.'' என்றான்.



நான்காம் வருடம் ஆரம்பித்து இரு மாதங்கள் கடந்திருந்தன.

அன்று முதலாம் வருட மாணவர்கள் கல்லூரிக்குள் அடி எடுத்து வைக்கும் நாள். அன்று ஓரியன்ட்டேஷன் டே நடைபெறுவதாக இருந்தது.

எப்பொழுதும் நான்காம் வருட மாணவர்கள் தான் அன்றைய நிகழ்ச்சியை முழுக்க முழுக்க பார்த்துக் கொள்வார்கள்.

மாணவர்களுடன் வந்திருக்கும் பெற்றோர்களை வழி நடத்துவதில் தொடங்கி விழா மேடையில் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குவது வரை அவர்கள் தான் செய் வார்கள்.

நிகழ்ச்சி தொகுப்பாளராய் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கம். பெண் தொகுப்பாளராய் ஜோதி தேர்ந்தெடுக்கப்பட்டு இருந் தாள்.

அந்த கல்லூரியின் பெருமை பற்றி பேசுவதற்கு ஆசிரியர் சார்பாய் ஸ்ரீதரிடம் பொறுப்பை ஒப்படைத்து இருந்தனர்.

அன்று காலை வீட்டில் இருந்து ஜோதி கிளம்பும் பொழுது, ஆல் த பெஸ்ட் ஜோதி! என்று ஸ்ரீதர் வாழ்த் தினான்.

''நான் என்ன எக்ஸாமா எழுத போறேன்? ஜஸ்ட் காம்பியர் பண்ண போறேன். அவ்வளவு தானே. அப்போ உங்களுக்கும் ஆல் த பெஸ்ட்.''

''நான் தினமும் மேடை ஏறி பேசுறேன். நீ இன்னைக்கு தானே ஃபர்ஸ்ட் டைமா மேடை ஏறி பேச போகிறே! அதான் உனக்கு விஷ் பண்ணினேன்.''

''எனக்கு மேடை ஏறுவதுக்கு பயம் ஒண்ணும் கிடை யாது. சோ நல்லா பண்ணுவேன்னு நினைக்கிறேன். எனிவே தாங்க்ஸ்.'' என்று கூறி ஜோதி கல்லூரிக்கு கிளம்பி சென்றாள்.

கல்லூரியில் ஜோதியை தேடி அவளருகே வந்த கீர்த்தி, ''ஜோதி! போன தடவை மேனேஜ்மெண்ட் சார்பா ஒரு அம்மா வந்தாங்களாம். இன்னைக்கு அவங்க பிள்ளை வரானாம். வர போறவன் நல்லா ஸ்மார்ட்டா இருக்கணும்னு வேண்டிக்கோ.'' என்றாள்.

''அவன் எப்படி இருந்தால் உனக்கு என்ன?''

''என்ன ஜோதி இப்படி கேட்கிற! நீங்க போடுற மொக்கையை கேட்டுக்கிட்டு ஆடாமல் அசையாமல் மேடையை பார்த்துக்கிட்டு எவ்வளவு நேரம் உட்கார்ந் திருக்க முடியும்? அவன் ஆள் ஸ்மார்ட்டா இருந்தால் அவனை பார்த்து ஜொள்ளு விடுறதிலே பொழுது போகும்ல. அதுக்கு தான் சொன்னேன்.''

''அது சரி. நீ உன் டார்லிங் லிஸ்ட்டுக்கு அடுத்த ஆளை தேடுற போல.'' என்று கூறிக் கொண்டே ஜோதி சென்றாள்.

கீர்த்தியின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வது போல் தான் அவன் இருந்தான்.

மேனேஜ்மெண்ட் சார்பாக அன்று நிர்மல் வந்திருந் தான். அவன் மேடையில் வந்து அமர்ந்ததும் அனைவரின் பார்வையும் அவனை தான் மொய்த்தன. ஆள் செம ஸ்மார்ட்டாக இருந்தான். அதை விட அவனது கம்பீரமும் தோரணையும் அனைவரையும் ஈர்த்தது.



ஜோதி மேடையேறி பேச ஆரம்பித்தாள். சற்றும் தடுமாற்றமின்றி அவள் பேசியதை கண்ட ஸ்ரீதர் அசந்து போனான்.

'என்ன ஸ்டைலா பேசுறாள். என்னமோ தினம் தினம் மேடையிலே பேசுறவள் மாதிரி என்ன ஒரு கான் பிடன்ஸ். நம்ம ஆள்கிட்டயும் கொஞ்சம் திறமை இருக்க தான் செய்யுது' என்று மனதிற்குள் பாராட்டிக் கொண் டான்.

ஸ்ரீதர் மேடையேறி பேசியதை கேட்டு ஜோதி வியக்க வில்லை. அவன் சொதப்பலாய் பேசினால் தானே அதிசயம் என்று அவளுக்கு தோன்றியது.

மேடைக்கு அருகே சற்று ஓரமாய் தரையில் நின்று கொண்டு அவள் தன் கணவனை ரசித்தாள்.

பொதுவாக அவள் கல்லூரியில் அவனை ரசிக்க மாட்டாள். கையும் களவுமாக யாரிடமாவது மாட்டிக் கொள்வோம் என்ற பயமே அதற்கு காரணம். ஆனால் இன்றோ அவன் மீது இருந்து அவளால் பார்வையை எடுக்க முடியவில்லை.

ஸ்ரீதர் மேடையை விட்டு இறங்கிய பின்பே அவளால் இயல்பு நிலைக்கு திரும்ப முடிந்தது.

அதன் பின்பு பேச வந்த நிர்மலின் இரு நிமிட பேச்சு அங்கே இருந்தோரின் பிரேமையை அதிகரிக்க தான் செய்தது.

விழா முடிந்து அனைவரும் கலைந்து செல்லும் பொழுது நிர்மல் ஜோதியை அழைத்தான்.

"I like your accent. very stylish." என்று அவளது ஆங்கில உச்சரிப்பை பாராட்டியவன் தன் வலது கையை அவள் புறம் நீட்டினான்.

ஜோதி புன்னகையுடன், ''தாங்க் யூ சார்.'' என்று சொல்லி அவன் கை பற்றி குலுக்கினாள்.

"குட். கீப் இட் அப்." என்ற நிர்மல் விலகி சென்றான்.

நிர்மலின் கை குலுக்கலையும் ஜோதியின் புன்னகையையும் கண்ட ஸ்ரீதருக்கு பொறாமையாக இருந்தது.

அன்று இரவு அவர்களது அறையில்...

ஸ்ரீதர் ஜோதியிடம், ''நீ எப்படி இவ்வளவு ஸ்டைலா இங்கிலீஷ் பேசுறே?'' என்றான்.

''சின்ன வயசில் இருந்து எங்கப்பா சொல்லி தந்தது தான். அதுக்குன்னு ஸ்பெஷலா கிளாஸ்க்கு எல்லாம் நான் போகலை.''

''அந்த நிர்மல் நல்லா பேசினான்ல.''

''கல்லூரி நிர்வாகியை அவன்னு குறிப்பிடுவது தன் கணவன் ஸ்ரீதரா?'' என்று ஆச்சரியமாய் அவனை நோக்கியவள் அவனது கேள்விக்கான பதிலை சொல்ல ஆரம்பித்தாள்.

''அதை ஏன் கேட்கிறீங்க... இந்த கீர்த்தி இன்னைக்கு ஃபுல்லா நிர்மல் புராணம் பாட ஆரம்பிச்சுட்டாள். என் டார்லிங் நிர்மல் எப்படி பேசினான் தெரியுமான்னு ஒரே



புலம்பல். அவள் மட்டுமில்லை இன்னைக்கு டாக் ஆஃப் த காலேஜ் நிர்மல் சார் தான்.''

''மத்தவங்களை விடு. உனக்கு என்ன தோணுச்சு?''

''நான் மட்டும் வேற்று கிரகவாசியா என்ன... மாத்தி பேசுறதுக்கு. அவர் செமையா தான் பேசினார். அவர் கிளம்பும் போது என்கிட்ட ஹேண்ட் ஷேக் பண்ணி பேசினாரா... அது என்ன என்னன்னு கேட்டு கீர்த்தி என்னை தொலைச்சுட்டாள்.''

''உன்கிட்ட என்ன சொன்னான்?''

''என்னோட இங்கிலீஷ் ஸ்டைலா இருக்குன்னு சொன்னார். கீப் இட் அப்னு பாராட்டினார்.''

''அந்த நிர்மலுக்கு கல்யாணம் ஆகிடுச்சாம். குழந்தை கூட இருக்காம்.''

'இதை எதுக்கு இப்போ இவர் என்கிட்ட சொல்லுறார்?' என்று குழம்பிய ஜோதி கணவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் முக சுணுக்கத்தை கண்டவள், 'ஆஹா! ஸ்ரீதர்க்கு பொறாமையா இருக்கா? அதான் நிர்மல் சாருக்கான மரியாதை தேயுதா! வர வேண்டிய உணர்வு தான்.' என நினைத்து சிரித்துக் கொண்டாள்.

''இப்போ எதுக்கு சிரிக்கிறே?'' என்று ஸ்ரீதர் கடுப்புடன் கேட்கவும்,

கணவனை தீர்க்கமாக பார்த்துக் கொண்டே, ''நிர்மல் சாருக்கு மட்டும் கல்யாணம் ஆகலை ஸ்ரீதர். எனக்கும் தான் கல்யாணம் ஆகிடுச்சு. என் கண்ணுக்கு என் ஸ்ரீதர்

மட்டும் தான் ஸ்மார்ட்டா தெரிவார்.'' என்றதும் அவன் முகம் பிரகாசமாகியது.

அவள் முன் நிற்க சங்கடப்பட்டவனாய் அறையில் இருந்து வெளியேறினான். ஜோதி ஒரு புன்னகையுடன் தன் வேலைகளை செய்ய ஆரம்பித்தாள்.

அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை என்பதால் சற்று தாமதமாக தான் ஜோதியும் ஸ்ரீதரும் எழுந்தார்கள். ஒன்பது மணி போல் தீப்தி தனக்கான உடையுடன் அவர்களது அறைக்குள் நுழைந்தாள்.

''ஸ்ரீ சித்தி! நான் வந்துட்டேன். நீங்க ரெடியா?''

''எங்கே போகப் போறீங்க?'' என்று ஸ்ரீதர் கேட்க,

''எங்கேயும் போகலை சித்து. நாங்க ரெயின் டான்ஸ் ஆடப் போறோம். நீங்க கீழே போங்க.'' என்று தீப்தி கூறவும்,

''வர வர இந்த ரூம் உங்க ரெண்டு பேரோட ரூமா மாறிக்கிட்டு வருது. நான் வேற தனி ரூம்க்கு தான் ஷிப்ட் ஆகணும் போல.'' என்று புலம்பிக் கொண்டே அவன் கீழே சென்றான்.

மேலே இருந்து வந்த பாட்டு சத்தத்தை கேட்ட தெய்வநாயகி தன் இளைய மகனிடம், ''என்னடா ஸ்ரீதர்! இன்னைக்கு லீவ் நாள்னு காலையிலே குத்தாட்டத்தை போடுறாங்களா?'' என்று கேட்டார்.

''இல்லைம்மா. ஷவருக்கு அடியில் நின்னுக்கிட்டு ரெயின் டான்ஸ் ஆடப் போறாங்களாம்.'' என்றதும் தெய்வநாயகி புன்னகைத்தார்.



இருவரும் ஐந்து நிமிடங்கள் ஆட்டம் போட்ட பின் தீப்தியை துடைத்து குளியலறையில் இருந்து வெளியே அனுப்பிய ஜோதி, ''புஜ்ஜு! டிரஸை மாட்டிட்டு பெட்ல உட்கார்ந்து இரு. சித்தி குளிச்சு முடிச்சுட்டு வரேன்.'' என்று வெளியே அனுப்பினாள்.

ஐந்து நிமிடங்கள் கழித்து ஜோதி வந்த பொழுது தன் டிரஸை அரை குறையாய் மாட்டிக் கொண்டு தீப்தி தொலைக்காட்சியை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளது உடையை சரி செய்து தலையை மேலும் நன்கு துவட்டி முடித்த ஜோதி, ''புஜ்ஜு! நீ போய் தாத்தா பாட்டி கூட விளையாடு. சித்திக்கு படிக்கிற வேலை இருக்கு.'' என்றதும் அவள் வெளியேறி சென்றாள்.

தனது தலையை துவட்டியவாறு ஜோதி படுக்கையில் அமர்ந்தாள். முடியை காய வைப்பதற்காக அவள் தலை விரி கோலமாய் அமர்ந்திருந்தாள். முதுகை தாண்டி நீண்டிருந்த கூந்தலில் உள்ள ஈரத்தை போக்குவதற்காக ஒரு கையால் தட்டிக் கொண்டிருந்தாள்.

''நீ தானா? நான் கூட பேய் தான் தலையை விரிச்சு போட்டுக்கிட்டு உட்கார்ந்து இருக்கு போலன்னு நினைச்சேன்.'' என்று சொல்லிக் கொண்டே ஸ்ரீதர் வந்தான்.

''நினைப்பீங்க நினைப்பீங்க. என்னை பார்த்தா உங்களுக்கு பேயா பிசாசா தெரியுதா? ரெண்டு நாள் முன்னாடி என்னை பிசாசுன்னு சொன்னீங்கன்னு அத்தை சொன்னாங்க.''

''என்னை போட்டுக் குடுக்கிறதுக்குன்னே எங்க அம்மா இருப்பாங்களே!''

அவள் ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு அங் கிருந்த சோபாவில் சென்று அமர்ந்தாள்.

"தலையை நல்லா துடைச்சியா? தலை வலி வந்துடப் போகுது.'' என்றவன் அவள் அருகே சென்று அமர்ந் தான்.

"தன்னாலே காயும்.''

''தன்னாலே எப்படி காயும்? துவட்டினியா இல்லையா?''

"துடைச்சேங்க. லைட்டா தான் ஈரமா இருக்கு.'' என்றதும் அவளது முடியை தொட்டு பார்த்தான்.

அதன் ஈரத்தன்மையை பரீட்சித்து பார்க்க தான் அவன் அதை தொட்டான். ஆனால் அவனது மனமோ ஈரத் தன்மையை பற்றி கண்டு கொள்ளாமல் அதன் மென் மையை ரசிக்க ஆரம்பித்தது.

அவன் கை அங்கே இருந்து நகர மறுத்தது. அங்கேயே அவளது முடிக்குள் விளையாட ஆரம்பித்தது.

அவனது செய்கை அவளுக்கு கூச்சத்தை வர வழைத்தது. அவள் நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள். அவன் என்ன என்பதாய் புருவம் உயர்த்திக் கேட்க அவள் ஒன்றுமில்லை என்று தன் தலையாட்டி மறுத்துவிட்டு குனிந்து கொண்டாள்.

இவர் என் பக்கத்திலே உட்கார்ந்து "இப்படி என் முடிக்குள்ள கையை விட்டு விளையாடினா நான் எப்படி படிக்கிறதாம்?'' என்று மனதிற்குள் சிணுங்கினாள்.



சில நிமிடங்கள் தாண்டியும் அவன் நிறுத்துவதாய் இல்லை என்றதும், ''ஸ்ரீதர்! நான் படிக்கணும்.'' என்றாள்.

''படி. உன்னை யார் தடுத்தா?''

''நீங்க இப்படி செஞ்சீங்கன்னா நான் சுகமா தூங் கிடுவேன்.'' என்று சொன்னதும் அவன் டக்கென்று எழுந்து சென்று விட்டான்.

'சும்மா போகிறாரா கோபமா போகிறாரான்னு தெரி யலையே' என நினைத்துக் கொண்டே தன் பாடத்தை படிக்க ஆரம்பித்தாள்.

சற்று நேரம் கழித்து திரும்பி வந்தவன் சாதாரணமாக பேசவும் நிம்மதியானாள்.



## 12

கல்லூரியில் இருந்து சுற்றுலா செல்ல முடிவு செய்து ஊரையும் தேதியையும் முடிவு செய்தார்கள். கீர்த்தி தான் உற்சாகமாய் குதித்து கொண்டிருந்தாள்.

அன்று மதியம் அவர்களுக்கு லேப் இருந்தது. ஜோதி, கீர்த்தி, கண்ணன் மூவரும் அருகருகே நின்று கொண் டிருந்தனர். கண்ணன் மேஜையின் ஓரத்தில் நின்று கொண்டு தன் ரெக்கார்ட் நோட்டை சரி பார்த்துக் கொண்டிருந்தான்.

“ஜோதி! நாளைக்கு டூருக்கு பணம் கட்டிடுவ தானே?”

“ம்ம்ம் இல்ல கீர்த்தி. எனக்கு டேட் ஒத்து வராது. நான் வர மாட்டேன்.”

“என்ன ஜோதி இப்படி சொல்லிட்டே! ஒருவேளை வேற டேட்டில் கூட்டிட்டு போனால் ஒத்துக்குவியா?”

“இல்ல கீர்த்தி எனக்கு டூர் போகிறதில் இன்ட்ரெஸ்ட் இல்லை. அதனால நான் வர மாட்டேன்.”

“பணம் பிரச்சனையா ஜோதி?”

“அப்படி இல்லை. என்னவோ பிடிக்கலை. இது வரைக்கும் போனதில்லை. இப்பவும் போகணும்னு தோணலை. ப்ளீஸ் என்னை கம்பெல் பண்ணாதே!” என்றதும் கீர்த்தி அமைதியானாள்.

அன்று இரவு ஸ்ரீதர் ஜோதியிடம், “டூர் பத்தி முடிவு பண்ணிட்டதா சொன்னாங்க. எங்கே கூட்டிட்டு போறாங்களாம்?” என்று கேட்டான்.

“பெங்களூரு, மைசூர்.”

“எவ்வளவு பணம் கட்ட சொல்லி இருக்காங்க. நாளைக்கு கட்டிடுறியா?” என்று பணத்தை எண்ணிக் கொண்டே கேட்டான்.

“நான் போகலைங்க. எனக்கு டேட் ஒத்து வராது. வயித்து வலியோட அங்கே போய் அவஸ்தைப் படணுமா?” என்றதும் ஸ்ரீதரும் அவளை வற்புறுத்த வில்லை.

மாணவர்களுடன் நான்கு ஆசிரியர்கள் உடன் செல்வதாக முடிவானது. ஸ்ரீதர், அஸ்வின், சுனிதா மற்றும் பார்கவி என்று முடிவானது. ஜோதி இல்லாமல் தான் மட்டும் செல்ல வேண்டுமா என்று ஸ்ரீதர் வருத் தப்பட்டான்.



சுற்றுலா செல்ல வேண்டிய நாளும் வந்தது. அன்று மாலை ஸ்ரீதர் தன் பெட்டியை பேக் செய்து ஓரமாக வைத்தான். ஜோதி வயிற்று வலியில் சுருண்டு படுத் திருந்தாள்.

“இவளை இப்படியே விட்டுட்டு எப்படி போக?” என்று அவனுக்கு தோன்றியது.

ஏழு மணிக்கெல்லாம் அவளுக்கான சாப்பாடை எடுத்துக் கொண்டு மாடிக்கு வந்தவன், “சாப்பிடு ஜோதி. நான் உன்னை தூங்க வச்சுட்டு கிளம்புறேன்.” என்றான்.

“ஆமா நான் சின்ன குழந்தை. எனக்கு பீடிங் பாட்டிலில் பால் குடுத்து தொட்டிலில் போட்டு ஆட்டி தூங்க வச்சுட்டு போகப் போறீங்க. ஜோக்கடிக்காமல் கிளம்புற வழியை பாருங்க.”

“நான் இல்லாமல் சமாளிச்சுடுவியா?” என்று அவன் சந்தேகமாய் கேட்டான்.

“இத்தனை வருஷமா சமாளிக்க தெரிஞ்சவளுக்கு இன்னைக்கு சமாளிக்க முடியாதா?” என்று கேட்டு அந்த உணவை அவனை சாப்பிட வைத்து அவனை கிளப்பி விட்டாள்.

ஆனால் அவனது சந்தேகமே சரி என்பது போல் அன்று இரவு அவளால் தூங்கவே முடியவில்லை. வலியின் தாக்கம் அதிகம் என்பது ஒரு காரணம் என்றால்

சில மாதங்களாக கிடைத்து வந்த கணவனது அன்பும் அக்கறையும் இல்லாதது இன்னுமொரு காரணமானது.

வலியினாலும் தனிமை உணர்வினாலும் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

கணவனை அழைக்கலாமா என்று யோசித்தாள். பேருந்தில் பயணம் செய்து கொண்டிருப்பான். இப்பொழுது அழைத்தால் சுற்றிலும் ஆட்களை வைத்து கொண்டு அவனால் பேச முடியாது என நினைத்து தன் எண்ணத்தை கை விட்டாள்.

மறுநாள் ஜோதி வீட்டில் இருப்பதால் தானும் பள்ளிக்கு செல்ல மாட்டேன் என்று கூறி தீப்தியும் வீட்டிலேயே இருந்துவிட்டாள்.

தெய்வநாயகி வெளியே ஒரு விசேஷத்திற்கு சென்று விட்டார். அதனால் ஜோதி வரவேற்பறையில் வந்து அமர்ந்து கொண்டாள். அவளருகே அமர்ந்து தீப்தி புத்தகத்தில் கலர் அடித்துக் கொண்டிருந்தாள்.

அன்று அன்பரசு அலுவலகம் செல்ல சற்று தாமதமானது.

அவர் ஜோதியின் முக வாட்டத்தை பார்த்து, ''என்ன ஆச்சும்மா? ரொம்ப டல்லா இருக்க?'' என்று கேட்டார்.

''லைட்டா பீவர் மாமா.'' என்றதும்,

''டாக்டர்கிட்ட போனியா? அத்தை வெளியில் இருந்து வந்ததும் அவளை கூட்டிட்டு போயிட்டு வா.'' என்று சொல்லி சென்றுவிட்டார்.

அவர் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் ஸ்ரீதர் அழைத்தான்.



''என்னாச்சு ஜோ உனக்கு பீவரா?'' என்று கேட்டான்.

கணவன் தன்னை முதல் முறையாக செல்ல பெயர் சொல்லி அழைப்பதை கேட்டு அவள் அதிலேயே லயித்து இருந்தாள்.

''ஜோ! லைனிலே இருக்கியா? ஹலோ! ஹலோ!'' என்று அவன் அந்தப் பக்கம் அலற...

ஜோதி தீப்தியிடம் இருந்து சற்று விலகி சென்று, ''லைனில் இருக்கேன் ஸ்ரீதர்.'' என்றாள்.

''அப்போ பதில் சொல்லாமல் ஏன் அமைதியா இருந்தே?''

'' நீங்க என்னை ஜோன்னு கூப்பிட்டீங்களா... அதை ரசிச்சுக்கிட்டு இருந்தேனா... அதான் பதில் வரலை.'' என்றதும் அவனும் சில நொடிகள் அமைதியானான்.

''சரி சொல்லு... உனக்கு பீவரா?''

''அப்படின்னு யார் சொன்னா?''

''என்னோட ஒற்றர் படை தலைவி தீபு குட்டி.''

''மாமா என்கிட்ட வந்து ஏன்மா ஜோதி டல்லா இருக்கேன்னு கேட்டார். அவர்கிட்ட எனக்கு பீரியட்ஸ் பிராப்ளம்னு சொல்லவா முடியும். அதனால பீவர்னு சொல்லி வச்சேன். அதை தான் இந்த குட்டி உங்ககிட்ட போட்டு குடுத்திட்டாள் போல.''

''நைட் நல்லா தூங்கினியா?''

''இல்ல ஸ்ரீதர். உங்க பேச்சை கேட்டு ஒழுங்கா நீங்க இருக்கும் போதே தூங்கி இருக்கணும். ரொம்ப வலிச்சது தெரியுமா? நீங்களும் இல்லையா ஒரே அழுகை.''

''ப்ச். அதான் நான் உன்னை தூங்க வச்சுட்டு போறேன்னு சொன்னேன். நீ தான் என் பேச்சை கேட் கலை. சரி போனதை விடு. இப்போ எப்படி இருக்கு?''

''வலி குறைஞ்சுடுச்சு. ஒண்ணும் பிரச்சனை இல்லை.''

மேலும் சில நிமிடங்கள் பேசிவிட்டு போனை வைத்தான். அவன் வைத்த உடனே கீர்த்தி போன் செய்தாள்.

''ஜோதி! ஒரு பேட் நியூஸ். என் டார்லிங் ஸ்ரீதருக்கு கல்யாணம் ஆகிடுச்சாம்.'' என்றதும் ஜோதிக்கு சிரிப்பு வந்தது.

''உனக்கு யாரு சொன்னா?''

''ஸ்ரீதர் சார் தான் சொன்னார். சார் ஒரே சோகமா இருந்தாரா... நம்ம சுனிதா மேடம் ஏன் சார் இவ்வளவு சோகமா இருக்கீங்கன்னு கேட்டதுக்கு என் வைஃப்புக்கு உடம்பு சரியில்லை. அதான் எனக்கு மனசு சரியில் லைன்னு குண்டை தூக்கி போட்டார்.'' என்றதும் ஜோதியின் முகம் சந்தோஷத்தில் பிரகாசமாகியது.

''சோக கீதம் வாசிக்காமல் டூரை என்ஜாய் பண்ணு. உனக்கு வேற டார்லிங் கிடைப்பாங்க.'' என்று ஜோதி கூறியதும்,

''நானும் அதையே தான் நினைச்சு என் மனசை சமாதானப் படுத்திக்கிட்டேன்.'' என்று கூறி கீர்த்தி சிரித்தாள்.

ஒரு மணி நேரம் கழித்து தெய்வநாயகி ஜோதியை அலைபேசியில் அழைத்து, ''ஜோதி! பூஜை அறையில்



ரெண்டு வெள்ளி குத்து விளக்கு தனியா வச்சுட்டு வந்தேன். அதை தேய்ச்சு வச்சுடும்மா. சாயங்காலம் விளக்கேத்தணும்.'' என்றதும், ''சரிங்கத்தை.'' என்று சம்மதித்தாள்.

அவர் போனை வைத்த பின்பே, ''அச்சச்சோ! என் னால எப்படி சாமி விளக்கை கழுவ முடியும்?'' என்று தோன்றியது.

தெய்வநாயகி மருமகள்கள் இருவரிடமும் ஒரே ஒரு வேலை தான் செய்ய சொல்வார். அது பூஜை சாமான்கள் விளக்குவது. வீட்டு உறுப்பினர்கள் தான் அதை செய்ய வேண்டும் என்பது அவரின் எழுதப்படாத விதி.

அங்கே வந்த தாரிகாவிடம் நிலைமையை விளக்கி, ''அக்கா! இன்னைக்கு நீங்க செய்யுங்க. உங்க டர்ன் வரும் போது மொத்த பாத்திரத்தையும் நான் தேய்க்கிறேன்.'' என்று கேட்டு பார்த்தாள்.

அவள் அதெல்லாம் முடியாது என்று மறுத்துவிட்டு சென்று விட்டாள். என்ன செய்வது என்று ஜோதி கையை பிசைந்து கொண்டு அமர்ந்திருந்தாள். சரியாக அப்போது ஸ்ரீதர் அழைத்தான்.

''இப்போ என்ன பிரச்சனை? எதுக்கு சோகமா உட்கார்ந்து இருக்க?''

''அதுக்குள்ளே இந்த குட்டி போன் பண்ணிட்டாளா? எனக்கே தெரியாமல் எப்படி உங்ககிட்ட பேசறாள்னு தெரியலை. எதுக்கு இன்னைக்கு மட்டும் உங்களுக்கு இத்தனை போன் பண்ணுறாள்?''

''நான் கிளம்பும் போது சித்து ஊரிலே இல்லாத போது நீ தான் சித்தியை கவனிச்சுக்கணும். எதுவும் பிரச்சனைன்னா சித்துவை கூப்பிடுன்னு சொல்லிட்டு வந்தேன். என் பொண்ணு தீயா வேலை பார்க்கிறாள். சொல்லு என்ன பிரச்சனை?'' என்றதும் அவள் விளக்கினாள்.

''அண்ணி எல்லாம் ஹெல்ப் பண்ணுவாங்கன்னு நீ எதிர்பார்க்கிறது வேஸ்ட். நான் ஒரு அஞ்சு நிமிஷம் கழிச்சு கூப்பிடுறேன்.'' என்று அழைப்பை துண்டித்தான்.

திரும்ப கூப்பிட்டவன், ''ஜோ! நான் சொல்லுற மாதிரி செய். தீபு குட்டியை வச்சு இந்த வேலையை செஞ்சு முடி.'' என்றவன், என்ன செய்ய வேண்டும் என்று விளக்கினான்.

''உங்களுக்கு எப்படி ஸ்ரீதர் இதெல்லாம் தெரியுது.''

''இப்போ தான் யூ டியூப்ல பார்த்தேன். போய் வேலையை பாரு.'' என்று அழைப்பை துண்டித்தான்.

''தாயம்மா! நான் சொல்லுற பொருளை எல்லாம் தரையிலே எடுத்து வைங்க.'' என்று ஜோதி அவருக்கு வேலை கொடுத்தாள்.

''இந்த பாத்திரத்தில் தண்ணி ஊத்தி நல்லா கொதிக்க வச்சு அதையும் தரையிலே வச்சுடுங்க.'' என்றாள்.

பின் தீப்தியிடம் சென்று, ''புஜ்ஜு! சித்திக்கு நீங்க தான் ஹெல்ப் பண்ணனும். பண்ணுவீங்களா?'' என்றாள்.

''நான் ஹெல்ப் பண்ணுவேன்.'' என்று அவள் குதித்தாள்.



''பூஜை ரூம் போய் அங்கே ரெண்டு வொயிட் கலர் விளக்கு இருக்கும். அதை எடுத்துட்டு வா.''

''இதுவா இதுவா'' என்று இரு முறை தப்பான பொருளை காட்டிய பின் சரியானதை எடுத்து கொண்டு வந்தாள். அவளை அழைத்து கொண்டு ஜோதி சமையலறைக்கு சென்றாள்.

விளக்கோட முனையை பிடித்துக் கொண்டு வெந்நீரில் கை படாமல் அதை அந்த பாத்திரத்தில் போட வைத்தாள்.

''அந்த மரக்கட்டை ஸ்பூனை வச்சு அதை தண்ணிக்குள்ள மெதுவா தள்ளி விடு. இப்போ அடுத்த விளக்கையும் அதே மாதிரி செய். இப்போ ஒரு ஸ்பூன் உப்பை தண்ணியிலே போடு. பக்கத்திலே இருக்கிற பேக்கிங் சோடா டப்பாவில் இருந்து ஒரு ஸ்பூன் சோடா எடுத்து போடு. இப்போ இந்த அலுமினிய பாயிலை பிய்ச்சு உள்ளே போடு.'' என்று ஜோதி சொல்ல சொல்ல தீப்தி செய்தாள்.

''அவ்வளவு தான்டா புஜ்ஜு, மிஷன் கம்ப்ளீட்டட்.''

ஜோதி தன் இரு கைகளால் தீப்தியின் முகம் பற்றி, ''இந்த வீட்டுக்குள்ள நான் அடி எடுத்து வச்ச நாளில் இருந்து நான் உயிர்ப்போடு நடமாட நீ ஒரு முக்கிய காரணம்னு சொன்னால் உனக்கு புரியுமாடா புஜ்ஜு. எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் என்னை முதல்ல ஏத்துக்கிட்டவள் நீ தான்டா குட்டி.'' என்றவள் அவளது இரு கன்னத்திலும் அழுத்தமாய் முத்தம் பதித்தாள்.

அவள் சொல்வது தீப்திக்கு புரியவில்லை. சித்தி சந்தோஷமாக இருக்கிறாள் என்பது மட்டும் புரிந்தது. தீப்தி ஜோதியை கட்டிக் கொண்டாள். ஜோதியும் அவளை தன்னோடு அணைத்துக் கொண்டாள்.

தீப்திக்கு மதிய உணவை ஊட்டி முடித்த ஜோதி அவளை தூங்க வைத்தாள். அதன் பின் ஸ்ரீதருக்கு அழைத்துப் பேசினாள்.

''என்னங்க மேடம் உங்க வேலை முடிஞ்சதா? படைத் தளபதி தீபு இருக்க பயமேன்னு சொல்லிக்கிட்டு இருக்கீங்களா?''

"இல்லை... என் மன்னவன் ஸ்ரீ இருக்க பயமேன்னு தான் சொல்லிக்கிட்டு இருக்கேன்.'' என்றதும் இருவருமே சில நொடிகள் அமைதியாக இருந்தனர்.

"ஐ லவ் யூ ஸ்ரீ.''

"லவ் யூ டூ டா ஜோ. அஸ்வின் வரான். போனை வைக்கிறேன்.''

"இந்த அஸ்வின் சார் இப்போ தான் ஸ்ரீதர் பக்கத்திலே வரணுமா? ஆனாலும் ஜோதி இதுக்கு மேல நீ என்ன பேசிவிடப் போறே? ரெண்டு பேருமே உணர்ச்சி வசத்தில் சிக்கி இருக்கீங்க. பேச்சு வராது. வெறும் காத்து தான் வரும்'' என தன்னை தானே கிண்டல் செய்து கொண்டாள்.

தெய்வநாயகி மாலை ஐந்து மணிக்கு மேல் வந்தார்.

"அத்தை! விளக்கு அதுக்குள்ளே இருக்கு. அதை எடுத்து சும்மா தண்ணில கழுவுங்க போதும்.'' என்று சொன்ன ஜோதி நடந்ததை விளக்கினாள்.



''நானும் சுத்தமா மறந்துட்டு உன்கிட்ட போய் அந்த வேலையை சொன்னேன் பாரு." என்று கூறிக் கொண்டே அந்த விளக்கை எடுத்து பார்த்த தெய்வநாயகி, ''என்னமா பளபளக்குது. இந்த சூட்சமம் இத்தனை நாளா எனக்கு தெரியாமல் போச்சே!'' என்றார்.

''அத்தை உங்க பிள்ளை தான் உங்களுக்கு இது பத்தி தெரிய வைக்கலை. வந்ததும் அவர் கூட சண்டை போடுங்க."

''அவன் என்கிட்ட திட்டு வாங்கிறதிலே உனக்கு அவ்வளவு சந்தோஷம்.''

''இல்லையா பின்னே?'' என்று கேட்டு அவள் சிரித்தாள்.

தெய்வநாயகி விளக்கேற்றி சாமி கும்பிட்டு வந்தார்.

அப்போது அங்கே வந்த தாரிகா, ''விளக்கை யாரு கழுவினாங்க?'' என்று கிண்டல் தொனியில் கேட்டாள்.

தீப்தி பெயரை சொன்னால் திட்டு கிடைக்குமே என்று நினைத்து ஜோதி அமைதியாய் இருந்தாள்.

''நீ செஞ்சு இருக்க வேண்டிய வேலை. நீ செய்ய லைன்னா வேற யாரு செய்ய முடியும்? நான் தான் செஞ்சேன்.'' என்று தெய்வநாயகி கூறினார்.

''ஆமா ஜோதி! இப்படியே மாசா மாசம் குளிச்சுக் கிட்டு இருக்கியே. எப்போ பிள்ளை பெறுவதா உத்தேசம்?'' என்று தாரிகா நக்கலாகக் கேட்டாள்.

''என்னக்கா இப்படி கேட்கிறீங்க. எனக்கு இன்னும் காலேஜ் முடிய சில மாசங்கள் ஆகுமே. அதுக்குள்ளே நான் எப்படி பிள்ளை பெத்துக்க முடியும்?''

''படிக்கிற காலத்திலே பிள்ளை பெத்தால் அசிங்கம். ஆனா அதே கல்யாணம் பண்ணினால் அசிங்கம் இல்லையா? இது எந்த ஊரு நியாயம்?''

தெய்வநாயகி இடையிட்டு, ''பிள்ளையை எப்போ பெத்துக்கணும்னு ஜோதியும் அவ புருஷனும் முடிவு பண்ணிப்பாங்க. மாமியார் நான் கூட அதை பத்தி கவலைப்படலை. உனக்கு எதுக்கு வீணா கவலை? முதல்ல நீ பெத்த பிள்ளையை ஒழுங்கா கவனி. அப்புறமா, ஜோதி பிள்ளையை பெத்தாளா வளர்த்தாளான்னு பார்க்கலாம்.'' என்றதும் தாரிகா விருட்டென அங்கிருந்து சென்றாள்.

ஜோதியின் முக வாட்டத்தை கண்ட தெய்வநாயகி அவள் முகவாயை பிடித்து, ''அவ சொல்லுறதை எல்லாம் காதிலே வாங்காதேம்மா. இவ பேச்சை எல்லாம் நாம பெருசா எடுத்துக்கிட்டால் நம்ம சந்தோஷம் தான் கெட்டுப் போகும். போ. வேலையை பாரு.'' என்றதும் ஜோதி மாடியேறி சென்றாள்.

## 13



மறுநாள் மாலை தருண் தன் குடும்பத்தினரை பார்ட்டி ஒன்றிற்கு அழைத்து செல்வதாக கூறி இருந்தான்.



''ஸ்ரீ சித்தி! நீங்களும் வாங்க.''

''இல்லைடா. சித்தி வரலை. நீ மட்டும் உங்க டாடி, மம்மி கூட போயிட்டு வா. சித்து ஊரில் இருந்து வந்ததும் நாம அவர் கூட ஒண்ணா வெளியே போவோம்.''

தீப்தி சமாதானம் ஆகாமல் வருத்தமாய் இருப்பதை பார்த்த ஜோதி, ''சித்தி உனக்கு புது ஹேர் ஸ்டைல் பண்ணி விடட்டுமா?'' என்று கேட்டதும்,

''புது ஸ்டைலா?'' என்று தீப்தி ஆர்வமாய் வினவினாள்.

மடிகணினியை வைத்து யூ டியூப்ல உள்ள பல சிகை அலங்காரங்களை அலசி ஒன்றை தேர்வு செய்தனர். அதை பார்த்து ஜோதி அவளுக்கு பின்னலிடுவதை அன்பரசுவும் தெய்வநாயகியும் அருகில் இருந்து ரசித்தனர்.

''ஐயோ புஜ்ஜு! என் கண்ணே பட்டுடும். எவ்வளவு அழகா இருக்க தெரியுமா? இன்னைக்கு உனக்கு சுத்தி தான் போடணும்.'' என்று ஜோதி கூறுவதை கேட்டுக் கொண்டே அங்கே வந்த தாரிகா,

''ஆமா. சரியா சொன்னே. கொஞ்ச நாளா புதுசா வந்த சில பேரோட கொள்ளிக் கண்ணு பட்டு என் பொண்ணு எப்பவும் வாட்டமாவே இருக்காள். அதனால கண்டிப்பா திருஷ்டி கழிக்கணும்.'' என்று சொல்லிவிட்டு தீப்தியை அழைத்துக் கொண்டு காரை நோக்கி சென்றாள்.

அங்கே வந்த தருண், ''ஜோதி! தாரிகா சொன்னதுக்காக நான் உன்கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன்.'' என்றான்.

''அச்சோ மாமா! நீங்க ஏன் பெரிய வார்த்தை எல்லாம் சொல்லுறீங்க.''

''இல்லை ஜோதி. நீ வந்த பின்னால தான் என் பொண்ணு முகத்திலே அப்படி ஒரு சந்தோஷத்தை நான் பார்க்கிறேன். அதை தான் தாரிகா அந்த லட்சணத்தில் சொல்லுறாள். உனக்கு நானும் அவளும் நன்றி சொல லணும். ரொம்ப தாங்க்ஸ் ஜோதி.'' என்று கூறிவிட்டு அகன்றான்.

அன்பரசு தன் மனைவியிடம், ''தெய்வா! நாம நாளைக்கு சேலத்துக்கு போகணும். ஜோதியை இங்கே விட்டுட்டு போனால் சரியா வராது. ஸ்ரீதரும் ஊரில் இல்லை. **இது** தான் சாக்குன்னு தாரிகா ஒரு ஆட்டம் ஆடுவாள்'' என்றார்.

''ஆமாங்க. நாம இருக்கும் போதே இந்த பேச்சு பேசுறாள். பேசாமல் நம்ம கூடவே ஜோதியை கூட்டிட்டு போயிடுவோம்.''

அவர்கள் தங்களது விருப்பத்தை ஜோதியிடம் தெரிவித்த போது அவள் சந்தோஷமாய் சம்மதித்தாள். தன் பெட்டியை கட்டிக் கொண்டு தயாராக ஆரம் பித்தாள்.

ஆனால் காலையில் அவர்கள் கிளம்பும் பொழுது தீப்தி தானும் வருவேன் என்று அடம் பிடித்து அழ ஆரம்பித்தாள்.

''என்னால தனியா எல்லாம் இவளை பார்த்துக்க முடியாது. உங்க கூடவே கூட்டிட்டு போயிடுங்க.'' என்று தாரிகா கூறவும், அவளையும் அழைத்துக் கொண்டு நால்வரும் சேலத்திற்கு சென்றனர்.



சேலத்தில் உள்ள அவர்களின் பூர்வீக வீட்டில் தங்கிக் கொண்டனர். திருமண வீட்டில் அன்பரசு அனைவ ரிடமும் தன் இளைய மருமகளை பெருமையோடு அறிமுகம் செய்தார்.

அன்று இரவு போன் செய்த ஸ்ரீதர், ''என்னங்க மேடம் மாமனார் மெச்சிய மருமகள்னு பட்டம் வாங்கிட் டோம்னு சந்தோஷத்தில் பூரிச்சு போய் இருக்கீங்களா?'' என்று கிண்டல் செய்தான்.

''அதுல உங்களுக்கு ஏன் பொறாமை?''

''என் ஜோவுக்கு கிடைச்ச பாராட்டு எனக்கு கிடைச்ச மாதிரி. நான் ஏன் பொறாமைப்படப் போறேன்? டூர் முடிஞ்சு சனிக்கிழமை ஈவினிங் சென்னை வந்துடு வோம். நீங்களும் அதுக்குள்ளே வந்துடுவீங்க தானே!''

''மாமா அப்படி தான் ஸ்ரீதர் சொன்னார்.''

மேலும் சில நிமிடங்கள் பேசிய பின் அவன் அழைப்பை துண்டித்தான். அன்பரசுவிற்கு அங்கே ஒரு வேலை வந்து விட அவர் தன் சென்னை பயணத்தை ஞாயிறுக்கு மாற்றினார்.

சனிக்கிழமை இரவு சென்னை வந்து சேர்ந்த ஸ்ரீதர் அவர்கள் நால்வரும் சேலத்தில் இருந்து அன்று கிளம்பப் போவதில்லை என்று தெரிந்ததும் கடுப்பானான்.

'நாலு நாளா இவளை பார்க்கலையேன்னு நான் தான் வருத்தமா இருக்கேன். இவ நல்லா ஊர் சுத்துறாள். உனக்கு என்னை பார்க்கணும் போல இல்லைன்னா அங்கேயே இரு!' என்று ஜோதியை மனதிற்குள் திட்டிக் கொண்டான்.

பயணம் ரத்தானத்துக்கு ஜோதி எந்த வகையிலும் காரணம் இல்லை என்று அவன் மனதிற்கு தெரிந்து தான் இருந்தது. இருப்பினும் அவளை பார்க்க முடியாத ஏக்கம் கோபமாய் வெளிப்பட்டது.

அரை மணி நேரம் இங்கும் அங்கும் உலவினான்.

'இது சரிப்படாது. அவ என்ன சென்னை வருவது... நான் சேலத்துக்கு போறேன்' என முடிவு செய்தவன் டாக்சியை ஏற்பாடு செய்தான். துணிகளை அடுக்கிக் கொண்டு கிளம்பினான்.

''இப்ப தானேடா வந்தே! அதுக்குள்ளே எங்கே கிளம்பிட்டே?'' என்று தருண் கேட்டான்.

''சேலத்துக்கு போறேன்டா.''

''நானும் வரேன்டா. தாரிகாவும் அவங்க அப்பா வீட்டுக்கு போயிட்டாள். என் காரிலே போவோமா?''

''இல்லை தருண். டயர்ட்டா இருக்கிறதால டிரைவ் பண்ண முடியாதுன்னு டாக்சி வர சொல்லிட்டேன்.''

''அப்போ அதுலயே போயிடலாம். அப்பா இன்னோ வாவில் தான் சேலம் போய் இருக்கார். வரும்போது அதுலயே எல்லோரும் வந்துடலாம். ஒரு நிமிஷம் இரு. பெட்டியை எடுத்துட்டு வரேன்.''

அண்ணனும் தம்பியும் நடுஇரவில் கிளம்பினர். வழியில் அவர்களது கார் நின்றுவிட அதை சரி செய்து காலையில் அவர்கள் வீடு வந்து சேர்ந்த போது மணி ஏழாகி இருந்தது.

''வாங்க தம்பி! நீங்க வர போகிறதா அம்மா சொல்லவே இல்லை.'' என்று அந்த வீட்டை பராமரிப்பவர் வரவேற்றார்.



''நாங்க வரப் போறது அவங்களுக்கு தெரியாது.'' என்று சொல்லிக் கொண்டே இருவரும் வீட்டிற்குள் நுழைந்தனர்.

அந்த வீட்டில் இரு படுக்கை அறைகள் உண்டு. ஒன்றில் அவன் அம்மா படுத்திருப்பதை கண்ட ஸ்ரீதர் இன்னொன்றில் தான் ஜோதி தூங்கிக் கொண்டிருப்பாள் என கணக்கிட்டான்.

'நான் நேத்து ஃபுல்லா பஸ்ஸிலே டிராவல் பண்ணி, அதுக்கு அப்புறம் சென்னையில் இருந்து காரிலே டிராவல் பண்ணி டயர்டா வந்து நிக்கிறேன். இவ சுகமா தூங்கிறாளா! விடக் கூடாது' என நினைத்தவன் சமையலறைக்கு சென்று ஒரு பாத்திரத்தில் தண்ணீரை பிடித்துக் கொண்டு வந்து அடுத்த படுக்கையறை கதவை தட்டினான்.

'இந்த தட்டலுக்கு திறப்பாளா? இல்லை பெட் நனைஞ்சாலும் பரவாயில்லைன்னு அங்கேயே போய் தண்ணியை ஊத்துவோமா?' என்று அவன் யோசித்து கொண்டு இருக்க... கதவு திறக்கப்பட்டது.

ஸ்ரீதர் முழு வேகத்தோடு அந்த தண்ணீரை தூக்கி விசிற... அங்கே சொட்ட சொட்ட நனைந்து கொண்டு நின்றிருந்தவர் அன்பரசு!

ஸ்ரீதர் திருதிருவென விழித்து கொண்டு நின்றான். ஸ்ரீதர் தண்ணீர் அடிக்கும் வேலையில் மூழ்கி இருக்கும் போது தருண் தன் தாயை எழுப்பி அழைத்து வந்திருந்தான்.

பின் பக்க குளியலறையில் இருந்து குளித்து முடித்து ஜோதியும் அங்கே வந்தாள். நடந்ததை ஊகித்த ஜோதி

தன் வயிற்றை பிடித்துக் கொண்டு சிரிக்க ஆரம்பித்தாள்.

''ஏன்டா! எங்க வீட்டுக்காரருக்கு குளிச்சுக்க தெரியாதா? இதுக்காகவா சென்னையிலே இருந்து கிளம்பி வந்தே?'' என்று தெய்வநாயகி நக்கல் பண்ணினார்.

''நீங்க எப்போங்க அந்த ரூம் போனீங்க?'' என்று தெய்வநாயகி தன் கணவனை கேட்டார்.

அன்பரசு தன் முகத்தில் வடியும் நீரை துடைத்துக் கொண்டே, ''நான் குளிக்கப் போறேன் மாமா. தீபு குட்டி தனியா தூங்கிறாள். அவளுக்கு துணையா அவ பக்கத்திலே உட்கார்ந்து இருங்கன்னு ஜோதி சொன்னாள். உன் மருமகள் பேச்சை கேட்டு உட்கார்ந்தால்... உன் பிள்ளை குளிப்பாட்டுறான்.'' என்றார்.

''ஆமா! நீங்க ரெண்டு பேரும் எதுக்குடா இங்கே வந்தீங்க?'' என்று மகன்களை தெய்வநாயகி விசாரிக்க...

''அண்ணன் தீபுவை பார்க்கணும்னு சொன்னான்.'' என்று ஸ்ரீதரும்,

''தம்பி சேலத்துக்கு கிளம்பினான். அதான் நானும் அவன் கூட கிளம்பிட்டேன்.'' என தருணும் ஒரே நேரத்தில் கூறினர்.

பின் இருவரும் தங்களது முரண்பட்ட பதிலால் திருதிருத்தனர். என்ன நடந்திருக்கும் என புரிந்த கொண்ட அன்பரசுவும் தெய்வநாயகியும் நமுட்டு சிரிப்பு சிரித்தனர். ஜோதியின் முகம் வெட்கத்தால் மலர்ந்தது.



''போய் பிரஷ் பண்ணிட்டு வாங்க. டீ போட்டு தரேன்.'' என்று தெய்வநாயகி கூற,

''வழியிலே பிரஷ் பண்ணி டீ வாங்கி குடிச்சாச்சு.'' என்று தருண் பதிலளித்தான்.

அன்பரசு அந்த அறையை விட்டு வெளியேறி பின்பக்கம் சென்றார். தருணும் தன் தாயுடன் சென்றான். ஸ்ரீதரும் ஜோதியும் அந்த அறைக்குள் நுழைந்தனர்.

அறையை தாளிட்ட ஸ்ரீதர் தன் மனைவியை இழுத்து அணைத்துக் கொண்டான். அவளது ஈரக் கூந்தலில் முகம் புதைத்தவன்,

''ஜோ! நான் உன்னை எவ்வளவு மிஸ் பண்ணினேன் தெரியுமா? உன்னை பார்க்காமல் என்னால நாலு நாளை கடத்தவே முடியலை.'' என்று சொல்லி தன் அணைப்பை இறுக்கினான்.

பின் அவளை விட்டு விலகியவன் அவளது கண்களை பார்த்துக் கொண்டே, நான் அந்த அகல்யாவை லவ் பண்ணினதா நினைச்ச காலத்திலே ஒரு நாள் கூட அவளை பார்த்தே ஆகணும்னோ பேசியே தீரணும்னோ ஃபீல் பண்ணியதே இல்லை. ஆனா இந்த நாலு நாளிலே உன்கிட்ட எத்தனையோ தடவை பேசியும் கூட உன்னை பார்க்காமல் என்னால நார்மலா இருக்க முடியலை. நான் சொல்லுறது உண்மைன்னு நீ நம்புறியா ஜோ?'' என்றான்.

''என் ஸ்ரீதரை நம்பாமல் நான் வேற யாரை நம்புவேன்?'' என்றதும் அவன் முகம் மலர்ந்தான்.

''நானும் உங்ககிட்ட ஒண்ணு சொல்லணும் ஸ்ரீ. நான் நம்ம கல்யாணத்துக்கு முன்னாடியே நம்ம காலேஜில்

வச்சு உங்களை சைட் அடிச்சேன். தாலி கட்டியது நீங்க என்பதால தான் நான் பேசாமல் அமைதியா போனேன். இதுவே உங்க இடத்துல வேற யாராச்சும் இருந் திருந்தால்... நடந்திருப்பதே வேறா இருந்திருக்கும்.''

''அடிப்பாவி! இத்தனை நாளா இது பத்தி மூச்சு விட்டியா நீ?'' என்றதும் அசடு வழிந்தாள்.

"ஸ்ரீ! அந்த டிவோர்ஸ் ஃபைலை என்ன பண்ணீங்க?"

"அதெல்லாம் எப்பவோ கிழிச்சு தூக்கி போட்டாச்சு.''

"ஸ்ரீ! கிவ் மீ எ டைட் ஹக்.'' என்று அவள் தன் கைகளை விரித்தாள்.

அவன் தன் முகம் மலர அவளை தன்னோடு இறுக்கி அணைத்துக் கொண்டான். அவளும் தன்னால் முடிந்த மட்டும் அவனோடு ஒன்றினாள். உடல் முழுவதும் மின்சாரம் தாக்க அவர்கள் அந்த நிலையிலேயே சில நிமிடங்கள் கட்டுண்டு இருந்தார்கள்.

பின் அவளை விடுவித்தவன், ''இதுக்கு மேல நான் இங்கே இருந்தால் தப்பாகிடும். உன் படிப்பு முடியுற வரைக்கும் உன்னை டிஸ்டர்ப் பண்ண மாட்டேன்னு சொல்லி இருக்கேன்.'' என்றவன் அவளது கன்னத்தில் முத்தமிட்டு விலகினான்.

"நேத்துல இருந்து மாறி மாறி டிராவல் பண்ணது டயர்ட்டா இருக்கு. நான் கொஞ்ச நேரம் படுத்து தூங்கிறேன்.'' என்றவன் தீப்தி அருகில் போய் படுத்துக் கொண்டான்.

'என்னை பார்க்காமல் அவாய்ட் பண்ண தூக்கம் வருதுன்னு பொய் சொல்லுறார்' என நினைத்து சிரித்து



கொண்ட ஜோதி அந்த அறையில் இருந்து வெளியேறி னாள்.

பொய் சொல்லி படுத்தாலும் அவனுக்கு இருந்த அலுப்பில் ஸ்ரீதர் தூங்கி தான் போனான்.

அன்பரசு தன் மனைவியிடம், ''நம்ம ஸ்ரீதர் ஜோதி கழுத்திலே வேற வழி இல்லாமல் தாலி கட்டி இருக்கானே! அவன் வாழ்க்கை எப்படி இருக்குமோன்னு கொஞ்சம் பயமா இருந்துச்சு. ஆனா அவளை நாலு நாளா பார்க்கலை என்றதும் அவன் இங்கே வரை வந்து நிக்கிறதை பார்க்கும் போது மனசுக்கு நிம்மதியா இருக்கு.'' என்றார்.

''ஆமாங்க. உங்க பையன் மொத்தமா கவுந்துட்டான். நம்ம ஜோதி கூட சேர்ந்து சந்தோஷமா வாழுவான்.'' என்று தெய்வநாயகியும் ஆமோதித்தார்.



## 14

அன்பரசு தன் வேலையை முடித்துக் கொண்டு அன்று மாலை ஏழு மணி அளவில் வீடு திரும்பி னார்.

''போகிற வழியிலே சாப்பிட்டுக்குவோமா? கிளம்பு வோமா?'' என்று தெய்வநாயகி கேட்டார்.

"கிளம்பலாம். போகிறதுக்கு முன்னாடி பக்கத்து ஊரிலே ஒரு வீட்டுக்கு வந்துட்டு போக சொல்லி எங்க செல்லப்பன் அண்ணன் கூப்பிடுறார்."

" எதுக்காம்?"

"விஷயம் சொல்லலை. குடும்பத்தோட வந்துட்டு போப்பான்னு" சொன்னார்.

"சரிங்க. பெட்டியை எடுத்துக்கிட்டு கிளம்புவோம். அவங்களை பார்த்துட்டு அப்படியே சென்னைக்கு போகலாம்." என்றதும் அனைவரும் கிளம்பினர்.

அந்த சிறிய ஊரில் உள்ள ஒரு பெரிய வீட்டின் முன்பு கார் நின்றதும் அனைவரும் அதில் இருந்து இறங்கினர்.

அன்பரசுவின் ஒன்று விட்ட அண்ணன் வாயிலில் நின்று வரவேற்றார்.

"யார் வீடு அண்ணே இது?"

"இது சண்முகம் அண்ணாச்சி வீடு. நீ சொத்து வாங் கணும்னு சொன்னே இல்ல அன்பரசு. அது இவரோடது தான். இவர் இந்த ஊரிலே பெரிய ஆள். அது மட்டுமில்ல உன் தங்கச்சி பொண்ணுக்கு மாப்பிள்ளை பார்க்கணும்னு சொன்னியே... இவர் வீட்டிலும் ஒரு மாப்பிள்ளை இருக்கு."

"அதான் ரெண்டு விஷயமாவும் அவரை பார்த்துட்டு போக சொல்லி உன்னை வர சொன்னேன். நீ சென்னை போயிட்டால் இந்த பக்கம் உன்னை வர வைக்கிறது ரொம்ப கஷ்டம் ஆச்சே!" என்று தம்பியிடம் விளக்கியவர்,



"எல்லோரும் வாங்க!" என்று வீட்டிற்குள் அழைத்து சென்றார்.

பெரிய வீடாக தான் இருந்தது. சண்முகம் வரவும் அன்பரசுவும் அவரும் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

'இங்கே நம்மை கூட்டிட்டு வந்துட்டாரே!' என்ற மனோபாவத்தோடு இளையவர்கள் அமர்ந்திருந்தனர்.

ஜோதி அந்த வீட்டை சுற்றி தன் பார்வையை சுழலவிட்டாள். அங்கே இருந்த சுவர் முழுவதும் புகைப் படங்கள் தொங்கவிடப்பட்டு இருந்தன. இங்கே அவஸ்தையாய் உட்கார்ந்து இருப்பதுக்கு பதிலா அதை யாவது பார்க்கலாம்' என நினைத்தாள்.

தீப்தியாலும் ஒரே இடத்தில் உட்கார்ந்து இருக்க முடியவில்லை. ஜோதி அவளை அழைத்து கொண்டு அந்த புகைப்படங்களை வேடிக்கை பார்க்க சென்றாள்.

அங்கே இருந்த புகைப்படத்தில் இருந்தவரை பார்த்து, சினிமாவிலே காண்பிக்கிற பண்ணையார் மாதிரியே இருக்கார். பெருசா மீசை வச்சுக்கிட்டு தோரணையா இருக்கார் என்று நினைத்துக் கொண்டாள்.

ஒவ்வொரு புகைப்படமாக பார்த்துக் கொண்டு வந்தவள் ஒரு புகைப்படத்தின் அருகே ஆணி அடித்தது போல் நின்று விட்டாள். ஏனெனில் அந்த புகைப் படத்தில் இருந்தது அவளுடைய அம்மா.

ஐந்து பெண்களில் ஒருவராய் நின்று கொண்டிருந்த அவளது தாயை அவளால் நன்றாக அடையாளம் காண முடிந்தது.

''அம்மா போட்டோ இங்கே எப்படி வந்துச்சு?'' என்று குழம்பியவள் ஸ்ரீதர் பக்கம் திரும்பி அவனை தன்னருகே அழைத்தாள்.

அவளருகே வந்தவன், ''என்னடா ஜோ?'' என்றான்.

''ஸ்ரீதர்! எங்க அம்மா போட்டோ இங்கே இருக்கு.'' என்று சுட்டிக் காட்டினாள்.

''உங்க அம்மா போட்டோ இங்கே எப்படி வர முடியும் ஜோ?''

''எங்க அம்மாவோட சொந்த ஊர் சேலம் பக்கத்திலே உள்ள ஒரு கிராமம்னு சொல்லி இருக்காங்க. ஒருவேளை இது எங்க அம்மா பிறந்த ஊரா இருக்கலாம். இவங்க எங்க அம்மாவோட பிரண்ட்ஸா இருக்கலாம்.''

''நீ சொல்லுற மாதிரி இருக்கலாம். நீ சுத்தமா உங்க அம்மா மாதிரி இல்லை. நீ உங்க அப்பா ஜாடையோ?'' என்று ஸ்ரீதர் அந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டான்.

இவர்கள் பேசிக் கொண்டிருப்பதை பார்த்து அன்பரசுவின் உறவினர் செல்லப்பன் அவர்கள் அருகே வந்து, ''என்ன தாயி! போட்டோ பார்க்கிறீங்களா?'' என்றார்.

எடுத்த உடனே தன் தாயை பற்றி விசாரிக்காமல் ஒரு புகைப்படத்தை காட்டி, ''இவர் யார்? பார்த்தால் கிராமத்து பண்ணையார் மாதிரி இருக்கார்.'' என்று கேட்டாள்.

''மாதிரி இல்ல தாயி. பண்ணையார் தான்.''

''இவங்க யாரு?'' என்று அடுத்ததாய் தன் தாயை சுட்டி காட்டி வினவினாள்.



''இது நம்ம சண்முகம் அண்ணாச்சியோட தங்கச்சி. இந்த ஒரு போட்டோவில் மட்டும் தான் இருப்பாங்க. அதுவும் கூட எதுக்குன்னா... கூட இருக்கிற நாலு பொண்ணுங்களால தான் இந்த போட்டோ மட்டும் இன்னும் இங்கே தொங்கிக்கிட்டு இருக்கு. இல்லைன்னா இதையும் எப்பவோ கழட்டி எறிஞ்சு இருப்பாங்க.''

''என்ன செல்லாப்பா? என்ன பேசிக்கிட்டு இருக்கீங்க?'' என்று இருந்த இடத்தில் இருந்தே சண்முகம் கேட்டார்.

''தாயி உங்க தங்கச்சி பத்தி கேட்டாங்க. அதான் சொல்லிக்கிட்டு இருக்கேன்.'' என்றதும் அந்த சண்முகம் வெடித்தார்.

''கூடப் பிறந்ததுக எல்லாம் தங்கச்சி ஆகிட முடியுமா? ஓடுகாலி கழுதை. வேற சாதி பையனோட ஓடிப் போயிட்டாள். இந்த ஊரு பக்கம் வரட்டும் வெட்டி பொலி போட்டுடலாம்னு காத்திருந்தேன். கடைசி வரைக்கும் வரலை. ஓடிப் போய் நல்லா பிழைச்சாளா? அதான் இல்ல.

''அவ புருஷங்காரன் செத்து போயிட்டான். விஷயம் கேள்விப்பட்டதும் நீங்க போய் பார்க்க போறீங்களாப் பான்னு எங்க அப்பாவை கேட்டேன். எங்க அப்பா யாரு? ஜாதி மான் இல்ல. மாட்டேன்னு மறுத்துட்டார். அப்புறம் ரெண்டு வருஷம் கழிச்சு அவளும் போய் சேர்ந்துட்டாள்னு கேள்வி.

''எங்க அம்மா தொணதொணப்பு தாங்காமல் எங்க அப்பா ஒரு சொத்தை அவ மகள் பேருக்கு எழுதி

வச்சுட்டு போயிட்டார். நீங்க வாங்க நினைக்கிற சொத்து அது தான். அந்த கழுதையை தேடி கண்டுபிடிச்சு உங்களுக்கு அந்த சொத்தை நான் முடிச்சு தரேன்.'' என்று சண்முகம் கூறினார்.

அவர் பேச பேச ஜோதி கொதித்து போய் நின்றிருந்தாள். அவளுக்கு ஆறுதல் சொல்லும் பொருட்டு ஸ்ரீதர் அவளது உள்ளங்கையை பிடித்து அழுத்திக் கொடுத்தான்.

ஆனால் அதை எல்லாம் உணரும் நிலையில் ஜோதி இல்லை.

'என் கூட வந்துடு சொத்து தரேன்னு என் பின்னாடியே என் தாத்தா தொங்கிக்கிட்டு இருக்கார். அவர் எங்க அம்மாவை ஏத்துக்கலை என்ற ஒரே காரணத்துக்காக அவரையே வேண்டாம்னு தள்ளி நிக்க வச்சவள் நான். எங்க அம்மா அப்பா ரெண்டு பேரையும் கேவலமா பேசுற உன்னை சும்மா விடுவேனா?' என்று மனதிற்குள் தன் மாமனை திட்டிக் கொண்டு நின்றாள்.

அவள் தன் கண்களை மூடி தன்னை நிலைப்படுத்திக் கொண்டு அன்பரசுவின் முன் வந்து நின்றாள்.

"மாமா! உங்களுக்கு அந்த சொத்தை கண்டிப்பா வாங்கி ஆகணுமா?"

"அப்படி எல்லாம் இல்லைம்மா. ஏன் கேட்கிறே?''

"அந்த பாவப்பட்ட சொத்து நம்ம குடும்பத்துக்கு வேண்டாம் மாமா.'' என்றவள் சண்முகத்தின் பக்கமாய் திரும்பி,

நீங்க தேடி கண்டுபிடிக்க நினைக்கிற கழுதை நான் தான். எனக்கு உங்க சொத்து வேண்டாம். அந்த



சொத்தை நான் ஏத்துக்கிட்டால் எங்க அம்மாவோட ஆன்மா என்னை மன்னிக்காது. சட்டப்படி எப்படி எழுதிக் கொடுக்கணுமோ அதை நான் வக்கீல்கிட்ட கலந்து பேசி அதே மாதிரி செஞ்சுடுறேன்.''

''நீங்க சொன்னதில் ஒரு விஷயம் சரி தான். கூடப் பிறந்துட்டதால மட்டும் ஒருத்தர் உறவாகிட முடியுமா என்ன? பாசம்னா கிலோவிலே கிடைக்குமா லிட்டரிலே கிடைக்குமான்னு கேட்கிற வீட்டிலே பிறந்தது எங்க அம்மாவோட துரதிர்ஷ்டம்.''

''நீங்க தூக்கிப் போடுற சொத்தை பொறுக்கிட்டு போறதுக்கு நான் ஒண்ணும் பிச்சைக்காரி இல்லை. ஜோதி... சந்திரனோட பொண்ணு ஜோதி. எல்லோருக்கும் தூக்கிக் கொடுக்கிற நிலையிலே என்னோட பொருளாதார நிலை உயர்ந்ததா இல்லாமல் இருக்கலாம். ஆனா எங்க அப்பா யார்கிட்டயும் என்னை கையேந்த விட்டதில்லை.'' என்று ஆவேசமாய் பேசினாள்.

அவள் பேச பேச அன்பரசுவின் குடும்பத்தினர் அதிர்ச்சியில் சிலையாய் அமர்ந்திருந்தனர்.

''நீ தான் அந்த ஓடுகாலி பெத்த பொண்ணா?'' என அவளை பார்வையிட்ட சண்முகம், ''நீயாவது உங்க அம்மா மாதிரி இல்லாமல் நம்ம சாதி பையனா பார்த்து கல்யாணம் பண்ணி இருக்க போல. அந்த மட்டுக்கும் எனக்கு சந்தோசம்.'' என்று கூறவும், ஜோதி அவரை திட்டுவதற்கு வார்த்தை வராமல் வாயடைத்து போனாள்.

அவளுக்கு பதிலா ஸ்ரீதர் அவரிடம், ''ஸாரி சார். நான் உங்க ஜாதி இல்லை. நான் எங்க மாமனாரோட ஜாதி.

புரியலையா? மனுஷ ஜாதின்னு சொல்லுறேன். இந்த நிமிஷம் வரைக்கும் இவ என்ன ஜாதின்னு நானோ எங்க வீட்டை சேர்ந்தவங்களோ கேட்டதும் இல்லை. கவலைப் பட்டதும் இல்லை. ஏன்னா எங்களோடதும் காதல் கல் யாணம் தான்.'' என்றவன் மனைவியின் கையை பிடித்து வெளியே இழுத்து சென்றான்.

அன்பரசுவின் குடும்பத்தினர் அவரிடம் சொல்லிக் கொள்ளாமல் அங்கே இருந்து கிளம்பினர். அனைவரும் காரில் ஏறியதும் அன்பரசு டிரைவரிடம், "இங்கே நம்ம சேலம் வீட்டுக்கு போப்பா.'' என்றார்.

வீடு வரும் வரை ஜோதி எதுவும் பேசவில்லை. அவளின் இறுக்கத்தை பார்த்து அனைவருமே அமைதி யாய் வந்தனர். ஜோதிக்கு இப்பொழுது தனிமை தேவைப்படுகிறது என்பதை புரிந்து கொண்ட அன்பரசு வீடு வந்ததும்,

"ஸ்ரீதர்! நீயும் ஜோதியும் வீட்டிலே இருங்க. நாங்க எல்லோரும் போய் ஹோட்டலில் சாப்பிட்டுட்டு உங்க ரெண்டு பேருக்கும் பார்சல் வாங்கிட்டு வரோம். நீங்க சாப்பிட்டதுக்கு அப்புறமா நாம சென்னை போகலாம்.'' என்றதும் அவர்கள் இருவரும் இறங்கிக் கொண்டனர்.

வீட்டிற்குள் நுழைந்தவுடன் ஜோதி ஸ்ரீதரை கட்டிக் கொண்டு அழ ஆரம்பித்தாள். சில நிமிடங்கள் அவளை அழ விட்டவன்,

"அங்கே தைரியமா தானேடா இருந்தே! நீ இவ்வளவு கண்ணீர் விடுற அளவுக்கு எதுவும் மாறிடலை. போதும்டா ஜோ. விட்டுத் தள்ளு.'' என்று தேற்றினான்.



அன்பரசு திரும்பி வந்ததும் ஜோதி அவரிடம் சென்று, மாமா! நான் நகையோ பணமோ எதையுமே சீரா கொண்டு வரலை. வந்த சொத்தையும் உதறி தள் ளிட்டேன்னு நீங்க என்னை தப்பா நினைக்கலையே!'' என்றாள்.

''என்னம்மா இப்படி கேட்கிறே? யாருன்னே தெரியாதவங்க இறந்து போனதை கேட்டால் கூட கவலைப்படுறவன் தான் மனுஷன். கூடப் பிறந்தவளும் அவ கணவனும் இறந்த விஷயத்தை அவ்வளவு சாதாரணமா சொல்லுறான் அந்த சண்முகம். அவன் வீட்டுல தண்ணி குடிச்சா கூட அது பாவம்மா.

''என் பிள்ளையை நான் படிக்க வச்சு ஆளாக்கி இருக்கேன். உனக்கு வேண்டிய சொத்தை அவன் சம்பாதிச்சு தருவான். அப்புறம் சீர்... என் பிள்ளை ஸ்ரீதரோட வாழ்க்கை நிம்மதியா சந்தோஷமா இருக் கும்னு என் மனசிலேயும் தெய்வா மனசிலேயும் நம்பிக் கையை விதைச்சு இருக்க பாரு... அது தான்மா நீ கொண்டு வந்த சீர். அந்த சொத்து வேணாம்னு நீ தூக்கிப் போட்டுட்டு வந்ததில் எனக்கு பெருமை தான்மா.''

''தாங்க்ஸ் மாமா.''

அவர்கள் சாப்பிட்டு முடித்து கிளம்பி ஊர் வந்து சேர்ந்த போது காலை ஆறு மணி ஆனது. அன்று ஜோதி கல்லூரிக்கு செல்லவில்லை.

தன் மாமனாருடன் கிளம்பி வக்கீலை பார்க்க சென்றாள். தன்னுடைய தாய் வழி தாத்தா தன் பெயரில்

எழுதி வைத்துள்ள சொத்தை எப்படி தன் மாமாவிடம் திருப்பி கொடுப்பது என்று வக்கீலிடம் கலந்து பேசி வேண்டியதை செய்தாள்.

மறுநாள் கல்லூரிக்கு வந்த ஜோதியை, உன்னை பார்த்து எத்தனை நாளாச்சு ஜோதி. என்று கீர்த்தி கட்டிக் கொண்டாள்.

''எப்படி இருந்துச்சு உன்னோட டூர்?''

''நல்லா போச்சு. நீ ஏன் நேத்து வரலை?''

''அம்மா நினைப்பு ரொம்ப வந்துச்சு. மனசு சரி யில்லை. அதான் வரலை.''

''நேத்து ப்ராஜெக்ட் டீம் ஃபார்ம் பண்ணினாங்க.''

''அச்சச்சோ! என்னை உன் டீமில் சேர்த்து எழுதி குடுத்தியா கீர்த்தி?''

''இல்லை ஜோதி. என் கூட ரெண்டு பசங்களை சேர்த்து விட்டிருக்காங்க. வெளியே போய் ப்ராஜெக்ட் செய்யுறதுனால பசங்களோட சேர்த்து போட சொல்லிட் டாங்க. நேத்து நீயும் வரலை. கண்ணனும் வரலை. அதனால உங்க ரெண்டு பேரையும் ஒரே டீம்ல கோர்த்து விட்டுட்டாங்க.''

''வெறும் ரெண்டு பேரா? பேசாமல் எங்க ரெண்டு பேரையும் தனித்தனியா பிரிச்சு ஏதாச்சும் ஒரு டீம்ல ஒட்ட வைக்கலாமில்ல.''

''ரெப் அப்படி தான் கேட்டான். எதுக்கு? அந்த ரெண்டு டீமும் ஒபி அடிக்கவான்னு ஹெச்.ஓ.டி சொல்லிட்டார்.''



ப்ராஜெக்ட் ஹெட் யாருன்னு சொல்லிட்டாங்களா?

இன்னைக்கு சொல்லுவாங்க போல! என்று அவள் சொல்லிக் கொண்டு இருக்கும் பொழுதே அது பற்றிய அறிக்கை வந்தது.

அதை போய் பார்த்துவிட்டு வந்த கீர்த்தி, ''ஜோதி! எனக்கு ஹெட் யாரு தெரியுமில்ல... என்னோட டார்லிங் ஸ்ரீதர். உனக்கு அஸ்வின் சார் தான் ஹெட்.'' என்றாள்.

''அப்பாடா! ஸ்ரீதர்கிட்ட இருந்து நான் தப்பிச்சுட் டேன். மனுஷன் அவர் லெவலுக்கு நம்மளை எதிர்பார்த்து சாவடிப்பார். தாங்க் காட்.'' என்று ஜோதி நிம்மதியானாள்.



## 15

நான்காம் வருட மாணவர்களுக்கு ஸ்ரீதர் தேர்வு வைத்திருந்தான். அந்த பேப்பர்களை திருத்தி கொடுத்து அனுப்பி இருந்தான். மாணவர் தலைவன் அதை உரியவர்களிடம் ஒப்படைத்தான்.

ஜோதிக்கு முட்டை மார்க் கிடைத்து இருந்தது.

''என்ன ஜோதி? என்ன ஆச்சு உனக்கு? டெஸ்ட் நல்லா பண்ணலையா?'' என்று கீர்த்தி வருத்தத்துடன் கேட்டாள்.

''நீ ஏன் இவ்வளவு ஃபீல் பண்ணுறே? நான் ஒரு கொஸ்டின் படிச்சுட்டு வந்தேன். சார் வேற கொஸ்டின் கேட்டுட்டார். காலேஜ் லைஃபில் இதெல்லாம் சாதாரணம் மச்சி.'' என்றவள் அதை பெரிதாக கண்டு கொள்ளவில்லை.

அன்று மாலை கல்லூரி விட்டதும் அனைவரும் ஒன்றாக சினிமா செல்லலாம் என முடிவு செய்து இருந்தார்கள். ஜோதி ஏற்கனவே தெய்வநாயகியிடம் அனுமதி வாங்கி இருந்தாள். அதனால் அவள் படம் பார்த்து விட்டு வீட்டுக்குள் நுழையும் பொழுது எட்டு மணி.

அவள் வீட்டிற்குள் நுழையும் பொழுது ஸ்ரீதர் வரவேற்பறை சோபாவில் அமர்ந்திருந்தான். அன் பரசுவும் தருணும் கூட அங்கே தான் அமர்ந்திருந்தனர்.

''ஹையா! சித்தி வந்தாச்சு.'' என்று தீப்தி ஓடி வந்தாள்.

அவளின் கன்னம் பிடித்து கொஞ்சிய ஜோதி ஓரக் கண்ணால் தன் கணவனை நோட்டம் விட்டாள். அவன் அவளை முறைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

'ஆஹா! மார்க் பத்தி விசாரணை பண்ண ரெடியா இருக்கிறார் போல! நைசா எஸ்கேப் ஆகிடு ஜோதி!' என்று தனக்குள் கூறி கொண்டு அவள் மாடியை நோக்கி நகர்ந்தாள்.

''நில்லு அங்கேயே!'' என்ற ஸ்ரீதரின் குரல் அவள் நடையை தடை செய்தது.

எங்கே நைசா நழுவ பார்க்கிறே? உனக்காக தான் இங்கே ஒருத்தன் வெயிட் பண்ணுறான்னு உனக்கு தெரியாது.'' என்று அவன் கத்தவும், அவன் முன் வந்து நின்றாள்.



''எதுக்குடா அவ வந்ததும் வராததுமா வறுத்து எடுக்கிறே?'' என்று கேட்ட தெய்வநாயகியை பார்த்து முறைத்தவன்,

''நீ வாங்கின மார்க்கை உன் மாமியார்கிட்ட குடு. அதை அவங்க பொரிச்சு உனக்கு தருவாங்க.'' என்றான்.

''அத்தை! நாளையில் இருந்து கடையிலே முட்டை வாங்காதீங்க. வெள்ளை பேப்பரை எடுத்து உங்க பிள்ளை கையிலே குடுங்க. அவர் முட்டை முட்டையா போட்டு தருவார். அதை பொரிச்சு அவருக்கே குடுங்க.''

''செய்யுறதையும் செஞ்சுட்டு நக்கலா பண்ணுறே!'' என்று அவன் திட்டினான்.

அவள் பாவம் போல் முகத்தை வைத்து கொண்டு நின்றாள். தெய்வநாயகி மருமகளுக்காக வருத்தப்பட்டார்.

''என்ன மார்க் தெரியுமா வாங்கி இருக்காள்? முட்டை மார்க்.'' என்று அம்மாவிடம் சொன்ன ஸ்ரீதர் ஜோதியிடம் திரும்பி, ''நீ முட்டை வாங்க என்ன காரணம்னு எனக்கு இப்போ தெரிஞ்சு ஆகணும்.'' என்றான்.

''நான் படிச்சது ஒரு கொஸ்டீன். டெஸ்ட்டில் வந்தது வேற கொஸ்டீன். நான் என்ன பண்ணுவேன்?''

''ஏன் அந்த இன்னொரு கொஸ்டீனை படிக்காமல் போனே?''

''அது எனக்கு புரியலை. அந்த சார் அதை சரியா சொல்லித் தரலை.''

''ஏன்டா ஸ்ரீதர் வாத்தியார் சரியா சொல்லித் தர லைன்னா அவள் என்னடா செய்வாள் பாவம். எங்கே யாச்சும் காசு குடுத்து பட்டம் வாங்கி பாஸ் பண்ணி யிருப்பானா இருக்கும். முதல்ல வாத்தியாரை நல்லா படிக்க சொல்லு!'' என்று தெய்வநாயகி மருமகளுக்கு ஆதரவாக இடைபுகுந்தார்.

ஜோதி தனக்கு வந்த சிரிப்பை உள்ளுக்குள் அடக்கினாள்.

''அம்மாமாமா!'' என்று பல்லை கடித்த ஸ்ரீதர், ''அவ என்னை தான் சொல்லுறாள்.'' என்றதும்,

தெய்வநாயகி மருமகளை முறைக்க ஜோதி அடக்கி வைத்திருந்த சிரிப்பை வெளியிட்டாள். அவளோடு சேர்ந்து அன்பரசுவும் தருணும் கூட சிரிக்க ஆரம்பித் தார்கள்.

''இப்போ எதுக்கு எல்லோருக்கும் சிரிப்பு வருது?'' என்று அனைவரையும் பார்த்து மிரட்டியவன் மீண்டும் மனைவியின் புறம் திரும்பி கேள்வி கேட்க ஆரம் பித்தான்.

''பாடம் சரியா புரியலைன்னா வீட்டிலே வச்சு என்னை கேட்டிருக்க வேண்டியது தானே?''

சித்தப்பா தன் பிரியத்துக்குரிய சித்தியை திட்டு கிறான் என்றதும் தீப்தி தன் சித்தியின் அருகே சென்று சித்தப்பாவை முறைக்க ஆரம்பித்தாள்.

''ஒழுங்கா பாடம் படிக்காமல் இதோ நிக்கிற சில் வண்டு கூட சேர்ந்துட்டு குத்தாட்டம் போட வேண்டியது. அப்புறமா டெஸ்ட்ல முட்டை வாங்காமல் வேறு என்ன வாங்க முடியும்?''



''சித்து! ஸ்ரீ சித்தி குட் கேர்ள். சித்தியை திட்ட கூடாது.'' என்று தீப்தி விரல் நீட்டி மிரட்டினாள்.

''என் செல்ல புஜ்ஜு குட்டி.'' என்று கூறிய ஜோதி குனிந்து தீப்தியின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''உங்க சித்தி குட் கேர்ளா? அப்போ நான் தான் உனக்கு கெட்டவனா தெரியுறேனா?'' என்று ஸ்ரீதர் தீப்தியை மிரட்டினான்.

'இதுக்கு நான் என்ன பதில் சொல்ல?' என்று கேட்ப தற்காக தீப்தி ஜோதியின் சுரிதாரை பிடித்து இழுத்தாள். அவளது உயரத்திற்கு ஈடு கொடுப்பதற்காக ஜோதி முழங்காலிட்டு அமர்ந்தாள்.

தீப்தியின் காதில், ''ஆமா ரூட் (rude) டீச்சர்னு சொல்லு.'' என்று சொல்லிக் கொடுத்தாள்.

அதன்படியே தீப்தியும் சொன்னாள். திரும்பவும் ஜோதி அவளது காதில் கிசுகிசுக்க...

''ரூல்ஸ் ரங்கசாமி...'' என்று இம்முறை தீப்தி கூறியதும்,

''அடிங்க ரெண்டு பேரையும்...'' என்று ஸ்ரீதர் தன் இருக்கையில் இருந்து எழ... ஜோதி தீப்தியை தூக்கிக் கொண்டு தங்கள் அறை நோக்கி ஓட ஆரம்பித்தாள்.

அவர்களின் சண்டையை பார்த்துக் கொண்டிருந்த தருண், ''முன்னெல்லாம் என் பொண்ணுக்கு டாம் அண்ட் ஜெர்ரி கார்ட்டூனை டிவியில் காட்டிக்கிட்டு இருந்தீங்க. இப்பெல்லாம் லைவா காட்டுறீங்கடா!'' என்று கலாய்த்தான்.

''முகத்தை கழுவிட்டு சாப்பிட வா ஜோதி!'' என்று தெய்வநாயகி கூறினார்.

அனைவரின் பேச்சையும் கேட்டுக் கொண்ட ஜோதி திரும்பி பார்க்காமல் மாடியேறி சென்றாள்.

தீப்தி தன்னுடன் இருப்பதால் ஸ்ரீதர் இப்போது மாடியேறி வந்து திட்டமாட்டான் என்று ஜோதி உறுதியாக நம்பினாள்.

அதனால் அவளும் தீப்தியும் சேர்ந்து ஐந்து நிமிடத்திற்கு குத்தாட்டம் போட்டார்கள். அந்த சப்தம் கீழே வரை கேட்டது.

''ஒருத்தன் அவ்வளவு ஃபீலிங்ஸோட பேசினானே... அதுக்கு மதிப்பு கொடுத்து கொஞ்ச நேரம் வருத்தமா இருக்கிற மாதிரி நடிக்கவாவது செய்யலாமில்ல. பாருங்க ஆட்டத்தை....'' என்று ஸ்ரீதர் புலம்ப, அன்பரசு சிரித்தார்.

பதினைந்து நிமிடங்கள் கடந்த பின் இருவரும் கீழே இறங்கி வந்தார்கள்.

அனைவரும் சாப்பிட்டு முடித்தனர். சாப்பாட்டு மேஜை அருகே நின்று ஜோதி தெய்வநாயகியுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

தாரிகா மாடி ஏறியதும் ஸ்ரீதர் தன் விசாரணையை மீண்டும் துவக்க எண்ணி, ஜோதி! இங்கே வா! என்றான்.

''உங்க விசாரணை இன்னும் முடியலையா?''

''நீ எங்கே ஒழுங்கா பதில் சொன்னே? பாதியிலே ஓடிட்டியே!''



''அத்தை! எந்த நேரத்திலே உங்க பிள்ளையை பெத்தீங்க?'' என்று மாமியாரிடம் புலம்பிவிட்டு கணவனின் முன் சென்று நின்றாள்.

அவன் பேப்பர் பேனாவோடு அமர்ந்திருந்தான்.

''வா! என் பக்கத்திலே வந்து உட்கார். திரும்ப சொல்லித் தரேன்.'' என்றதும் ஜோதி முறைத்தாள்.

ஸ்ரீதர் தன் தந்தையிடம், ''எங்க ரூமிலே வச்சு பாடம் எடுக்க ஆரம்பிச்சால் ஏதாச்சும் டிராமா போடுவாள்னு நினைச்சு தான் உங்க முன்னாடி சொல்லித் தரலாம்னு பார்த்தேன். அவ உங்களை கண்டுக்கிறாளா பாருங்கப்பா.'' என்றான்.

''எனக்கு மாமா மேல நிறைய மதிப்பும் மரியாதையும் இருக்கு. நீங்க ஒண்ணும் ஹை-லைட் பண்ணி காட்ட வேண்டாம். எனக்கு அந்த டாபிக் அன்னைக்கே புரிஞ்சுடுச்சு. அதான் நான் திரும்பவும் உங்க லெக்சரை கேட்க விரும்பலை.''

''புரிஞ்சு இருந்தால் நீ இப்படி முட்டை வாங்கி இருக்க மாட்ட.''

''ஷப்பா!'' என்று அலுத்துக் கொண்டவள், மடமட வென அந்த டாபிக் பற்றி மூச்சு விடாமல் பேசினாள்.

அவள் என்ன சொல்கிறாள் என்று புரியாது தீப்தி அவளது வாயையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஸ்கூல் பசங்க போல அவள் ஒப்பிப்பதை கேட்டு தருண் சிரித்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

தெய்வநாயகி, மடமடன்னு என்னத்தையோ சொல்லுறாள். சரியா சொல்லுறாளா இல்லையான்னு

தெரியலை. இல்லைன்னா இந்த பையன் திரும்பவும் முதல்ல இருந்து ஆரம்பிப்பானே! என்று பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்தக் கேள்விக்கான விடையை சொல்லி முடித் தவள், இப்ப நம்புறீங்களா...?'' என்று கேட்டாள்.

"ஸ்ரீ சித்தி! நாம வின் பண்ணிட்டோமா?'' என்று தீப்தி ஆவலே வடிவாய் கேட்டாள்.

ஜோதி தன் கட்டை விரலை உயர்த்திக் காட்டவும் தீப்தி நடனமாடினாள்.

ஸ்ரீதர் அவளை சந்தேகமாய் பார்த்துக் கொண்டே, ''இவ்வளவு தெளிவா சொல்லுற! என்னைக்கு படிச்ச? டெஸ்ட்டுக்கு அப்புறமாவா?'' என வினவினான்.

"அன்னைக்கே படிச்சுட்டேன்.''

''படிச்சால் ஏன் எழுதலை.''

"தப்பான ஆன்சர் எழுதி குடுத்தால் நீங்க என்ன மார்க் போடுவீங்கன்னு பார்க்க ஆசையா இருந்துச்சு. அதான் அப்படி எழுதினேன்.''

''என்ன சொன்னே?!'' என்று ஸ்ரீதர் ஆச்சரியம் அடைந்தான்.

"ப்ச்... வைஃப் பேப்பரேன்னு ஏதாச்சும் கிரேஸ் மார்க் போடுவீங்களோன்னு நினைச்சேன். நான் சின்சியர் சிகாமணியாக்கும்னு முட்டையை போட்டு குடுத் திட்டீங்க.'' என்று அவள் சற்றும் அலட்டாமல் கூற, ஸ்ரீதர் அவளை முறைத்து கொண்டு அமர்ந்திருந்தான்.

"அதுக்கு வெறும் பேப்பரை குடுக்க வேண்டியது தானே. எதுக்கு என்னென்னவோ எழுதி இருக்கே?''



''ரெண்டு பக்கம் எழுதினால் ரெண்டு மார்க் அட் லீஸ்ட் போடுவீங்கன்னு பார்த்தேன். முதல்ல வேறொரு ஆன்சரை தான் எழுதினேன். அதை எழுதவும் போர் அடிச்சதா... அதான் நடுவிலே கொஞ்சம் தங்கிலீஷிலே எழுதி வச்சேன்.''

''டேய்! போதும்டா உன் விசாரணை.'' என்று தெய்வநாயகி அங்கே வந்தார்.

''அவ என்ன தெரியுமா எழுதி இருந்தாள். எங்க வீட்டிலே என் ஹஸ்பண்ட் என்னை படி படின்னு டார்ச்சர் பண்ணுறான். என் மாமியார் வேலை வாங்குறாங்க...''

"என்னது நான் வேலை வாங்கினேனா? எப்போ?'' என்று தெய்வநாயகி முறைக்க,

"பட்டாணி உரிக்க சொன்னீங்களாம்.'' என்று ஸ்ரீதர் எடுத்து கொடுத்தான்.

"நான் பட்டாணி உரிச்சு தந்தேன் தானே அத்தை. நான் பொய்யா ஒண்ணும் எழுதலை.'' என்று ஜோதி பதில் சொன்னாள்.

''ஏன்மா! இதையா எழுதினே?'' என்று அன்பரசு கேட்க, அவள் மௌனமாய் நின்றாள்.

"அது மட்டும் இல்லைப்பா... அஸ்வின் சார் தப்பா கிளாஸ் எடுத்தார்னு வேற எழுதி வச்சு இருந்தாள். அதை படிச்சுட்டு அவன் செம காண்டுல இருக்கான்.''

"நீங்க அவர்கிட்ட எதுக்கு காட்டினீங்க?''

"ஆமா நீ பெரிய அவார்டு வாங்கி இருக்க. நான் பெருமையா அதை ஊரெல்லாம் காட்டினேன்." என்று கிண்டல் செய்தவன்,

''அவனே வந்து படிச்சுட்டான். அவ்வளவு வருத் தப்படுறவள் அவனை பத்தி எழுதாமல் இருந்திருக் கணும்.'' என்றதும் யோசனையாய் சோபாவில் அமர்ந் தாள்.

அவள் அஸ்வின் வகுப்பில் தப்பாக பாடம் எடுத்தான் என்று எழுதி இருந்தது உண்மை தான். ஆனால் அதை அஸ்வின் படிக்கவில்லை. ஜோதியை மிரட்டுவதற்காக அஸ்வின் படித்து விட்டதாக ஸ்ரீதர் பொய் கூறினான்.

'கொஞ்சமாச்சும் ஃபீல் பண்ணட்டும். அப்போ தான் இது மாதிரி இனி செய்ய மாட்டாள்' என்று ஸ்ரீதர் நினைத்தான்.

தீப்தி ஜோதியின் அருகே சென்று, ''ஸ்ரீ சித்தி! என்னாச்சு? நாம தோத்துட்டோமா?'' என்றாள்.

''என் பிரச்சனையில் உன்னையும் இணைச்சுக்கிட்டு எனக்கு சப்போர்ட்டா என் புஜ்ஜு குட்டி நீ இருக்கிற வரைக்கும் சித்திக்கு தோல்வியே கிடையாதுடா. இதெல்லாம் ஜுஜுபி. சித்தி சும்மா ஊதி தள்ளிடுவேன்.'' என்றதும் ஸ்ரீதர் தன் தலையில் அடித்துக் கொண்டான்.

''இதெல்லாம் தேறாத கேஸ்.'' என்று முணுமுணுத்துக் கொண்டே ஸ்ரீதர் தன் அறை நோக்கி செல்ல ஆரம் பித்தான்.

அன்பரசு தன் மருமகளிடம், ''பார்த்து நடந்துக் கோம்மா. அவன்கிட்ட திட்டு வாங்கிற மாதிரி நடந்துக் காதே! முக்கியமா வேலை இடத்தில் அவனுக்கு தலை குனிவை ஏற்படுத்திடாதே! அப்புறமா ரொம்ப கோபப் படுவான். என்னால கூட உன்னை காப்பாத்த முடியாமல் போயிடும்.'' என்றார்.



''இனிமேல் இப்படி சின்னப் பிள்ளைதனமா நடந்துக்க மாட்டேன் மாமா. கேர்புல்லா நடந்துக்கிறேன்.'' என்று உடனே பணிந்தாள்.

தன் மருமகள் தன் பேச்சிற்கு மதிப்பு கொடுத்து தன்மையாய் பதில் சொல்வதை கேட்ட அன்பரசு புன்னகையுடன் எழுந்து சென்றார்.



## 16

அடுத்த நாள் அஸ்வின் ஜோதியின் வகுப்பிற்கு வந்தான். இரு நாட்களுக்கு பின் அன்று தான் அவனது பீரியட். அவன் அன்றும் வகுப்பில் தப்பாய் சொல்லித் தர ஜோதி குழம்பினாள்.

'அஸ்வின் சாருக்கு என்ன ஆச்சு? அவர் பாடத்தை தப்பா சொல்லித் தரும் ஆள் இல்லையே' என நினைத்து அவனது தப்பை சுட்டிக் காட்டுவதற்காக எழுந்து நின்றாள்.

என்ன என்பது போல் அவன் பார்க்க அவள் கரும்பலகையை சுட்டிக் காட்டி பேச ஆரம்பிக்கும் முன், ''இன்னும் நான் எக்ஸ்பிளைன் பண்ணியே முடிக்கலை. அதுக்குள்ளே உங்களுக்கு டவுட் வந்துடுச்சா? உட் காருங்க!'' என்று எரிச்சலோடு சொன்னதும் ஜோதி அமர்ந்து விட்டாள்.

'நேத்து என் பேப்பரை படிச்சுட்டு என் மேல செம காண்டில இருப்பதா ஸ்ரீதர் சொன்னாரே! அதான் என் மேல எரிஞ்சு விழறாரோ?' என நினைத்தவள், ''கீர்த்தி! நீ எழுந்து அவர் தப்பா எழுதி இருக்காருன்னு சொல்லு.'' என்றாள்.

''என்னையும் திட்டுவார். எனக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலை.'' என்று கீர்த்தி மறுத்து விட்டாள்.

ஜோதி! கிளாஸை கவனிக்க மூட் இல்லைன்னா நீங்க தாராளமா வெளியே போகலாம். பேச்சு குடுத்து பக்கத் துல இருக்கிறவங்களையும் டிஸ்டர்ப் பண்ணாதீங்க. என்று அஸ்வின் கூறவும்,

''ஸாரி சார்.'' என்று எழுந்து நின்று சொல்லி விட்டு அமர்ந்தவள் அதன் பின்பு வாயை திறக்கவில்லை.

'ஆகா! செம காண்டிலே இருக்கார் போலவே! நேரிலே போய் ஒரு ஸாரியை கேட்டு வைப்போம். இன்டர்னல் மார்க்கில் கையை வச்சுடப் போறார்' என பயந்தவள் இடைவேளையின் போது அவனது அறையில் வைத்து அவனை சந்தித்தாள். ஸ்ரீதரும் அங்கு தான் இருந்தான்.

''வாங்க ஜோதி! ஸ்ரீதரை பார்க்க வந்தீங்களா?''

''இல்லை சார். நான் உங்களை தான் பார்க்க வந்தேன்.''

''என்னை பார்க்கவா? என்ன விஷயம்?''

''இன்னைக்கு கிளாஸில்...''

''இங்கே பாருங்க ஜோதி. நீங்க கிளாஸில் பேசினீங்க. நான் திட்டினேன். நீங்களும் ஸாரி சொல்லிட்டீங்க. அத்தோடு பிரச்சனை முடிஞ்சு போச்சு.''



''இல்லை சார் நான் டெஸ்ட் பேப்பரில் எழுதினது தப்பு தான். ஆனா நீங்க கிளாஸில் தப்பா தான் சொல்லிக் குடுத்தீங்க.''

''என்ன டெஸ்ட் பேப்பர்? என்ன எழுதுனீங்க?'' என்றதும் அவள் விழித்தாள்.

அவள் ஸ்ரீதரை திரும்பிப் பார்க்க... அவன் சிரித்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

'பொய்யா சொன்னீங்க? நான் மாட்டிக்கிட்டு முழிக் கிறதை பார்த்தால் உங்களுக்கு சிரிப்பா இருக்கா?' என்று நினைத்தவள் அவனை முறைக்க ஆரம்பித்தாள்.

''என்னடா ஸ்ரீதர் பிரச்சனை?''

''நானே சொல்லுறேன் சார். கடந்த ரெண்டு கிளாஸா நீங்க தப்பா தான் பாடம் எடுக்கிறீங்க. அதை சொல்ல தான் நான் எழுந்து நின்னேன். நீங்க என்னை திட்டி உட்கார வச்சுட்டீங்க. மொத்த கிளாஸும் அஸ்வின் சாருக்கு என்ன ஆச்சுன்னு குழம்பிப் போய் உட்கார்ந்து இருக்காங்க.'' என்றவள் அங்கிருந்த பேப்பரில் மடமட வென்று எழுதினாள்.

''இந்த டெரிவேஷன் சரியா தப்பா?'' என்று கேட்டாள்.

அதை வாங்கிப் பார்த்த அஸ்வின் அவள் எழுதிய ஒரு இடத்தை பெரிதாக வட்டம் போட்டு, ''இது எப்படி சரி?'' என்று வினவினான்.

''ஆனா ரெண்டு நாள் முன்னாடி நீங்க கிளாஸில் இப்படி தான் சொல்லிக் கொடுத்தீங்க. இன்னைக்கு கிளாஸிலும் இதே மாதிரி தான் மிஸ்டேக் பண்ணுனீங்க.''

'நானா?! தப்பா கிளாஸ் எடுக்கிறேனா?' என்று அதிர்ந்து போய் அஸ்வின் அமர்ந்திருந்தான்.

''உனக்கு என்னாச்சு அஸ்வின்?'' என்று ஸ்ரீதர் விசாரித்தான்.

''வீட்டிலே ஒரு பிரச்சனைடா.'' என்று அஸ்வின் ஆரம்பிக்கவும்,

''ஜோதி! நீ கிளாஸுக்கு போ!'' என்று ஸ்ரீதர் அவளை அனுப்பி வைத்தான்.

அஸ்வினின் பிரச்சனையை கேட்டறிந்த ஸ்ரீதர், "லூசாடா நீ! உன் தங்கச்சி கல்யாணத்துல பணம் ஒரு பிரச்சனைன்னா என்கிட்ட கேட்க வேண்டியது தானே! நான் ஹெல்ப் பண்ண மாட்டேனா?'' என்று திட்டினான்.

''அக்கா கல்யாணத்திலேயும் நீ தான் ஹெல்ப் பண்ணினே!"

உங்க அப்பாவோட ரிட்டையர்மென்ட் பணம் வந்த உடனே அதை திருப்பி குடுத்துட்டியேடா. அப்புறம் என்ன...?

"இப்பவும் நான் லோன் போட்டு இருக்கேன். ஆனால் வர கொஞ்சம் லேட் ஆகும் போல. திரும்ப திரும்ப உன்கிட்ட கேட்க சங்கடமா இருந்துச்சு. அதான்...''

"போடா ஃபூல். பணத்தை நான் ஏற்பாடு பண்ணி தரேன். நீ கவலையை தூக்கி போட்டுட்டு கல்யாண வேலையை பாரு. அதுக்கு முன்னாடி உன் கிளாஸை போய் பாரு. போர்த் பீரியட் என்னோடது தான். அப்போ போய் நடந்த தப்பை சரி பண்ணி ஸ்டூடண்ட்ஸ் மத்தியில் நல்ல பேரை வாங்கு.''



''தாங்க்ஸ் ஸ்ரீதர்.'' என்ற அஸ்வினை கட்டி அணைத்து விட்டு ஸ்ரீதர் வெளியேறினான்.

நான்காவது பீரியட் ஜோதியின் வகுப்பிற்கு வந்த அஸ்வின், இது ஸ்ரீதர் கிளாஸ் தான். நான் இந்த பீரியட்டை அவர்கிட்ட கேட்டு வாங்கி இருக்கேன். எனக்கு பெர்சனலா கொஞ்சம் ப்ராப்ளம். அது என் கிளாஸை பாதிக்க நான் விட்டிருக்க கூடாது. என்னையும் அறியாமல் நடந்த தப்புக்கு நான் உங்ககிட்ட ஸாரி சொல்லிக்கிறேன்.

''ஜோதி! என் தப்பை சுட்டிக் காட்டியதுக்கு தாங்க்ஸ். நீங்க என்ன சொல்ல வரீங்கன்னு கேட்டுக்காமல் உங்களை திட்டினதுக்கு ஸாரி.'' என்றவன் ஜோதியின் பதிலை எதிர்பார்க்காமல் வகுப்பை ஆரம்பித்தான்.

''முதல்ல போன கிளாஸில் நான் எடுத்த பாடத்தை திரும்ப எடுக்கிறேன்." என்றவன் மடமடவென சொல்லித் தர ஆரம்பித்தான்.

அதன் பின் அன்று காலையில் செய்த சொதப்பலையும் அவன் சரி செய்தான். மாணவர்கள் கேட்கும் சந்தேகத்தை தீர்த்து வைத்தான்.

'இது தான் எங்க அஸ்வின் சார்' என மாணவர்களின் முகம் தெளிவாய் பிரகாசித்தது. அதைக் கண்டு அஸ்வினும் நிம்மதியானான்.

அன்று வீட்டில் வைத்து ஜோதி ஸ்ரீதரை தலையணையால் மொத்தி தள்ளினாள்.

''பொய் சொல்லி என்னை மாட்டியா விடுறீங்க.''

"வலிக்கலையே! வலிக்கலையே!"

"இருங்க! கையால அடிக்கிறேன்." என்று தலையணையை தூக்கி போட்டாள்.

"உன்கிட்ட மாட்ட மாட்டேன்." என்று சொல்லிக் கொண்டே அவன் பின்னால் நகர்ந்து கொண்டே செல்ல, அவள் அவனை அடிப்பதற்காக முன்னேறிக் கொண்டு வந்தாள்.

பின்னால் சுவர் இடிக்கவும் அவன் அதற்கு மேல் நகராமல் நின்றுவிட்டான். அவன்மேல் சாய்ந்து கொண்டு அவனது இரு கன்னத்தையும் பிடித்து இழுத்தவள், "இப்போ வலிக்குதா?" என்றாள்.

அவன் தன் கைகளை பின்னால் செலுத்தி அவளை தன்னோடு இழுத்துக் கொண்டே, "வலிக்கலை. கொசு கடிச்ச மாதிரி இருக்கு. ஆனா நீ என் மேல சாஞ்சு நிக்கிறதால் சும்மா ஜிவ்வுன்னு இருக்கு." என்று அவன் சொன்ன பின்பே அவள் தன்னிலை உணர்ந்தாள்.

அவனிடம் இருந்து விடுபட அவள் போராட அவன் குனிந்து அவளது உதடுகளில் பட்டும் படாமலும் ஒரு முத்தத்தை பதித்தான். அதோடு விட முடியாமல் அவளது உதடுகளை சிறை செய்து நீண்ட முத்தத்தை பதித்த பின் அவளை விடுவித்தான்.

அவளை விட்டு நகர்ந்து சென்று அந்த அறையில் இருந்த மேஜையின் முன் சென்று அமர்ந்தான். தனது கைகளால் தன் தலையை கோதிக் கொண்டு அவன் தன் உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொண்டு அமர்ந்திருந்தான்.



அவள் அமைதியாக படுக்கையில் அமர்ந்து தன் பாடப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிப்பதாக பாவ்லா காட்ட ஆரம்பித்தாள். கணவன் தந்த முதல் முத்தம் அவளது சிந்தையை சிதற வைத்தது.

ஐந்து நிமிடங்கள் கழித்து ஸ்ரீதர் திரும்பிப் பார்த்தான். அவள் படிக்காமல் அங்குள்ள சுவரை வெறித்துக் கொண்டிருப்பதை கண்டவன் தன்னை தானே குட்டிக் கொண்டான்.

அவள் அருகே சென்று, "மேடம்! என்ன கனவு லோகத்தில் சஞ்சாரமா? அடுத்த டெஸ்ட்ல அட்லீஸ்ட் மார்க் வாங்கிற ஐடியா இருக்கா? இல்ல திரும்பவும் முட்டை தானா?" என்று கேட்டதும் அவள் சிலிர்த்துக் கொண்டு சண்டைக்கு வந்தாள்.

'அப்பாடா! நார்மல் ஆகிட்டாள்.' என நினைத்துக் கொண்டே அவன் அறையை விட்டு வெளியேறினான்.

## 17



நாட்கள் வேகமாக நகர்ந்தன. ஏழாவது செமஸ்டர் தேர்வுகளும் நடந்து முடிந்தன. வெறும் ஒரு வாரம் மட்டுமே விடுமுறை விடப்பட்டது.

எட்டாவது செமஸ்டர் தொடங்கிய இரண்டாம் நாள்....

அன்று ஜோதிக்கு பிறந்த நாள். முதல் நாள் இரவு பன்னிரெண்டு மணிக்கே கணவன் தனக்கு வாழ்த்து சொல்லுவானோ என நினைத்து அவள் காத்திருந்தாள்.

அவன் வாழ்த்தவில்லை என்றதும், 'இவன் ஒரு கூமுட்டை தானே! இவனாவது முழிச்சு இருந்து வாழ்த் துறதாவது!' என்று கணவனை திட்டிக் கொண்டே தூங்கிப் போனாள்.

காலையில் எழும் பொழுது, 'போன பர்த் டேக்கு எனக்குன்னு யாரும் இல்லை. இந்த தடவை ஏகப்பட்ட பேர் என்னை சுத்தி இருக்காங்க' என்று நினைத்து சந்தோஷமாகவே எழுந்தாள்.

அன்று ஜோதிக்கு மட்டும் பிறந்த நாள் இல்லை. ஸ்ரீதருக்கும் அன்று தான் பிறந்த நாள். இவளை போலவே அவனும் ராத்திரி பன்னிரெண்டு மணியில் இருந்து மனைவியின் வாழ்த்துக்காய் காத்திருந்தான்.

'எப்போ ஜோ விஷ் பண்ணுவ? குளிச்சுட்டு வந்ததும் சொல்லுவியோ? ஒருவேளை நான் குளிச்சுட்டு வந்ததும் சொல்ல காத்து இருக்கியோ?' என அவன் எண்ணிக் கொண்டு இருந்தான்.

ஜோதி குளித்து முடித்து புது உடை ஒன்றை போட்டுக் கொண்டு வெளியே வந்தாள். நாற்காலியில் அமர்ந்து கொண்டு அவள் தன் தலையை துவட்ட ஆரம்பித் தாள்.

"ஜோ! நான் போய் குளிச்சுட்டு வரேன். நான் வந்த பின்னால ரெண்டு பேரும் சேர்ந்து கீழே போவோம். ஓகே?" என்றதும் அவள் சரியென தலையாட்டினாள்.



பொதுவாக ஸ்ரீதரின் பிறந்த நாளுக்கு வரவேற் பறையில் வைத்து கேக் வெட்டுவார்கள். அவன் தன் மனைவியுடன் கீழே செல்ல விரும்பினான். அதனால் தான் அவளை தனக்காக காத்திருக்கும்படி சொல்லி சென்றான்.

அவன் குளித்து முடித்து வந்த பிறகும் அவள் ஒன்றும் சொல்லவில்லை. ஸ்ரீதர் தன்னுடைய பிறந்த நாளுக்கு அவளுக்கு ஒரு புது உடை வாங்கி வைத்திருந்தான். அதை அவளிடம் கொடுக்க முடிவு செய்தவன் அவள் அருகே சென்றான்.

"ஜோ! நீ போட்டு இருக்கிறது புது டிரஸ்ஸா?"

'அப்பாடா! இப்பவாச்சும் வாழ்த்து சொல்லிடுடா!' என நினைத்தவள், "ஆமா. புதுசு தான். ஏன் கேட்கிறீங்க?" என்றாள்.

"நெக் ரொம்ப லோவா இருக்கு. வேற டிரஸ் மாத்து."

அவள் கண்ணாடி முன் நின்று இப்படியும் அப்படியும் திரும்பி பார்த்தாள்.

'நல்லா தானே இருக்கு. குனிஞ்சு பார்த்தால் கூட எனக்கு ஒண்ணும் தெரியலையே!' என குழம்பினாள்.

"என் பேச்சிலே உனக்கு நம்பிக்கை இல்லையா? மாத்திட்டு வா."

அவளை பிடித்து குளியலறைக்குள் திணித்து, தான் வாங்கி இருந்த டிரஸை அவள் கையில் கொடுத்து கதவை வெளியில் இருந்து லாக் பண்ணினான்.

அதில் இருந்த புதிய சுரிதாரை பார்த்தவள், எனக்காக புது டிரஸ் வாங்கி இருக்காரா? அதை இப்படியா

குடுப்பாங்க. ஒரு ஹக் பண்ணி ஒரு கிஸ் அடிச்சதுக்கு அப்புறமா தரலைன்னாலும்.. ரூமுக்குள்ள வச்சு தரலா மில்ல. பாத்ரூமில் பிடிச்சு தள்ளி விட்டுட்டு குடுக்கிறார். என்று திட்டிக் கொண்டே அவன் வாங்கிய உடையை அணிய ஆரம்பித்தாள்.

அது அவள் உடல் அமைப்பிற்கு வெகுவாய் பொருந்தியது.

''ரசிகன்டா நீ! நான் கூட இப்படி நச்சுன்னு செலக்ட் பண்ணியதில்லை'' என்று கணவனை பாராட்டிக் கொண்டே வெளியே வந்தாள்.

''சூப்பரா இருக்கு ஸ்ரீ. பிட்டிங் கூட செம பெர்பெக்ட் தாங்க்ஸ்.''

''எதுக்கு புது டிரஸ்ன்னு கேட்க மாட்டேங்கிறாளே! எனக்கு பர்த்டே விஷ் பண்ணுன்னு நானே சொல்லவா முடியும்?'' என நினைத்து அவன் அமைதி காத்தான்.

''வாய் வார்த்தையா சொல்லலைன்னாலும் புதுசு வாங்கி குடுத்து தன்னோட வாழ்த்தை சொல்லிட்டார்.'' என அவள் நினைத்துக் கொண்டாள்.

அவர்கள் இருவரும் ஒன்றாக இறங்கி கீழே வந்தார்கள்.

பாதி படிகளில் இறங்கும் போதே ஆங்காங்கே பறந்து கொண்டிருந்த பலூன்களை கண்ட ஸ்ரீதர், ''என்னப்பா சின்ன குழந்தைக்கு செய்யுற மாதிரி பலூன் எல்லாம் கட்டி வச்சு இருக்கீங்க?'' என்று கேட்டான்.

''சர்ப்ரைஸ் குடுத்துட்டேனே!'' என்று தீப்தி குதித்தாள்.



''நம்ம தீபு குட்டி தான்... சித்து பிறந்த நாளுக்கும் பலூன் கட்டணும்னு ஒரே அடம்.'' என்று அன்பரசு கூறினார்.

''மாமா அவசரத்தில் சித்தின்னு சொல்லுறதுக்கு பதிலா சித்துன்னு சொல்லுறார்'' என ஜோதி எண்ணிக் கொண்டாள்.

'என்ன இவள் இப்போ கூட என்னை திரும்பி பார்த்து ஒரு வாழ்த்து சொல்ல மாட்டேங்கிறாள். நான் அதுக்கு கூட தகுதி இல்லாதவனா?' என நினைத்து அவன் வருந்தினான்.

அனைவரின் முன்னிலையிலும் தன் கோபத்தை காட்ட முடியாமல், முகத்தை சிரித்தார் போல் வைத்து கொண்டு அவர்கள் அருகே சென்றான்.

பிறந்த நாள் கேக்கில் எழுதி இருந்த பெயரை பார்த்த பின்பே, ''ஆஹா! ஸ்ரீதருக்கும் இன்னைக்கு தான் பிறந்தநாளா?'' என்று ஜோதி ஆச்சரியப்பட்டாள்.

தன் ஆச்சரியத்தை வெளிப்படையாய் காட்ட முடியாமல், ''நீங்க கேக் வெட்டுங்க. நான் போட்டோ எடுக்கிறேன்.'' என்று அவனை விட்டு நகர ஆரம்பித்தாள்.

''நீ ஸ்ரீதர் பக்கத்திலே நில்லும்மா. நான் போட்டோ எடுக்கிறேன்.'' என்று தருண் அந்த வேலையை தனதாக்கிக் கொண்டான்.

வேறு வழியின்றி அவன் அருகே நின்றாள். அவளுக்கு சங்கடமாகவும் ஏமாற்றமாகவும் இருந்தது.

‘தன் பிறந்தநாளுக்கு எனக்கு சுரிதார் வாங்கி குடுத்த ஸ்ரீதருக்கு நான் இதுவரை வாழ்த்து கூட சொல்லலையே! இப்படி அவர் பிறந்த நாள் பத்தி எதுவும் தெரியாமல் இருந்துட்டேனே!’ என்று சங்கடப்பட்டாள்.

‘அப்போ என் பிறந்த நாள் பத்தி இவருக்கு ஒண்ணுமே தெரியாதா? அதுக்காக டிரஸ் வாங்கி தரலையா?’ என்று நினைத்த போது ஏமாற்றமாக உணர்ந்தாள்.

ஜோதி, தருண், தீப்தி ஆகிய மூவரும் பிறந்தநாள் பாடலை சந்தோஷமாக பாடினார்கள். தாரிகா கடனே என அங்கு நின்று கொண்டிருந்தாள். அன்பரசுவும் தெய்வநாயகியும் தங்கள் கைகளை தட்டிக் கொண்டு நின்றிருந்தனர்.

கேக்கை வெட்டிய ஸ்ரீதர் முதல் துண்டை தன் மனைவிக்கு ஊட்ட வந்தான். அவள் அதை தடுத்து அவனுக்கு ஊட்டி விட்டாள்.

“Happy Birthday. This special day brings you all that your heart desires.” என்று அவள் வாழ்த்தவும் அவன் முகம் பிரகாசமாகியது.

“தாங்க்ஸ் ஜோ.”

“அத்தைக்கும் மாமாக்கும் கேக் ஊட்டுங்க.” என்றதும் அவர்களை நோக்கி சென்றான்.

அனைவரும் வாழ்த்திவிட்டு அவரவர் வேலையை பார்க்க சென்றார்கள்.

“ஜோ! நீ இன்னும் கேக் சாப்பிடலை.” என்று ஸ்ரீதர் நினைவூட்டினான்.

“நீங்க ஊட்ட வந்த கேக்கை உங்க மேல உள்ள பாசத்தில் உங்களுக்கு திருப்பி ஊட்டினேன்னு நினைச் சீங்களா பிளாக் பாரஸ்ட் கேக் எனக்கு பிடிக்காது.” என்று அவள் கண் சிமிட்டி சிரித்தாள்.



அவர்கள் இருவரும் சிரித்துக் கொண்டே மேலே சென்றனர்.

அறைக்குள் நுழைந்ததும் எம்பி அவனது கன்னத்தில் முத்தம் பதித்து, “ஹாப்பி பர்த் டே ஸ்ரீ. ஸாரி. எனக்கு தெரியாது. தெரிஞ்சுக்காமல் இருந்தது என் தப்பு தான். தெரிஞ்சிருந்தா நைட் முழிச்சு இருந்து விஷ் பண்ணி இருப்பேன்.” என்றாள்.

“போதும்டா ஜோ. எதுக்கு இவ்வளவு விளக்கம் சொல்லுறே? நீ குடுத்த கிஸ்ஸிலே எல்லா தப்பும் சரியாகிடுச்சு.” என்று கண்ணடித்தவன்,

“காலேஜுக்கு டைம் ஆகுது. கிளம்பு. பர்ஸ்ட் அவர் என்னோடது தான். லேட்டா வந்தால் ஆப்சென்ட் போட்டுடுவேன்.” என்று மிரட்டிவிட்டு சென்றான்.

ஸ்ரீதர் முதலில் கிளம்பி சென்றான். தன் குடும்பத்தை சேர்ந்த யாருமே தன்னை வாழ்த்தவில்லை என்பது ஜோதிக்கு வருத்தத்தை அளித்தது.

‘இவ்வளவு நாள் தான் எனக்குன்னு யாரும் இல்லை. யாரோட ஆசீர்வாதமும் எனக்கு கிடைக்கலை. ரெண்டு மூணு வருஷமா தாத்தா அந்த தேதியில் வீட்டுக்கு வந்தார்.

‘அவர் எப்போ வந்தாலும் நான் அவர் காலில் விழுந்து வணங்குவேன். மனுஷன் ஒரு நாள் கூட என்னை ஆசீர்வாதம் பண்ண மாட்டார். இன்னைக்கு தான்

அத்தையும் மாமாவும் இருக்காங்களே! அவங்களோட ஆசீர்வாதத்தை வாங்குவோம். என முடிவெடுத்தாள்.

அவர்களது அறை வாயிலின் முன் நின்று கதவை மெதுவாய் தட்டினாள்.

''யார் அது?'' என்று அன்பரசு கேட்டார்.

''நான் தான் மாமா.''

''உள்ளே வாம்மா ஜோதி.''

''அத்தை எங்கே?'' என்று அவள் கேட்டுக் கொண்டிருக்கும் போதே அவளின் பின்னால் இருந்து வந்த தெய்வநாயகி,

''டிரஸில் என்னம்மா ஸ்டிக்கர் ஒட்டி இருக்கு. அதை கிழிக்கலையா? புதுசா?'' என்று கேட்டு அதை கிழித்து போட்டார்.

''ஆமா அத்தை. புதுசு தான். அவர் வாங்கி தந்தார்.''

''காலேஜுக்கு நேரமாகலையா?''

''இதோ கிளம்பிட்டேன். என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க!'' என்றவள் அவர்கள் இருவரின் காலிலும் விழுந்தாள்.

எதற்கென்று தெரியாவிட்டாலும், ''ஆரோக்கியமா நீண்ட ஆயுளோட தீர்க்க சுமங்கலியா இருக்கணும்!'' என இருவரும் வாழ்த்தினர்.

முகம் நிறைய புன்னகையோடு எழுந்தவள், ''இன்னைக்கு என்னோட பிறந்தநாள். அதான் உங்ககிட்ட ஆசீர்வாதம் வாங்கலாம்னு நினைச்சேன்.'' என்றாள்.



''இன்னைக்கு தான் உனக்கும் பிறந்த நாளா? ஏன்மா முதல்லயே சொல்லலை? இந்த வீட்டுக்கு வந்து நீ கொண்டாடுற முதல் பிறந்தநாள்.'' என்று முதலில் வருத்தப்பட்டவர்கள், பின் அவளது கை குலுக்கி தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

அன்பரசு தன் சட்டை பாக்கெட்டில் இருந்து பணத்தை எடுத்து அவள் கைகளில் கொடுக்க பார்த்தார்.

''எனக்கு பணம் வேணாம் மாமா. ப்ளீஸ். அப்பாவும் அம்மாவும் போனதுக்கு அப்புறம் யாரும் என்னை ஆசீர்வாதம் பண்ணலை. இன்னைக்கு தான் நீங்க ரெண்டு பேரும் இருக்கீங்களேன்னு வந்தேன்.'' என்றவள்,

''எனக்கு டைம் ஆச்சு. நான் கிளம்புறேன். பர்ஸ்ட் அவர் எங்க முசுட்டு சாரோடது. லேட்டா வந்தால் ஆப்சென்ட் போடுவேன்னு இப்போ தான் சொல்லிட்டு போய் இருக்கார். பை.'' என்று வெளியேறினாள்.

''என் பிள்ளையையா முசுடுன்னு சொல்லுறே. அதுவும் என்கிட்டயே!'' என்று தெய்வநாயகி கேட்க,

''என் காதிலே எதுவும் விழலை அத்தை.'' என்று சொல்லிவிட்டு ஓடினாள்.

''முதல்லயே தெரிஞ்சு இருந்தால் ரெண்டு பேரையும் சேர்த்தே கேக் வெட்ட வச்சு இருக்கலாம்.''

''இவ தான் சொல்லலை. ஸ்ரீதராச்சும் நமக்கு சொல்லி இருக்கலாமில்ல. ஒருவேளை அவனுக்கும் தெரியாதோ?

''புது டிரஸ் எல்லாம் வாங்கி குடுத்து இருக்கான். தெரியாமல் எப்படி போகும்? தாரிகா வாய்க்கு

பயந்துக்கிட்டு அவங்க ரூமிலே தனியா கொண்டாடி இருப்பாங்களா இருக்கும்.'' என்று அவர்கள் இருவரும் பேசிக் கொண்டார்கள்.



# 18

கல்லூரி பேருந்தில் ஏறி அவள் அமர்ந்த இரு நிமிடங்களில் எல்லாம் பேருந்து ஒரு ஓரமாக நிறுத் தப்பட்டது.

''பிரேக் டவுனா? கிளாஸ்க்கு டைம் ஆகுதே?'' என ஆளாளுக்கு புலம்ப டிரைவர் கீழே இறங்கி எதையோ சரி பார்க்க ஆரம்பித்தார்.

அப்பொழுது ஜோதியின் அலைபேசி அலறியது. அவளது தாத்தா அழைத்திருந்தார்.

''தாத்து! சொல்லுங்க.''

''பஸ்ஸை விட்டு கீழே இறங்கு. பஸ்க்கு பின்னாடி உள்ள காரில் நான் உனக்காக வெயிட் பண்ணுறேன்.'' என்றதும் அவள் பேருந்தில் இருந்து இறங்கி தாத்தாவின் காருக்கு சென்றாள்.

அவள் உள்ளே வந்து அமர்ந்ததும் ஓட்டுநரின் அருகே அமர்ந்திருந்தவரை சுட்டி காட்டி, ''இவர் பேரு மகேந்திரன். என்னோட பிஏ.'' என்று அறிமுகம் செய்து வைத்தார்.



அவர்கள் இருவரையும் வைத்து கொண்டு இவர்கிட்ட என்ன பேச என அவள் எண்ணினாள்.

அவளது எண்ணம் புரிந்தார் போல்... இவங்க ரெண்டு பேரும் என்னோட ரெண்டு கை மாதிரி. என் னோட எல்லா விஷயங்களும் இவங்களுக்கு தெரியும்.'' என்றார்.

இவர்கள் கார் கிளம்பியதும் அவளுடைய கல்லூரி பேருந்தும் கிளம்பியது.

''பிரேக் டவுன்னு நினைச்சேன். பஸ்ஸை உடனே எடுத்துட்டாங்க.''

''உன்னை கீழே இறக்கிறதுக்காக தான் பஸ் நின்னுச்சு. நீ இறங்கினதும் கிளம்பிடுச்சு.''

''இது உங்க வேலை தானா? அந்த பஸ் டிரைவரை முன்னாடியே கரெக்ட் பண்ணிட்டீங்களா?''

''ஆமா நான் வயசு பையன். அந்த டிரைவர் வயசு பொண்ணு. நான் அவனை முன்னாடியே பேசி கரெக்ட் பண்ணிட்டேன்.''

''தாத்து! இப்பவே இப்படி லொள்ளு பண்ணுறீங் களே... சின்ன வயசில் எவ்வளவு அலும்பு பண்ணி இருப் பீங்க. எங்க பாட்டி எப்படி தான் உங்களை சமாளிச் சாங்களோ?''

மனைவியின் நினைவில் அவர் சில நொடிகள் அமைதியானார்.

''என்ன விஷயம் தாத்து? எதுக்கு என்னை பார்க்க காலையிலே வந்து இருக்கீங்க?''

''சும்மா தான். நீ அந்த வீட்டிலே இருந்த வரைக்கும் என்னால எப்போ வேணா பார்க்க வர முடிஞ்சது. இப்போ அப்படி இல்லையே!'' என்றவர் அதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல் அமைதியாகி விட்டார்.

அவள் வெளியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள். தன் வலது கையை பேத்தியின் தலை மேல் வைத்து அவர் அழுத்த... அவள் என்னவென்பது போல் திரும்பி பார்த்தாள்.

''வீட்டுல இருந்திருந்தால் ஆசீர்வாதம் வாங்க காலில் விழுந்திருப்பே!''

''ஆசீர்வாதமா? எதுக்கு?''

''இத்தனை வருஷமும் இந்த நாளில் என் காலில் எதுக்கு விழுந்தே?''

''நீங்க எப்போ வந்தாலும் தான் நான் உங்க காலில் விழுவேன்.''

''அப்போ இந்த வருஷமும்... எனக்கு இன்னைக்கு பிறந்தநாள் தாத்தா. என்னை ஆசீர்வாதம் பண்ணுங் கன்னு என்கிட்ட கேட்க மாட்ட. அப்படி தானே?''

''அப்போ எல்லாம் தெரிஞ்சு இருந்தும் நான் காலில் விழுந்தும் இத்தனை வருஷமும் எனக்கு வாழ்த்து சொல்லாமல் நீங்க போய் இருக்கீங்க. அப்படி தானே?''

''பேச்சை மாத்தாதே!''

''யார் பேச்சை மாத்துறா? உங்களுக்கு இருக்கிற அதே வீம்பும் பிடிவாதமும் எனக்கும் இருக்கும்ல. எங்க அத்தையும் மாமாவும் என்னை ஆசீர்வாதம் பண்ணாங்க. ஸ்ரீ எனக்கு புது டிரஸ் வாங்கி குடுத்தார்.''



''அப்போ உனக்கு அவங்க மட்டும் போதுமா? என் ஆசீர்வாதம் உனக்கு வேண்டாமா?''

''என்னைக்கு ஊரும் உலகமும் பார்க்க இவர் தான் என் தாத்தான்னு நான் சொல்லுறேனோ அன்னைக்கு உங்ககிட்ட ஆசீர்வாதம் வாங்கிக்கிறேன். அதுவரைக்கும் எங்க அப்பாவை உங்ககிட்ட இருந்த பிரிச்சு வச்ச உங்க பணத்தை மட்டும் கட்டிட்டு அழுங்க.'' என்று வீம்புடன் சொன்னாள்.

''பணமா என்னையும் உங்க அப்பாவையும் பிரிச்சு வச்சதுன்னு நீ நினைக்கிறே?''

''உங்களோட வறட்டு பிடிவாதத்துக்கு வேற என்ன காரணம்?''

''எங்க பேச்சை கேட்காமல் உங்க அம்மாவை அவன் கல்யாணம் பண்ணினது சரியா? நானும் என் பையனும் பிரிஞ்சதுக்கு உங்க அம்மா தான் காரணம்.''

''எங்க அம்மா பத்தி நீங்க ஒண்ணும் பேச வேண்டாம். உங்களுக்கு தான் அவங்களை பிடிக்கலைல. அப்புறம் எதுக்கு அவங்களை பத்தி பேசுறீங்க?''

''உங்க அம்மா பத்தி ஒரு வார்த்தை சொன்னதும் அவ்வளவு ரோஷம் வருதோ?''

''எனக்கு அப்படி தான் ரோஷம் வரும். எங்க அம்மா எனக்கு உசத்தி தான்.''

எங்கேயோ ஆரம்பித்த பேச்சு எங்கேயோ போய் முடிய... தாத்தாவும் பேத்தியும் வெவ்வேறு திசைகளில் முகத்தை திருப்பிக் கொண்டு அமர்ந்திருந்தனர்.

'அவள் தான் சின்ன பொண்ணு. ஒரு வேகத்துல பேசுறாள். இவ்வளவு வருஷம் ஆகியும் எனக்கு இன்னும் பொறுமை வரலையே' என நினைத்து அவரும்

'அவர் வயசு என்ன... என் வயசு என்ன... இப்படி தான் பேசுறதா? பாவம் தாத்தா' என நினைத்து அவளும் ஒரே நேரத்தில் திரும்பிப் பார்த்தனர்.

அவள் தாத்தா ஒரு கவரை அவளிடம் கொடுத்து, "இதுல கிஃப்ட் கார்டு இருக்கு. இதுக்கு பின் நம்பர் தேவை இல்லை. கார்ட் பின்னாடி நீ சைன் பண்ணு. பர்சேஸ் பண்ணுற இடத்துல பில்லில் சைன் பண்ணனும். அவ்வளவு தான். இது கடைசி வருஷம். உன்னோட பிரண்ட்ஸ் எல்லோரும் ட்ரீட் கேட்பாங்க. அவங்களை கூட்டிட்டு போய் தாராளமா செலவு பண்ணு.

"தாத்தா இருபதாயிரம் லோட் பண்ணி இருக்கேன். இதை ஏத்துக்கிட்டதால நீ என் சொத்தை ஏத்துக்கிட்டதா அர்த்தம் ஆகிடாது. தாத்தா வேணும்னு நீ நினைச்சால் இதை வாங்கிக்கோ." என்றார்.

அவள் அதை வாங்காமல் வெளிப்புறம் திரும்பி வேடிக்கை பார்க்க... கார் ஒரு அலுவலக கட்டிடத்திற்குள் நுழைந்தது.

காலை நேரம் என்பதால் ஆள் நடமாட்டமின்றி அது வெறிச்சோடி இருந்தது. ஒரு ஓரமாக கார் நின்றதும் ஜோதி பதட்டமானாள்.

"எனக்கு காலேஜுக்கு டைம் ஆச்சு. ஏன் இங்கே நிறுத்திட்டீங்க?"



"நீ தான் என்னை யாருக்கும் அறிமுகப்படுத்த மாட்டே இல்ல. அப்புறம் எப்படி காலேஜ் வரைக்கும் நீ காரிலே போக முடியும்? உனக்காக அங்கே ஆட்டோ நிக்குது பாரு. அதுல ஏறி போ." என்றதும் காரை விட்டு இறங்கினாள்.

பேத்தியை தொடர்ந்து அவரும் காரை விட்டு கீழே இறங்கினார். தன்னிடம் விடைபெறாமல் கூட போகும் பேத்தியை கண்டு அவர் மனம் வருந்தியது.

"ஜோதி!" என்று அவர் அழைக்கவும் அவள் நின்று திரும்பிப் பார்த்தாள்.

"இப்படி உம்முன்னு போகாதே! அப்புறமா உன் தாத்தாக்கு எந்த வேலையும் ஓடாது. மனசு பூரா பாரமா இருக்கும்." என்றதும் அவர் அருகே வந்தாள்.

அவரது வருத்தம் அவளை பாதித்தது. அவரை சந்தோஷப்படுத்த முடிவு செய்தாள்.

"நான் உங்க காலிலே வழக்கம் போல விழுறேன். நீங்க வழக்கம் போல மனசுக்குள்ளேயே ஆசீர்வாதம் பண்ணுங்க. ஆனா என்னோட கிஃப்ட் கார்டை மட்டும் கையிலே குடுங்க." என்றதும் அவரது முகம் பிரகாச மாகியது.

அவள் குனிந்து அவரது காலை தொட்டு நிமிர்ந்தாள். அவர் நீட்டிய கார்டை வாங்கி கொண்டு அவருக்கு கையாட்டி டாட்டா காட்டிய வண்ணம் அந்த ஆட் டோவில் ஏறி சென்றாள்.

ஆட்டோவில் ஓட்டுநர் அருகே மகேந்திரன் அமர்ந்து கொண்டு வந்தார். ஆட்டோவில் சென்று கொண்டே தன் தாத்தாவிற்கு போன் செய்தாள்.

''நான் அப்படி பேசினதுக்கு ஸாரி தாத்து.'' என்று வருத்தம் தெரிவித்தாள்.

''என் கூட என் பேத்தி சண்டை போடாமல் வேற யார் போடுவா? நீ எதை பத்தியும் கவலைப்படாதேடா.''

''நீங்க ஹர்ட் ஆகலைல.''

''இல்லைடா. நீ கார்டு வாங்கிக்கிட்டதால தாத்தா ஹாப்பியா தான் இருக்கேன்.''

''என் தாத்து ஹாப்பின்னா நானும் ஹாப்பி தான்.''

''உன்னோட இந்த சந்தோஷம் உன் ஆயுசுக்கும் தொடரணும்டா.''

''தாத்து! உங்களையும் அறியாமல் என் பிறந்த நாளுக்கு வெளிப்படையா வாழ்த்து சொல்லிட்டீங்க. நீங்க தோத்துட்டீங்க. நான் தான் ஜெயிச்சேன்.''

''போக்கிரி!'' என்று கூறி அவள் தாத்தா சிரிக்க

''ஹேவ் எ குட் டே.'' என்று கூறி அழைப்பை துண்டித்தாள்.

''நீங்க எதுக்கு சார் இப்படி கஷ்டப்பட்டு தொத்திக்கிட்டு வரீங்க?'' என்று அவள் மகேந்திரனை கேட்டாள்.

''இதை விட எனக்கு வேற என்ன வேலைம்மா இருக்கு? என்னை சார்ன்னு கூப்பிடாதே! அங்கிள்னு கூப்பிடு. நானும் உன் அப்பாவும் அந்தக் காலத்திலே ஒண்ணா விளையாடினவங்க. ஆனா தனியா இருக்கும் போது மட்டும் அங்கிள்னு கூப்பிடு. நாலு பேர் எதிரே அப்படி கூப்பிடாதே!''



''ஏன் அங்கிள் அப்படி சொல்லுறீங்க?''

''நாலு பேருக்கு நடுவே நான் உங்க தாத்தாவோட பிஏ மட்டும் தான்.''

'என்னமோ சொல்லுறீங்க. ஒண்ணும் புரியலை' என நினைத்துக் கொண்டாள்.

ஆட்டோ தன் வகுப்பிற்கு அருகே நிற்பதை பார்த்து, ''கிளாஸ் வரைக்கும் வந்துட்டீங்களா? தாங்க்ஸ். வரேன் அங்கிள்.'' என்று அவரிடம் விடைபெற்று தன் வகுப்பறை நோக்கி ஓடினாள்.

அவளது வகுப்பு மாணவர்கள் கேக்கோடு காத்திருந்தனர். இது தான் கடைசி வருடம் என்பதால் யாருக்கு பிறந்தநாள் என்றாலும் மொத்த வகுப்பும் சேர்ந்து கேக் வாங்கி பிறந்த நாள் நபரை கேக் வெட்ட வைத்து கொண்டாடினார்கள்.

''என்ன ஜோதி இவ்வளவு லேட்? இப்போ பெல் அடிச்சுடுமே!''

''பர்ஸ்ட் அவர் ஸ்ரீதர் சாரோடது. கரெக்ட் டைம்க்கு வந்துடுவார்.'' என்று அவளது தோழிகள் புலம்பினர்.

வகுப்பில் கட்டி இருந்த ஸ்பீக்கர் உயிர்பெற்றது. என்ன அறிவிப்புன்னு தெரியலையே என அவர்கள் அனைவரும் ஸ்பீக்கரை பார்த்துக் கொண்டு நின்றனர்.

''டியர் ஸ்டூடண்ட்ஸ்! இன்னைக்கு நம்ம ஓனரோட கல்யாண நாளை முன்னிட்டு உங்கள் அனைவருக்கும் ஸ்வீட் சப்ளை செய்யப்படுகிறது. அதனால் வகுப்புகள் பதினைந்து நிமிடங்கள் கழித்து ஆரம்பமாகும்.'' என்றதும்,

அனைவரும் ''ஹேய்! சூப்பர்!'' என கூச்சலிட ஆரம் பித்தனர்.

அப்பொழுது இருவர் உள்ளே நுழைந்து அனை வருக்கும் இரு லட்டுகள் அடங்கிய கவரை கொடுத்து விட்டு சென்றனர். அதன் பின்பு நண்பர்கள் பிறந்தநாள் வாழ்த்து பாட ஜோதி கேக் வெட்டினாள்.

''தாங்க் யூ சோ மச் பிரண்ட்ஸ். இது தான் என்னோட வாழ்நாளில் பெஸ்ட் பர்த் டே. இன்னைக்கு ஈவினிங் எல்லோரையும் ட்ரீட்டுக்கு கூட்டிட்டு போறேன்.'' என்றதும் அனைவரும் கூச்சலிட்டார்கள்.

அனைவரும் கேக் சாப்பிட்டு முடிக்கும் நேரம் மணி அடித்தது. அனைவரும் அவரவர் இடத்திற்கு செல்லும் முன் ஸ்ரீதர் வகுப்பறைக்குள் நுழைந்தான்.

''பர்த் டே செலிப்ரேட் பண்ணோம் சார். ஸாரி.'' என்று சொல்லிக் கொண்டே அனைவரும் தங்கள் இருக்கை நோக்கி ஓடினர்.

கரும்பலகையில் Happy Birthday Jothi என்று பெரிய தாக எழுதி வைத்திருந்தார்கள்.

அதை அழிப்பதற்காக கிளாஸ் ரெப் மேடை ஏறினான். முதல் பெஞ்சின் அருகே ஸ்ரீதர் நின்று கொண்டு இருந் தான். கரும்பலகையில் இருந்த பெயரை பார்த்தவன் சரேலென்று தன் மனைவியை திரும்பி பார்த்தான்.

அவள் அவனை பார்த்து புன்னகைக்கவும் அவன் வகுப்பை விட்டு வெளியேறி வராண்டாவில் நின்று, 'ஸாரி ஜோ. இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்' என்று ஜோதிக்கு குறுஞ்செய்தி அனுப்பினான்.



குறுஞ்செய்தியை அனுப்பிவிட்டு திரும்பி பார்த் தான். கரும்பலகையை சுத்தம் செய்து விட்டு மாணவர் தலைவன் கீழே இறங்கி இருந்தான். வேறு வழியின்றி வகுப்பறைக்குள் நுழைந்து மேடையில் ஏறினான்.

அவனால் வகுப்பை தொடங்க முடியவில்லை. வெளியே வேடிக்கை பார்த்தான். அவனது அமைதியை கண்டு மாணவர்கள் அனைவரும் குழம்பினர்.

'ஐயோ! இவ்வளவு ஃபீல் பண்ணுவார்னு தெரிஞ்சு இருந்தால் வீட்டில் வச்சே சொல்லி இருப்பேனே என்ற பரிதவிப்போடு ஜோதி அமர்ந்திருந்தாள்.

இரு நிமிடங்கள் கழித்து மாணவர்கள் புறம் திரும் பியவன், ''ஸாரி. என்னோட காலேஜ் டேஸ் ஞாபகம் வந்துடுச்சு. பிகாஸ் இன்னைக்கு எனக்கும் பர்த் டே.'' என்றான்.

அனைவரும் அவனுக்கு வாழ்த்து கூற அவன் அனைவருக்கும் நன்றி கூறினான். என் பிறந்தநாளுக்கு நீங்கள் எல்லோரும் வாழ்த்து சொன்னது போல் நானும் ஜோதிக்கு வாழ்த்து சொல்கிறேன் என்பது போல் அவளை அழைத்தான்.

''ஜோதி!'' என்று அவன் அழைக்கவும் அவள் தனது இருக்கையில் இருந்து எழுந்து நின்றாள்.

''wish you a very Happy birthday. Have a fantastic year ahead.'' என்றான்.

''தாங்க்ஸ் சார்.'' என்று கூறி புன்னகைத்தவள் தன் இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

அதன் பின்பே அவனால் வகுப்பை நடத்த முடிந்தது.

வகுப்பை முடித்துக் கொண்டு வெளியேறிய ஸ்ரீதர், 'சே! அதான் அவள் காலையிலே புது டிரஸ் எதுக்குன்னு என்கிட்ட கேட்கவே இல்லையா? காலையிலே கேக்கும் பலூனும் தன்னோட பிறந்த நாளுக்கு நினைச்சு இருப்பாளோ! செம ஏமாற்றமா இருந்திருக்கும்ல. இப்படி சொதப்பிட்டேனே!' என புலம்பிக் கொண்டான்.

மதிய இடைவேளையின் போது தான் அவனால் தன் மனைவிடம் பேச முடிந்தது.

''ஸாரிடா ஜோ.''

''அச்சோ. எத்தனை தடவை சொல்லுவீங்க. உங்க பிறந்த நாளை நானும் தானே தெரிஞ்சு வச்சுக்கலை. விடுங்க ஸ்ரீதர்.''

''ப்ச் நீ சொல்லி இருக்கலாம்ல.''

''போதும் ஸ்ரீதர். அப்புறம் ஈவினிங் பிரண்ட்ஸ்க்கு ட்ரீட் தரதா சொல்லி இருக்கேன். நான் வீட்டுக்கு வர லேட்டாகும்.''

ஸ்ரீதர் அவளுக்கும் தனக்கும் சேர்த்து ஒரு வங்கி கணக்கை ஆரம்பித்து அந்த டெபிட் கார்டை அவளிடம் கொடுத்து வைத்திருந்தான்.

''ட்ரீட்டா? டெபிட் கார்டை கொண்டு வந்தியா? இல்லைன்னா பணம் தரட்டுமா?

''என்கிட்ட கார்டு இருக்கு ஸ்ரீதர்.'' என்றவள் கீர்த்தி அருகே வரவும், ''பிரண்ட்ஸ் வராங்க. பை.'' என்று அழைப்பை துண்டித்தாள்.



''யாரு ஜோதி போனில்?''

''ஸ்கூல் பிரண்ட்.''

''கேட்கிறேன்னு தப்பா எடுத்துக்காதே! சாயந்திரம் ட்ரீட் தர உன்கிட்ட பணம் இருக்கா?'' என்று கீர்த்தி தயங்கியவாறு கேட்டாள்.

''நீ கேட்டது எனக்கு சந்தோஷம் தான் கீர்த்தி. என்கிட்ட பணம் இருக்கு. ஒண்ணும் பிரச்சனை இல்லை.'' என்று ஜோதி கூறியதும் கீர்த்தி புன்னகைத்தாள்.



## 19

அன்று மாலை நண்பர்களுக்கு சாட், ஐஸ்-க்ரீம் எல்லாம் வாங்கி கொடுத்துவிட்டு ஜோதி வீட்டிற்கு செல்லாமல் நேராக மால் ஒன்றிற்கு சென்றாள்.

ஸ்ரீதருக்கு பிறந்தநாள் பரிசு வாங்குவதற்காகவே அவள் அங்கே சென்றாள். முதலில் கணவனுக்கு ஒரு பேண்ட்டும் சட்டையும் வாங்கினாள்.

'வேற ஏதாச்சும் வாங்கணுமே? என்ன வாங்கலாம்?' என யோசித்த பொழுது கணவனின் தங்க சங்கிலிக்கு சின்னதாக ஒரு டாலர் வாங்கலாம் என முடிவு செய்து அங்கே இருந்த நகை கடைக்குள் நுழைந்தாள்.

குட்டி விநாயகர் டாலர் ஒன்றை வாங்கி கொண்டாள். இது எல்லாவற்றையும் தாத்தா கொடுத்த கார்டு மூலமாகவே வாங்கினாள்.

ஸ்ரீதரின் பணத்தை எடுத்து ஸ்ரீதருக்கே பரிசு கொடுக்க வேண்டாம் என அவள் நினைத்தாள்.

அவள் நகையை வாங்கி முடித்து வெளியே வரும் பொழுது மால் பரபரப்பாக காணப்பட்டது.

''ஏதோ கலவரமாம். கடை எல்லாம் அடைக்கிறாங்க.'' என்று பேசிக் கொண்டே ஒருவர் சென்றார்.

'அச்சச்சோ! மாட்டிக்கிட்டேனே! நல்லா இருட்டிடுச்சே! பத்திரமா வீட்டுக்கு போயிடுவேனா?' என்று நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது அவளது கைப்பேசி அலறியது.

அவளது தாத்தா அழைத்திருந்தார்.

''சொல்லுங்க தாத்து!''

''பர்சேஸ் பண்ணின வரை போதும். மாலை விட்டு வெளியே வா!'' என்று உத்தரவிட்டார்.

'நான் மாலுக்கு வந்தது இவருக்கு எப்படி தெரியும்?' என வியந்து கொண்டே, ''வெளியே தான் தாத்து வந்துக்கிட்டு இருக்கேன்.'' என்றாள்.

''சீக்கிரமா நட.'' என்றவர் அழைப்பை துண்டிக்காமல் சில நொடிகளுக்கு பின், ''வெளியே வந்துட்டியா?'' என்றார்.

''வந்துட்டேன்.''

''அப்படியே நடந்து வா. மாலுக்கு அடுத்து விவேக் ஷோ ரூம் இருக்கா?''



''ஆமா இருக்கு.''

''அது பக்கத்துல வொயிட் கலர் கார். நம்பர்... நிக்குதா?'' என்று அதன் பதிவு எண்ணை சொன்னார்.

''ஆமா நிக்குது. பார்த்துட்டேன்.''

''அதுல ஏறு.'' என்றவர் அழைப்பை துண்டித்தார்.

அந்தக் காரின் முன் இருக்கையில் இருந்த ஆஜானுபாகுவான ஒரு ஆள் காரை விட்டு இறங்கி அவளுக்கு பின் கதவை திறந்து விட்டு, ''சீக்கிரமா ஏறுங்க மேடம்.'' என்றான்.

அவள் ஏறியவுடன் அவன் முன் இருக்கையில் ஏறி, ''டிரைவர் போகலாம்.'' என்றான்.

கார் அவளது வீட்டை நோக்கி விரைய ஆரம்பித்தது. அந்த ஆளின் கைப்பேசி சிணுங்கியது. எடுத்து இயக்கி அவன் பேசினான்.

''மேடம் ஏறிட்டாங்க சார். இதோ தரேன் சார்.'' என்றவன் தன்னுடைய போனை தன் சட்டையில் துடைத்துவிட்டு பின் இருக்கையில் உள்ள அவளிடம் நீட்டினான்.

அவள் அதை வாங்கி காதில் வைத்து, ''ஹலோ! யாரு?'' என்றாள்.

''நான் தான்டா. இது நம்ம கார் தான். பயப்படாதேன்னு சொல்ல தான் இந்த போனில் வந்தேன்.'' என்று அவள் தாத்தா கூறவும் அவள் நிம்மதியானாள்.

அவள் தாத்தா அந்த அழைப்பை துண்டித்து விட்டு மீண்டும் அவளது அலைபேசியில் அழைத்தார்.

''இப்போ எவ்வளவு தூரம் வந்து இருக்கீங்க?''

''தாத்து! எனக்கு ஒண்ணும் ஆகாது. தேவை இல்லாமல் டென்ஷன் ஆகாதீங்க.''

''நீ வீட்டுக்கு போகிற வரைக்கும் போனை கட் பண்ணாதே!''

காரில் இரு அந்நிய மனிதர்களை வைத்து கொண்டு இவரிடம் எதை பேசுவது என நினைத்து அவள் குழம்பினாள்.

''காலையில் இருந்து என்ன செஞ்சேன்னு சொல்லு.''

''பாட்டு ஏதாச்சும் போடுறீங்களா... கொஞ்சம் சத்தம் கம்மியா வைங்க.'' என்று டிரைவரிடம் கூறியவள், மெல்லிய குரலில் தன் தாத்தாவிடம் பேசிக் கொண்டே பயணித்தாள்.

அவளது போனில் இன்னொரு அழைப்பு வருவதற்கான சத்தம் கேட்டது. காதில் இருந்து எடுத்து பார்த்தாள். ஸ்ரீதர் அழைத்துக் கொண்டிருந்தான்.

''தாத்து! ஸ்ரீதர் கூப்பிடுறார். அவர் இப்போ தான் நியூஸ் பார்த்திருப்பார்னு நினைக்கிறேன். நான் அவர்கிட்டே பேசுறேன். உங்க போனை கட் பண்ணுறேன்.''

''நீ அவர்கிட்ட பேசி முடிச்சுட்டு என்னை திரும்ப கூப்பிடு.'' என்று சொல்லி தாத்தா அழைப்பை துண்டித்தார்.

''எங்கே இருக்கே ஜோ?'' என்று எடுத்த உடனே ஸ்ரீதர் பதட்டமாக விசாரித்தான்.



''வீட்டுக்கு டாக்சியில் வந்துக்கிட்டு இருக்கேன். ஒண்ணும் பயமில்லை. இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துடுவேன்.''

''போனை கட் பண்ணாமல் என்கிட்ட பேசிக்கிட்டு இரு!'' என்று ஸ்ரீதரும் சொன்னதும்,

'நீங்களுமா? நான் அழுதுடுவேன். என்று உள்ளுக்குள் புலம்பிக் கொண்டவள் ஒன்றும் சொல்லாமல் அழைப்பை துண்டித்து விட்டு போனை அணைத்து போட்டாள்.

ஐந்து நிமிடங்கள் கழித்து அவள் தாத்தா அந்த முன் இருக்கை ஆசாமிக்கு போன் செய்தார். அவன் இவளிடம் அலைபேசியை நீட்டினான்.

வேறு வழியின்றி ஜோதி அதை வாங்கி, ''தாத்து! நான் டயர்டா இருக்கேன். என்னால முடியலை.'' என்று சிணுங்கினாள்.

''சரி போ. நான் இவன்கிட்டயே விசாரிச்சுக்கிறேன்.'' என்று தாத்தா கூறியதும் அழைப்பை துண்டித்தாள்.

அவர்கள் வீடு செல்லும் வரை ஐந்து நிமிடத்திற்கு ஒரு முறை தாத்தா அழைத்துக் கொண்டே இருந்தார்.

'ஓவரா பாச மழையை பொழியுறாரே!' என்று கிண்டல் பண்ணி சிரித்து கொண்டு வந்தாள்.

''சார்ஜ் இல்லாமல் உங்க போன் ஆஃப் ஆகிடுச்சா மேடம்?'' என்று அவன் விசாரித்தான்.

''போன்ல சார்ஜ் இருக்கு. என்கிட்ட தான் சார்ஜ் இல்லை. அதான் நான் போனை ஆஃப் பண்ணிட்

டேன். நீங்களும் பேசாமல் உங்க போனை ஆஃப் பண்ணிடுங்க.''

''அப்புறமா உங்க தாத்தாக்கு யார் பதில் சொல்ல?'' என்று அவன் சிரித்தான்.

அவள் வீட்டிற்குள் நுழைந்த போது, ''அப்பாடா! வந்துட்டியா?'' என்று தெய்வநாயகி கூறினார்.

''உன்னை தேடி ஸ்ரீதர் போனான். உன் போன் வேற ஸ்விட்ச் ஆஃப் ஆகிடுச்சு போல...'' என்று சொல்லிக் கொண்டே அன்பரசு மகனது போனுக்கு முயற்சி செய்தார்.

''ஜோதி வீட்டுக்கு வந்துட்டாள். நீ வீட்டுக்கு திரும்பி வா!'' என்று கூறி அவர் அழைப்பை துண்டித்ததும்,

'ஆஹா! தப்பு பண்ணிட்டோமோ!' என்று அவளுக்கு உறுத்தியது.

தங்கள் அறைக்கு சென்றவள் தன் தாத்தாவிற்கு அழைத்து தான் பத்திரமாக வீட்டுக்கு வந்ததை தெரிவித்துவிட்டு குளிக்க சென்றாள். அவள் குளித்து முடித்து கீழே வந்த பொழுது தான் ஸ்ரீதர் திரும்பி வந்தான்.

தொலைக்காட்சியில் கலவர நிகழ்ச்சியை பார்த்தாள். அங்கங்கே கல் வீச்சு, பொது சொத்துக்கள் தீ வைப்பு என்று காட்டிக் கொண்டிருந்தார்கள்.

'நான் வந்த வழியில் பதட்டமான சூழ்நிலை இருந்துச்சு. இவ்வளவு மோசமா நான் எதையும் பார்க்கலையே! அதான் தாத்தாவும் ஸ்ரீதரும் ரொம்ப பயந்துட்டாங்க போல!' என்று எண்ணிக் கொண்டாள்.



சாப்பிட்டு முடித்ததும் ஸ்ரீதர் அறைக்கு சென்றுவிட்டான். தீப்தியும் ஜோதியும் வரவேற்பறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

''ஸ்ரீ சித்தி! உங்களுக்கு ஹோம் வொர்க் இருக்கா? நாம விளையாடலாமா?''

''சித்திக்கு டயர்டா இருக்குடா. நாளைக்கு விளையாடுவோமா?'' என்று கேட்டுக் கொண்டு இருக்கும் போது அன்பரசும் தெய்வநாயகியும் அவளை தேடி வந்தனர்.

அவர்கள் இருவரும் இரு பரிசு பொருட்களை நீட்டினர்.

''சித்திக்கு எதுக்கு கிஃப்ட்? சித்துக்கு தானே குடுக்கணும்?''

''இல்லைடா தீபு குட்டி உங்க சித்திக்கும் இன்னைக்கு தான் பர்த் டே.'' என்றதும் தீப்தி தன் சித்தியின் கன்னத்தில் முத்தமிட்டு வாழ்த்தினாள்.

''சோ சுவீட் டா என் செல்ல புஜ்ஜு.'' என்று கூறி அவளது இரு கன்னத்திலும் ஜோதி முத்தமிட்டாள்.

''உள்ளே என்ன இருக்குன்னு பிரிங்க சித்தி. நான் பிரிக்கட்டுமா?'' என்று தீப்தி கேட்டதும் ஜோதி அவளுக்கு அனுமதி அளித்தாள்.

தெய்வநாயகி அவளுக்கு பட்டுப் புடவை பரிசளித்து இருந்தார். மயில் கழுத்து கலரில் இருந்த புடவையை ஜோதிக்கு ரொம்பவே பிடித்து இருந்தது.

''தாங்க்ஸ் அத்தை.'' என்று முகம் மலர நன்றி கூறினாள்.

அன்பரசு தந்த பரிசில் சாவி இருந்ததை பார்த்த தீப்தி, ''இது ஏதோட கீ தாத்தா?'' என்று கேட்டாள்.

''ஸ்கூட்டி சாவி. என்றதும் ஜோதி விழித்தாள்.

மாமா! நான் காலையிலே நீங்க குடுத்த பணத்தையே வாங்கி இருக்கலாம் போல! இப்போ இவ்வளவு காஸ்ட்லியா...''

''நீ பணத்தை வாங்கி இருந்தாலும் நான் ஸ்கூட்டி வாங்கி தான்மா இருப்பேன். முதல் பிறந்தநாள்... சாதாரணமா எப்படி விட முடியும்?'' என்று கேட்டுக் கொண்டிருக்கும் போது அங்கே தாரிகா வந்தாள்.

என்ன ஏதென்று விசாரித்து அறிந்தவள், ''இவளுக்கு எதுக்கு ரெண்டு கிஃப்ட்?'' என்றாள்.

''உன்னோட முதல் பிறந்த நாளுக்கு நாங்க உனக்கும் தானே செஞ்சோம்?''

''அதை தான் நானும் சொல்லுறேன். எனக்கு ஒண்ணு தானே வாங்கி தந்தீங்க.''

''நீ எங்ககிட்டே இருந்து என்ன வாங்கினே? வைரம் பதிச்ச தங்க நகை.''

''நானும் இவளும் ஒண்ணா? என் ஸ்டேட்டஸ் என்ன... இவள் ஸ்டேட்டஸ் என்ன... என் பக்கத்திலே நிக்க கூட இவளுக்கு தகுதி இருக்கா? இவ கூட ஒரே வீட்டிலே ஒண்ணா இருக்கிறதை நினைச்சாலே எனக்கு அசிங்கமா இருக்கு.''

அவள் கூறியதை கேட்டு ஜோதி மனம் வருந்தினாலும் வெளியே எதையும் காட்டிக் கொள்ளாமல் நிமிர்வாகவே இருந்தாள்.



அன்பரசு தன் பெரிய மருமகளிடம், அவ்வளவு அசிங்கப்பட்டு நீ இந்த வீட்டிலே இருக்க வேண்டாம்மா. இந்த வீடு என் சொந்த சம்பாத்தியத்துல வாங்கினது. நான் என்னோட சுய சம்பாத்தியத்துல தான் இங்கே உள்ள எல்லோருக்கும் சோறு போட்டுக்கிட்டு இருக்கேன்.

இது வரைக்கும் என் ரெண்டு பிள்ளைகள் கிட்டே இருந்தும் நான் ஒரு பைசா கூட வாங்கினதில்லை. அதனால என் சம்பாத்தியத்துல நான் யாருக்கு என்ன கொடுக்கணும்னு நீ எனக்கு பாடம் எடுக்க தேவை இல்லை. உன்னால முடிஞ்சா இந்த வீட்டுல இரு. இல்லையா நீ வெளியே போயிடு!'' என்றார்.

வெளியே போய் மொத்த குடும்ப செலவையும் செய்வதற்கு அவளுக்கு என்ன கிறுக்கா பிடிச்சு இருக்கு.

அதனால் அவள் ஒன்றும் சொல்லாமல் ஜோதியின் கையில் இருந்த புடவையை பறித்து கொண்டு, ''உன் லெவலுக்கு ஒரு பரிசே பெருசு. இதை நான் வச்சுக்கிறேன்.'' என்று சொல்லிவிட்டு மடமடவென்று சென்றுவிட்டாள்.

தெய்வநாயகியின் முகம் விழுந்து விட்டது.

அவர் அருகே சென்ற ஜோதி, ''அத்தை! நீங்க காலையிலே எனக்கு ஆசீர்வாதம் பண்ணீங்க தானே! உங்க பெரிய மருமகளுக்கு பண்ணீங்களா?'' என்று கேட்டாள்.

''இத்தனை வருஷத்திலே தாரிகா என்னைக்கு என் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கி இருக்காள்?''

''அப்போ எனக்கு இன்னொரு ஸ்பெஷல் கிஃப்ட் கிடைச்சு இருக்குன்னு தானே அர்த்தம். விடுங்க அத்தை. இதை பெருசு படுத்தாதீங்க.''

ஜோதி தீப்தியை பார்த்தாள். அவளது உதடுகள் அழுகையில் பிதுங்கி கொண்டு இருந்தன.

''ஹேய் புஜ்ஜு! நீ எதுக்குடா அழறே?''

''உங்க கிஃப்ட்டை அம்மா எதுக்கு பிடுங்கினாங்க?''

''அந்த ஸாரியோட கலர் எனக்கு பிடிக்கலை. அதனால சித்தி தான் உங்க அம்மாக்கு தந்தேன். அழாதீங்க. தாத்தா நமக்கு ஸ்கூட்டி வாங்கி தந்து இருக்கார். நாளைக்கு நாம அதுல ரவுண்ட் போகலாமா?''

''நாம ரெண்டு பேருமா? எங்கே?''

''எஸ். நாம ரெண்டு பேரும் தான். பக்கத்திலே உள்ள ஐஸ் க்ரீம் ஷாப்...''

''சூப்பர் சித்தி!'' என்று குழந்தையின் மனநிலை நொடியில் மாறியது.

''இப்போ போய் தூங்கலாம் வா!'' என்று அவளை அழைத்து கொண்டு ஜோதி மாடியேற ஆரம்பித்தாள்.

''இவ குணத்துக்கு இவள் நல்லா இருக்கணும்.'' என்று தெய்வநாயகி வாய்விட்டு வாழ்த்த அன்பரசு தன் தலையசைத்து ஆமோதித்தார்.

தீப்தியை அவர்கள் அறைக்கு அனுப்பி விட்டு ஜோதி தங்கள் அறைக்குள் நுழைந்து கதவை தாளிட்டாள்.

ஸ்ரீதர் படுக்கையில் அமர்ந்து தன் மடிகணினியில் எதையோ பார்த்துக் கொண்டிருந்தான்.



பெர்முடாஸும் கை இல்லாத சட்டையும் அணிந்து கொண்டு அமர்ந்திருந்தவனை கண்ட ஜோதி, இவர் எப்போ இப்படி டிரஸ் பண்ணாலும் இவருக்கு செம யங் லுக் வந்துடுது. காலேஜ் பையன் மாதிரியே இருக்கார். டாக்ட்ரேட் எல்லாம் முடிச்ச ஒரு கல்லூரி வாத்தி யாருன்னு சொன்னால் நம்ப தான் முடியலை என கணவனை ரசித்தாள்.

அவள் உள்ளே வந்தவுடன் தன் மடிகணினியை மூடி வைத்தவன், வாங்க மேடம்! சாப்பிட்டு முடிச்சு நான் மேலே வந்து அரை மணி நேரமாச்சு. உங்களுக்கு இப்போ தான் ரூமுக்கு வர வழி தெரிஞ்சதா? என்றான்.

''நீங்க என்னை உடனே வான்னு கூப்பிட்டீங்களா என்ன?'' என்றதும் அவளை முறைத்தான்.

''காலையில் இருந்து உனக்கு ஸ்பெஷலா பர்த் டே விஷ் பண்ண முடியாமல் நான் இங்கே தவிச்சுக்கிட்டு இருக்கேன். நீ கூலா கேள்வியா கேட்கிறே?''

''ஓ! அதுக்கா?'' என்றவள், ''மாமா எனக்கு ஸ்கூட்டி வாங்கி தந்திருக்கார்.'' என்று அதன் சாவியை எடுத்து காண்பித்தாள்.

''அப்பாக்கு எப்படி தெரியும்?''

''நான் காலையில் அத்தை மாமா காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினேன்.''

''அப்போ என்கிட்ட மட்டும் தான் நீ சொல்லலையா?''

''திரும்பவும் ஆரம்பிக்காதீங்க ஸ்ரீ.''

''ஒகே இன்னைக்கு நோ சண்டை. வா வந்து கேக் வெட்டு.''

''காலையிலே தானே ஸ்ரீ கிளாஸில் வெட்டினேன்.'' என்றதும் அவன் திரும்பவும் முறைக்க ஆரம்பித்தான்.

''சும்மா சும்மா எதுக்கு ஸ்ரீ என்னை முறைக்கிறீங்க?''

''கடுப்பை கிளப்பாமல் வா!'' என்றவன் அங்கிருந்த மேஜைக்கு அவளை அழைத்து சென்றான்.

கேக் டப்பாவை திறந்து கேக்கை வெளியே எடுத்தான். Happy Birthday Jothi Sridhar என்று எழுதி இருந்தது.

''ரெண்டு பெயருக்கும் இடையில் அண்ட் போட மறந்துட்டீங்களா?''

''ஏன் நீ ஜோதி ஸ்ரீதர் இல்லையா?'' என்று அவன் ஆழ்ந்த குரலில் கேட்கவும், 'அட ஆமால.' என்று அவளுக்கு தோன்றியது.

''நம்ம ரெண்டு பேருக்கும் தானே பர்த் டே! அதனால ரெண்டு பேரும் சேர்ந்து வெட்டுவோம்.''

சரி என சம்மதித்தவன் அங்கே இருந்த நாற்காலியை இழுத்து அதில் அமர்ந்து கொண்டு அவளை தன் மடியில் அமர வைத்தான். இருவரின் முகமும் அருகருகே இருக்க ஒருவர் கை மீது ஒருவர் கை வைத்து அந்த கேக்கை வெட்டினார்கள்.

கன்னத்தோடு கன்னம் இழைந்து அவ்வளவு நெருக்கத்தில் இருவரும் அமர்ந்து இருக்கவும்... இருவருமே உணர்ச்சியின் பிடியில் சிக்கினார்கள்.

வெட்டிய துண்டை சாப்பிடவும் தோன்றாமல் அடுத்தவரின் அருகாமையை கண் மூடி அனுபவித்து கொண்டிருந்தனர்.



ஸ்ரீதர் அவளை இறுக்கமாய் அணைத்து கொண்டு அவளது கன்னத்தில் அழுத்தமாய் முத்தமிட்டு அவளது காதோரம், ஹாப்பி பர்த் டே ஜோ குட்டி. என்றான்.

அவனது முகம் பார்ப்பது போல் திரும்பி அமர்ந்தவள் அவனது கன்னத்தில் முத்தமிட்டு, ''தாங்ஸ் ஸ்ரீ!'' என்று கூறி அவன் மேல் சாய்ந்து கொண்டாள்.

அவளை இறுக்கமாய் அணைத்து கொண்டான். அந்த அணைப்பு தந்த சிலிர்ப்பில் இருவருமே கிறங்கி போய் அமர்ந்திருந்தனர். பின் அந்த கேக் துண்டை எடுத்து அவளுக்கு ஊட்டினான். அவளும் அவனுக்கு திருப்பி ஊட்டினாள்.

''ஜோ! இந்த கேக்ல உள்ள ஜோதி பேர் எனக்கு. ஸ்ரீதரை நீ வச்சுக்கோ!''

''பாருடா! சார் திட்டம் எல்லாம் பலமா போடுறார். நடத்துங்க! நடத்துங்க!''

அவன் தனது ஆட்காட்டி விரலால் ஸ்ரீதர் என்ற பெயரை வழித்தெடுத்தான்.

''எனக்குன்னு சொல்லிட்டு நீங்க ஏன் எடுத்தீங்க?'' என்று அவள் சண்டைக்கு வர, அவன் தனது விரலை அவள் வாயருகே கொண்டு சென்றான்.

''இங்கே இருக்கிறது என்னோட ஸ்ரீதர் தானா? ரொமான்ஸ்ல பின்னுறியே தலைவா!'' என்று கிண்டல் செய்து கொண்டே அவனது கைவிரலில் இருந்த கிரீமை தன் வாய்க்குள் விட்டு சுவைத்தாள்.

அவனுக்கும் அதே போல் தன் விரலால் ஊட்டினாள். அவனது நெற்றில் செல்லமாய் முட்டினாள்.

''நான் உங்களுக்கு கிஃப்ட் வாங்கிட்டு வந்திருக் கேன். வாங்க காட்டுறேன்.'' என்றவள் அவன் மடியில் இருந்து எழுந்து சென்றாள்.

தனது பையில் இருந்து அவனுக்கு தான் வாங்கிய உடுப்பை எடுத்து கொடுத்தாள். தான் வாங்கிய டாலரை காட்ட நினைப்பதற்குள் அவன் கழுத்தில் தொங்கிய டாலரை பார்த்து அவன் அருகே அமர்ந்து அதை தூக்கி பார்த்தாள்.

S மற்றும் J என்ற இரு ஆங்கில எழுத்துக்களும் ஒன்றோடு ஒன்று பின்னி இருந்ததை பார்த்து திகைத் தாள்.

''இது எப்போ வாங்கினீங்க ஸ்ரீ?'' என்கிட்ட காட்டவே இல்லை.

''ஆர்டர் கொடுத்து வாங்கினேன்டா. நேத்து தான் ரெடியாச்சு. இதை வாங்கிறதுக்காக நான் நேத்து நகை கடைக்கு போனேன். உனக்கு இன்னைக்கு பர்த் டேன்னு நேத்தே தெரிஞ்சிருந்தால் ஏதாச்சும் நகை வாங்கிட்டு வந்திருப்பேன். கிளாஸ்ல வச்சு விஷயம் தெரிஞ்சதும் இன்னைக்கு ஈவினிங் உன்னை கூட்டிட்டு போய் வாங்கி தரலாம்னு பார்த்தேன். நீ என்னடான்னா இப்போ வந்து நிக்கிறே!''

''உங்களுக்கு நான் ஒரு டாலர் வாங்கிட்டு வந்தேன். பார்த்தால் நீங்களே ஒண்ணை போட்டுக்கிட்டு நிக்கிறீங்க.''



''இப்ப என்ன செய்யலாம்.''

''இதை கழட்ட வேண்டாம் ஸ்ரீ. எனக்கு இது ரொம்ப பிடிச்சு இருக்கு. நாம ரெண்டு பேரும் நிஜத்தில் தான் பின்னி பிணையலை. டாலரிலாவது பின்னி இருப் போம்.''

''ஏன் நிஜத்தில் பின்னி பிணையலை?'' என்றவன் அவளை தன்னோடு இழுத்து அணைத்து கொண்டு கட்டிலில் சரிந்தான்.

''இன்னைக்கு என் ஸ்ரீதருக்கு என்னமோ ஆச்சு.'' என்று அவள் ஆச்சரியப்பட

அவளது காதில், ''ஜோ குட்டி! நாம பர்த் டே செலிப்ரேட் பண்ணலாமா?'' என்றான்.

''இப்போ நாம அதை தான் பண்ணுறோம்னு நான் நினைக்கிறேன்.''

''இப்படி இல்ல. நம்ம கட்டுப்பாட்டை தளர்த்திக்க லாமா? இன்னைக்கு ஒரு நாள்.'' என்றதும் அவளுக்கு புரிந்தது.

''இப்படி சொல்லுறது என் ஸ்ரீதர் தானா?''

''ப்ச் வெட்டியா பேசாதே. உனக்கு ஓகேவா இல் லையா?''

''ஓகே இல்லை.'' என்றதும் அவன் அவளை விடு வித்து விட்டு அவளுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டான்.

அவனை பின் இருந்து அணைத்தவள் அவனது காதில், ''எனக்கு ஓகே இல்லை. டபுள் ஓகேன்னு சொல்ல வந்தேன் ஸ்ரீ.'' என்றதும்,

சரேலென திரும்பி மனைவியை அணைத்து அவளது முகமெங்கும் முத்தமிட ஆரம்பித்தான்.

பொறியியல் பாடத்தை மட்டும் அல்ல காதல் பாடத்தையும் என்னால் சிறப்பாக கற்று கொடுக்க முடியும் என அவளுக்கு நிரூபித்தான். காதல் மன்னனாய் மாறி தங்கள் இல்லறத்தை துவக்கி வைத்தான்.



## 20

**வா**ரத்தில் இரு நாட்கள் கம்பெனிக்கு சென்றும் மீதி நாட்கள் கல்லூரியில் உள்ள லேபில் வைத்தும் ப்ராஜெக்ட்டை பண்ணுவது என்று முடிவானது.

அதன்படி இரு தினங்களுக்கு பின் கண்ணனும் ஜோதியும் தத்தம் வண்டிகளில் பிரகாஷ் குரூப் ஆஃப் கம்பெனிக்கு சென்று இறங்கினார்கள்.

''கண்ணா! இவ்வளோ பெரிய கம்பெனியா இருக்கு. இவங்க எப்படிடா நம்மளை இங்கே ப்ராஜெக்ட் பண்ண அலோவ் பண்ணுறாங்க?'' என்று ஜோதி ஆச்சரியப் பட்டாள்.

''யாருக்கு தெரியும்? எல்லா கம்பெனிக்கும் எழுதி போட்டேன். இவங்க நம்மை வர சொல்லிட்டாங்க. வாங்க உள்ளே போவோம்.'' என்றவன் அவளை அழைத்து கொண்டு ரிசப்ஷனுக்கு சென்றான்.



ஜோதி அங்கே ரிசப்ஷனில் அமர்ந்திருந்த பெண்ணிடம் சென்று தாங்கள் வந்த காரியத்தை விளக்கினாள்.

''ப்ராஜெக்ட் பண்ணவா? இங்கேயா? நோ சான்ஸ்!'' என்று அவள் அடித்து கூறவும் ஜோதி குழம்பினாள்.

கண்ணன் தங்களுக்கு வந்த ஒப்புதல் கடிதத்தை எடுத்து நீட்டினான்.

அவள் அதை வாங்கி படித்து பார்த்து விட்டு, ''கொஞ்ச நேரம் அங்கே உட்காருங்க. நான் செக் பண்ணிட்டு சொல்லுறேன்.'' என்றாள்.

அவள் யாரிடமோ பேசினாள். அடுத்த ஐந்தாவது நிமிடம் ஒருவர் அவசரமாக ரிசப்ஷனுக்கு வந்தார்.

இவர்கள் அருகே வந்தவர், ''நீங்க இன்னைக்கு வரதா சொல்லவே இல்லையே! வாங்க!'' என்று வரவேற்று உள்ளே அழைத்து சென்றார்.

''நீங்க இங்கே தான் ப்ராஜெக்ட் பண்ண போறீங்க.'' என்று ஒரு செக்ஷனுக்கு கூட்டி சென்றார். ''இவர் பார்த்துக்குவார்.'' என்று ஒருவரை அறிமுகம் செய்து விட்டு போனார்.

அங்கே வந்து போன அனைவரும், ''யாரு நீங்க? இங்கே என்ன பண்ணுறீங்க?'' என்ற கேள்விகளை கேட்க தவறவில்லை.

இவர்கள் தாங்கள் வந்த காரணத்தை கூறியவுடன், ''இங்கேயா? எங்க கம்பெனியிலா?'' என்று கேட்கவும் தவறவில்லை.

‘‘என்னடா கண்ணா... எல்லோரும் சொல்லி வச்ச மாதிரி ஒரே கேள்வியை கேட்கிறாங்க. நாம ப்ரா ஜெக்ட்டை நல்ல முறையிலே முடிப்போமா? மாட் டோமா?’’

‘‘இவங்க பேச்சை எதுக்கு ஜோதி காதிலே போட் டுக்கிறீங்க. அப்புறம் நான் சும்மா உங்க கூட நிப்பேன். அவ்வளவு தான். நீங்க தான் முழுசும் பண்ணனும். சும்மா நாம ப்ராஜெக்ட் பண்ண போறோம்னு என்னையும் கூட்டு சேர்க்க கூடாது சொல்லிட்டேன்.’’

‘‘உன்னை போய் என் கூட சேர்த்து விட்டவங்களை சொல்லணும்டா.’’ என்று புலம்பிக் கொண்டே ஜோதி தன் வேலைகளை தொடங்கினாள்.

அன்று வேலை முடிந்ததும் இருவரும் கிளம்பி னார்கள். கண்ணன் முதலில் வெளியேறி சென்றான். வரவேற்பறையை கடக்கும் முன் சுவரில் மாட்டி இருந்த புகைப்படத்தை கண்ட ஜோதி நின்று விட்டாள்.

ஏனென்றால் அது அவளது தாத்தாவின் புகைப் படம்.

‘தாத்தா படம் இங்கே எப்படி வந்துச்சு? அப்போ எப்படி கவனிக்காமல் போனோம்? ஓ! நான் உட்கார்ந்து இருந்தப்போ தலைக்கு மேலே மாட்டி இருந்த போட்டோ தெரியலை போல’ என நினைத்தவள் அந்த ரிசப்ஷன் பெண்ணிடம் சென்று பேச ஆரம்பித்தாள்.

‘‘அந்த போட்டோவில் இருக்கிறவர் யாருங்க?’’

‘‘எங்க எம்.டி யோட தாத்தா.’’

‘‘உங்க எம்.டி.யை நான் பார்க்க முடியுமா?’’



‘‘அப்பாயின்மென்ட் இல்லாமல் சார் யாரையும் பார்க்க மாட்டார்.’’

‘‘கேட்டு பாருங்களேன்.’’

‘‘நிர்மல் சாரை பார்க்கணுமா? இல்லை விமல் சாரையா?’’

‘‘யாரை பார்க்க முடிஞ்சாலும் எனக்கு ஓகே தான்.’’

‘‘கேட்டு பார்த்துட்டு சொல்லுறேன். வெயிட் பண் ணுங்க.’’ என்றாள்.

இரு நிமிடங்களுக்கு பின், மேடம்! ‘‘சார் உங்களை அனுப்ப சொல்லிட்டார். உங்களை கூட்டிட்டு போக ஆள் வருவார்.’’ என்றதும் தாத்தாவின் வாரிசுகளை சந்திக்க ஜோதி தயாரானாள்.

அறை வாசலை தட்டி முறையாய் அனுமதி பெற்று அந்த அறைக்குள் நுழைந்தாள். உள்ளே இரு இளை ஞர்கள் இருந்தனர்.

‘‘உங்களை பார்க்க பெர்மிஷன் குடுத்ததுக்கு தாங்க்ஸ். என் பேர்...’’ என்று அவள் தொடங்கவும்,

‘‘உட்கார் ஜோதி!’’ என்று ஒருவன் இருக்கையை காட்டினான்.

அவன் காட்டிய இருக்கையில் அமர்ந்து கொண்டே இவனை எங்கேயோ பார்த்து இருக்கோம். எங்கே என்று யோசித்த பொழுது அவன் தன் கல்லூரி நிர்வாகி நிர்மல் என்ற விஷயம் அவளுக்கு புரிந்தது.

‘‘உங்களுக்கு என் பெயர் தெரியுமா?’’

‘‘ம்ம்ம் தெரியும். என்ன விஷயம்? எதுக்காக எங்களை பார்க்கணும்னு சொன்னே?’’

''வெளியே என்னோட தாத்தா போட்டோ பார்த்தேன். அதான் நீங்க யாரு என்னன்னு பார்த்துட்டு போக லாம்னு...'' என்று தயங்கி இழுத்தாள்.

''எங்களை உனக்கு தெரியாதா?''

அவள் இல்லை என்று தலையாட்டியதும், ''நான் நிர்மல் பிரகாஷ். இவன் என் தம்பி விமல் பிரகாஷ். உங்க தாத்தாவோட மூத்த பையனோட பசங்க.'' என்று அவன் அறிமுகம் செய்து கொண்டான்.

''நம்மளை பத்தி எதுவும் தெரியலை...'' என்று விமல் கடுப்பாக கூறினான்.

''விமல்! காம் டவுன்! சொல்ல வேண்டிய யாரும் சொல்லலைன்னால் அவளுக்கு எப்படி தெரியும்?'' என்று நிர்மல் கூறினான்.

''அவர் கோபப்படுறதும் நியாயம் தானே! இப்படி ரெண்டு அண்ணன்கள் இருக்கிற விஷயம் எனக்கு இப்போ தான் தெரியும். இது வரைக்கும் தாத்து உங்களை பத்தி என்கிட்ட எதுவுமே சொன்னதில்லை.''

''தாத்து?''

''அவரை நான் அப்படி தான் சொல்லுவேன். நீங்க ளெல்லாம் அவரை செல்லமா கூப்பிட மாட்டீங்களா?''

''செல்லமா கூப்பிடறதா? தாத்தாவையா?''

''என்ன அண்ணா இப்படி கேட்கிறீங்க. நான் தாத்துகிட்ட சண்டையே போடுவேன்.''

''சண்டையா...? ஷாக்குக்கு மேல ஷாக்கா குடுக்கிறே?''



''நம்ம தாத்தா ஒரு லிட்டர் கஞ்சியை குடிச்ச மாதிரி கொஞ்சம் விறைப்பா தான் இருப்பார். அதுக்காக நாமளும் அவரை மாதிரியே இருக்க முடியுமா என்ன?''

''ம்ம்ம் இன்ட்ரஸ்டிங். அப்புறம்...'' என்று நிர்மல் கதை கேட்டான்.

ஜோதி உள்ளே நுழைந்ததில் இருந்து நிர்மல் மட்டுமே அவளிடம் பேசிக் கொண்டிருந்தான். விமல் ஒரு தடவை பேசிய பிறகு வாயை திறக்கவில்லை.

''நாங்க எப்போ பேசிக்கிட்டாலும் நீயா நானாங்கிற மாதிரி வார்த்தையிலே மோதிக்குவோம். நீங்களே சொல்லுங்கண்ணா... இந்த வயசில் கூட அவருக்கு இவ்வளவு ரோஷமும் வீம்பும் இருக்குன்னா... அவர் பேத்தி... ரெண்டு ஜெனரேஷன் தள்ளி பிறந்த எனக்கு எவ்வளவு வீம்பு இருக்கும்?''

''என்ன விஷயத்துக்காக சண்டை போடுவீங்க?''

''சொத்தை ஏத்துக்கிற விஷயமா தான் எப்பவும் சண்டை வரும்.''

''அவர் தரும் சொத்தை ஏத்துக்க வேண்டியது தானே! அதுல உனக்கு என்ன தயக்கம்?''

''எங்க அப்பா வேணாம்னு சொன்ன சொத்தை நான் எப்படி ஏத்துக்குவேன்?'' என்று அவள் கேட்டுக் கொண் டிருக்கும் பொழுது அறைக்குள் அறுபது வயது மதிக் கத்தக்க ஒருவர் நுழைந்தார்.

அறைக்குள் யாரோ வரும் சப்தம் கேட்டு திரும்பிப் பார்த்த ஜோதி அவரது முகத்தை பார்த்ததும் எழுந்து நின்றாள்.

உள்ளே வந்தவரிடம் விமல், ''நீங்க ரெண்டு பேரும் யாருன்னு எங்களை பார்த்து கேட்கிறாள்.'' என்று கடுப்பாக மொழிந்தான்.

தம்பியை முறைத்த நிர்மல் ஜோதியின் புறம் திரும்பி, ''இவர்...'' என்று தொடங்கவும்,

''தெரியும். என்னோட சூர்யா பெரியப்பா.'' என்று ஜோதி முடித்தாள்.

''எங்க அப்பாவை இதுக்கு முன்னாடி பார்த்து இருக்கியா?'' என்று நிர்மல் ஆச்சரியமாய் கேட்டான்.

''இல்லை. எங்க அப்பாவோட சாயல் இவர்கிட்ட நிறைய இருக்கு. அதனால நீங்க சொல்லாமலே இவர் யாருன்னு எனக்கு புரிஞ்சு போச்சு.''

அங்கே இருந்த இருக்கை ஒன்றில் அமர்ந்த சூர்யபிரகாஷ், ''உங்க அப்பா என் பசங்க பத்தி உன்கிட்ட எதுவுமே சொன்னதில்லையா?'' என்று கேட்டார்.

அவர் அமர்ந்தவுடன் அவளும் தன் இருக்கையில் அமர்ந்து கொண்டு, ''சொன்னதில்லை. அவருக்கு தெரிஞ்சு இருந்தால் சொல்லி இருப்பார்.'' என்றாள்.

''தெரிஞ்சுக்க விருப்பப்படலைன்னு சொல்லு.''

''அவர் ஏன் தெரிஞ்சுக்கலை? சந்தர்ப்பம் அமையலையா? இல்லை உங்களை சந்திக்க பயந்தாரா? இது எதுவும் எனக்கு தெரியாது. எங்க அப்பா இறந்த போது எனக்கு பதினெட்டு வயசு கூட முடியலை. அதனால இந்த விஷயங்கள் எல்லாம் எனக்கு தெரியாது.''



அங்கே சில நொடிகள் அமைதி நிலவியது. சூர்யபிரகாஷ் தன் தம்பி மகளிடம் கோபமாய் பேச ஆரம்பித்தார்.

''என்னை கேட்டால்... அவன் எங்க எல்லோரையும் தூக்கி எறிஞ்சுட்டு போயிட்டான்னு தான் நான் சொல்லுவேன். ஒரு நாளாச்சும் என்னை, எங்க அம்மா அப்பாவை எட்டி பார்த்து இருப்பானா?''

''நீங்க எங்க அப்பாவை தேடி வந்து பார்த்தீங்களா பெரியப்பா?''

''எங்களை எல்லாம் மறந்துட்டு போனவனை நான் ஏன் பார்க்கணும்?''

''அவர் மறந்துட்டாருன்னு எப்படி அவ்வளவு உறுதியா சொல்லுறீங்க?'' என்று தன் பெரியப்பாவிடம் கேட்டவள்,

நிர்மலை பார்த்து, ''அண்ணா! நான் உங்ககிட்ட ஒண்ணு கேட்கிறேன். உங்களுக்கு என் அப்பாவை பத்தி ஏதாச்சும் தெரியுமா? ஐ மீன் அவரோட விருப்பு வெறுப்பு...'' என்று கேட்டாள்.

''இல்லை. எனக்கு எதுவும் தெரியாது. அவரை நான் பார்த்ததே இல்லைங்கிற போது எனக்கு எப்படி தெரியும்?'' என்று அவன் பட்டென்று பதில் சொன்னான்.

''இப்போ நான் கூட தான் பெரியப்பாவை பார்த்தே இல்லை. ஆனா அவரை பத்தி சொல்லட்டுமா? எல்லோரும் சாம்பார் வடை, ரச வடை சாப்பிடுவாங்க. ஆனா என் பெரியப்பா கட்டியா இருக்கிற தேங்காய்

சட்னியில் கொஞ்சம் தண்ணி ஊத்தி வடையை அதுல மூழ்க வச்சு சாப்பிடுவார்.

''அவருக்கு பிடிச்ச சாப்பாடு புளியோதரையும் சாம்பாரும். பிடிச்ச விளையாட்டு புட் பால். சின்ன வயசிலே எங்க அப்பா கீழே தள்ளி விட்டதால் அவருக்கு முழங்காலுக்கு கீழே பெரிய தழும்பு ஒண்ணு இருக்கும்.

''பிடிச்ச இசை அமைப்பாளர் எம்.எஸ்.வி. அவர் காலேஜ் படிக்கும் போது அவருக்கு மஞ்சள் காமாலை வந்து ரொம்ப கஷ்டப்பட்டார்...'' என்று அவள் மடமடவென்று அடுக்கிக் கொண்டே போக மூவரும் ஆடாது அசையாது கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவள் பேசி முடித்ததும், ''அப்பா! சான்ஸே இல்லை. எனக்கு கூட இவ்வளவு விஷயம் தெரியாது.'' என்று நிர்மல் அறிவித்தான்.

ஒரு பெரிய புன்னகையுடன் தன் பெரியப்பாவை பார்த்த ஜோதி, ''இப்பவும் சொல்லுறேன். எங்க அப்பா உங்களை பார்க்க ஏன் வரலைன்னு எனக்கு தெரியாது. ஆனா அவர் உங்க எல்லோரை பத்தியும் தான் எப்பவும் பேசுவார். அதுலயும் வார்த்தைக்கு வார்த்தை எங்க சூர்யா அண்ணன்னு சொல்லிக்கிட்டே இருப்பார்.'' என்றாள்.

தன்னுடைய தோழனாய் இருந்த உடன் பிறந்தவன் ஒரு பெண்ணின் பின்னே சென்று தன்னை முழுவது மாய் மறந்துவிட்டான் என்று இத்தனை நாளும் ஆத் திரத்தில் இருந்த சூர்யபிரகாஷின் மனம் வெகு நாட் களுக்கு பின் இன்று தான் குளிர்ந்து இருந்தது.



தம்பி இறந்த போது அவரது கோபம் கொஞ்சம் குறைந்து இருந்தாலும் இன்று தான் அது முழுவதுமாக குறைந்தது.

அவர் தன் தம்பியின் நினைவில் ஆழ்ந்தார். அந்தக் கால நினைவுகளை அசை போட ஆரம்பித்தார்.

'எங்களை பார்க்க சங்கடப்பட்டு தான் தம்பி வராமல் இருந்திருப்பானோ? நாங்க யாராச்சும் போய் பார்த் திருந்தால் இவ்வளவு பெரிய இடைவெளி வந்திருக் காதோ? எங்க கூடவே இருந்திருந்தால் உயிரோடு இருந்திருப்பானோ?' என்று நினைத்த பொழுது அவரது முகம் வாட ஆரம்பித்தது.

''என்ன ஆச்சு பெரியப்பா டல்லாகிட்டீங்க. என் பேச்சு உங்களை ஹர்ட் பண்ணிடுச்சா? ஐயாம் ஸாரி . மனசிலே எதுவும் வச்சுக்காதீங்க. கொஞ்சம் சிரிங் களேன்.''

அவர் சோகமாகவே இருக்கவும், ''நீங்க சோகமா இருந்தீங்கன்னா எங்க அப்பா என் கனவிலே வந்து எவ்வளவு தைரியம் இருந்தால் என் பூரி அண்ணனை... ஸாரி உங்களுக்கு நிக் நேம் அதானே... தெரியாமல் சொல்லிட்டேன்.'' என்று தன் கன்னத்தில் போட்டுக் கொண்டவள்,

''எங்கே விட்டேன்? ஹான்... உனக்கு எவ்வளவு தைரியம் இருந்தால் என் சூர்யா அண்ணனை வருத் தப்பட வச்சேன்னு துவைச்சு கொடியில் தொங்க போட்டிடுவார். உங்க அப்பா... என் தாத்து அவர் சும்மா இருப்பாரா?

''எனக்கு இருக்கிறது ஒரே பையன். அவனை கஷ்டப்படுத்தினியான்னு சொல்லி கொடியிலே தொங்கிக்கிட்டு இருக்கிற என்னை அயர்ன் பண்ணிட்டு போயிடுவார்.

''ஸ்ரீதர் தான் பாவம். அவருக்கு நான் ஒரே ஒரு வைஃப். நான் இல்லாமல் போனால் வேற யாரையும் செட் பண்ணுற திறமை கூட இல்லாத ஒரு ஆள். அதுக்காக அட்லீஸ்ட் சிரிச்சுடுங்க பெரியப்பா.'' என்றாள்.

''உன்னை வச்சு ஸ்ரீதர் எப்படி மேய்க்கிறார்?'' என்று நிர்மல் கேட்டான்.

''வீட்டுல எப்பவும் டாம் அண்ட் ஜெர்ரி பைட் தான். அவர் டாம். நான் ஜெர்ரி. Because jerry always wins.'' என்று ஜோதி கண்ணடித்துக் கொண்டே சொல்ல நிர்மலின் சிரிப்பு விரிந்தது.

ஆனால் சிரிக்க வேண்டியவரோ தம்பியின் நினைவில் வாடிப் போயே அமர்ந்திருந்தார்.

''இப்போ நான் என்ன சொல்லிட்டேன்னு இவ்வளவு வருத்தப்படுறீங்க பெரியப்பா? உங்க பசங்க முன்னாடி உங்க மானம் போகிற விஷயம் ஏதாச்சும் நான் சொன்னேனா?

''படிக்கிற காலத்துல நீங்க மிகப் பெரிய ஸ்ரீதேவி பேன். அதனால உங்க ரூம் மொத்தமும் ஸ்ரீதேவி படமா ஒட்டி வச்சு இருந்தீங்க. நீங்க ஸ்ரீதேவி பேன் என்று சொல்லுறதுக்கு பதிலா ஸ்ரீதேவி பைத்தியம்னே சொல்லலாம். எந்த அளவுக்கு பைத்தியம்னா கனவிலே ஸ்ரீதேவி கூட டூயட் பாடி பக்கத்திலே படுத்திருந்த எங்க



அப்பாவை கிஸ் பண்ணுற அளவுக்கு. இதை நான் வெளியே சொன்னேனா?

''சொன்னேனா சொன்னேனான்னு கேட்டு எல்லாத்தையும் சொல்லிட்டியே!'' என்று சூர்யபிரகாஷ் வெகு நேரத்திற்கு பிறகு வாய் திறந்து பேசினார்.

ஜோதி நிர்மலை பார்த்து, ''அண்ணா! பார்த்தீங்களா... இவ்வளவு நேரம் வாயை திறந்து ஏதாச்சும் பேசினாரா? அவரோட கனவு கன்னியை பத்தி பேசின உடனே வாய் பூட்டு அகன்றுடுச்சு. இவ்வளவு வருஷம் கழிச்சு கூட அவரோட ட்ரீம் கேர்ள் இந்த அளவுக்கு பெரியப்பாவை பாதிக்கிறாள்னா... பாயிண்ட் டூ பி நோட்டட். எதுக்கும் பெரியம்மா காதிலே விஷயத்தை போட்டு வைங்க.'' என்று கூறவும்,

''அடிக்கழுதை! குடும்பத்திலே குழப்பத்தை உண்டு பண்ணவா பார்க்கிறே?'' என்று சூர்யபிரகாஷ் சிரிப்போடு வினவினார்.

தன் இருக்கையில் இருந்து எழுந்தவள், ''இப்படியே சிரிச்சுக்கிட்டே இருங்க பெரியப்பா. கீப் ஸ்மைலிங். நான் கிளப்புறேன். பை.'' என்று அங்கிருந்த மூவரிடமும் விடைபெற்று அறையை விட்டு கிளம்பினாள்.

''ஒவ்வொரு வீட்டுலயும் இப்படி ஒரு பெண் குழந்தை இருக்கணும். பெண் குழந்தைகளே அழகு இல்ல?'' என்று சூர்யபிரகாஷ் கேட்க,

''யூ ஆர் ரைட் அப்பா.'' என்று ஆழ்ந்த குரலில் பதில் சொன்ன விமலை பார்த்து நிர்மல் புன்னகைத்து கொண்டான்.



# 21

தன் ஸ்கூட்டி நிறுத்தி இருந்த இடத்தில் நின்று கொண்டு ஜோதி தன் தாத்தாவுக்கு போன் பண்ணி, ஏன் தாத்து இத்தனை நாளா என்கிட்ட நிர்மல் அண்ணனை பத்தியும் விமல் அண்ணனை பத்தியும் சொல்லலை? என்று சண்டையிட்டாள்.

''அவங்க ரெண்டு பேரும் என் பேரனுங்க. என்னையே வேண்டாம்னு சொல்லுற ஆள் நீ! உனக்கு எதுக்கு என் பேரனுங்க பத்தின விஷயத்தை நான் சொல்லணும்?'' என்றதும் அமைதியானாள்.

ரோஷமும் வீம்பும் நிறைந்த அந்த தாத்தாவும் பேத்தியும் இரு நிமிடங்களுக்கு எதையும் பேசவும் இல்லை. அழைப்பை துண்டிக்கவும் இல்லை.

"இப்பவும் நீயா தானே என் பேரனுங்களை போய் பார்த்து இருக்க. அதே மாதிரி நீயா எங்க எல்லோரையும் தேடி வா. ஒரு நாள் வருவே!'' என்று சொல்லிவிட்டு அழைப்பை துண்டித்து விட்டார்.

அவள் மீண்டும் உடனே அழைத்து, ''நான் பேசி முடிச்சுட்டேன்னு உங்ககிட்ட சொன்னேனா? அது என்ன உங்க பாட்டுக்கு பேசிட்டு போனை கட் பண்ணு நீங்க?'' என்று தாம் தூம் என்று குதித்தாள்.



அவர் பேச இடம் கொடுக்காமல் இம்முறை இவள் அழைப்பை துண்டித்தாள். பின் தன் வண்டியில் ஏறி அமர்ந்து வீட்டை நோக்கி சென்றாள்.

அன்று வீடு திரும்பிய ஜோதியிடம் ஸ்ரீதர், ''அந்த கம்பெனியில் எதுவும் பிராப்ளம் இல்லையே? அட் மாஸ்பியர் எப்படி இருக்கு? உன்னால அங்கே ப்ரா ஜெக்ட் பண்ணிட முடியுமா? இல்லைன்னா அப்பா கிட்ட சொல்லி வேற கம்பெனி பார்த்து தரட்டுமா?'' என்று அக்கறையாக விசாரித்தான்.

''ஒண்ணும் பிரச்சனை இல்லை ஸ்ரீதர். எனக்கு ரொம்ப பிடிச்சு இருக்கு. நீங்க வேணா பாருங்க... நான் சூப்பரா ப்ராஜெக்ட் பண்ணி கலக்குவேன்.'' என்றதும் ஸ்ரீதர் நிம்மதியானான்.

அன்று இரவு அவளது தாத்தா அழைத்திருந்தார். பொதுவாக அவர் இரவு நேரங்களில் அழைக்க மாட்டார்.

கொஞ்ச நாள் முன்பு தான் ஹார்ட் அட்டாக் வேறு அவருக்கு வந்திருக்கு என்பதால் ஜோதி சற்று பதட்டத் தோடு போனை எடுத்தாள்.

''தாத்து! நல்லா இருக்கீங்க தானே? உடம்புக்கு ஒண்ணும் பிரச்சனை இல்லையே. ஏன் இந்த நேரம் கூப்பிட்டு இருக்கீங்க? ஏதாச்சும் பேசுங்க தாத்து.''

''நீ நிறுத்தினால் தானே நான் பேச முடியும்?'' என்று கேட்டு சிரித்தார்.

''ஸாரிடா ஜோதி. எப்போ உன் பேச்சை எடுத்தாலும் சூர்யா அந்த இடத்தை விட்டு நகர்ந்து போயிடுவான். அவன் அப்படி உன் மேல இன்ட்ரெஸ்ட் காட்டாமல்

இருக்கும் போது நிர்மல் பத்தியும் விமல் பத்தியும் நான் எப்படி உன்கிட்ட சொல்ல முடியும்?

''சூர்யா உன் மேல உள்ள வெறுப்பில் தான் விலகி போனான்னு நான் இத்தனை நாளும் நினைச்சேன். ஆனா தன் தம்பி கடைசி வரை தன்னை பார்க்க வராமலே போயிட்டானேங்கிற ஆதங்கம் தான் அவன் மனசு முழுக்க நிறைஞ்சு இருக்குன்னு எனக்கு இன்னைக்கு தான் தெரிஞ்சது. உன்னை பார்த்துட்டு வந்ததில் இருந்து ஒரு மாதிரியா இருக்கான்.''

''ஒண்ணும் பிரச்சனை இல்லையே.''

''அப்படி எல்லாம் இல்லை ஜோதி. சரியாகிடுவான்.''

''ஈவினிங் பேசும் போது யாரோ ஒருத்தர் அவரோட பேரனுங்கன்னு அழுத்தி அழுத்தி பேசினார். அவர் எங்கே...?'' என்று அவள் அவரை வம்பு இழுக்க,

''அவனுங்களை விட நீ எனக்கு முக்கியம்னு தான் நான் வாழ்ந்துக்கிட்டு இருக்கேன். ஆனா உனக்கு தான் அது புரிய மாட்டேங்குது.'' என்றார்.

''சரி இன்னைக்கு சண்டை போட்ட வரைக்கும் போதும். இப்போ நிம்மதியா போய் தூங்குவோம். குட் நைட்.'' என்று சொல்லி இருவரும் அழைப்பை துண் டித்தனர்.

அடுத்த நாள் மதியம் கம்பெனிக்கு சென்று கண் ணனும் ஜோதியும் தங்கள் வேலைகளை பார்த்தனர்.

அன்று வேலை முடிந்தவுடன் ஜோதி நிர்மல் அறைக்கு சென்றாள். இன்றும் நிர்மலும் விமலும் அந்த அறையில் இருந்தனர்.



''என்ன ஜோதி வேலை முடிஞ்சிடுச்சா?''

''ம்ம்ம் முடிச்சுட்டேன் அண்ணா. பெரியப்பா நேத்து டல்லா போனாரா... அதான் சரியாகிட்டாரா இல்லை யான்னு கேட்டுட்டு போக வந்தேன். எனக்கு நைட் ஃபுல்லா தூக்கமே வரலை.

''இறந்து போன எங்க அப்பா தன் அண்ணனை என்னைக்கும் மறந்ததில்லைன்னு நிரூபிக்க நினைச்சு உயிரோடு இருக்கிற பெரியப்பாவை கஷ்டப்படுத் திட்டேனோ அப்படின்னு மனசாட்சி ரொம்பவே குத்துச்சு.''

''ஹேய்! என்ன பெரிய வார்த்தை எல்லாம் பேசுறே. வா வந்து முதல்ல உட்காரு!'' என்ற நிர்மல் அவள் இருக்கையில் அமர்ந்ததும் பேச ஆரம்பித்தான்.

''எனக்கு என்னவோ உன்னை பார்த்து பேசினத்துக்கு அப்புறம் எங்க அப்பா ரொம்ப தெளிவாயிட்ட மாதிரி தோணுது. 'என் தம்பி என்னை மறக்கலைன்னு' பார்க்கிற எல்லோர்கிட்டயும் திரும்ப திரும்ப சொல்லிக்கிட்டு இருந்தார்.

''ஆனா ஒரே மலரும் நினைவுகள் போல. அப்பப்போ ப்ரீஸ் ஆகிட்டார். தாத்தா கூட முன்னாடியே உன்னை அப்பாகிட்ட கூட்டிட்டு போய் இருக்கலாமோன்னு வருத்தப்பட்டார்னா பார்த்துக்கோ.''

''அப்பாடா! இப்ப தான் நிம்மதியா இருக்கு. பெரி யப்பா எங்கே?''

''அப்பா இங்கே வரமாட்டார். இந்த கம்பெனியை நானும் விமலும் தான் பார்த்துக்கிறோம். அப்பா

அவரோட கம்பெனியை பார்த்துக்குவார். நேத்து உன்னை பார்க்க தான் வந்தார்.''

''ஓ! நான் உங்களை மட்டும் முன்னாடியே பார்த்து இருக்கேன். எங்க காலேஜ் பங்ஷனுக்கு நீங்க வந்தீங்க. நான் ரொம்ப நல்லா இங்கிலீஷ் பேசினேன்னு என்னை கூட பாராட்டினீங்க. உங்களுக்கு என்னை பார்த்த ஞாபகம் இருக்கா?''

''ஹலோ! ஹலோ! நிறுத்து! உன்னை என் தங்கைன்னு தெரிஞ்சதால தான் கை குடுத்து பாராட்டிட்டு போனேன்.''

''உங்க காலேஜ் ஸ்டூடண்ட்ஸுக்கு மட்டும் இங்கே ப்ராஜெக்ட் பண்ண அனுமதி குடுப்பீங்களா?''

''என் காலேஜா? எது?''

''நான் படிச்சுக்கிட்டு இருக்கிற காலேஜ் தான்.''

''அது என்னோட காலேஜ்னு உனக்கு யார் சொன்னா?''

''மேனேஜ்மெண்ட் சார்பா தானே அன்னைக்கு நீங்க அந்த பங்ஷனுக்கு வந்தீங்க?''

''மேனேஜ்மெண்ட் சார்பா... நோட் த பாயிண்ட் மேடம். சார்பா தான் வந்தேன். அந்த காலேஜ் ஓனரா வரலை.''

''அப்போ அந்த காலேஜ் யாருக்கு சொந்தம்?''

''அந்த காலேஜ் உன்னோடது. தாத்தா உன் பேரிலே எழுதி வச்சு இருக்கிற சொத்து.''

''வாட்?!?!?! காலேஜ் என் பேரிலே இருக்கா?'' என்று கேட்டவள் தன் நெற்றியை தட்டிக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தாள்.



''என்ன பலமான யோசனை?''

''நான் நேத்து என்ன தெரியுமா நினைச்சேன்... பெரியப்பா நல்லா சம்பாதிச்சு பெரிய கம்பெனி எல்லாம் வச்சு இருக்கார்னு. இன்னைக்கு நீங்க சொல்லுறதை கேட்டால்... நம்ம தாத்தாவே ரொம்ப பெரிய பணக்காரர் தானா?'' என்று அவள் கேட்டதும், நிர்மலும் விமலும் அடக்க முடியாது சிரித்தனர்.

''சின்ன வயசு கதை எல்லாம் உன்கிட்ட எடுத்து விட்ட சித்தப்பா தன் சொத்து விவரத்தை பத்தி எதுவும் சொன்னதில்லையா?''

''பணத்தை பத்தி அப்பா பேசினதே இல்லை.''

''உங்க அப்பா எங்கே படிச்சாருன்னு உனக்கு தெரியுமா?''

''தெரியாது.''

''அவர் ஆக்ஸ்போர்ட் யுனிவர்சிட்டியில் படிச்சவர். நீ பேசுற ஸ்டைலிஷ் இங்கிலீஷுக்கு காரணம் அதான்.'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது ஒரு பெண் அறைக்குள் நுழைந்தாள்.

''வா நேஹா!'' என்று அவளை வரவேற்ற நிர்மல் ஜோதியிடம் திரும்பி, ''என்னோட வைஃப் நேஹா.'' என்று அறிமுகம் செய்து வைத்தான்.

மனைவியிடமும் ஜோதியை அறிமுகம் செய்து வைத்தான். இருவரும் பரஸ்பரம் ஒரு ஹலோ சொல்லிக் கொண்டார்கள்.

''நீங்க பேசிக்கிட்டு இருங்க. நான் அப்புறமா வரேன்.'' என்று நேஹா கிளம்ப எத்தனிக்க...

''நான் கிளப்புறேன் அண்ணி. நீங்க பேசுங்க.'' என்று ஜோதி எழுந்து கொள்ள,

''இல்ல. எனக்கு வேற வேலை இருக்கு. அதை முடிச் சுட்டு வரேன்.'' என்று கூறி நேஹா வெளியே சென்று விட்டாள்.

''கோபமா போறாங்களோ? இது வரைக்கும் நானோ எங்க அப்பாவோ உங்க சொத்தை பெருக்குவதற்காக எந்த வேலையும் செஞ்சதில்லை. அப்படி இருக்கும் போது சொத்தில் பங்குக்கு மட்டும் வந்தால்... யாருக்கும் ஒரு கோபம் வரும் தானே!''

''சொத்து விஷயமா உன் மேல எங்க யாருக்குமே எந்த கோபமும் இல்லை. நேஹா சட்டுன்னு யார் கூடவும் ஒட்டிக்க மாட்டாள். கொஞ்சம் ரிஸர்வ்ட் டைப். அதான் பேசாமல் விலகிப் போகிறாள். அந்த சொத்து உன் னோடது தான்.''

''அந்த சொத்தில் எனக்கு என்ன உரிமை இருக்கு?''

''நீ ஒரு விஷயத்தை க்ளியரா புரிஞ்சுக்கோ ஜோதி. சித்தப்பா வீட்டை விட்டு வெளியேறின உடனே தாத்தா சொத்தை ரெண்டா பிரிச்சுட்டார். எங்க அப்பா அவரோட சொத்தை மட்டும் தான் நிர்வாகம் பண்ணினார்.

''சித்தப்பாவோட பாகத்தை தாத்தா தான் அப்ப இருந்து இப்ப வரை நிர்வாகம் பண்ணிக்கிட்டு இருக்கார். நாங்க யாரும் அதை மேற்பார்வை கூட பார்த்ததில்லை. அதனால நாங்க யாருமே அந்த சொத்தில் உரிமை கொண்டாட முடியாது.''

''அதே மாதிரி தானே நானும். எந்த வேலையும் செய் யாமல் சொத்தை மட்டும் எப்படி அனுபவிக்க முடியும்?''



''தாத்தாவோட பையன் சித்தப்பாங்கிற போது... அவரோட ஒரே பெண்ணான உனக்கு அந்த சொத்தில் உரிமை கொண்டாட எல்லா ரைட்ஸும் இருக்கு.''

''நீங்க என்ன சொன்னாலும் என்னால ஏத்துக்க முடியலை. நான் கொடுக்கிற சொத்தை ஏத்துக்கோன்னு தாத்தா சொன்ன போதெல்லாம்... சொத்து மதிப்பு என்னன்னே தெரியாமல் வேணாம்னு சொல்லி இருக்கேன். இப்போ தெரிஞ்ச பிறகு... இன்னுமே பெரிய நோ தான் சொல்லுவேன்.

''இப்போ தான் கொஞ்ச நாள் முன்னாடி எங்க அம்மா சைட் எனக்கு குடுத்த சொத்தையும் வேண்டாம்னு சொல்லிட்டு வந்தேன். எங்க அம்மாவும் அப்பாவும் ஒதுக்கி வச்ச சொத்து எனக்கு மட்டும் எதுக்கு?

''தாத்தாக்கு எங்க அம்மாவை சுத்தமா பிடிக்காது. அப்பாவும் மகனும் பிரிய எங்க அம்மா தான் காரணம்னு தாத்தா நினைக்கிறார். எங்க அம்மாவை அவங்க பிறந்த வீட்டு சொந்தமும் ஏத்துக்கலை. புகுந்த வீட்டு சொந் தமும் ஏத்துக்கலை.

''எங்க அம்மாக்கு நல்ல மகள்ங்கிற பட்டமும் கிடைக் கலை. நல்ல மருமகள்ங்கிற பட்டமும் கிடைக்கலை. ஆனா அவங்க ஒரு நல்ல மனைவி. ஒரு நல்ல தாய். இதுல எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

''எங்க அப்பா இறந்த பின்னால அவங்க ரெண்டு வருஷம் வாழ்ந்தது கூட என்னை நினைச்சு தான். அப்பா போன பின்னால எங்க அம்மா கலகலப்பா பேசி கூட நான் கேட்டதில்லை.

"அவங்களுக்கு எங்க அப்பா மேல அவ்வளவு லவ். அப்படி வாழ்ந்த எங்க அம்மாவை வெறுக்கிற தாத்தா கொடுக்கிற எந்த பணமும் எனக்கு தேவை இல்லை." என்றவள் தன் கண்களை மூடி அமைதியானாள்.

ஜோதியிடம் நிர்மல் மட்டும் தான் பேசுவான். விமல் பார்வையாளனாய் தான் அமர்ந்திருப்பான். ஜோதியின் பேச்சை கேட்டு நிர்மலுமே அமைதியானான்.

சில நொடிகள் கழித்து கண்களை திறந்தவள், ''நான் கிளம்புறேன்.'' என்று கூறி விடைபெற்றாள்.

'தாத்தாவும் பிடிவாதமா இருக்கார். இவளும் பிடிவாதமா இருக்காள். இவளுக்கு காலேஜ் விஷயம் தெரிஞ்சுடுச்சு என்றோ, அதை ஏத்துக்க மாட்டேன்னு சொன்னதையோ நாம இப்போதைக்கு தாத்தாகிட்ட சொல்ல வேண்டாம்' என நிர்மல் முடிவு செய்தான்.

ஜோதி பிரகாஷ் கம்பெனிக்கு வரும் போதெல்லாம் ஐந்து நிமிடங்கள் தங்கை மற்றும் அண்ணன்களின் சந்திப்பு நடைபெற ஆரம்பித்தது. அவளது பெரியப் பாவும் அவ்வவப்போது நிர்மலின் கம்பெனிக்கு வந்து அவளை பார்த்துவிட்டு சென்றார்.

ஆனால் மறந்தும் யாரும் வீட்டுக்கு வருகிறாயா என்று ஜோதியிடம் கேட்கவில்லை. அவளும் அது பற்றி பேசவில்லை.

ஜோதி தன் திருமணத்திற்கு பின் தனக்கு சொந்த மான கடையையும் வாடகைக்கு விட்டிருந்தாள். திரு மணத்திற்கு பின் அவளுக்கு செலவிற்கு பணம் தேவைப் படாததால் வீட்டு வாடகையும் கடை வாடகையும் அப்ப டியே வங்கியில் எடுக்க படாமல் இருந்தன.



வெகு சில மாதங்களுக்கு பிறகு அந்த பணத்தை எடுத்து நிர்மலின் குழந்தைக்கு ஒரு தங்க செயின் வாங்கினாள். என்று அவனை சந்திக்க சந்தர்ப்பம் அமைகிறதோ அன்று அதை பரிசளிக்க வேண்டும் என்பது அவளது எண்ணம்.

ஒரு நாள் நேஹா குழந்தையோடு அலுவலகம் வர... ஜோதி அந்த செயினை குழந்தையின் கழுத்தில் அணிவித்து, ''பேபி! இது உன் சின்ன தாத்தாவோட பரிசு. அத்தை சம்பாதிக்க ஆரம்பிச்ச பின்னால உனக்கு தனியா செய்யுறேன்.'' என்று குழந்தையை கொஞ்சி னாள்.

ஜோதி அடிக்கடி நிர்மலின் அறைக்கு சென்று பேசுவதை அலுவலகத்தில் உள்ள யாரும் தவறாக எண்ணவில்லை.

அதற்கு இரு காரணங்கள். நிர்மல் மற்றும் விமல் தங்கள் அலுவலக பெண்களை மிகவும் கண்ணியமாக நடத்துவது ஒரு காரணம். அதனால் தப்பான நோக்கில் அவர்கள் ஜோதியோடு பழக வாய்ப்பில்லை என அலுவலகத்தினர் நம்பினர்.

பெரிய முதலாளியான சூர்யபிரகாஷும் நிர்மலின் மனைவி நேஹாவும் ஜோதியை சந்தித்து பேசுவதால் ஜோதி அவர்களுக்கு ரொம்ப வேண்டப்பட்ட குடும் பத்து பெண் என்று நினைத்தனர்.

இதுவரை யாரையும் ப்ராஜெக்ட் செய்ய அனுமதிக் காத அவர்களது கம்பெனி நிர்வாகம் ஜோதியை மட்டும்

அனுமதித்து இருந்ததால் ஜோதி நிர்வாகத்திற்கு வேண்டப்பட்ட பெண் என்றே முத்திரை குத்தப்பட்டாள்.



## 22

சில மாதங்கள் கடந்திருந்தன. கல்லூரி முடிவதற்கு இன்னும் ஒரு மாதமே இருக்கிறது என்ற நிலையில் வேலை பளு அனைவரையும் அழுத்தியது.

கல்லூரி வாழ்க்கை முடிய போகிறதே என்ற வருத்தத்தில் முடிந்த பொழுதெல்லாம் நண்பர்கள் அனைவரும் ஒன்று கூடி கொட்டமடிக்க ஆரம்பித்தனர். அதனால் நாட்கள் இறக்கை கட்டி பறப்பதை போல் அவர்கள் உணர்ந்தனர்.

'ஜோதி கொஞ்சம் இளகி வந்தது போல் தெரிகிறது. இப்போ தாத்தா அவளிடம் சொத்தை பற்றி பேசினால் அவள் அதை ஏற்கலாம்' என நினைத்த நிர்மல் தாத்தாவிடம் பேசினான்.

''தாத்தா! அந்த காலேஜ் விஷயம்... அது அவளோட பெயரில் இருக்கும் விஷயத்தை நான் ஏற்கனவே ஜோதிகிட்ட சொல்லிட்டேன்.''

''என்ன சொன்னாள்? எனக்கு வேண்டாம்னு சொன்னாளா?''



''ம்ம்ம் அப்படி தான் சொன்னாள். ஆனால் அவள்கிட்ட நிறைய மாற்றம் தெரியுது தாத்தா. நம்மளை எல்லாம் உறவா நினைச்சு பழக ஆரம்பிச்சுட்டாள். எனக்கு என்னவோ இப்போ நீங்க பேசினா சரியா இருக்குமோன்னு தோணுது.''

''ம்ம்ம் பேசி பார்க்கிறேன்.''

அடுத்த நாள் அவளது தாத்தா பேத்தியை தன் இடத்திற்கு வரவழைத்து பேசினார். அந்த அறையில் அவர்கள் இருவரையும் தவிர வேறு யாருமில்லை.

''நிர்மல்கிட்ட காலேஜை ஏத்துக்க முடியாதுன்னு சொன்ன போல!''

''ம்ம்ம் ஆமா சொன்னேன். அது என் காலேஜா எப்படி மாறும்? அது உங்க சம்பாத்தியத்துல நீங்க வாங்கின உங்களோட காலேஜ்.''

''என் பிள்ளை உன் அப்பாவா மாறும் போது என் காலேஜ் உன் காலேஜா மாறாதா?''

''அதையே தான் நானும் கேட்கிறேன். உங்க பிள்ளை என் அப்பாவா மாறின மாதிரி எங்க அம்மா ஏன் உங்க மருமகளா மாறலை?''

''அவளை பத்தி இப்போ எதுக்கு பேசுறே?''

''எங்க அம்மா பத்தி நான் பேசாமல் வேற யார் பேசுவா? எங்க அப்பா உங்களை பார்க்க வராமல் போனாருன்னா அவரை திட்டுங்க. அதுக்கு உங்களுக்கு எல்லா ரைட்ஸும் இருக்கு. எங்க அம்மாவை எதுக்கு திட்டுறீங்க?''

''உயிரோட இல்லாதவனை எங்கே போய் திட்டுறது?''

"எங்க அம்மாவும் தான் உயிரோட இல்லை. அவங்களை மட்டும் திட்டிக்கிட்டே இருக்கீங்க. உங்க பிள்ளை மேல உங்களுக்கு பாசம் இருக்கு. அதான் அவரை திட்ட மனசு வரலை.''

"ஆமா அப்படித் தான். Blood is thicker than water என்று நீ கேள்விப்பட்டதில்லையா?''

"அதே பழமொழியை நானும் சொல்லுவேன். எனக்கும் எங்க அம்மாக்கும் உள்ள உறவு விட்டு கொடுத்திட முடியாத உறவு. எங்க அம்மாவை பழிக்கிற உங்க சொத்து ஒண்ணும் எனக்கு வேண்டாம்.'' என்றவள் அமைதியாக அந்த அறையை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

"நாம என்ன திட்டினாலும் இந்தக் கிழவன் ரோஷம் கெட்டு போய் நம்மகிட்ட திரும்ப வந்து பேசுவான் என்ற தெனாவட்டு உனக்கு.''

"இல்லை தாத்து! என்னால முடியலை. உங்க கூட போராடி நான் களைச்சு போயிட்டேன். இந்த சொத்துக்கள் பத்தி பேசாமல், எங்க அம்மா பத்தி திட்டாமல் ஒரு தாத்தாவா என்கிட்ட பாசமா ஏதாச்சும் பேசி இருக்கீங்களா?''

"அப்போ உன் மேல எனக்கு பாசம் இல்லைன்னு சொல்லுறியா? பாசம் இல்லாமல் தான் உன் சொத்தை பெருக்கி வச்சு இருக்கேனா?''

"திரும்பவும் சொத்தா? இந்த பணம் காசு... இதெல்லாத்தையும் மறந்துடுங்க தாத்து!''



சில நிமிடங்கள் அங்கே அமைதி நிலவியது.

அந்த அறையில் அவளது பெரியம்மா பெரியப்பாவின் படம் மாட்டப்பட்டு இருந்தது. அது அவர்களின் திருமண தினத்தன்று எடுக்கப்பட்ட புகைப்படம் போலும். கழுத்தில் மாலையுடன் நின்றிருந்தனர்.

அவள் தன் இருக்கையில் இருந்து எழுந்து அந்த புகைப்படத்தின் அருகே சென்று அதை ஊன்றி கவனித்தாள்.

சூர்யபிரகாஷ் அவளை தேடி வந்து பல முறை பார்த்திருக்கார். ஆனால் அவர் ஒரு நாளும் தன் மனைவியை அழைத்து வந்ததில்லை.

'இது தான் என்னோட பெரியம்மாவா? இது எடுத்து பல வருஷம் ஆகி இருக்கும். இப்போ எப்படி இருப்பாங்க?' என நினைத்துக் கொண்டே அந்த புகைப் படத்திலேயே லயித்து இருந்தாள்.

''தாத்து! கேட்க மறந்துட்டேன் என் பர்த் டே அன்னைக்கு பெரியப்பாக்கும் பெரியம்மாக்கும் கல்யாண நாளா?''

அவர் இல்லை என்று தலை அசைத்து மறுத்தார்.

''அப்போ நிர்மல் அண்ணாக்கா?''

''இல்லை.'' என்று அவர் திரும்பவும் மறுக்கவும்

''ஒனரோட கல்யாண நாள்னு காலேஜ் மொத்தமும் லட்டு குடுத்தாங்களே! நீங்க என்னடான்னா எதை கேட்டாலும் இல்லைன்னு சொல்லுறீங்க.'' என்று கடுப்பானாள்.

''அன்னைக்கு என் பேத்திக்கு பிறந்த நாள். அதுக்கு தான் நான் மொத்த காலேஜ்க்கும் லட்டு குடுத்தேன். என்னை பார்த்துட்டு போனதால அவள் கிளாஸ்க்கு லேட்டா போனாள்.

''கேக் வெட்ட முடியாமல் போயிடுமேன்னு கிளாஸ் பதினைஞ்சு நிமிஷம் தள்ளி ஆரம்பிக்கும்னு சொல்ல வச்சேன்.

''உன் அப்பா போன பின்னாடி நீ போடுற டிரஸிலே கூட என்னோட பங்கு இருக்கு. நீ போடுறியே டிரஸ். அதை எங்கே வாங்குவே? பாந்தியன் ரோட்டிலே தான் சீப்பா கிடைக்கும்னு அங்கே போய் தானே வாங்குவே.

''அந்த இடத்திலே உனக்காக இந்த தாத்தா ஒரு கடை போட்டு இருக்கேன். அந்த ஆள் உனக்கு மட்டும் ஸ்பெஷலான துணிகளை காட்டுவான். ஆயிரக் கணக்கில் பெறுமான உள்ள துணிகளை பெரிய பொட்டிக் ஷாப்பில் இருந்து வாங்கிட்டு வந்து உனக்கு காட்டுவான். நீயும் அதை நீ சில நூறு ரூபாய் குடுத்து வாங்கிட்டு போவே.''

'அடப்பாவமே! அதான் என் டிரஸ் மட்டும் சீப் அண்ட் பெஸ்ட்டா இருக்கா? அதனால தான் அந்த கடையை தேடிப் போன கீர்த்திக்கு என் அளவிற்கு சீப்பா டிரஸ் கிடைக்கலையா?' என மனதிற்குள் கேட்டுக் கொண்டாள்.

அவள் தாத்தா மேலும் பேசினார்.

''நான் உடம்பு சரி இல்லாமல் படுத்த சில நாளில் நீ உன் வாழ்க்கையிலே மிகப் பெரிய முடிவை



எடுத்துட்டே! என்னை கேட்காமல் கல்யாணம் பண்ணிட்டே! இதுக்கு மேல உன்னை தள்ளி நின்னு கவனிச்சால் சரியா வராதுன்னு நினைச்சு உனக்குன்னு ஒரு காரும் அதுக்குன்னு ஒரு டிரைவர் மற்றும் பாடிகார்டும் ஏற்பாடு பண்ணினேன்.

''அவங்களோட வேலையே உன்னை தொந்தரவு பண்ணாமல் உன் பின்னால வருவது. அது நீ தனியா போனாலும் சரி ஸ்ரீதர் கூட போனாலும் சரி. அன்னைக்கு அந்த கலவரம் நடந்த போது உன்னை பிக் பண்ண வந்தவங்க தான் உன் பின்னாலே தினமும் சுத்துற ஆளுங்க.

''நீ ஒரு நாள் ஸ்கூட்டி மக்கர் பண்ணிடுச்சுன்னு நடுவழியில் நின்ன போது அதனால தான் அவங்க உடனே வந்து அதை சரி பண்ணி தந்தாங்க. இன்னும் நிறைய இருக்கு. இதெல்லாம் நான் என் பேத்தி மேல உள்ள பாசத்தில் பண்ணலை.'' என்று அவர் கிண்டலாய் கூறினார்.

அவர் சொல்ல சொல்ல அவளுக்கு ஆச்சரியம் கூடிக் கொண்டே போனது.

ஜோதிக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. அவள் தன் கைகளில் முகம் புதைத்து அழ ஆரம்பித்தாள்.

அவள் அழுவது பொறுக்காமல் பிரகாஷ் அவளை நெருங்கி அவளை தன் மேல் சாய்த்துக் கொண்டார். அவளை சில நிமிடங்கள் அழ விட்டவர் பின் அவளது முகத்தை நிமிர்த்தி தன் கைக்குட்டையால் முகத்தை துடைத்து விட்டார்.

''எதுக்குடா அழறே? தாத்தா என்ன செய்யணும்னு சொல்லு? உனக்காக மட்டும் தான்டா நான் உயிரோட இருக்கேன். அது ஏன் உனக்கு புரியலை.''

''நான் சின்ன பொண்ணு தானே! என்னால முடியலை தாத்து! எது சரி எது தப்பு... ஒண்ணும் புரியலை. ஆனா என்னால அம்மாவை வெறுக்க முடியாது தாத்து. எனக்காக என் முன்னாடி இனிமேல் அம்மா பத்தி நீங்க தப்பா பேசாதீங்க.''

''உங்க அம்மா பத்தி நான் தப்பா நினைச்சுட்டேன். அவ நல்லவள். அவளை ஏத்துக்காமல் தப்பு பண்ணிட்டேன் அப்படின்னு பொய் சொல்லி உன்னை எப்பவோ என்னோட கூட்டிட்டு போய் இருக்க முடியும். ஆனா நான் ஏன் தெரியுமா அப்படி செய்யலை?

''மனசு முழுக்க உங்க அம்மா மேல எனக்கு இருக்கிற கோபம் என்னைக்காவது என் பேச்சிலே கண்டிப்பா வெளிப்படும். அன்னைக்கு நீ என்னை விட்டுட்டு போயிடுவே! மொத்தமா என்னை விலக்கி வச்சுடுவே!

''அதுக்கு பயந்து தான் நான் அப்படி ஒரு பொய்யை சொல்லாமல் நீயா மனசு மாறுவேன்னு பொறுமையா காத்திருக்கேன்.

''ஆனா நீ இப்படி அழுறதை பார்த்த பின்னால நான் உனக்கு ஒரு உறுதி தரேன்டா. நான் இனிமேல் உன் அம்மா பத்தின பேச்சை பேச மாட்டேன். சரியா? என்னை நானே கண்ட்ரோல் பண்ணிக்கிறேன்.''

''தாங்க்ஸ் தாத்து! எனக்கு மட்டும் பிறந்த வீட்டு உறவா யார் இருக்கா? உங்க கூட பேசணும். செல்லமா



சண்டை போடணும். ஊரை சுத்தி பார்க்கணும். நாள் முழுசும் உங்களோடவே இருக்கணும். இப்படி நிறைய ஆசைகள் எனக்கும் இருக்கு தாத்து. ஆனா நீங்க இத்தனை நாளா அது எதையும் என்னை செய்ய விடலை.''

''இனிமேல் செஞ்சுட்டால் போச்சு.''

''முன்னாடியாவது நான் தனி ஆள். இப்போ நான் எங்கே போகிறதா இருந்தாலும் ஸ்ரீதர்கிட்ட சொல்லிட்டு போகணும். சோ என்னோட ஆசைகளை மூட்டை கட்டி வச்சுடலாம்.''

''உனக்கு உன் தாத்தா பத்தி சரியா தெரியலை.''

'' தெரிய வைக்கலைன்னு சொல்லுங்க.''

''தெரிய வைக்க நான் ரெடி. நீ ரெடியா?''

''எஸ் தாத்து. வீட்டிலே உள்ள யாருக்கும் தெரியாமல் நாம ரெண்டு பேர் மட்டும் ஊர் சுத்தணும். உங்களால என்னை அப்படி கூட்டிட்டு போக முடியுமா?''

''உன்னோட சவாலை நான் ஏத்துக்கிறேன்.''

''நீங்க எவ்வளவு பெரிய ஆள்னு நானும் பார்க்கிறேன் தாத்து.'' என்று சொல்லி விடைபெற்றாள்.

அடுத்த நாள் மாலை அவள் தாத்தா பேத்திக்கு போன் செய்து பேசினார்.

''நாளைக்கு காலையிலே தாத்தா கூட ஊர் சுத்தி பார்க்க ரெடியாகிக்கோ. காலையிலே சீக்கிரமே போறோம். நைட் எட்டு மணிக்கெல்லாம் உன் வீட்டுக்கு நீ திரும்பி போயி டுறே! இப்படியே மூணு நாள் நாம ஊர் சுத்துறோம். உன்

மாமியார்கிட்ட பிரண்டோட கம்பைன் ஸ்டடி... ப்ராஜெக்ட்... இப்படி என்ன கதை அளக்கலாம்னு யோசிச்சு வச்சுக்கோ.''

''தாத்து! பிளான் நல்லா தான் இருக்கு. அத்தை நான் என்ன சொன்னாலும் நம்புவாங்க. ஆனா ஸ்ரீதர்... நம்ப மாட்டார். அதுவும் என் விஷயம்னா ஆயிரம் கேள்வி கேட்பார்.''

''மாப்பிள்ளை தான் ஊரிலேயே இருக்க மாட்டாரே. இன்னும் மூணு நாள் அவருக்கு ஹைதிராபாத்ல வேலை இருக்கு.''

''அங்கே என்ன செய்ய போறார்?''

''நம்ம காலேஜ் சார்பா அவருக்கு வேலை அலாட் பண்ணியாச்சு.''

''கலக்குறீங்க தாத்து.''

''அவர் கிளம்பின அஞ்சாவது நிமிஷம் நீயும் கிளம்பி வெளியே வரே! தெரு முனை வரைக்கும் நடந்து வா. மீதியை நான் பார்த்துக்கிறேன்.''

''ரைட் தாத்து!'' என்று கூறி அழைப்பை துண்டித்தாள்.

''அத்தையை ஈஸியா சமாளிச்சுடுவேன். அஸ்வின் சார் நான் காலேஜ் வரலைங்கிற விஷயத்தை ஸ்ரீதர் கிட்ட போட்டு குடுக்க சான்ஸ் இருக்கு. என்ன காரணம் சொல்லலாம்?''

'ப்ராஜெக்ட் வேலையா வெளியே போறேன்னு சொன்னால் யாருக்கும் சந்தேகம் வராது. ஏற்கனவே



எல்லோரும் அப்படி தான் அலைஞ்சுக்கிட்டு இருக்காங்க.'

'ஆனால் என் ப்ராஜெக்ட் மேட் கண்ணன் கிளாஸ்க்கு வருவானே! அவனை எப்படி சமாளிக்கிறது? யோசிக்கலாம் ஜோதி' என்று தனக்கு தானே சொல்லிக் கொண்டாள்.

அடுத்த அரை மணி நேரத்தில் கண்ணன் போன் செய்தான்.

''ஜோதி! எனக்கு காலையிலே கண்ணு உறுத்தலா இருக்குன்னு சொல்லிக்கிட்டு இருந்தேன்ல.''

''நான் உன்னை டாக்டர்கிட்ட போக சொன்னேன்ல கண்ணன். போனியா?''

''போனேன். இப்போ கண்ணு சிவந்திடுச்சு. கண்ணு சரியாகிற வரைக்கும் என்னால காலேஜ் வர முடியாது. உங்களால தனியா சமாளிக்க முடியுமா?''

''நோ ப்ராப்ளம் கண்ணன். டேக் ரெஸ்ட்.'' என்று கூறி அழைப்பை துண்டித்தவள் 'யாஹூ!' என்று கத்தினாள்.

தாரிகாவும் தீப்தியும் உறவினர் திருமணத்திற்காக மதுரை வரை சென்றிருந்தனர். தருண் திருமணத்தன்று மட்டும் மதுரை செல்வதாக இருந்தான்.

அன்று வீடு வந்த ஸ்ரீதர் சோகமாக இருந்தான். ஜோதி தெய்வநாயகியின் அருகே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தாள். ஸ்ரீதர் மனைவியை சோகமாய் ஏறிடுவதும் பின் தொலைக்காட்சியை பார்ப்பதுவுமாக இருந்தான்.

ஜோதிக்கு அவனது வருத்தத்திற்கான காரணம் தெரிந்ததால், 'அச்சோ! பாவம் பிள்ளை!' என்று மனதிற்குள் கணவனை கொஞ்சிக் கொண்டாள்.

''என்னடா ஸ்ரீதர் சோகமா இருக்கே?'' என்று தெய்வநாயகி கேட்க,

'ஆஹா! எனக்கு ஷாக்கிங் ரியாக்ஷன் குடுக்க வராதே! பேசாமல் அவருக்கு முதுகு காட்டி நின்னுடலாம்' என நினைத்தவள் சாப்பாட்டு மேஜை நோக்கி செல்ல ஆரம்பித்தாள்.

செல்லும் அவளையே பார்த்துக் கொண்டு, ''மூணு நாள் காலேஜ் விஷயமா ஹைதிராபாத் போறேன்மா.'' என்றான்.

'இப்போ நான் நடையை நிறுத்தணும். அது ஷாக்கிங் ரியாக்ஷன்ல வரும் தானே?' என தனக்கு தானே கேட்டுக் கொண்டவள் தன் நடையை நிறுத்தி அதே இடத்தில் நின்றாள்.

'முகத்தை சோகமா வச்சுக்கிட்டு திரும்பணும். ஜோ சிரிச்சு காரியத்தை கெடுத்திடாதே!' என்று தனக்கு தானே அறிவுறுத்திக் கொண்டு மெல்ல திரும்பி அவனை பார்த்தாள்.

'ஐயோ பயபுள்ளை சோக ரசத்தை இப்படி பிழியுறானே! பாசத்தை டன் டன்னா கொட்டுறானே. பாவம்' என்று நினைத்த பொழுது இயற்கையாகவே அவளது முகம் பரிதாபத்தை காட்டியது.

இரவு உணவை உண்டு முடித்தவன், ''அம்மா! நான் காலையில் சீக்கிரமே கிளம்பிடுவேன். எனக்கு சாப்பாடு



எதுவும் தேவை இல்லை. அதனால நீங்க எழுந்துக்க வேண்டாம். இப்பவே சொல்லிக்கிறேன். பை. ஊருக்கு போயிட்டு வந்து பார்க்கிறேன்.'' என்று சொல்லிவிட்டு மாடியேறினான்.

இரு நிமிடங்களுக்கு பின் ஜோதி தன் மாமியாரிடம் வந்து, ''அத்தை! நான் காலையிலே கோவிலுக்கு போறேன். காலேஜ்ல வேலை அதிகமா இருக்கு. அதனால கோவிலில் இருந்து அப்படியே காலேஜ் போயிடுவேன்.'' என்று சொல்லிவிட்டு சென்றாள்.

அறைக்குள் நுழைந்தவளிடம், ''ஜோ குட்டி! நான் இல்லாமல் தனியா இருந்துடுவியா?'' என்று ஸ்ரீதர் சோகமாய் கேட்டான்.

''ஸ்ரீ! உங்களுக்கே தெரியும்... நான் எவ்வளவு பிஸின்னு. மூணு நாள் மூணு மணி நேரமா ஓடிடும் ஸ்ரீ.''

''ப்ச்... எனக்கு உன்னை விட்டுட்டு போக மனசே இல்லை. காலையில் ஆறு மணிக்கெல்லாம் நான் கிளம்பணும். ஏதாச்சும் சொல்லுடா ஜோ.''

'நீங்க ஊருக்கு போறதுக்கு காரணமே நான் தான். இதுல நான் என்னத்தை சொல்ல? உனக்கு சுத்தமா நடிக்க தெரியலை ஜோதி' என்று தன்னை தானே மனதிற்குள் குட்டிக் கொண்டு அமைதியாக இருந்தாள்.

''உனக்கும் வருத்தமா தானே இருக்கும். ஏற்கனவே தீபு குட்டியும் ஊரில் இல்லை. தனியா எப்படி சமாளிக்க போறியோ?'' என்று அவன் அவளுக்காக வருத்தப்பட,

ஜோதிக்கு குற்ற உணர்வு தோன்றியது. அதனால் அவளது முகம் கூம்பியது.

“ஸாரிடா. பேசி பேசி உனக்கு இன்னும் டென்ஷன் ஏத்துறேனா? நீ உன் படிப்பை பாருடா. நான் பெட்டி அடுக்கிற வேலையை பார்க்கிறேன்.” என்றவன் தன் வேலையை பார்க்க ஆரம்பித்தான்.

பெட்டியை பேக் செய்து ஓரமாய் வைத்து விட்டு மனைவியின் அருகே வந்தான்.

புத்தகம் ஒன்றை பிரித்து வைத்து படித்துக் கொண்டிருந்தவளின் அருகே வந்து ஒட்டி உராய்ந்தவாறு அமர்ந்து கொண்டான். அவள் தோள் மேல் கை போட்டு தன்னோடு அணைத்து கொண்டான்.

“என்ன ஸ்ரீ பண்ணுறீங்க?”

“நான் ஒண்ணும் பண்ணலை. நீ பாட்டுக்கு படி.”

“விளையாடாதீங்க ஸ்ரீ. நீங்க ஸ்லீவ்லெஸ் போட்டுட்டு தூரமா உட்கார்ந்து இருந்தாலே நான் உங்களை அப்படி சைட் அடிப்பேன். இதுல பக்கத்துல உட்கார்ந்துகிட்டு என்னை உரசினால் நான் எப்படி படிப்பேன்?”

“இன்னைக்கு ஒரு நாள் படிக்கலைன்னால் ஒண்ணும் ஆகிடாது. அந்த புக்கை மூடி வை.” என்று சொன்னவன் அதை வாங்கி ஓரமாய் வைத்தான்.

“இதை சொல்லுறது ஸ்ரீதர் சாரா?” என்று அவள் ஆச்சரியப்பட

“இல்லை ஜோவோட ஸ்ரீ.” என்று கூறி கண்ணடித்தான்.

அவளை இழுத்து தன் மடி மீது அமர்த்திக் கொண்டு, “நான் இந்த டிரஸ் போட்டால் உனக்கு ரொம்ப பிடிக்குமா ஜோ?” என்று கேட்டான்.



தன் கைகளால் அவன் கழுத்தை வளைத்து கொண்டு, “ம்ம்ம் யூ லுக் யங். ஆர்ம்ஸ் எல்லாம் காட்டிக்கிட்டு செம மேன்லியா இருப்பீங்க.” என்றாள்.

“அப்போ ஏன் இத்தனை நாளா இதை நீ என்கிட்ட சொல்லவே இல்லை?

“சொன்னால் உடனே என்ன செய்வீங்க ஓ நான் உன்னை டெம்ப்ட் பண்ணுறேனான்னு கேட்டுட்டு அப்புறமா அந்த டிரஸை போடவே மாட்டீங்க.” என்றதும் புன்னகைத்தான்.

“என்னை ரொம்ப சரியா புரிஞ்சு வச்சிருக்கடா ஜோ.” என்று அவளது நெற்றியில் முட்டியவன் அவள் கழுத்து வளைவில் முகம் புதைத்து கொண்டு அமைதியாய் இருந்தான்.

“என்ன பண்ணுறீங்க ஸ்ரீ? தூங்குறீங்களா?”

“உன்னை பார்க்காமல் மூணு நாள் இருக்கணும்ல. அதான் என்னோட பேட்டரியை சார்ஜ் பண்ணுறேன்.”

“சார்ஜிங் என்ற பேரிலே என்னை நல்லா உசுப்பேத்துறீங்க ஸ்ரீ.”

அவளது காது மடலை கடித்தவாறு, “நான் உன்னை ரொம்ப ஏங்க விடுறேனா ஜோ குட்டி?” என்றான்.

“ரொம்பபபபப...” என்று அவள் கிறக்கமாய் சொல்லவும் அவளை இறுக்கி அணைத்துக் கொண்டான்.

“நான் உன்னை விட அதிகமா ஏங்குறேன்டா. அதை வெளியிலே காண்பிச்சு உன் படிப்பை கெடுத்துடக்

கூடாதேன்னு என்னை நானே கண்ட்ரோல் பண்ணிக் கிறேன். கொஞ்ச நாள் பொறுத்துக்கோடா. உன் எக்ஸாம் எல்லாம் முடியட்டும்.''

'ப்ச் இந்த டயலாக்கை கேட்டு கேட்டு எனக்கு சலிச்சு போச்சு' என நினைத்தவள் ஒன்றும் சொல்லாமல் அவனோடு ஒன்றிக் கொண்டாள்.

## 23



**கா**லையில் ஸ்ரீதர் வெளியேறிய ஐந்து நிமிடங்களில் அவளும் வீட்டை விட்டு கிளம்பினாள். கல்லூரி பையை மட்டும் மாட்டிக் கொண்டு சென்றாள். தெரு முனையில் அவளது தாத்தா காத்திருந்தார்.

''ஏன்டா ஒரு மாதிரி இருக்கே?''

''ஸ்ரீதர் என்னை விட்டுட்டு போறதுக்கு அவ்வளவு வருத்தப்பட்டார். எனக்கு ஒரு மாதிரி கில்ட் ஆகிடுச்சு தாத்து. அதான்.''

ஐந்து நிமிட அமைதிக்கு பின் சகஜமானாள். நேற்று வீட்டில் என்னவெல்லாம் நடந்தது என்று சொல்லிக் கொண்டே வந்தாள்.

தாத்தாவிற்கு அவரது அலைபேசியில் குறுஞ்செய்தி வந்த வண்ணம் இருந்தது. அவர் அதை எடுத்து பார்ப்பதும் பேத்தியிடம் பேசுவதுமாக வந்தார்.



கார் விமான நிலையத்துக்குள் நுழைந்தது.

''தாத்து! நாம ஏர்போர்ட்டுக்கு எதுக்கு வந்திருக் கோம்?''

''நாம பிளைட்டில் போகப் போறோம்டா.''

''பிளைட்டிலா? நானா? இன்னைக்கு யார் முகத்திலே முழிச்சேன்? இப்படி அதிர்ஷ்டக் காத்து என் பக்கம் அடிக்குது.''

''நீ நினைச்சா தினமும் கூட நீ பிளைட்டில் போயிட்டு வரலாம்டா.''

''தாத்து! சொத்து பத்தின பேச்சுக்கு தடா போட்டு இருக்கேன். ஞாபகம் வச்சுக்கோங்க. ஸ்ரீதர் இங்கே தானே இருப்பார். நாம எப்படி உள்ளே போக முடியும்?''

''ம்ம்ம் மாப்பிள்ளை போர்டிங் பாஸ் வாங்கிட்டார். செக்யூரிட்டி செக்கும் முடிச்சுட்டார். அவருக்கு கேட் திறந்ததும் நாம உள்ளே போவோம்.''

''ஸ்ரீதர் என்ன செய்யுறாருன்னு உங்களுக்கு எப்படி தெரிஞ்சது?'' என்றதும் கைப்பேசியை எடுத்து காண்பித்தார்.

''அவரை பத்தி தான் மெசேஜ் வந்துகிட்டே இருக்கா?'' என்றதும் ஆமாம் என தலையாட்டினார்.

அவர்கள் விமானத்தில் ஏறி அமர்ந்ததும், ''என்னோட ஃபர்ஸ்ட் பிளைட் ஜர்னி. அதுவும் பிசினஸ் கிளாஸில். ஹையோ!'' என்று குதூகலித்த பேத்தியை கண்டு அவர் மனம் நிறைந்தது.

''தாத்து! நாம இப்போ மும்பை போய் என்ன செய்ய போறோம்?''

''என்ன வேணா செய்யலாம். பானி பூரி சாப்பிட லாம்...'' என்று அவர் தொடங்கவும்,

''ஆமா சென்னையிலே பானி பூரி கிடைக்காது. அதனால பிசினஸ் கிளாஸில் டிராவல் பண்ணி மும்பை போய் சாப்பிடலாம்.'' என அவள் இடக்கு பண்ணினாள்.

''இல்லைடா உன்னை பிளைட்டில் கூட்டிட்டு போய் அசத்தணும்னு நான் நினைச்சேன்.''

''உங்களால எல்லா இடத்துக்கும் அலைய முடியுமா தாத்து? உங்களுக்கு கால் வலிக்காதா?''

''ரொம்ப தூரம் நடக்கிற மாதிரி இடத்துக்கு நாம போக வேண்டாம். சரியா? சென்னைன்னா நமக்கு தெரிஞ்சவங்க யாராச்சும் இருப்பாங்க. ஃப்ரீயா இருக்க முடியாது. அதான்..'' என்றதும் அவள் ஒத்துக் கொண்டாள்.

அன்று முழுவதும் தாத்தாவும் பேத்தியும் ஒன்றாய் கொட்டமடித்தார்கள்.

''உன் கூட சேர்ந்து எனக்கு நாப்பது வயசு குறைஞ்ச மாதிரி இருக்குடா.''

''இருக்கும் தாத்து! ஆனா என்னை பாருங்க. ஹனி மூன் போகிற வயசிலே ஒரு கிழவன் கூட சுத்துறதுக்கு என் புருஷனை கழட்டி விட்டுட்டு வந்திருக்கேன்.'' என்று கூறி கண்ணடித்தாள்.

மாலை ஆறரை மணிக்கு சென்னை வந்து சேர்ந் தார்கள்.

''தாத்து! நாம நாளைக்கு சென்னையிலே சுத்து வோமா?''



''ஏன்டா? பிளைட் பிடிக்கலையா? அதிகமா செல வாகும்னு பார்க்கிறியா?''

''அப்படி இல்லை. வீட்டுக்கு தெரியாமல் வெளி யூருக்கு போகிறது ஒரு மாதிரியா இருக்கு.''

''சரிடா. நாளைக்கு சென்னையிலே இருப்போம்.''

''பீச்...'' என்று ஆரம்பித்தவள், ''வேணாம் உங்களால மண்ணிலே நடக்க முடியாது. உட்கார்ந்து பேசுற மாதிரி யான இடத்துக்கு போவோமா?'' என்றாள்.

''போகலாம். எத்தனை மணிக்கு உன்னால வெளியே வர முடியும்?''

''வீட்டுக்கு போனதும் போன் பண்ணி சொல்லுறேன்.''

ஏழே முக்கால் மணிக்கு அவள் வீட்டின் அருகே இறக்கி விட்டார்.

''குட் நைட். போன் பண்ணுறேன்.'' என்று சொல்லி வீட்டை நோக்கி நடந்தாள்.

''வந்துட்டியாம்மா? இன்னும் காணலையேன்னு பார்த்துக்கிட்டு இருந்தேன்.'' என்று தெய்வநாயகி கூறினார்.

''ஸாரி அத்தை. கொஞ்சம் லேட் ஆகிடுச்சு. ரொம்ப டயர்டா இருக்கு. நான் சாப்பிட்டுட்டு தூங்க போறேன்.''

''நாங்களும் தூங்க வேண்டியது தான். நானும் மாமா வும் காலையில் ஆறரை மணிக்கு கோவிலுக்கு போக போறோம். சீக்கிரம் படுக்க போகணும். அப்போ தான் காலையில் எழுந்துக்க முடியும்.''

''தருண் மாமா வந்துட்டாரா?''

''அவன் ஊருக்கு போயிட்டான்மா.''

''நாளைக்கு நைட் தானே கல்யாணத்துக்கு போகிறதா இருந்தார்.''

''பிசினஸ் விஷயமா கோயம்புத்தூர் கிளம்பி போயிட்டான். அங்கே இருந்தே மதுரைக்கு போயிடுவான்.''

சாப்பிட்டு முடித்தவள் தங்கள் அறைக்கு சென்றாள். காலையில் இருந்து அவ்வப்போது இரு நிமிடங்கள் ஸ்ரீதர் அவளை போனில் அழைத்து பேசிக் கொண்டு தான் இருந்தான்.

'வீட்டுக்கு வந்தாச்சு. இனி அவர் கூப்பிட்டாலும் பிரச்சனை இல்லை' என நிம்மதியாக உணர்ந்தாள்.

தானே அவனுக்கு அழைத்து பார்த்தாள். லைன் கிடைக்கவில்லை.

'ரொம்ப டயர்டா இருக்கேன். உங்களுக்கு லைன் கிடைக்கலை. காலையில் பேசுறேன்' என்று குறுஞ் செய்தி அனுப்பி வைத்தாள்.

தாத்தாவிற்கு போன் செய்து, ''ஏழு மணியில் இருந்து நான் ஃப்ரீ. நீங்க தூங்கி எழுந்த பின்னால கிளம்பி வாங்க!'' என்றாள்.

''என் பேத்தி கூட சுத்துறதை விட எனக்கு தூக்கம் முக்கியமா? நீ தான் இன்னைக்கு நிறைய தூரம் நடந்தே! அதனால நல்லா தூங்கி ரெஸ்ட் எடு. தூங்கி எழுந்ததும் தாத்தாக்கு போன் பண்ணு. அதுக்கு அப்புறமா தாத்தா கிளம்பி உன்னை கூப்பிட வரேன்.''



''ஓகே. குட் நைட்.''

படுக்கையில் படுத்தவளுக்கு தூக்கம் சொக்கியது. அங்கே ஹைதிராபாத்தில் வேலையை முடித்து கொண்டு தன் மனைவிக்கு ஸ்ரீதர் அழைக்க நினைத்த பொழுது இங்கே ஜோதி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.

மனைவியிடம் இருந்து வந்திருந்த குறுஞ்செய்தியை வாசித்தவன், 'ஒரு தடவை கூப்பிட்டு பார்ப்போம். ரெண்டு ரிங் போனதும் கட் பண்ணிடுவோம். முழிச்சு இருந்தால் அவளே கூப்பிடுவாள்' என முடிவு செய்து அழைத்துப் பார்த்தான்.

பத்து நிமிடங்கள் அவன் தன் போனை கையில் பிடித்துக் கொண்டு காத்திருந்தும் அவளிடம் இருந்து அழைப்பு வரவில்லை என்றதும் அவன் தூங்க சென்றான்.

மறுநாள் காலை ஏழு மணிக்கெல்லாம் ஜோதி தயாரானாள். ஸ்ரீதரை அழைத்து இரு நிமிடங்கள் பேசினாள். அவனுக்கு அவ்வளவு தான் நேரம் இருந்தது.

ஏழே கால் மணிக்கு தன் தாத்தாவிற்கு போன் செய்து, குட்மார்னிங் தாத்து! என்றாள்.

''குட்மார்னிங்டா. நல்லா தூங்கினியா?''

''நல்லா தூங்கி எழுந்து பிரஷா இருக்கேன். எப்போ போகலாம்?''

''நீ ரெடியாக எவ்வளவு நேரம் ஆகும்?''

''இப்பவே ரெடியா தான் இருக்கேன்.''

''அப்போ வீட்டை விட்டு உடனே வெளியே வா. தாத்தா ஏழு மணிக்கே உன் தெரு முனைக்கு வந்துட் டேன்.''

''அச்சோ தாத்து! எனக்கு போன் பண்ணி இருக்கலா மில்ல. ரெண்டு நிமிஷம் வெயிட் பண்ணுங்க. வீட்டை பூட்டிட்டு வரேன்.'' என்றவள் வீட்டை பூட்டிக் கொண்டு கிளம்பினாள்.

கார் முதலில் ஒரு உயர்ரக உணவு விடுதிக்கு சென்றது. அங்கே உணவருந்தி முடித்துவிட்டு அவளை ஒரு பண்ணை வீட்டிற்கு அழைத்து சென்றார்.

அங்கே இரு கட்டிலும் நான்கு நாற்காலிகளும் போடப்பட்டு இருந்தன. அவர் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டார்.

''நீ இந்த ஃபார்ம் ஹவுஸை ஒரு சுத்து சுத்திட்டு வரியா?''

அவள் நின்ற இடத்தில் இருந்து கொண்டே சுற்றிப் பார்த்தாள்.

''தாத்து! ஐயோ! என்ன சூப்பரா இருக்கு. அமைதியா... சுத்திலும் மரமா... கூலா இருக்கு. அந்த மாமரத்தில் இருந்து ஒரு திருட்டு மாங்கா பறிப்போமா? ஆமா இது யாரோட இடம்?''

''நம்மளோட ஃபார்ம் ஹவுஸ்டா.''

''நீங்க பெரிய ஆள் தான் தாத்து! ஃபார்ம் ஹவுஸ் எல்லாம் வச்சு இருக்கீங்க. அப்போ திருட்டு மாங்காய் அடிக்க முடியாதா?''



''நீயா ஒரு மாங்காயை கல்லை எடுத்து அடிச்சு கீழே விழ வை பார்ப்போம்.''

''சவாலா? இந்த ஜோதிக்கே சவாலா?'' என்றவள் களத்தில் இறங்கினாள்.

ஐந்து நிமிடங்கள் கடந்தும் அவளால் மாங்காயை பறிக்க முடியவில்லை.

''ப்ச் எனக்கு இதுல எக்ஸ்பீரியன்ஸ் இல்லை தாத்து! வேணாம் விட்டுடலாம்.'' என அவள் சோர்ந்து போன வளாய் அவர் அருகே இருந்த நாற்காலியில் அமர்ந் தாள்.

கார் வரும் சப்தம் கேட்டது. அவள் திரும்பி பார்த் தாள். ஒரு கார் அவர்கள் இருக்கும் திசை நோக்கி வந்து கொண்டிருந்தது.

''தாத்து! யாரோ வராங்க.''

''ம்ம்ம் உன் பெரியப்பா தான்டா. நம்ம கூட இருக் கிறதுக்காக வரான்.''

''ஹை சூப்பர்!'' என்றவள் எழுந்து சென்று பெரியப் பாவை வரவேற்றாள்.

மூவரும் அந்த மர நிழலில் அமர்ந்து கொண்டு அரட்டையில் ஈடுபட்டனர்.

''தாத்து! உங்க ரெண்டு பிள்ளைகளோட திருட்டுத் தனத்தை நான் சொல்லட்டுமா?''

''என் பிள்ளைகளோட திருட்டுத்தனமா? என் பிள் ளைங்க தங்க கம்பிங்க!'' என்றதும், அவளது பெரியப்பா சட்டை காலரை தூக்கி விட்டுக் கொண்டார்.

''பெரியப்பா! அப்படி எல்லாம் அவசரப்பட்டு சட்டை காலரை தூக்கி விடக் கூடாது.'' என்று சூர்யபிரகாஷிடம் சொன்னவள்,

தாத்தாவிடம் திரும்பி, ''உங்க ரெண்டு பசங்களும் உங்களுக்கு தெரியாமல் திருட்டு தம் எல்லாம் அடிச்சு இருக்காங்க.'' என்று போட்டுக் கொடுத்தாள்.

"தம்மா? நானும் என் தம்பியுமா? கிடையவே கிடையாது!'' என்று சூர்யபிரகாஷ் சாதித்தார்.

''என்னைக்கு எப்போ... என்ன பிராண்டு சிகரெட் குடிச்சீங்கன்னு கூட நான் சொல்லுவேன். வீணா பொய் சொல்லாதீங்க பெரியப்பா.'' என்று மிரட்டினாள்.

அவர் அப்பொழுதும் இல்லை என்றே சாதிக்கவும்...

''யாரோ உங்க பேமிலில மாலினின்னு இருக்காங்களா... அவங்க கல்யாணத்துல...'' என்று அவள் தொடங்கவும்,

''அம்மா தாயே! உன் லெவல் தெரியாமல் பேசிட்டேன். உன் பெரியப்பாவை மன்னிச்சுடு.'' என்று அவர் கையெடுத்து கும்பிட்டார்.

''அது! அந்த பயம் இருக்கணும்!'' என்று அவள் கெத்தாக கூறிவிட்டு கலகலவென்று நகைத்தாள்.

''அப்போ எனக்கு தெரியாமல் தம் அடிச்சு இருக்கானுங்களா? நீ மீதி கதையை சொல்லுடா!'' என்று அவர் பேத்தியை ஊக்கினார்.

அண்ணனுக்கும் தம்பிக்கும் வளையம் வளையுமா ஸ்டைலா புகை விட ஆசை வந்திருக்கு. அந்த கல்யாண



சத்திரத்துல உள்ள மொட்டை மாடிக்கு போய் ரெண்டு பேரும் ட்ரை பண்ணி பார்த்து இருக்காங்க. முதல் நாளே வளையம் விட ஆசைப்பட்டால்...?

''ரெண்டு பேருக்கும் சிகரெட்டை ஒழுங்கா பிடிக்க தெரியாமல் புகையை ரொம்ப நேரம் உள்ளுக்குள்ள வச்சுக்க முயற்சி பண்ணி... அது இருமலை கிளப்பி... கண்ணெல்லாம் சிவந்து போய்..'' என்று சொல்லி நகைக்க ஆரம்பித்தாள்.

''இதுல என்ன ஹை லைட் தெரியுமா தாத்து? ஒரு சிகரெட்டை ஒழுங்கா பிடிக்க தெரியாமல் கண்ணு சிவந்து போய் கீழே இறங்கினவங்களை பார்த்த உங்க சொந்தக்காரர் ஒருத்தர் 'என்னடா! உங்க அப்பா இல்லைன்னு மொட்டை மாடியிலே போய் கண்ணு சிவக்கிற அளவுக்கு தண்ணி அடிச்சுட்டு வரீங்களான்னு?' கேட்டு இருக்கார்.'' என்றதும் தாத்தாவும் சேர்ந்து சிரிக்க ஆரம்பித்தார்.

பழைய நாட்களை நினைத்து சூர்யபிரகாஷும் சிரித்துக் கொண்டு அமர்ந்திருந்தார்.

தட்டு நிறைய மாங்காய் துண்டுகளும். இரு கிண்ணங்களில் உப்பும் காரமும் வைத்து வேலையாள் ஒருவர் அவளிடம் நீட்டினார்.

''ஹை மாங்கா! எனக்கா?'' என்று அவள் ஆசையோடு வாங்கி கொண்டு சாப்பிட ஆரம்பித்தாள்.

மூவரும் ஒருவர் காலை ஒருவர் வாரிக் கொண்டு அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர்.

"இப்படி சிரிச்சு பேசி எவ்வளவு நாள் ஆச்சு!" என்று சந்தோஷப்பட்டு மகிழ்ந்தனர்.

புகைப்படங்களாக எடுத்து தள்ளினர். ஒரு மணி போல் இன்னொரு கார் வந்தது.

"இப்போ யார் வராங்க?"

"நமக்கான சாப்பாடுடா!" என்று தாத்தா கூறினார்.

"இல்லைப்பா நிர்மல் கார் வருது. அவன் இங்கே வருவதா உங்ககிட்டே சொன்னானா?"

"இல்லையே சூர்யா. நம்ம மூணு பேருக்கும் சாப்பாடு எடுத்துட்டு மகேந்திரனை தான் வர சொல்லி இருந் தேன்." என்று சொல்லிக் கொண்டே அவர் காரையே பார்த்துக் கொண்டு இருக்க... காரில் இருந்து நிர்மல் இறங்கினான்.

"ஹாய் அண்ணா! வாட் எ சர்பிரைஸ்!" என்று ஜோதி வரவேற்றாள்.

"நீ இங்கே வர போறதா சொல்லவே இல்லையே!"

"மூணு ஜீவன்கள் என்னை விட்டுட்டு தனியா கொட்டமடிக்கிறதா ஒரு பட்சி சொல்லுச்சு. அதான் யாரு என்னன்னு பார்த்துட்டு போகலாம்னு வந்தேன்."

"அது எந்த பட்சி எங்களை பத்தி உளவு சொன்ன பட்சி?"

"அதை அடிச்சு இன்னைக்கு குழம்பு வச்சுடுவோமா?"

"இன்னைக்கு மதிய சாப்பாடு அது தான்!" என்று அவர்கள் மூவரும் ஆளுக்கொன்றாய் கூறி சிரித் தனர்.



"செமையா என்ஜாய் பண்ணுறீங்க போல! வாட்ஸ் அப்ல போட்டோ போட்டு என்னை வெறுப்பேத்துறீங் களா?" என்று அவன் தந்தையிடம் எகிறினான்.

அதை பார்த்து பொறாமையில் வெந்து போய் வந் திருக்கியா? என்று அவர் கிண்டல் பண்ண... அங்கே மீண்டும் ஒரு சிரிப்பலை எழுந்தது.

தன் தந்தையும் தாத்தாவும் இந்த அளவிற்கு இறுக்கம் தளர்ந்து பேசி சிரிப்பதை புன்னகையோடு நிர்மல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அண்ணா! வாங்க. நீங்களும் எங்க ஜோதியில் ஐக்கியம் ஆகிக்கோங்க. ஒரே ஒரு கண்டிஷன். வயசு வித்தியாசம் பார்க்கக் கூடாது. யார் வேணா யாரை வேணா கலாய்க்கலாம். என்றதும் நிர்மலும் அவர்களோடு சேர்ந்து கொண்டான்.

அவன் வரும் போது கொண்டு வந்திருந்த உணவை உண்டனர். ஒருவருக்கு ஒருவர் ஊட்டி மகிழ்ந்தனர்.

"அப்பப்போ இப்படி வரணும்பா. நல்லா இருக்கில்ல." என்று சூர்யபிரகாஷ் சொல்ல...

"உங்களுக்கெல்லாம் எப்படியோ... எனக்கு இந்த ரெண்டு நாளும் பொக்கிஷமான நாட்கள். நான் இவ்வளவு சந்தோஷமா ஃபீல் பண்ணி ரொம்ப நாள் ஆச்சு. அப்பா என் பக்கத்திலே இருக்கிற மாதிரி நான் ஒவ்வொரு நிமிஷமும் ஃபீல் பண்ணுறேன். கண்டிப்பா நாம இப்படி அடிக்கடி மீட் பண்ணனும்." என்று ஜோதி சொன்னதும் சூர்யபிரகாஷ் அவளை தோளோடு அணைத்துக் கொண்டார்.

''உங்களோட அடுத்த பிளான் என்ன தாத்தா?'' என்று நிர்மல் கேட்டான்.

''ஜோதி பீச் போக ஆசைப்பட்டாள். அதான் நம்ம ளோட பீச் ஹவுஸுக்கு கூட்டிட்டு போக போறேன். கொஞ்ச நேரம் அங்கே இருந்துட்டு அவளை வீட்டுல விட வேண்டியது தான்.''

''உங்களுக்கு சொந்தமா பீச் ஹவுஸ் வேற இருக்கா?'' என்று ஜோதி ஆச்சரியமாய் கேட்டாள்.

''இந்த பிரகாஷ் பத்தி உனக்கு சரியா தெரியலை. அந்தக் காலத்திலேயே பாரின் கார் வச்சு இருந்தேன். என் பிள்ளைங்க ரெண்டு பேரையும் வெளிநாட்டுக்கு அனுப்பி படிக்க வச்சேன். அரண்மனை மாதிரி வீடு, தோப்பு துரவுன்னு ஒரு ராஜா மாதிரி வாழ்ந்தேன்.'' என்று அவளது தாத்தா தன் மீசையை முறுக்கிக் கொண்டார்.

அவள் அவரையே தீர்க்கமாக பார்த்துக் கொண்டிருந் தாள்.

''என்ன அப்படி பார்க்கிறே?''

''எங்க அப்பா இவ்வளவு பெரிய பணக்கார குடும் பத்திலா பிறந்தார்னு எனக்கு ஆச்சரியமா இருக்கு. உங்களுக்கு ஒண்ணு தெரியுமா... நாங்க மூணு பேரும் சேர்ந்து கோவிலுக்கோ இல்லை பீச்சுக்கோ தான் போவோம்.''

''செலவு பண்ண தேவை இல்லாத இடங்கள்னு சொல்லி எங்க அப்பா அங்கே தான் கூட்டிட்டு போவார். எங்கப்பா அவ்வளவு எளிமையா வாழ்ந்தார்.



''ஒருநாள் கூட உன்னை கல்யாணம் பண்ணதால தான் நான் இவ்வளவு கஷ்டப்படுறேன்னு எங்க அம்மாவை பார்த்து அவர் சொன்னதே இல்லை. அதுக்கு காரணம் எங்க அம்மா மேல உள்ள லவ்வா? இல்லை. பணத்தின் மீது இருந்த மோகம் விடுபட்டு போன தாலான்னு எனக்கு தெரியலை.''

''எங்க அப்பா எ மேன் ஆஃப் சிம்பிளிசிட்டி. எ மேன் ஆஃப் டிக்னிட்டி. எ மேன் ஆஃப் டிவோஷன்'' என்றவள் கொஞ்சமாய் தன் தலையை உயர்த்தி வானை பார்த்து,

''யூ ஆர் கிரேட் டாட். ஐ லவ் யூ!'' என்றவள் தன் இரு கைகளையும் உதட்டின் அருகே கொண்டு சென்று முத்தம் பதித்து வானை நோக்கி பறக்கவிட்டாள்.



## 24

**சி**ல நிமிடங்கள் ஜோதி அந்த வான்வெளியை வெறித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

அவளது கைப்பேசி சிணுங்கி அவளது மோன நிலையை கலைத்தது. ஸ்ரீதர் அழைத்திருந்தான்.

''சொல்லுங்க ஸ்ரீ!''

''சாப்பிட்டியா ஜோ?''

''ம்ம்ம் நான் சாப்பிட்டேன். நீங்க சாப்பிட்டீங்களா?''

''உன் குரல் ஏன் ஒரு மாதிரி இருக்கு. சளி பிடிச்சு இருக்கா?''

''சளி பிடிக்கலை. அப்பா பத்தி நினைச்சுக்கிட்டு இருந்தேன். அதான் தொண்டை கட்டி போய்... உங்களுக்கு என் வாய்ஸ் எப்படியோ கேட்குது. உங்ககிட்ட பேசுவோமான்னு இப்போ தான் யோசிச்சேன். அதுக்குள்ள நீங்களே போன் பண்ணிட்டீங்க.''

''லேபிலா இருக்கே?'' என்று அவன் கேட்ட பின்பே,

அவளுக்கு சுற்றுப்புறம் நினைவிற்கு வந்தது. தன்னை சுற்றி மூவர் அமர்ந்து தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது புரிந்தது.

அவள் அவர்களை அவஸ்தையாய் நிமிர்ந்து பார்த்து விட்டு அந்த இடத்தில் இருந்து நகர்ந்து போய் கணவனிடம் பேச ஆரம்பித்தாள்.

''லேபில் இல்லை. ப்ராஜெக்ட்டுக்காக வெளியே வந்தேன்.''

'வெளியே வந்த இடத்தில் அப்பா பத்தி யோசிச்சுகிட்டு இருக்காளா?' என வியந்தவன், ''பிரச்சனை ஒண்ணும் இல்லையேடா?'' என்று கேட்டான்.

''பிரச்சனையா? இல்லையே. ஏன் கேட்கிறீங்க?''

''திடீர்னு அப்பா நினைவு வந்து அழுகிற அளவுக்கு என்ன நடந்துச்சுன்னு யோசிச்சேன்.''

''அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை ஸ்ரீ.''

''சரிடா. நீ எதை நினைச்சும் கவலைப்படாதே! உனக்காக இந்த ஸ்ரீதர் இருக்கான்.''



''ஐ மிஸ் யூ ஸ்ரீ. நேத்து பகலில் நான் உங்களை ரொம்ப எல்லாம் மிஸ் பண்ணலை. நைட்டும் டயர்டாகி தூங்கிட்டேன். அதனால அப்பவும் உங்க நினைப்பு அவ்வளவா வரலை. ஆனா இப்போ இந்த நொடி நான் உங்களை ரொம்ப மிஸ் பண்ணுறேன் ஸ்ரீ.''

ஸ்ரீதர் எதுவும் சொல்லாமல் அமைதியாக இருக்கவும்,

''ஸ்ரீ! என்னாச்சு? ஏன் பேச மாட்டேங்கிறீங்க? லைனில் இருக்கீங்களா?'' என்று கேட்டாள்.

''இருக்கேன்டா. உன் பக்கத்திலே வர முடியாத தூரத்திலே இருக்கேனேன்னு கவலைப்பட்டுக்கிட்டு இருக்கேன்.''

''இப்போ எதுக்கு தேவை இல்லாமல் நானும் கஷ்டப்பட்டு ஸ்ரீதரையும் கஷ்டப்படுத்துறேன்? என்று தோன்றவும், ஓகே ஸ்ரீ. நீங்க உங்க வேலையை பாருங்க. நானும் என் வேலையை பார்க்கிறேன். உங்க பக்கத்திலே யாராச்சும் இருக்காங்களா ஸ்ரீ?'' என்றாள்.

''எதுக்கு கேட்கிறே?''

''யாரும் இல்லைன்னா பச்சக்குன்னு பத்திக்கிற மாதிரி உங்க ஜோவுக்கு ஒரு உம்மா குடுங்க பார்க்கலாம்.''

''இன்னைக்கு என் ஜோ குட்டிக்கு என்னாச்சு? வொர்கிங் அவர்ஸ்ல அப்பா நினைப்பு வருது. கூடவே இந்த மாமன் நினைப்பெல்லாம் வருது....'' என்று அவன் உற்சாகமாய் ஆரம்பிக்க,

''கிஸ் கேட்டால் குடுக்கிறதை விட்டுட்டு வாத்தியார் புத்தியை காட்டி ஆராய்ச்சி பண்ணிக்கிட்டு இருக்கார்.''

என்றதும் அவன் அழுத்தமாய் அந்த பக்கத்தில் இருந்து முத்தத்தை அனுப்பி வைத்தான்.

அந்த முத்தம் அவளது உடலில் மெல்லிய அதிர் வலையை ஏற்படுத்தியது.

''போதுமா ஜோ? இல்லைன்னா இன்னும் ஸ்ட்ராங்கா குடுக்கட்டுமா?'' என்று அவன் கிறக்கமாய் கேட்கவும்,

''இதுக்கு மேல தாங்காது ஸ்ரீ. போனை வச்சுடுறேன். நாம அப்புறமா பேசுவோம்.'' என்றாள்.

''டேக் கேர் ஜோ!'' என்று சொல்லி அழைப்பை துண்டித்தான்.

கணவனின் பேச்சை அசை போட்டவாறே முகம் கொள்ளா புன்னகையோடு தாத்தாவின் அருகே சென்றாள்.

சோகமா எழுந்து போனே! ''ஸ்ரீதரோட பேசியதும் முகமே பிரகாசம் ஆகிடுச்சு. என்ன சொன்னார்?'' என்று நிர்மல் விசாரித்தான்.

''என்னோட மூடை மாத்துற மந்திரக் கோல் அவர் கிட்ட தான் இருக்கு. அவர் அங்கே இருந்தே மேஜிக் பண்ணினார். நானும் ஹாப்பி மூடுக்கு மாறிட்டேன்.''

''நானும் இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருக் கேன். ஆனா நீ தளிர் நடை போட்டு நடந்ததையும் பொக்கை வாய் காட்டி சிரித்ததையும் பார்க்காமல் போயிட் டேனே என்று நினைக்கும் போது தான் வருத்தமா இருக்கு.'' என்று தாத்தா கூறவும்,

''இவளை கொஞ்சாததை எல்லாம் இவ பிள்ளையை கொஞ்சி தீர்த்துக்கோங்கப்பா!'' என்று சூர்யபிரகாஷ் ஐடியா கொடுத்தார்.



''அட போங்க பெரியப்பா! நீங்க வேற வயித் தெரிச்சலை கொட்டிக்கிட்டு... காலேஜு, படிப்புன்னு வாத்தி விடமாட்டான்.'' என்றதும் நிர்மல் அவள் காதை பிடித்து திருகினான்.

அவள் 'ஆ!' என்று பொய்யாய் அலறினாள்.

''என்னடா சொல்லுறாள்?'' என்று சூர்யபிரகாஷ் கேட்க,

''ஸ்ரீதரை தான் வாத்தின்னு கலாய்க்கிறாள்.'' என்று நிர்மல் கூறினான்.

''அடிக் கழுதை!'' என்று சூர்யபிரகாஷ் கையை ஓங்கினார்.

''ஹேய்! நான் ஒரு விஷயம் மறந்தே போயிட்டேன். எனக்கு காலேஜ் முடிய போகுதே! அப்போ தாத்து நான் சீக்கிரமா பிள்ளையை பெத்து உங்க கையிலே தரேன். அவன்கிட்ட சொல்லி உங்க முகம் முழுசும் ஜொள்ளு ஸ்பிரே பண்ண சொல்லுவேன். அப்புறம் நல்லா எத் துறதுக்கு சொல்லி தருவேன். மீசையை பிடிச்சு முறுக்க சொல்லி தருவேன்'' என்று அவள் அடுக்கிக் கொண்டே போக...

அந்த கற்பனையில் பிரகாஷ் சுகமாய் ஆழ்ந்தார். நிர்மலும் சூர்யபிரகாஷும் அவரது சந்தோஷத்தை கண்டு மகிழ்ந்தனர்.

''தாத்தா! பீச் ஹவுஸ் கிளம்புறீங்களா?'' என்று நிர்மல் கேட்டான்.

தாத்தாவை முந்திக் கொண்டு ஜோதி, ''இன்னைக்கு வேணாம் தாத்து.'' என்றாள்.

"ஏன்டா?"

"இவ்வளவு நேரமும் எல்லோரும் சேர்ந்து கொட்டம் அடிச்சுட்டு... அங்கே யாரும் இல்லாமல் நான் மட்டும் தனியா இருந்தால் கொஞ்சம் டல்லா இருக்கும். அது மட்டுமில்ல... பீச் ஹவுஸ் போனால் வீட்டுக்கு போக லேட் ஆகிடும்.

"தருண் மாமாவோட பேமிலி மதுரைக்கு போயிருக் காங்க. ஸ்ரீதரும் ஊரில் இல்லை. மாமா ஆபீஸில் இருந்து வர லேட்டானாலும் ஆகும். அத்தை மட்டும் தனியா இருப்பாங்க. அதனால நான் சீக்கிரமா வீட்டுக்கு போகணும்." என்றாள்.

"அப்போ என்ன பண்ணலாம்?"

"இன்னைக்கு நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன். இந்த நாளை இவ்வளவு மகிழ்ச்சியா மாத்தின கடவுளுக்கு நன்றி சொல்லுவோமா? கோவிலுக்கு போவோமா?"

"அவ்வளவு தானே. போயிட்டால் போச்சு."

"அவர்கள் அனைவரும் அவரவர் வேலைகளை பார்க்க கிளம்பினர். கோவிலுக்கு சென்று பேத்தியுடன் கடவுளை தரிசித்தவரின் மனம் நிறைந்தது.

அன்று ஆறு மணிக்கே பேத்தியை அவள் வீட்டருகே விட்டுச் சென்றார்.

எட்டரை மணி வரை கீழ் தளத்தில் மாமனார் மாமி யாருடன் நேரம் செலவளித்த ஜோதி, "நான் மேலே போறேன் அத்தை." என்று கூறி மாடியேறினாள்.

ஸ்ரீதருக்கு முயற்சித்து பார்த்தாள். ஸ்விட்ச் ஆஃப் என்று வந்தது.



ஒரு குளியலை போட்டு படுக்கையில் வந்து விழுந் தாள். அன்றைய பொழுதை அசை போட்டவாறே கண்ணயர்ந்தாள்.

அங்கே பிரகாஷ் வீட்டில்.... விமல் தன் தாத்தாவோடு சண்டை போட்டுக் கொண்டிருந்தான்.

"நீங்க மூணு பேர் மட்டும் எப்படி போகலாம்? என்னை ஏன் விட்டுட்டு போனீங்க?"

"நானும் சூர்யாவும் தான்டா போகிறதா இருந்தோம். நிர்மல் அங்கே வரும் விஷயம் எங்களுக்கே தெரியாது."

"அப்போ நாளைக்கு நானும் உங்களோட வருவேன்."

"இல்லைடா. ஸ்ரீதர் மாப்பிள்ளை ஹைதராபாத்ல இருந்து கிளம்பிட்டார். நாளைக்கு காலேஜ் லீவ் வேற. அதனால ஜோதி வெளியே வரமாட்டாள்."

"ப்ச்.." என்று சலித்துக் கொண்டே விமல் சென்றான்.

தன் பேத்தி எல்லோர் மனதிலும் இடம் பிடிக்க ஆரம்பித்தது குறித்து பிரகாஷிற்கு சந்தோஷமாக இருந்தது.

'அவள் இந்த வீட்டுக்குள்ள வரும் போது ஒரு இளவரசியா தன்னை உணரணும். இந்த வீட்டுல உள்ள எல்லோரும் அவளை அப்படி வரவேற்கணும். யார் வீட்டுக்கோ வந்து இருக்கோங்கிற மாதிரி என் பேத்தி உணரக் கூடாது.' என்று அவர் மனதிற்குள் தீர்மானித் தார்.

பத்து மணி போல் ஸ்ரீதர் தன் வீட்டிற்கு வந்தான்.

'தூங்கி இருப்பாளோ? தூக்கத்தில் இருந்து எழுப்ப வேண்டி இருக்குமோ?' என நினைத்துக் கொண்டே

அவன் தன் அறைக் கதவில் கை வைக்க அது திறந்து கொண்டது.

கதவை மூடி பெட்டியை ஓரமாக வைத்து விட்டு அவள் அருகில் உட்கார்ந்து பார்த்தான். அவள் அசந்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

அவளது தலையை வருடிக் கொடுத்தான். அவளிடம் அசைவில்லை. நெற்றியில் அழுத்தமாய் முத்தமிட்டான்.

'நீ என்ன வேணா பண்ணுடா. எனக்கு தூக்கம் தான்டா முக்கியம்னு தூங்கிறதை பாரு!' என்று அவளை திட்டிக் கொண்டே உடை மாற்ற ஆரம்பித்தான்.

உடை மாற்றி முடித்து அவன் குளியலறைக்கு சென்றான். அப்பொழுது தான் ஜோதிக்கு விழிப்பு வந்தது.

'சும்மா தானே படுத்தேன். அப்படியே தூங்கிட்டேனா?' என்று யோசித்துக் கொண்டு இருந்தாள்.

அப்பொழுது குளியலறையில் இருந்து தண்ணீர் கொட்டும் சத்தம் கேட்டதும் பயந்து போனவளாய் படுக்கையில் இருந்து எழுந்து விளைக்கை எரிய விட்டாள்.

ஸ்ரீதரின் பெட்டியை கண்டவளின் முகம் மலர்ந்தது.

'எப்போ வந்தார்? மணி என்ன?' என்று பார்த்தாள். ஒருவேளை இப்போ தான் உள்ளே வந்தாரோ என்று நினைத்துக் கொண்டு அவன் வெளியே வருவதற்காக காத்திருந்தாள்.



கதவு திறந்ததும் ''ஹே ஸ்ரீ!'' என்று கூவிக் கொண்டே அவனை கட்டிக் கொண்டாள்.

''எப்படா ஜோ குட்டி முழிச்ச? உன்னை எழுப்பி பார்த்தேன். நீ அசந்து தூங்கிக்கிட்டு இருந்தே?'' என்றவன் அவளை தன்னோடு இறுக்கி கொண்டான்.

நிமிர்ந்து அவன் முகம் பார்த்தவள், ''சொல்லாமல் வந்து சர்ப்ரைஸ் குடுத்து அசத்திட்டீங்க போங்க. லவ் யூ ஸ்ரீ!'' என்றாள்.

''என்னால உன்னை பார்க்காமல் இருக்க முடியலைடா. அதான் வேலையை வேகமா முடிச்சுட்டு உன்னை பார்க்க ஓடி வந்துட்டேன்.'' என்றதும் அவன் முகமெங்கும் முத்தமிட்டாள்.

''ஜோ! நான் ஒண்ணு கேட்கட்டுமா?''

''கேளுங்க.''

''நாம பர்த் டே செலிப்ரேட் பண்ணலாமா?''

அவன் என்ன சொல்ல வருகிறான் என்று சில நொடிகளுக்கு பின்பே அவளுக்கு புரிந்தது.

''ஸ்ரீ!'' என்று அவள் ஆச்சர்யமாய் கூவ...

''இன்னைக்கு ஒரு நாள் மட்டும். ப்ளீஸ்.'' என்றதும்,

ஜோதி கணவனை இறுக்கமாய் அணைத்துக் கொண்டாள். இரு நாள் பிரிவு அவர்களின் கூடலுக்கு வழிவகுத்தது.

மறுநாள் காலையில் முதலில் எழுந்த ஜோதி அறையை விட்டு வெளியே வந்து தாத்தாவிற்கு போன் செய்தாள்.

“என்னடா குட்டி மாப்பிள்ளை உன்னை தேடி ஓடி வந்துட்டார் போல!”

“தாத்து! என்னை கண்காணிச்சுக்கிட்டே இருக்கீங் களா?”

“நான் தான் சொன்னேன்ல. உன்னை என்னோட பார்வை வட்டத்துக்குள்ள கொண்டு வந்துட்டேன்னு. நீ என்றால் அதுல ஸ்ரீதரும் சேர்த்து தான். சரி நாம இன்னைக்கு எங்கேயும் போக வேண்டாம். நீ மாப் பிள்ளை கூட இரு!”

“அதை சொல்ல தான் நானும் போன் பண்ணினேன். பை.” என்று அழைப்பை துண்டித்தாள்.

அன்று முழுவதும் ஸ்ரீதருடனே ஊரை சுற்றினாள். சனி இரவு படுக்க போகும் முன் ஸ்ரீதருக்கு சளி பிடித்து தும்ம ஆரம்பித்தான்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை எழும் போதே ஸ்ரீதர் ஜுரத்தோடு தான் எழுந்தான்.

தருண் மதுரையில் இருந்து தன் குடும்பத்தினரை அழைத்து கொண்டு வீடு திரும்பினான். சில நாட்கள் கழித்து பார்ப்பதால் தீப்தியும் ஜோதியும் கட்டிப் பிடித்து தங்கள் அன்பை பரிமாறிக் கொண்டார்கள்.

அன்று மாலை தாரிகா ஜோதியிடம் ஒரு பட்டுப் புடவையை கொண்டு வந்து கொடுத்து, “எனக்கு நாளைக்கு நைட் ஒரு பங்ஷனுக்கு போகணும். இதை அயர்ன் பண்ணித் தா!” என்று அதிகாரமாய் உத் தரவிட்டாள்.

ஒன்றும் சொல்ல முடியாமல் ஜோதி அதை வாங்கிக் கொண்டு தங்கள் அறைக்கு சென்று அதை அயர்ன் பண்ணினாள்.



தூக்கத்தில் இருந்து விழித்த ஸ்ரீதர், “என்ன பட்டுப் புடவை அயர்ன் பண்ணுறே! நாளைக்கு காலேஜ்க்கு டிரஸ் கோட் பட்டுப் புடவைன்னு செலக்ட் பண்ணி இருக்கீங்களா?” என்று கேட்டான்.

புடவையை மடித்துக் கொண்டே, “இது என்னோடது இல்ல ஸ்ரீதர். அக்காவோடது.” என்றாள்.

“அவங்களோடதை நீ ஏன் அயர்ன் பண்ணனும்?”

“அவங்க பண்ணித் தர முடியுமான்னு கேட்டாங்க. சரின்னு வாங்கிட்டு வந்தேன்.”

“அவங்க உன்கிட்ட ரிக்வெஸ்ட் பண்ணி கேட்டாங் களாக்கும். இதை நான் நம்பணும்?” என்று நக்கலாகக் கேட்டவன்,

இனிமேல் நீ அவங்களுக்கு இது மாதிரி வேலை எல்லாம் செய்யக் கூடாது. இது என்னோட ஆர்டர். என்றான்.

அவள் அவனுக்கு பதில் ஒன்றும் சொல்லாமல் அறையை விட்டு வெளியேறி அதை தாரிகாவிடம் சேர்த்து விட்டு வந்தாள்.

மறுநாள் திங்களன்று ஸ்ரீதருக்கு ஜுரம் குறைய வில்லை. அதனால் ஸ்ரீதர் கல்லூரிக்கு செல்லவில்லை. ஏற்கனவே தாத்தாவுடன் ஊர் சுற்றியதால் ஜோதி இரு நாட்கள் கல்லூரிக்கு போகவில்லை.

அதனால் ஜோதி ஸ்ரீதரிடம், ஸ்ரீதர்! “எனக்கு காலேஜ் போக மனசில்லை. ஆனா வேலை இருக்கு.” என்றாள்.

“நீ கிளம்பு ஜோ. அம்மா இருக்காங்க இல்லையா? அவங்க என்னை பார்த்துக்குவாங்க.” என்று சொல்லி அவளை கல்லூரிக்கு கிளப்பி விட்டான்



# 25

கீர்த்தியும் அவளது இரு நண்பர்களும் தங்கள் ப்ராஜெக்ட் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள்.

''இப்ப என்னடா பண்ணுறது? ஸ்ரீதர் சார் வியாழன், வெள்ளி ரெண்டு நாளும் அபிஷியலா வேற ஊர் போயிட்டார். நாமளும் டவுட்டை க்ளியர் பண்ணுற துக்காக நாலு நாளா வெயிட் பண்ணுறோம். இன் னைக்கும் சார் சிக் லீவ் போட்டுட்டார். இப்ப என்ன செய்யலாம்?''

''சார்கிட்ட இந்த டவுட்டை கிளியர் பண்ணாமல் நம்மால அடுத்த கட்ட வேலையை பார்க்க முடியாதே!''

''பேசாமல் போனில் டவுட் கேட்போமா?''

''போனில் பேசி கிளியர் பண்ணுற விஷயமா இருந்தால் சனிக்கிழமையே கேட்டு இருக்க மாட் டோமா?''

''அட ஆமா! நேரிலே தான் பார்த்து பேசணும். இப்ப என்ன பண்ணலாம்? அவருக்கே போன் பண்ணி ஐடியா கேட்போம்.'' என்று முடிவு செய்தவர்கள் ஸ்ரீதருக்கு போன் செய்து பேசினார்கள்.

''சார் என்னடா சொன்னார்?''



''அவர் நாளைக்கு கூட காலேஜ் வருவது டவுட் தானாம். சிரமம் பார்க்காமல் அவர் வீட்டுக்கு வந்து டவுட்டை கேட்டுட்டு போக சொல்லுறார்.''

அவர் வீட்டில் யாரெல்லாம் இருப்பாங்களோ என்று முதலில் கீர்த்தி தயங்கினாள்.

கூட இரு இளைஞர்கள் வருவதால் ஒன்றும் பய மில்லை என நினைத்து கீர்த்தியும் அவர்கள் உடன் செல்ல தீர்மானித்தாள்.

ஜோதியும் தன் ப்ராஜெக்ட் வேலையில் மும்மரமாய் இருந்ததால் கீர்த்தி அவளிடம் தாங்கள் அனைவரும் ஸ்ரீதர் வீட்டிற்கு செல்ல போவது பற்றி ஒன்றும் கூற வில்லை.

அன்று மாலை ஐந்து மணி போல் அவர்கள் மூவரும் ஸ்ரீதர் வீட்டிற்கு வந்து இறங்கினார்கள்.

செக்யூரிட்டி அவர்களை யார் என்னவென்று விசா ரித்து இன்டர்காமில் ஸ்ரீதரிடம் சரிபார்த்த பின்பே உள்ளே விட்டார்.

''டேய்! என்னடா இவ்வளவு பெரிய வீடா இருக்கு?''

''சார் வாங்கிற சம்பளத்துல இவ்வளவு பெரிய வீடு சாத்தியமா?''

''ஒருவேளை சார் ரொம்ப பெரிய பணக்கார வீட்டு பையனோ?''

'' அவருக்கு இந்த வேலை பிடிச்சு இருக்குன்னு சும்மா ஜாலியா காலேஜுக்கு வந்துட்டு போறாரோ?'' என்று வியந்து கொண்டே அவர்கள் மூவரும் வீட்டினுள் நுழைந்தனர்.

''வாங்கப்பா! உட்காருங்க. நான் உங்க சாரோட அம்மா. ஸ்ரீதர் இப்போ வந்துடுவான்.'' என்று தெய்வ நாயகி அவர்களை வரவேற்று வரவேற்பறை சோபாவில் அமர வைத்தார்.

தெய்வநாயகி அகன்றதும், ''கண்டிப்பா சார் செம ரிச் ஆனா ஆள் தான். இந்த சோபா மட்டும் லட்ச கணக்கிலே இருக்கும். ஆனா நம்மகிட்ட எல்லாம் ரொம்ப சாதாரணமா பழகுறார்ல.'' என்று பேசிக் கொண் டனர்.

ஸ்ரீதர் நைட் பேண்ட்டும் டி-ஷர்ட் ஒன்றையும் அணிந்து கொண்டு கீழே இறங்கி வந்தான். மூன்று நாட்களாக சவரம் செய்யப்படாத தாடியுடன் மிக சோர் வாக தங்கள் முன் வந்தவனை பார்த்து வருத்தப்பட் டனர்.

''ஸாரி கைய்ஸ்! உங்களை அலைய வச்சுட்டேன்.'' என்று சொல்லிக் கொண்டே ஸ்ரீதர் லேசாக இருமி னான்.

''உங்களுக்கு உடம்பு சரி இல்லாத போது இப்படி வந்து டிஸ்டர்ப் பண்ணுறதுக்கு நாங்க தான் சார் ஸாரி கேட்கணும்.''

''இட்ஸ் ஓகே கைய்ஸ். என்ன டவுட்?'' என்றதும் ஒரு மாணவன் ஸ்ரீதர் அருகே சென்று விளக்க ஆரம் பித்தான்.

இவர்கள் உள்ளே இருப்பதை பற்றி அறியாத ஜோதி கல்லூரி முடிந்து அலுப்புடன் வீட்டிற்குள் நுழைந் தாள்.



ஆனால் வீட்டின் வரவேற்பறையில் கால் வைத்த துமே அவள் கீர்த்தியை பார்த்து விட்டாள். இவள் பார்த்த பொழுதே அவளும் ஜோதியை பார்த்து விட்டாள்.

'ஆஹா! கடன்காரி என்னை பார்த்து தொலைச்சுட் டாளே! இல்லைன்னா நைசா வெளியே எஸ் ஆகி இருப்பேனே!' என புலம்பிய வண்ணம் கீர்த்தியை நோக்கி நடந்தாள்.

யாரோ வருவதை உணர்ந்த ஸ்ரீதர் நிமிர்ந்து பார்த்தான். ஜோதியை அங்கே பார்த்ததும் 'இவளுக்கு சொல்ல மறந்துட்டேனே!' என முதலில் நினைத்தான்.

அதன் பின், ''அடடா ஜோ குட்டி! மாட்டிக்கிட்டி யேடி!'' என அவன் மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.

ஸ்ரீதர் நிமிர்ந்து பார்க்கவும் கீர்த்தி அவனிடம், ''என்னை பார்க்க வந்திருக்காள் சார்.'' என்று சமாளித் தாள்.

'கிரேட் எஸ்கேப் போல!' என்பது போல் ஜோதியை பார்த்தவன் குனிந்து அந்த மாணவனுடன் உரையாட ஆரம்பித்து விட்டான்.

கீர்த்தி ஜோதியின் கை பிடித்து இழுத்து தன்னருகே சோபாவில் அமர வைத்துக் கொண்டாள்.

''நாங்க எங்க ப்ராஜெக்ட் ஹெட்டை பார்க்க வந்தோம். நீ எங்கேடி இங்கே வந்தே?''

''எங்க வீடு இந்த ஏரியாவில் தான் இருக்கு. நான் வீட்டுக்கு நடந்து போய்கிட்டு இருந்தேன். நீ இங்கே நுழையுறதை பார்த்தேன். அதான் உன் பின்னாடியே உள்ளே வந்துட்டேன்.'' என்று ஜோதி சமாளித்தாள்.

மாடியில் இருந்து அப்போது அங்கு வந்த தீப்தி வரவேற்பறை சோபாவின் முன் நின்று, ''ஸ்ரீ சித்தி! நான் போய் குளிச்சு, ஸ்நாக்ஸ் சாப்பிட்டுட்டு அதுக்கு அப்புறமா ஹோம் வொர்க் பண்ண வரேன்!'' என்று சொல்லிவிட்டு சென்றாள்.

அவள் சாதாரண நேரமாய் இருந்தால் ஜோதியின் முன்னே வந்து சொல்லி இருப்பாள்.

புதிதாய் நிறைய ஆட்கள் அமர்ந்து இருக்கவும் அவர்கள் அனைவரையும் நோட்டம் விட்டுக் கொண்டே சொல்லி சென்றதால் அவள் யாரை பார்த்து, யாரிடம் பேசினாள் என்ற விஷயத்தை கீர்த்தியால் கண்டுபிடிக்க முடியாமல் போனது.

''ஸ்ரீ சித்தியா? அது யாரு?'' என்று கீர்த்தி ஜோதியின் காதில் கிசுகிசுக்க,

''நம்ம சாரா இருக்கும்?'' என்று ஜோதி பதில் அளித்தாள்.

''அந்த குழந்தை நம்ம சாரோட அண்ணன் பொண்ணா இருக்கலாம். ஆனால் எதுக்கு சித்தின்னு கூப்பிடுறாள்?''

''சித்தியா? உனக்கு அப்படியா கேட்டுச்சு? எனக்கு சித்துன்னு தானே கேட்டுச்சு.''

''ஓ! சித்தப்பாவுக்கு ஷார்ட் பார்மா?'' என்று கீர்த்தி சமாதானமானாள்.

கீர்த்தி அறியாமல் ஜோதி பெருமூச்சு விட அதை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீதருக்கு உற்சாக மாக இருந்தது. அவனுக்கு சுவாரஸ்யம் கூடியது.



எப்பொழுதும் ஸ்ரீதர் முழுக்கை சட்டை அணிந்து கல்லூரிக்கு செல்வான். மேல் பட்டன் வரை மாட்டி இருப்பான். அதனால் அவனது கழுத்து சங்கிலி வெளியே தெரிய வாய்ப்பில்லை.

இன்று வீட்டில் இருந்ததால் இரு பட்டன்கள் மட்டும் இருக்கும் டி-ஷர்ட் அணிந்திருந்தான். அதிலும் மேல் பட்டன் போடாமல் திறந்திருந்தது. அவனது சங்கிலியும் வெளியே எட்டிப் பார்த்தது.

அது கீர்த்தியின் கண்களுக்கு பளிச்சென்று புலப் பட்டது. அதில் இருந்த இரு ஆங்கில எழுத்துக்களை கண்டவள் அந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டாள்.

''ஜோதி! சாரோட இனிஷியல் என்ன?''

''யாருக்கு தெரியும் கீர்த்தி.''

''அவரோட ரூமிலே A.Sridhar அப்படின்னு போர்டு பார்த்த ஞாபகம் இருக்கு.''

''அதுக்கு என்ன இப்போ?''

''சார் போட்டிருக்கும் செயினோட டாலரை பாரு. கும் டீம் இருக்கு. கு சாரோட பேரு. அப்போ ஒ அவர் வைஃபை குறிக்குதோ?''

''வந்த வேலையை விட்டுட்டு இப்ப இந்த ஆராய்ச்சி உனக்கு தேவையா?''

''டவுட்டை கேட்க தான் அவனுங்க ரெண்டு பேரும் இருக்காங்களே!''

தாயம்மா டிரே நிறைய காபி கப்புகளுடனும், ஒரு கெட்டிலில் பாலும் இன்னொரு கெட்டிலில் டிகாஷனும் கொண்டு வந்து டீபாயில் வைத்தார்.

ஜோதி அங்கே அமர்ந்திருப்பதை கண்ட தெய்வ நாயகி, ''அதை வாங்கி எல்லோருக்கும் குடும்மா!'' என்று கட்டளை இடவும் ஜோதி எழுந்து சென்றாள்.

'நல்ல வேளை அத்தை என் பேரை சொல்லலை. இல்லைன்னா அதுக்கு ரெண்டு பொய் சொல்ல வேண்டி இருக்கும்.' என்று நினைத்து ஜோதி நிம்மதி யானாள்.

''உனக்கு டீ லைட்டா வேணுமா? ஸ்ட்ராங்கா வேணுமா?'' என்று அவர்களை கேட்டு ஒவ்வொரு கப்பிலும் டிகாஷனை அதிகமாகவோ கொஞ்சமாகவோ சேர்த்து அதன் பின் அதில் பாலை கலக்கி அவர்களிடம் கொடுத்தாள்.

மாலையில்... அதுவும் உடல் நிலை சரி இல்லாத போது ஸ்ரீதர் பிளாக் டீ தான் குடிப்பான் என்பதால் அவனிடம் அதை நீட்டினாள்.

"எனக்கு வேண்டாம். நான் அப்பவே குடிச்சுட்டேன்." என்றான்.

அவன் வேண்டாம் என்று சொன்னதும் ஊற்றியதை வீணாக்க வேண்டாம் என நினைத்தவளாய் தனக்கு பிடித்தமான பக்குவத்தில் அதை டீயாய் மாற்றிக் கொண்டு கீர்த்தியின் அருகே வந்து அமர்ந்தாள்.

"சாரோட அம்மா எதுக்குடி நம்மையே சர்வ் பண்ணிக்க சொன்னாங்க? அவங்க கையால குடுத்தால் குறைஞ்சா போயிடுவாங்க? பணக்காரங்கன்னு கெத்து போல!''

'' இது தான் அவங்க வீட்டு பழக்கமா இருக்கும். விட்டு தள்ளு.''



''சாருக்கு எதுக்குடி பிளாக் டீ குடுத்தே!''

''அட கேள்விக்கு பிறந்தவளே! என்னால முடிய லைடி! நானும் எவ்வளவு நேரம் தான் வலிக்காத மாதிரியே நடிக்கிறது?'' என்று வடிவேலு பாணியில் உள்ளுக்குள் புலம்பிக் கொண்டாள்.

''உன்னை தான்டி கேட்டேன். பதில் சொல்லு.''

''ஏதோ யோசனையில் பால் சேர்க்காமல் குடுத்துட் டேன். நல்லவேளை அவர் வேண்டாம்னு சொல்லிட் டார். என்னை நை நைய்யுன்னு கேள்வி கேட்காமல் டீயை குடி. என்னையும் குடிக்க விடு.''

டீயை குடித்து முடித்தனர். ஸ்ரீதர் எதையோ கேட்க கீர்த்தி அவனுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டு இருந்தாள்.

''ஆஹா! எனக்கு யூரின் போகணுமே! இப்போ நான் எப்படி தெரிஞ்ச மாதிரி எழுந்து போகிறது? இவனுங்க எல்லோரும் எப்போ போவாங்களோ? அது வரைக்கும் தாக்கு பிடிக்க முடியுமா?''

''கண்டிப்பா முடியாது என தீர்மானித்த ஜோதி, எக்ஸ்கியூஸ் மீ சார்.'' என்று அழைத்தாள்.

''என்ன வேணும் ஜோதி?''

''ரெஸ்ட் ரூம் போகணும். எங்கே இருக்குன்னு கொஞ்சம் சொல்லுறீங்களா?''

''மாடிப்படி ஏறி போங்க. ரைட் சைட் இருக்கிற ரூமுக்குள்ளே இருக்கும். போயிட்டு வாங்க.''

''தாங்க்ஸ் சார்.'' என்றவள் மடமடவென்று தங்கள் அறை நோக்கி சென்றாள்.

ஸ்ரீதரிடம் தன் சந்தேகத்தை நிவர்த்தி செய்த கீர்த்தி, ''சார்! நானும் ரெஸ்ட் ரூம் போகணும்.'' என்று அனுமதி கேட்டாள்.

''அம்மா!'' என்று தெய்வநாயகியை கூப்பிட்ட ஸ்ரீதர் அவர் அங்கே வந்ததும், ''இவங்க ரெஸ்ட் ரூம் போகணு மாம். கொஞ்சம் காட்டுங்க.'' என்றான்.

அவர் தரை தளத்தில் விருந்தினர் உபயோகத்திற்கு என்று இருக்கும் பாத்ரூமை காட்டினார்.

கீர்த்தி வெளியே வந்த போது ஜோதி மாடியில் இருந்து இறங்கி வந்தாள். ஜோதி தன் முகத்தை கழுவி விட்டு தலையை ஒதுக்கி வாரிவிட்டு வந்திருந்தாள். அதனால் பளிச்சென்று வந்தாள்.

''ஏன்டி மேக் அப் எல்லாம் போட்டியா? கொஞ்சம் இடம் குடுத்தால் போதுமே!''

''ஆஹா! பழக்க தோஷத்திலே முகத்தை கழுவினது தப்பா போச்சே! என நொந்து கொண்டே, பஸ் மாறி மாறி வந்தது டயர்டா இருந்துச்சு. வாஷ் பேஸினை பார்க்கவும் முகத்தை கழுவிட்டேன். அது ஒரு குத்தமா?'' என்றாள்.

''அது சரி. உன்னை மட்டும் மேலே அனுப்பினாங்க. எனக்கு மட்டும் ஏன் கீழே உள்ள பாத்ரூமை காண் பிச்சாங்க?''

''ம்ம்ம் லைனிலே நிக்கணுமான்னு நினைச்சு இருப் பாங்க. எதுக்கு இப்படி என்னை கேள்வி மேல கேள்வியா கேட்டு குடையுற? உனக்கு நான் இங்கே இருப்பது



பிடிக்கலைன்னா சொல்லிடு. நான் இப்பவே கிளம்பி போறேன்.''

''இல்லை ஜோதி. இங்கேயே இரு.''

அப்பொழுது அன்பரசுவின் கார் வீட்டிற்குள் நுழை யும் சப்தம் கேட்டது.

'இவர் எதுக்கு இன்னைக்கு சீக்கிரமா வந்திருக்கார்? உள்ள நுழைஞ்சு இவர் என்ன சொல்லப் போறாருன்னு தெரியலையே! அட ஆண்டவா! இன்னைக்கு எதுக்கு எனக்கு இத்தனை சோதனை?' என்று நொந்து போய் ஜோதி அமர்ந்திருந்தாள்.

உள்ளே வந்த அன்பரசு அங்கே அமர்ந்திருந்த நபர்கள் மீது தன் பார்வையை ஓட்டினார்.

''நம்ம ஸ்ரீதர் கிளாஸில் படிக்கிற பசங்களாம்.'' என்று கூறிய தெய்வநாயகி அவரிடம் இருந்து கைப்பையை வாங்கி கொண்டு உள்ளே சென்றார்.

''ஓ!'' என்று தலையாட்டிக் கொண்ட அன்பரசு அவர்களோடு அமர்ந்திருந்த ஜோதியை பார்த்து, ''எப்பம்மா வந்தே?'' என்று விசாரித்தார்.

அவள் பதில் கூறும் முன், ''இப்போ தான் அங்கிள் வந்தோம்.'' என கீர்த்தி பதில் கூறினாள்.

''யாரிந்த பொண்ணு? ஜோதிக்கு மவுத் பீஸா?'' என்று எண்ணிக் கொண்டே அன்பரசு நகர்ந்து போனார்.

ஸ்ரீதரும் ஜோதியும் கீர்த்தியை ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். ஸ்ரீதர் டக்கென்று குனிந்து கொண் டான்.

ஜோதி கீர்த்தியிடம், ‘‘உனக்கு அவரை முன்னாடியே தெரியுமா?’’ என்று வினவினாள்.

‘‘இவர் சாரோட அப்பா. ஒரு நாள் நம்ம காலேஜ்க்கு வந்திருந்தார். அப்போ நானும் சில பிரண்ட்ஸும் அங்கே நின்னு நம்ம சார்கிட்ட பேசிக்கிட்டு இருந்தோம். ஸ்ரீதர் சார் எங்க நாலு பேரையும் அவங்க அப்பாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அதை ஞாபகம் வச்சு இப்போ என்னை விசாரிக்கிறார். என்ன இருந்தாலும் பெரிய மனுஷங்க பெரிய மனுஷங்க தான்.’’ என்று சிலாகித்தாள்.

‘‘போடி லூசு! எப்படியோ நான் தப்பிச்சேன். அது போதும்!’’ என்று ஜோதி நிம்மதியானாள்.

நடக்கும் நாடகத்தை மேலே இருந்து பார்த்துக் கொண்டிருந்த தாரிகா ஜோதியை அவளின் தோழிகள் முன்பு அவமானப்படுத்த திட்டமிட்டாள்.

முதல் நாள் ஜோதி அயர்ன் பண்ணி தந்த புடவையை எடுத்துக் கொண்டு வந்து அவர்கள் அனைவரும் அமர்ந்து இருந்த சோபாவின் முன்னே இருந்த டீப்பாயில் போட்டாள்.

அங்கே உள்ள அனைவரையும் பார்வையிட்டுக் கொண்டே, ‘‘ஒரு புடவையை உருப்படியா அயர்ன் பண்ண தெரியலை. இன்னும் அரை மணி நேரத்தில் நான் வெளியே போகணும். திரும்ப அயர்ன் பண்ணு!’’ என்றாள்.

கொஞ்ச நேரத்திற்கு முன்பு தீப்தியும் அனைவரின் மீதும் பார்வையை பதித்துக் கொண்டே தான் பேசினாள்.



அதற்கு காரணம் மிரட்சி. புதியவர்களை கண்ட ஒரு குழந்தையின் மிரட்சி.

ஆனால் தாரிகாவின் பார்வைக்கு காரணம், நான் எவ்வளவு பெரிய ஆள் தெரியுமா? என்ற மமதை.

‘‘நான் ஜோதியை மிரட்டுவதை எல்லோரும் பார்க்கிறீங்களா?’’ என்ற ஆராய்ச்சி பார்வை.

ஜோதிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

எழுந்து போய் அயர்ன் பண்ணி தரணுமா? அப்படி எழுந்து போனால் கீர்த்தியிடம் உண்மையை சொல்ல வேண்டி இருக்கும். அது கூட பரவாயில்லை. ஆனால் ஸ்ரீதர் கோபிச்சுக்கிட்டால் என்ன பண்ண? என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

ஆனால் தாரிகா மேலும் எதுவும் சொல்லி ஸ்ரீதரை அவமானப்படுத்தினால்... என்று யோசித்த ஜோதி இருக்கையை விட்டு எழப் போனாள்.

நண்பர்கள் அனைவரும் தாரிகாவை மிரட்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

‘யார் இந்த லேடி? ஒருவேளை இவங்க தான் சாரோட வைஃபா? ஐயோ பாவம்! சாருக்கு இப்படி ஒரு லைஃப் பார்ட்னரா?’ என்று பரிதாபமாய் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஸ்ரீதரோ தன் மனைவியை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தான்.

‘நேத்து அவ்வளவு தூரம் அட்வைஸ் பண்ணினேன். இவ மண்டையில் ஏறுச்சா இல்லையான்னு பார்ப்போம்’ என்று ஜோதியை ஆராய்ந்து கொண்டிருந்தான்.

ஜோதி எழ முயற்சிக்கவும், அம்மா! அம்மா! என்று கத்தினான்.

அவன் கத்திய கத்தலில் அரண்டு போனவளாய் ஜோதி எழாமல் அந்த இடத்திலேயே அமர்ந்து விட்டாள். அனைவரும் சுவாரஸ்யமாய் வேடிக்கை பார்த்தனர்.

''எதுக்குடா ஸ்ரீதர் கத்துறே? அப்பா வேற வந்துட்டார். எதுவா இருந்தாலும் மெதுவா பேசு!'' என்று தெய்வநாயகி கூறவும்,

'' நான் எதுக்குமா கத்தப் போறேன்? அண்ணி தான் என்னை கத்த வைக்கிறாங்க.'' என்றதும்,

அவனது மாணவர்கள், ''அப்பாடா! இந்த லேடி சாரோட வைஃப் இல்லை. சார் தப்பிச்சார்.'' என்று நினைத்து கொண்டார்கள்.

''அம்மா! உங்க பெரிய மருமகள் கிட்டே சொல்லுங்க... அவங்க புடவையை அயர்ன் பண்ண இங்க யாரும் ரெடியா இல்லைன்னு. நானோ என் வைஃபோ இவங்களுக்கு எந்த வேலையும் செஞ்சு தர மாட்டோம்.''

''தீபு குட்டி என் அண்ணான் பொண்ணு. அதுக்காக மட்டும் தான் நாங்க அவளை பார்த்துக்கிறோம். அதுக்காக ஓவரா அட்வான்டேஜ் எடுத்துக்கிட்டு ஆட வேண்டாம்னு சொல்லுங்க.

''இனிமேல் என் வைஃப் எந்த வேலையும் இவங்களுக்கு செஞ்சு தர மாட்டாள். அப்படி அவள் இவங்களுக்காக வேலை ஏதாச்சும் செய்தால் அது நான் செத்ததுக்கு சமானம்.'' என்றான்.



ஜோதி அதிர்ந்து போய் ஸ்ரீதரை பார்த்தாள். அவளது அதிர்வை ஓரக் கண்ணால் அளவெடுத்துக் கொண்டே ஸ்ரீதர் தன் தாயிடம், ''இதை எடுத்துட்டு போக சொல்லுங்க.'' என்றான்.

'எல்லாம் இவ வேலை தானா?' என நினைத்த தெய்வநாயகி, ''தாரிகா! அதான் அவன் சொல்லிட்டான்ல. எடுத்துட்டு போ. உன் புடவையை ஒண்ணு நீ அயர்ன் பண்ணு. இல்லையா லான்டிரி கடைக்கு போய் குடு. சும்மா வெட்டியா இருக்கிறதுக்கு அந்த வேலை யாச்சும் பாரு. அப்படி இல்லைன்னா உன் புருஷனை அயர்ன் பண்ணி தர சொல்லு. முதல்ல இதை எடுத்துட்டு போ!'' என்று கட்டளையிட்டார்.

'நான் என்ன நினைச்சு வந்தேன். ஆனா கதை அப்படியே உல்டாவா மாறிடுச்சே! இவங்க முன்னாடி நான் அவமானப்படுறதா? சும்மா விட மாட்டேன்டா!' என்று நினைத்துக் கொண்டே அந்த புடவையை தூக்கிக் கொண்டு சென்றாள்.

தாரிகா சென்றதும் தெய்வநாயகியும் அங்கே இருந்து சென்று விட்டார்.

''இப்படி ஒரு லேடியை நான் பார்த்தது இல்லை ஜோதி. வெளி ஆளுங்க இருக்காங்களே அவங்க முன்னாடி இப்படி எல்லாம் பேசுறோமே அது தப்புன்னு தோணாதா? பேசிக் மேனர்ஸ் கூட இல்லை பாரு.''

ஜோதி அதிர்ச்சியில் ஊமையாய் அமர்ந்திருந்தாள்.

“நீ ஏன்டி இப்படி பயந்து போய் உட்கார்ந்து இருக்க?”

“ஒண்ணுமில்லை.”

“அந்த லேடி பேசுறதை கேட்டு பயந்து போயிட்டியா?”

“ம்ம்ம்..”

“இன்னும் கொஞ்ச நேரத்திலே நாம கிளம்பிடலாம். கவலைப்படாதே!”



## 26

தாரிகாவிற்கு ஆத்திரம் அதிகம் வந்தது. அதுவும் ஸ்ரீதர் மேல்!

‘இவனுக்கு இவ்வளவு கொழுப்பா? என் புருஷனோட சம்பாத்தியத்தில் முப்பது சதவீதம் சம்பாதிப்பானா? அப்படி இருந்தும் இவனுக்கு இவ்வளவு திமிரா? இவனை சும்மா விடக் கூடாது. என்ன செய்யலாம்?’ என்று யோசித்தவளுக்கு ஒரு எண்ணம் தோன்றியது.

ஸ்ரீதர் ஏற்கனவே இருமல் மற்றும் சளி தொந்தரவால் அவஸ்தைப்பட்டு கொண்டு இருந்தான். அவனுக்கு புகை என்றால் அலர்ஜி. மூச்சு விடவே சிரமப்படுவான்.



அதனால் புகையை போட்டு அவனை துடிதுடிக்க வைக்க வேண்டும் என முடிவு செய்தாள்.

அதனால் சமையல் அறைக்கு சென்று அடுப்பு கரியை எரித்து தருமாறு தாயம்மாவுக்கு கட்டளையிட்டாள்.

எதற்கென்று கேட்க முடியாத காரணத்தால் தாயம்மாவும் கரியை தணலாக்கி சாம்பிராணி கரண்டியில் போட்டு அவளிடம் நீட்டினார்.

பூஜை அறைக்கு சென்று கர்மசிரத்தையாய் கடவுளை வணங்கிய தாரிகா சாம்பிராணி டப்பாவை கையில் எடுத்துக் கொண்டு வரவேற்பறை நோக்கி சென்றாள்.

முதலில் கொஞ்சமாக தூவினாள். வரவேற்பறை சோபாவை நெருங்கும் பொழுது மேலும் அதிகமாக தூவினாள்.

கீர்த்தியுடன் பேசிக் கொண்டிருந்த ஜோதி, “என்ன ஸ்மெல் இது? சாம்பிராணியா? நம்ம வீட்டில் இருந்தா வருது? ஸ்ரீதர் வீட்டில் இருக்கும் போது யாரு போடுறாங்க?” என்று நினைத்துக் கொண்டே சுற்றிலும் ஆராய்ந்தாள்.

அதே போல் வாடையை மோப்பம் பிடித்துக் கொண்டு தெய்வநாயகியும் அங்கே வந்தார். பின்னாடியே தாயம்மாவும் வந்தார்.

ஜோதி தாரிகாவின் கையில் இருக்கும் சாம்பிராணி கரண்டியை பார்த்து குழம்பிப் போனவளாய் எழுந்து நின்றாள்.

அவளை அலட்சியமாய் பார்த்துக் கொண்டே அவளை கடந்த தாரிகா மொத்த டப்பாவையும் தணலில் கொட்டி அதை ஸ்ரீதரை தாண்டிக் கொண்டு எடுத்து சென்றாள். வீடு முழுவதும் சாம்பிராணி புகை காட்டுவ தாக நடித்தாள்.

ஸ்ரீதர் மூச்சு விட சிரமப்பட ஆரம்பித்தான்.

''தாரிகா! என்ன பண்ணிக்கிட்டு இருக்க?'' என்று தெய்வநாயகி அலறினார்.

தாயம்மா தாரிகாவின் கையில் இருந்த கரண்டியை பிடுங்க ஆரம்பித்தார். தருண் அந்த சமயம் வீட்டினுள் வந்தான். நடப்பதை ஒரு நொடியில் அவன் புரிந்து கொண்டான்.

ஜோதி ஆத்திரத்தோடு இரண்டு இரண்டு படிகளாக தாவி ஏறி தங்கள் அறைக்கு சென்றாள். இது போல் மூச்சு விட சிரமப்பட்டால் அவன் puff உபயோகிப்பது வழக்கம்.

(Puff - இது ஒரு விரல் நீளத்தில் இருக்கும் ஒரு மருத்துவ சாதனம். மூச்சு விட சிரமப்படுபவர்கள் அதை வாயில் வைத்து கொண்டு அழுத்தினால் அதில் உள்ள மருந்து உள்ளுக்குள் செலுத்தப்படும். அவர்களது சுவாசம் சீராகும்.)

''கெட் அவுட் ஆஃப் மை ஹவுஸ்!'' என்று மனைவியை பார்த்து கத்திய தருண், தம்பியின் அருகில் அமர்ந்து அவனது மார்பை நீவி விட ஆரம்பித்தான்.

''ஜன்னல் எல்லாம் திறந்து விடுங்க. கதவை திறங்க!'' என்று அவன் கூறவும் வேலையாட்களோடு



சேர்ந்து கீர்த்தியும் அவன் நண்பர்களும் உதவ ஆரம்பித்தனர்.

ஜோதி puffஐ கொண்டு வந்து நீட்டவும், அதை வாங்கிய ஸ்ரீதர் தன் வாயில் வைத்து அதில் உள்ள மருந்தினை உள்ளே செலுத்த ஆரம்பித்தான்.

'இதை எடுக்க தான் இந்த ஓட்டம் ஓடினாளா? மேலே ரூமுக்கு போன பொழுது இதை பார்த்திருப்பாள் போல! சரியான டைம்க்கு கொண்டு வந்து கலக்கிட்டா நம்ம ஜோதி!' என்று கீர்த்தி நினைத்துக் கொண்டாள்.

வெளியே கேட்ட சப்தத்தால் அன்பரசுவும் வர வேற்பறைக்கு வந்தார்.

''என்ன இது புகை?'' என்று கேட்டுக் கொண்டே வந்தவர் தன் சின்ன மகனின் நிலையை பார்த்து, ''என்ன ஆச்சு?'' என்று பதறிக் கொண்டு அவனருகே சென்றார்.

நடந்த அனைத்தையும் அங்கே நின்று கொண்டிருந்த தீப்தி பீதியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஸ்ரீதர் படும் அவஸ்தையை கண்டு பரிதவித்தாள். அதற்கு மேல் ஜோதியின் வாடிய முகம் அவளை வாட்டியது.

அவள் ஸ்ரீதரின் அருகே சென்று, ''சித்து! ஆர் யூ ஓகே?'' என்று கேட்டாள்.

அவன் ஆமாம் என்பதாய் தலையாட்டவும் ஜோதி யின் அருகே சென்று அவளது சுரிதாரை இழுத்து, ''ஸ்ரீ சித்தி! சித்துக்கு சரியாகிடுச்சாம். நீங்க அழாதீங்க.'' என்றாள்.

அவள் அவ்வாறு கூறிய பின்பே ஜோதி தன் கன்னத்தில் வழியும் நீரை துடைத்தாள்.

ஸ்ரீ சித்தியா? இந்த குழந்தை எதுக்கு ஜோதியை அப்படி கூப்பிடுறாள்? சாருக்கு இப்படி ஆனது எங்க மூணு பேருக்கும் கஷ்டமா தான் இருக்கு. ஆனா இவள் அழுவது கொஞ்சம் ஓவரா இருக்கே' என்று கீர்த்தி எண்ணிக் கொண்டிருந்தாள்.

''இப்போ இங்கே யாரு புகையை போட்டாங்க?'' என்று தெய்வநாயகியை பார்த்து அன்பரசு கத்தினார்.

''தாரிகா தான்...''

அன்பரசுவின் பார்வை தாரிகா புறம் திரும்பியது. அவள் தெனாவட்டாய் நின்று கொண்டிருந்தாள்.

''வீடானா வீட்டிலே ஒரு சாமி கும்பிடக் கூடாதா? இது நல்ல கதையா இருக்கே?'' என்று தாரிகா பொரிந்தாள்.

''நீ என்னைக்கு எல்லாம் சாம்பிராணி புகை போட்டு சாமி கும்பிட்டே? கிருத்திகை அன்னைக்கு சாம்பிராணி காட்ட சொன்னதுக்கு முடியாதுன்னு சொல்லிட்டு போனவள் தானே நீ!'' என்று தெய்வநாயகி இடை புகுந்தார்.

''எனக்கு தோணின அன்னைக்கு தான் சாமி கும்பிட முடியும். நீங்க சொல்லுற போதெல்லாம் கும்பிட முடியாது. உங்க பிள்ளைக்கு புகை வாடை ஆகாதுன்னா அவரை அவரோட ரூமிலே போய் உட்கார சொல்லுங்க. இல்லை வேற வீட்டுக்கு போக சொல்லுங்க!'' என்றதும் ஜோதி வெகுண்டு எழுந்தாள்.



''உங்களுக்கு என் மேல தானே கடுப்பு. அப்போ என்கிட்ட நேரடியா மோதுங்க. அதை விட்டுட்டு உடம்பு சரி இல்லாதவர் கூட எதுக்கு மோதி பார்க்க நினைக்கிறீங்க.''

''ஜோ! விடு. எதுவும் பேசாதே!'' என்று ஸ்ரீதர் கூறினான்.

ஜோதி ஸ்ரீதர் புறம் திரும்பவே இல்லை. நண்பர்கள் அனைவரும் அங்கே நடப்பதை நம்ப முடியாத ஆச்சரியத்தோடு பார்க்க ஆரம்பித்தனர்.

''இப்ப என்ன உங்க அளவுக்கு நான் வசதி இல்லாத வளா இருப்பதால் உங்ககிட்ட நான் அடங்கிப் போகணுமா? உங்க புடவையை அயர்ன் பண்ணி தரணும். அதை நான் பகிரங்கமா எல்லோர் முன்னாடியும் ஒத்துக்கிட்டு அந்த வேலை செய்யணும். அப்படி தானே?''

''இது எப்போ நடந்துச்சு? இவ துணியை நீ ஏன் அயர்ன் பண்ணி தரணும்?'' என்று கேட்டுக் கொண்டே தருண் ஜோதியின் அருகே வந்து நின்றான்.

அன்பரசு ஜோதியிடம், ''இது என்ன பேச்சுன்னு பேசுற ஜோதி? அவ உன்னை விட எதுல உசந்துட்டாள்? அவ இந்த வீட்டோட மூத்த மருமகள்னா நீ இந்த வீட்டோட சின்ன மருமகள். அவளுக்கு இருக்கிற எல்லா உரிமையும் உனக்கும் இருக்கு.'' என்று அழுத்தம் திருத்தமாய் கூறினார்.

அது வரை லேசுபாசாய் புரிந்த விஷயம் ஜோதியின் நண்பர்களுக்கு இப்பொழுது தெள்ளத் தெளிவாய் விளங்கியது.

''டேய் மச்சி! நாம போவோமா? இங்கே சிச்சுவேஷன் சரி இல்லை. சாருக்கு வேற உடம்பு சரியில்லை.'' என்று நண்பர்கள் தங்களுக்குள் கூடிப் பேசினார்கள்.

அவர்கள் ஸ்ரீதரிடம் சென்று, ''சார்! நாங்க கிளம் பட்டுமா?'' என்று கேட்டனர்.

''ம்ம்ம் ஸாரி. நீங்க கிளம்புங்க. என்னால நாளைக்கு காலேஜ் வர முடியுமான்னு தெரியலை. நான் சரி பார்த்துட்டு ஜோதிகிட்ட குடுத்து அனுப்புறேன்.'' என்றான்.

''ஓகே சார். டேக் கேர் சார்.'' என்றனர்.

''ஜோ! உன் பிரண்ட்ஸை வழி அனுப்பி வை!'' என்று ஸ்ரீதர் கூறவும் ஜோதி நண்பர்கள் பக்கம் வந்தாள்.

அவர்கள் அனைவரும் அங்கே இருந்து வெளியேறி கார் நிறுத்தும் இடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

''ஸாரி பிரண்ட்ஸ்.''

''ஸ்ரீதர் சார் தான் உன்னோட ஹஸ்பெண்டா?''

''ஆமாம். உங்ககிட்ட சொல்லாததுக்கு ஸாரி.''

''எப்போடி உங்க கல்யாணம் ஆச்சு?'' என்று கீர்த்தி கேட்டாள்.

''சிக்த் செமஸ்டர் லீவில்.''

''அடிப்பாவி! அவ்ளோ நாள் ஆச்சா?'' என்று கீர்த்தி வாய் பிளந்தாள்.

''நான் உன்கிட்ட அப்புறமா பேசுறேன் கீர்த்தி. நீங்க எல்லோரும் எதுல வந்தீங்க? உங்க யாரையாவது காரிலே டிராப் பண்ண சொல்லணுமா?''



''இல்ல ஜோதி. நாங்க ரெண்டு பேரும் ஒரு பைக் கிலே வந்தோம். கீர்த்தியும் அவளோட ஸ்கூட்டியில் தான் வந்தாள். அதனால நாங்க கிளம்புறோம்.''

''அப்புறம் ஒரு விஷயம். என்னோட கல்யாண விஷயம் இப்போதைக்கு யாருக்கும் தெரிய வேணாம். ப்ளீஸ்...''

''கண்டிப்பா சொல்ல மாட்டோம்.'' என்று வாக்குறுதி கொடுத்து விட்டு அவர்கள் அகன்றார்கள்.

நண்பர்களை வழி அனுப்பி வைத்துவிட்டு ஜோதி வீட்டிற்குள் வந்தாள்.

அன்பரசு அனைத்து வேலையாட்களையும் வெளி யேற செய்து இருந்தார். வீட்டின் ஜன்னல்கள் அடைக் கப்பட்டு இருந்தன.

ஜோதி உள்ளே வந்ததும் அன்பரசு தன் நாட்டாமை வேலையை தொடங்கினார்.

அன்பரசு தன் பெரிய மருமகளிடம் திரும்பி, ''வீட் டுக்கு கெஸ்ட் வந்து ஹாலில் உட்கார்ந்து இருக்காங் களே! அவங்க முன்னாடி எப்படி நடந்துக்கணும்னு உனக்கு தெரியாது? அவங்க் எல்லாம் ஜோதி கூட படிக்கிறவங்கன்னு தெரிஞ்சுக்கிட்டே அவ முகத்திலே புடவையை விட்டெறிஞ்சு இருக்கே! உனக்கு எவ்வளவு நெஞ்சு அழுத்தம் இருக்கும்?

''எந்த தைரியத்துல நீ இப்படி ஆட்டம் போடுறே? நாங்க எல்லோரும் ஒத்துமையா தான் இருக்கோம். நீ எங்களை எல்லாம் அட்ஜஸ்ட் பண்ணி போகிறதா

இருந்தால் இங்கே இரு. இல்லையா நீ வீட்டை விட்டு வெளியே போ! தருண்...'' என்று ஆரம்பிக்கவும்,

''அவ பண்ணின தப்புக்கு அவளை வெளியேத்துங்க. நான் எதுக்குப்பா வெளியில் போகணும்? என்னால எல்லாம் அவ கூட போக முடியாது.'' என்று தருண் திட்டவட்டமாக அறிவித்தான்.

''அதை தான்டா நானும் சொல்ல வந்தேன். தருண் உன் கூட வர மாட்டான்னு. என்று மகனை பார்த்து சொன்ன அன்பரசு தாரிகா புறம் திரும்பி, உன் பொண்ணை உன் கூட கூட்டிட்டு போய்கோ. அம் மாவையும் பொண்ணையும் நாங்க பிரிக்க மாட்டோம்.'' என்றார்.

தருண் தன் மகளை தன் பக்கம் வருமாறு அழைத் தான்.

''தீபு குட்டி! நீ அம்மா கூட போறியா?''

''எங்கே போகணும்?''

''அம்மா வேற வீட்டுக்கு போறாளாம். நீ அவ கூட போறியா?''

''நீங்க?''

''நான் இங்கே தாத்தா கூடவும் சித்து கூடவும் இருப்பேன்.''

''அப்போ நானும் இங்கேயே இருப்பேன்.''

''உனக்கு அம்மா வேண்டாமா?''

''வேண்டாம். எனக்கு ஸ்ரீ சித்தி போதும்.'' என்ற தீப்தி ஜோதியின் கால்களை கட்டிக் கொண்டாள்.



ஜோதி குழந்தையின் தலையை தடவிக் கொடுத் தாள். அவளை தூக்கி வைத்துக் கொண்டால் அது தாரிகாவை இன்னும் வெறியேற்றுமோ என அஞ்சி னாள்.

''கேட்டுக்கிட்டியா? நீ பெத்த பிள்ளை கூட உன்னை வேணாம்னு சொல்லுறாள். எல்லோர் கூடவும் சண்டை போடாமல் எப்படி வாழுறதுன்னு யோசி. திரும்பவும் எப்படி சண்டையை மூட்டலாம்னு யோசிச்சேன்னா... உன்னை வீட்டை விட்டு வெளியே தள்ள தயங்க மாட்டேன்.'' என்று உறுமிவிட்டு அன்பரசு அகன்றார்.

அவரை பின் தொடர்ந்து தெய்வநாயகியும் சென்றார். தருண் தீப்தியை அழைத்துக் கொண்டு சென்றான். தாரிகா அதிர்ந்து போய் அங்கேயே நின்றாள்.

ஸ்ரீதரும் ஜோதியும் தங்கள் அறை நோக்கி சென் றார்கள். ஸ்ரீதர் கட்டிலில் சாய்ந்து அமர்ந்து கொண்டான். அவன் அருகே வந்து படுக்கையில் அமைதியாக ஜோதி அமர்ந்தாள்.

''உங்களுக்கு எதுக்கு ஸ்ரீ அவ்வளவு கோபம்? ஒரு புடவையை அயர்ன் பண்ணி குடுத்து இருந்தால் இந்த பிரச்சனை இவ்வளவு பெருசா வராமல் போய் இருக் கும்ல?''

''ஓ! அப்ப அவங்க செஞ்சது சரி. நான் செஞ்சது தான் தப்புன்னு சொல்லுறியா? என் பொண்டாட்டியை அவங்க வேணும்னே அவமானப்படுத்துவாங்க. அதை பார்த்துக்கிட்டு சும்மா இருக்க நான் என்ன கையா லாகாதவனா? என்னை சொல்லுறியே... நீ மட்டும் எதுக்கு அண்ணி கூட சண்டைக்கு போனே?''

''என்ன பேசுறீங்க... அவங்க உங்களை கஷ்டப் படுத்துவாங்க. அதை பார்த்துட்டு நான் சும்மா இருக் கணுமா?''

''அதை தானே நானும் செஞ்சேன்,''

''புடவை அயர்ன் பண்ணுறதும் நீங்க மூச்சு விட சிரமப்பட்டதும் ஒண்ணா?''

''அவங்க உன்னை கீழ்தரமா நினைக்கிறாங்க. அது ஏன்டி உனக்கு புரியலை? உன்னை தன்னோட பெர்சனல் வேலைக்காரியா நினைக்கிறாங்க அதை பார்த்துட்டு நான் எப்படி கண்டுக்காமல் போக முடியும்?'' என்று கேட்டுக் கொண்டு இருக்கும் பொழுதே அவன் இருமினான்.

அவள் வேகமாக அவன் நெஞ்சை நீவி விட அவன் அவளது கையை தட்டி விட்டு, ''போடி! நீ ஒண்ணும் என்னை கவனிக்க வேண்டாம். போய் அவங்களுக்கே கூஜா தூக்கு.'' என்றான்.

ஜோதிக்கு அனைத்தும் புரிந்து தான் இருந்தது. ஆனாலும் தன்னால் தான் பிரச்சனை இந்த அளவிற்கு வளர்ந்து விட்டதோ என அவள் வருந்தினாள்.

ஒருவேளை தீப்தி தன் தாயை பிரிய நேர்ந்தால் அதற்கு தானே ஒரு முக்கிய காரணம் ஆகி விடு வோமோ என நினைத்து பயந்தாள்.

''ஸ்ரீ! நான் சொல்லுறதை கொஞ்சம் கேளுங்க.''

''வாயை மூடிக்கிட்டு போயிடு. கொஞ்ச நேரம் என் முன்னாடி வராதே! ஏதாச்சும் சொல்லிடப் போறேன்.''



என்று கத்திவிட்டு அவளை பார்க்க பிடிக்காதவனாய் தன் கண்களை மூடிக் கொண்டான்.

அவள் அறையை விட்டு வெளியேறி மெல்ல படியிறங்கி வந்து வரவேற்பறை சோபாவில் அமர்ந்தாள். நடந்ததை பற்றியே யோசித்துக் கொண்டு அவள் அமைதியாக அமர்ந்திருந்தாள். அப்பொழுது தெய்வ நாயகி அங்கே வந்தார்.

''இங்கே என்ன ஜோதி பண்ணிக்கிட்டு இருக்க?''

''சும்மா தான் உட்கார்ந்து இருக்கேன் அத்தை.''

''அது தெரியுது. மேலே ஸ்ரீதர் பக்கத்திலே இருந்து அவனை பார்த்துக்க வேண்டியது தானே?''

''அவர் தான் என்னை ரூமை விட்டு வெளியே போக சொல்லிட்டாரே! அப்புறம் எப்படி அவரை பார்த்துக் கிறது?''

''யாரு? ஸ்ரீதர் போக சொன்னானா? அதுவும் உன்னை?'' என்று நம்பாத பாவனையில் தெய்வநாயகி இழுத்தார்.

''நிஜமா அத்தை. நான் ஒண்ணும் பொய் சொல் லலை.''

''அப்போ நீ என்ன தப்பு பண்ணின?''

''அந்த புடவையை நான் திரும்பவும் அயர்ன் பண்ணி குடுத்து இருந்தால் இந்த பிரச்சனை வந்திருக் காதேன்னு சொன்னேன். என் முகத்திலே முழிக்காதே போன்னு சொல்லிட்டார்.''

''உன்னை அறையாமலா விட்டான்?''

''என்ன அத்தை... நீங்களும் அவருக்கு சப்போர்ட் பண்ணி பேசுறீங்க.''

''அவன் சரியா தான் செஞ்சிருக்கான். கண்டதையும் யோசிக்காமல் உருப்படியா வேலை இருந்தால் போய் பாரு.'' என்று கூறிவிட்டு தெய்வநாயகி நகர்ந்து போனார்.

வரவேற்பறை சோபாவில் தான் அவள் கல்லூரிக்கு எடுத்து செல்லும் பை இருந்தது. அதில் இருந்த மடி கணினியை எடுத்து இயக்கி தன் வேலையில் மூழ்கிப் போனாள்.



## 27

ஐந்து நிமிடங்கள் கழித்து ஸ்ரீதரின் கோபம் வடிந்தது.

'நாம திட்டிட்டோம்னு எங்கேயாவது மூலையில் உட்கார்ந்து அழுதுகிட்டு இருப்பாளோ?' என பயந்தவனாய் அறையை விட்டு வெளியேறி வந்தான்.

மாடிப்படியில் முதல் படியில் நின்று பார்த்த பொழுது ஜோதி வரவேற்பறை சோபாவில் அமர்ந்து இருப்பது தெரிந்தது.

அவள் தன் தலையை தட்டிக் கொண்டும் காற்றில் ஏதோ கோலம் போட்டுக் கொண்டும் இருப்பதை கண்டவன், 'இவளாவது அழறதாவது? என்னை அழ



வைக்காமல் இருந்தால் போதாது!' என்று திட்டிக் கொண்டு மெல்லிய முறுவலோடு தன் அறைக்கு திரும்பினான்.

சாப்பிடும் நேரம் வந்ததும் ஸ்ரீதர் கீழே இறங்கி வந்தான். அவன் வந்ததை கூட கவனிக்காமல் ஜோதி தன் வேலையில் ஆழ்ந்து இருந்தாள்.

'பார்த்துடி ஜோ குட்டி! கொஞ்சமா படி. இல்லைன்னா ஓவர் நைட்டிலே அப்துல் கலாம் ஆகிட போறே!' என்று மனதிற்குள் நக்கல் செய்து கொண்டே சாப்பாட்டு மேஜை முன்பு அமர்ந்தான்.

''அம்மா! டிபன் ரெடியா? எனக்கு பசிக்குது.'' என்று அவன் குரல் கொடுத்தான்.

அந்த சப்தத்தில் நிமிர்ந்த ஜோதி தன் வேலையை மூட்டை கட்டி வைத்துவிட்டு அவனருகே வந்தாள்.

அன்பரசுவும் சாப்பிட வந்தார். அவர் ஸ்ரீதர் பக்கத்தில் அமராமல் இரு நாற்காலிகள் தள்ளியே அமர்ந்தார்.

அவன் சாப்பாடு வேண்டும் என்று குரல் கொடுத்ததும் தாயம்மா உணவு வகைகளை மேஜையில் கொண்டு வந்து வைக்க ஆரம்பித்தார்.

ஜோதியும் அவருக்கு உதவியாய் சமையல் அறையில் இருந்து தட்டு, டம்ளர் தண்ணீர் போன்றவற்றை எடுத்து வந்து வைத்தாள். உணவை கொண்டு வந்து வைத்ததும் தாயம்மா சமையலறைக்குள் சென்று விட்டார்.

ஜோதி முதலில் தன் மாமனாருக்கு உணவை பரிமாறினாள். அதன் பின்பு அவள் ஸ்ரீதரின் தட்டில் ஒரு

இட்லியை வைப்பதற்காக கொண்டு செல்ல அவன் தன் கைகளை குறுக்கே நீட்டி அந்த இட்லியை தட்டில் வைக்கவிடாமல் அவளை தடுத்தான்.

"அம்மா! எனக்கு பசிக்குது. சாப்பாடு வைக்க வாங்க!" என்று குரல் கொடுத்தான்.

ஜோதி தன் ஒரு கையை இடுப்பில் வைத்துக் கொண்டு அவனை பார்த்து முறைத்தாள். 'நீ முறைச்சா நான் பயந்துடுவேனா?' என்று அவளை தெனாவட்டாய் பார்த்தான்.

'மகனே! உங்க அம்மா கையால சாப்பிடலாம். ஆனா சாப்பிட்டு முடிச்சு மேலே வந்து தானே ஆகணும். உன்னை அப்போ கவனிச்சுக்கிறேன்டா!' என்று கறுவிக் கொண்டு நின்றிருந்தாள்.

தெய்வநாயகி ஜோதிக்கும் ஸ்ரீதருக்கும் சண்டை என்பதை தன் கணவரிடம் தெரிவித்து இருந்தார். அதனால் அவர்களது செல்ல சண்டையை கண்டும் காணாமல் அன்பரசு சாப்பிடத் தொடங்கினார்.

அங்கே வந்த தெய்வநாயகி, "எதுக்குடா கத்துறே? ஜோதி தான் பக்கத்திலே நிக்கிறாளே! அவளை வைக்க சொல்ல வேண்டியது தானே?" என்று கேட்டார்.

"உங்களால வைக்க முடியுமா முடியாதா?"

"நீங்களும் உங்க சண்டையும்! என்று முணு முணுத்துக் கொண்டே தெய்வநாயகி அவனது தட்டில் இரு இட்லிகளை வைத்து விட்டு, ஜூரம் இப்போ தான் சரியாகி இருக்கு. அதனால சாம்பாரை தெளிவா தண்ணி மாதிரி ஊத்துறேன். அதை தொட்டு சாப்பிடு." என்றார்.



அவர் பரிமாறி முடித்ததும் ஸ்ரீதர் தன் உணவின் மேல் கை வைக்க போக அவனது தட்டு சரேலென்று ஜோதியால் இழுக்கப்பட்டது.

அவன் அருகே இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டு ஜோதி உணவு உண்ண ஆரம்பித்தாள். தன் கணவனை நிமிர்ந்து பார்த்து தன் பற்கள் அனைத்தையும் காட்டி சிரிக்கவும் அவள் மறக்கவில்லை.

அன்பரசுவும் தெய்வநாயகியும் மறுபக்கம் திரும்பி சப்தமில்லாமல் சிரித்தனர். அவளை முறைத்துக் கொண்டே வேறு ஒரு தட்டை எடுத்து அவன் தன் முன் வைத்தான்.

தெய்வநாயகியை கேட்காமல் தானே ஒரு இட்லியை எடுத்து தன் தட்டில் வைத்தான். ஜோதி சாப்பிட்டுக் கொண்டிருந்த எச்சில் கையோடு அந்த இட்லியையும் எடுத்து தன் தட்டில் வைத்துக் கொண்டாள்.

'உன்னை உன் வழியிலே மடக்கலை என் பேர் ஸ்ரீதர் இல்லை' என்று உறுதி எடுத்துக் கொண்டவன், ரவா உப்புமாவை ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து தன் தட்டில் வைத்தான்.

அவள் அதை எடுத்து உடனே தன் வாயில் போட்டுக் கொண்டாள். அவனை கேலி பார்வை பார்க்கவும் அவள் தவறவில்லை.

அவன் அந்த உப்புமாவில் இருந்த மிளகாய் வத்தலை சிறிதளவு உப்புமாவோடு சேர்த்து எடுத்து தன் தட்டில் வைத்தான். அவள் தட்டை பார்க்காமல் அவனை கேலியாய் பார்த்துக் கொண்டே அதையும் எடுத்து வாயில் வைத்து கடித்தாள்.

'இதை இதை தான் நான் எதிர்பார்த்தேன். நல்லா சாப்பிடு!' என்று மனதிற்குள் குதியாட்டம் போட்டுக் கொண்டு அவன் அமர்ந்திருந்தான்.

நன்றாக மென்ற பின்பே தான் மிளகாயை கடித் திருப்பது புரிய அவள் 'ஆ!' என்று அலறிக் கொண்டே சமையலறை நோக்கி ஓடினாள்.

ஸ்ரீதர் சிரித்துக் கொண்டே அந்த தட்டை இழுத்து வைத்து சாப்பிட ஆரம்பித்தான்.

''ஏன்டா இப்படி பண்ணினே?'' என்று கேட்டுக் கொண்டே தெய்வநாயகி மருமகளை கவனிக்க சமைய லறைக்கு சென்றார்.

உள்ளே சென்ற ஜோதி வாயில் உள்ளதை துப்பி விட்டு தண்ணீர் ஊற்றி கொப்பளித்தாள். அப்பொழுதும் அவளது எரிச்சல் அடங்கவே இல்லை.

சர்க்கரை டப்பாவை திறந்து ஒரு தேக்கரண்டி சர்க்கரையை அள்ளி வாயில் போட்டுக் கொண்டாள்.

''என்னம்மா சரியாச்சா இல்லையா?'' என்று கேட்ட தெய்வநாயகியை ஜோதி முறைத்தாள்.

''என்னை எதுக்கு முறைக்கிறே? அடிச்சுக்கிறது நீங்க ரெண்டு பேரும்! பரிதாபப்பட்டு உன்னை பார்க்க வந்தால்...'' என்று தெய்வநாயகி பதிலுக்கு முறைத் தார்.

''அவர் என் தட்டில் மிளகாயை வைக்கிறதை பார்த் துட்டு எதுக்கு சும்மா இருந்தீங்க? எனக்கு ஒரு எச்சரிக்கை மணி அடிச்சு இருக்கலாமில்ல.''

''நிஜமாவே நான் பார்க்கலை ஜோதி.''



''ப்ச் முடியலை அத்தை. ரெண்டு கடி தான் கடிச்சேன். செம காரமான மிளகாய் போல! சர்க்கரை கூட சாப்பிட்டு பார்த்துட்டேன்.'' என்று புலம்பினாள்.

''ஸ்ரீதர்! அவ எப்படி அவஸ்தைப்படுறாள் பாரு! எல்லாம் உன்னால தான்டா!'' என்று சமையலறையில் இருந்து குரல் கொடுத்தார்.

''அம்மா! பிரிஜ்ஜில் ஐஸ் கிரீம் வச்சு இருக்கேன். அதை எடுத்து சாப்பிட சொல்லுங்க!'' என்று அங் கிருந்தே அவன் பதில் கூறினான்.

'இந்த வாத்தி சரியான வாத்து மடையனா இருக்கான். சினிமா கூட பார்க்க மாட்டானா? எத்தனை படத்திலே காட்டுவாங்க. வைஃப் மிளகாயை கடிச்சால் லிப் டூ லிப் கிஸ் அடிச்சு சரி பண்ணுறதை.'

'ஜோ! உன் ஆளு லெஸ் ரொமான்டிக் பெர்சன். உனக்கு விதிச்சது அவ்வளவு தான். கிடைச்ச ஐஸ் கிரீமையாவது வெட்டு' என்று மனதிற்குள் அலுத்துக் கொண்டாள்.

அவள் பிரிஜ்ஜை திறந்து ஐஸ் கிரீமை எடுத்து ஒரு கப்பில் போட்டுக் கொண்டு அங்கே இருந்த அடுப்பு மேடையில் அமர்ந்து கொண்டே சாப்பிட ஆரம்பித்தாள்.

அவளது எரிச்சல் நன்றாகவே மட்டுப்பட ஆரம்பித்தது. அவளது முகத்தில் தெளிவு உண்டானதும் தெய்வநாயகி மகனையும் கணவனையும் கவனிக்க சாப்பாட்டு மேஜை அருகே சென்றார்.

''என்னம்மா செய்யுறாள்?'' என்று ஸ்ரீதர் வினவ,

''நல்லா சப்பை கொட்டிக்கிட்டு ஐஸ் கிரீம் சாப் பிடுறாள்.'' என்றதும் ஸ்ரீதர் புன்னகைத்தான்.

ஸ்ரீதரும் அன்பரசுவும் சாப்பிட்டு முடித்து எழுந்தனர். அப்பொழுது தான் ஜோதி சமையலறையில் இருந்து வந்தாள்.

''எங்கே அத்தை என் சாப்பாடு?'' என்று அவள் தட்டை தேடிப் பார்த்தாள்.

''அதை அப்பவே ஸ்ரீதர் சாப்பிட்டு முடிச்சுட்டான். நீ வேற தட்டு வச்சு சாப்பிடு.''

'நான் சாப்பிட்ட பாதி சாப்பாடையா சாப்பிட்டார்? தனி அறையிலே செய்ய வேண்டியதை எல்லாம் இப்படி அம்மா அப்பா முன்னாடி பண்ணுறானே! வாத்திக் குள்ளேயும் ஒரு மன்மதன் ஒளிஞ்சு இருக்கார் போல! என்னமோ போடா ஸ்ரீ!' என்று மனதிற்குள் பாராட்டிக் கொண்டாள்.

சரியாக அந்த நேரம் தீப்தி அங்கே வந்தாள். தீப்தி ஜோதியின் முன் நின்று, ''ஸ்ரீ சித்தி! நான் இனிமேல் உங்களை அம்மான்னு கூப்பிடட்டுமா?'' என்று கேட்டாள்.

ஜோதி ஒரு அதிர்வோடு தன்னை சுற்றி நின்றிருந்த அனைவரையும் பார்வையிட்டாள். அனைவருமே அவளது கேள்வியில் அதிர்ந்து தான் போயினர்.

தீப்தியின் முன் மண்டியிட்டு அமர்ந்த ஜோதி, ''இல்லைடா குட்டி. நான் உன்னோட சித்தி தான். அம்மா இல்லை. உன்னோட மம்மி தான் இருக்காங் களே! நீ அவங்களை தான் அம்மான்னு கூப்பிடணும்.'' என்றாள்.



''அவங்க தான் வீட்டை விட்டு போறாங்களே!''

''அப்படின்னு உனக்கு யார் சொன்னா?''

''தாத்தா சொன்னாருல்ல...''

தன் மாமனாரை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே, ''உங்க தாத்தா அப்பப்போ இப்படி தான் எதையாச்சும் உளறுவார்.'' என்றதும்,

'நல்ல வேளை லூசுன்னு சொல்லாமல் போனாளே! இது எனக்கு தேவையா?' என்பது போல் அன்பரசு நின்று கொண்டிருந்தார்.

''தாத்தா மட்டுமில்ல... மாடியிலே வச்சு அம்மாவும் அப்படி தான் சொன்னாங்க.''

''நீ தானே எனக்கு அம்மா வேண்டாம். ஸ்ரீ சித்தி போதும்னு சொன்னே! அப்போ அம்மாக்கு கோபம் வராதா? அம்மா உன் மேல உள்ள கோபத்தில் தான் அப்படி சொல்லி இருப்பாங்க. உன்னை விட்டுட்டு அம்மா எங்கேயாச்சும் போய் இருக்காங்களா?''

''நான் எப்போ ஸ்கூல் விட்டு வந்தாலும் அம்மா வீட்டிலே இல்லாமல் வெளியே தான் போய் இருப் பாங்க.''

''உனக்கு ஸ்கூல் இருக்கும் போது உன்னை கூட் டிட்டு எப்படி வெளியே போக முடியும்? உனக்கு லீவு விட்டால் உன்னை கூட்டிட்டு தானே போவாங்க?''

''அப்பவும் விட்டுட்டு போவாங்க.''

"சும்மா ஷாப்பிங்குக்கு போவாங்கடா புஜ்ஜு. உன்னை விட்டுட்டு வீட்டை விட்டு எல்லாம் போக மாட்டாங்க.''

தீப்தி அமைதியாய் நின்றிருந்தாள்.

''என் புஜ்ஜு குட் கேர்ள் தானே! மேலே போய் அம்மா கன்னத்துல கிஸ் குடுத்துட்டு ஐ லவ் யூ மான்னு சொல்லுங்க. தீபு குட்டி அம்மா கூட தான் இருப்பாள்னு சொல்லுங்க. போங்க!"

தலையசைத்து தன் சம்மதத்தை தெரிவித்த தீப்தி ஜோதியின் கன்னத்தில் முத்தமிட்டு, ''ஐ லவ் யூ சித்தி!" என்று கூறிவிட்டு மாடியில் உள்ள தங்கள் அறை நோக்கி ஓடினாள்.

அடுத்து என்ன நடக்குமோ என நினைத்து அனைவரும் மாடியை பார்த்து கொண்டு நின்றனர்.

''இதுக்கு தான் சொன்னேன். நான் பேசாமல் அந்தப் புடவையை'' என்று ஆரம்பித்தவள் ஸ்ரீதரின் தீப்பார்வையை கண்டு கப்பென்று வாயை மூடிக் கொண்டாள்.

'ரொம்ப தான் ஸ்ட்ரிக்ட் ஆபீஸர் ஆகிட்டான். எதுக் கெடுத்தாலும் முறைக்கிறான்' என்று அலுத்துக் கொண்டாள்.

அன்பரசுவும் ஸ்ரீதரும் வரவேற்பறை சோபாவில் அமர்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் பார்வை அடிக்கொரு முறை மாடியை... குறிப்பாய் தருணின் அறையை பார்த்து மீண்டது.

இரண்டே நிமிடத்தில் தருண் தன் மனைவி மற்றும் மகளோடு கீழே சாப்பிட வந்தான்.



ஜோதி அங்கிருந்து நகர்ந்து போய் தன் கணவன் அருகே அமர்ந்து கொண்டாள். தாயம்மாவை பரிமாற சொல்லி விட்டு தெய்வநாயகி கொஞ்சம் தள்ளி நின்று கொண்டார்.

''தீபு குட்டி! இன்னைக்கு மம்மி உனக்கு சாப்பாடு ஊட்டுறேன்.'' என்று தாரிகா கூறவும் தீப்தி சந்தோஷமாய் தலை அசைத்தாள்.

தருணுக்கும் ஆனந்தமாக இருந்தது. தெய்வநாயகி சந்தேகமாய் பார்த்தார்.

''மாமா! அக்கா எப்படி மாறிட்டாங்க பார்த்தீங்களா.'' என்று ஜோதி கிசுகிசுப்பாய் கூற,

அன்பரசு மெதுவான குரலில், ''எனக்கு நம்பிக்கை இல்லை.'' என்றார்.

ஜோதி அவரை முறைத்துக் கொண்டு அமர்ந்திருந் தாள்.

''எங்க அப்பாவையே முறைக்கிற அளவுக்கு நீ பெரிய ஆளாகிட்டியா?'' என்று ஸ்ரீதர் அவளிடம் கேட்க,

''அவர் எங்க மாமா.'' என்று ஜோதி சொல்ல அவர்கள் இருவரும் செல்ல சண்டையில் ஈடுபட்டனர்.

அங்கே சாப்பாட்டு மேஜையில் அரை இட்லியை ஊட்டிய தாரிகா, ''இதுக்கு மேல நீயே சாப்பிடு.'' என்று குழந்தை முன்பு அந்த தட்டை வைத்தாள்.

வேறு ஒரு தட்டில் தனக்கான உணவை பரிமாறிக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தாள்.

ஐந்தே நிமிடத்தில் சாப்பிட்டு முடித்தவள், ''சீக்கிரம் சாப்பிட்டு முடிச்சட்டு மேல தூங்கிறதுக்கு வா!'' என்று கூறி சென்றுவிட்டாள்.

தாரிகா தனது அறைக்குள் சென்று மறைந்ததும் ஜோதி சாப்பாட்டு மேஜைக்கு சென்று தீப்தியின் அருகே அமர்ந்தாள்.

''புஜ்ஜூ குட்டி! சித்தி ஊட்டட்டுமா?'' என்றதும் தீப்தியின் முகம் பிரகாசமாகியது.

தருண் தன் தம்பியோடும் தகப்பனோடும் சென்று அமர்ந்து கொண்டான்.

''அத்தை! நீங்களும் உட்கார்ந்து சாப்பிடுங்க.''

''நீ சாப்பிடும் போது நான் சாப்பிடுறேன்மா.''

''இல்ல அத்தை ஐஸ் கிரீம் சாப்பிட்டதால் வயிறு டொம்னு இருக்கு. நீங்க முதல்ல சாப்பிடுங்க.''

''சித்தி! ஐஸ் கிரீமா? தீபுக்கு?''

''இவளை வச்சுக்கிட்டு ஒரு பேச்சு பேச முடியுதா, என்று மனதிற்குள் அலுத்துக் கொண்டவள், ''புஜ்ஜூ! உங்க சித்து தான் எனக்கு மட்டும் ஸ்பெஷலா வாங்கி தந்தார். அதனால நீ அவர்கிட்ட போய் சண்டை போடு!'' என்றதும் தீப்தி எழப் போனாள்.

''இருடா புஜ்ஜூ. ஒரு வாய் சாப்பாடை வாங்கிட்டு போ!'' என்று அவளது வாயில் உணவை திணித்து அனுப்பினாள்.

''இப்போ அவனை எதுக்கு வம்பு இழுக்கிறே?''

''அவர் தானே அத்தை என்னை மிளகாயை கடிக்க வச்சார். அதான்...''

'இதுக ரெண்டும் திருந்தாது' என்று நினைத்துக் கொண்ட தெய்வநாயகி தான் சாப்பிட அமர்ந்தார்.



''சித்து! எனக்கு ஐஸ் கிரீம் எங்கே? எதுக்கு சித்திக்கு மட்டும் ஸ்பெஷலா வாங்கி தந்தீங்க?''

''நான் வாங்கி தரலேடா!'' என்று ஸ்ரீதர் மறுத்துக் கொண்டிருக்கும் போதே தீப்தியின் உணவு தட்டை தூக்கி கொண்டு ஜோதி அங்கே வந்தாள்.

அடுத்த வாய் உணவை தீப்தியின் வாயில் திணித்தவள், ''உங்க சித்து பொய் சொல்லுறாருடா குட்டி. அவர் தான் எனக்கு தந்தார்.'' என்று திரும்பவும் போட்டு கொடுத்தாள்.

மனைவியை முறைத்துக் கொண்டே ஸ்ரீதர் தன் அண்ணன் மகளிடம், '' உங்க சித்தி தான் பொய் சொல்லுறாள். அவளே தனியா எங்கேயோ போய் சாப்பிட்டு வந்திருக்காள்'' என்றான்.

''நான் என்னைக்காவது என் புஜ்ஜூக்கு வாங்காமல் எனக்கு மட்டும் வாங்கி இருக்கேனா?''

கணவனும் மனைவியும் சிறு குழந்தையின் பின்னே ஒளிந்து கொண்டு ஒருவருக்கொருவர் சண்டை போட்டு கொண்டிருந்தனர்.

சண்டையில் குழந்தைக்கான உணவை ஊட்ட ஜோதி மறக்கவில்லை. அது ஒரு பக்கம் நடந்து கொண்டிருந்தது. அவர்களது சண்டையை அன்பரசுவும் தருணும் வேடிக்கை பார்த்தனர்.

ஒரு கட்டத்தில் கணவனும் மனைவியும் தனியே பேசிக் கொள்ளட்டும் என நினைத்து அவர்கள் இருவரும் அங்கே இருந்து எழுந்து சென்றனர்.

“தீபு குட்டி! சித்துக்கு ரெண்டு நாளா பீவர் தானே! சித்து எங்கேயும் வெளியே போகலை தானே!’’

“ஆமா. சித்து வெளியே போகலை.’’

“அப்புறம் எப்படி சித்து வாங்கிட்டு வருவேன்?”

“அப்போ ஸ்ரீ சித்திக்கு யார் வாங்கி குடுத்தா?’’

“நான் இல்லைடா குட்டி. நான் ஸ்பெஷலா வாங்கி தரதுன்னா என் தீபு குட்டிக்கு தான் வாங்கி தருவேன். நான் எதுக்கு சித்திக்கு வாங்கி தரணும்?’’ என்றதும் ஜோதிக்கு கோபம் வந்தது.

அவன் குழந்தையை சமாளிப்பதற்காக தான் அதை கூறினான் என்றாலும்... அப்படி ஒன்றை சொல்லி தான் சமாளிக்க வேண்டுமா?

“உனக்கு நான் ஸ்பெஷல் இல்லையா? போடா!” என்று திட்டிக் கொண்டு அங்கிருந்து சென்று கை கழுவி விட்டு வந்தாள்.

தீப்தியை வாஷ் பேஸின் அருகே கூட்டி சென்று அவளது வாயை துடைத்து விட்டவள் ஒன்றும் சொல் லாமல் மாடியேறி சென்று கொண்டே இருந்தாள்.

தெய்வநாயகி ஸ்ரீதரிடம், ‘‘என்னடா சொன்னே? சாப்பிடாமல் போயிட்டாள்.’’ என்று கேட்டார்.

“நான் ஒண்ணும் சொல்லலைம்மா.’’ என்று தாயிடம் கூறியவன்,

தீப்தியிடம் குனிந்து, ‘‘தீபு குட்டி! சித்து உனக்கு நாளைக்கு காலையிலே ஐஸ் கிரீம் வாங்கி தரேன். இப்போ நைட் ஆகிடுச்சு. இப்போ சாப்பிட்டால்



உனக்கும் சித்து மாதிரி பீவர் வந்துடும். போய் தூங்குங்க. குட் நைட்.’’ என்றான்.

அவள் தலையாட்டி தன் சம்மதத்தை தெரிவித்து விட்டு மாடியேறி சென்று விட்டாள்.

‘‘இப்போ சொல்லுடா... என்னடா சொன்னே?’’

‘‘எங்க அண்ணன் பிள்ளையை சமாளிக்க ஒரு பொய் சொன்னேன். அதுல என் பிள்ளை ஹர்ட் ஆகிடுச் சும்மா... ஹர்ட் ஆகிடுச்சு.’’ என்று சிவாஜி பாணியில் கூறியவன் மனைவிக்காக உணவை தட்டில் எடுத்துக் கொண்டு மாடியேறினான்.

‘‘எப்படி இருந்த என் பிள்ளை இப்படி மாறிட்டான்?’’ என்று தெய்வநாயகி சிரித்துக் கொண்டார்.

அறைக்குள் வந்த ஸ்ரீதர் தன் மனைவியை சமாதானம் செய்து உணவை தானே ஊட்டி விட்டான். அவர்களின் சண்டை அத்தோடு ஒரு முடிவிற்கு வந்தது.

மறுநாள் காலை ஜோதியிடம் வந்த தாரிகா, ‘‘எனக்கு என் பொண்ணை ரொம்ப பிடிக்கும். வேலை செய்ய சோம்பேறித்தன பட்டு தான் அவளை கண்டுக்காமல் இருக்கேனே தவிர பிடிக்காமல் இல்ல. நேத்து என் பொண்ணு எனக்கு நீ வேணாம் ஜோதி மட்டும் போதும்னு சொன்ன போது நான் மனசொடிஞ்சு போயிட் டேன். எனக்கு உன் மேல செம கடுப்பு.’’

ஆனா அவளே கொஞ்ச நேரம் கழிச்சு வந்து என் கன்னத்துல கிஸ் பண்ணி ஐ லவ் யூன்னு சொன்னதும் அது உன் வேலை தான்னு எனக்கு புரிஞ்சது. அதுக்கு உனக்கு தாங்க்ஸ் சொல்லிக்கிறேன். நான் கொஞ்சம்

கொஞ்சமா மாற டிரை பண்ணுறேன். அதுக்குன்னு நீ என்கிட்ட பெருசா எதிர்பார்க்காதே!'' என்று சொல்லி விட்டு அகன்றாள்.

செல்லும் அவளையே ஜோதி புன்னகையுடன் பார்த்து கொண்டிருந்தாள். அன்பரசும் தெய்வநாயகியும் கூட அதிசயமாய் தான் பார்த்தார்கள்.

இந்த வீட்டிலே என்னை ஏத்துக்காத ஒரே உறவு தாரிகா அக்கா தான். அவங்களும் மாற ஆரம்பிச் சுட்டாங்க. அன்பாலே நான் அவங்களை வளைச்சுட் டேன் பார்த்தீங்களா? ''எனக்கு இது போதும்!'' என்று தன் அத்தையிடம் கூறிய ஜோதி கல்லூரிக்கு கிளம்பி னாள்.



## 28

ஜோதி கல்லூரியில் கீர்த்தியிடம் தன் திருமணம் குறித்த உண்மையை கூறாமல் அன்பரசு பார்த்து ஏற்பாடு செய்த திருமணம் என்று மட்டுமே கூறினாள்.

“ஏன்டி உன் கல்யாணத்துக்கு என்னை கூட கூப் பிடலை?'' என்று கீர்த்தி உரிமையோடு கோபபட் டாள்.

“ஸாரி கீர்த்தி. தப்பு தான். ஏற்கனவே நான் உன்னை விட மூணு வயசு பெரிய பொண்ணா... இதுல



கல்யாணம் ஆகப் போகுதுன்னு சொல்லுறதுக்கு எனக்கு ஒரு மாதிரி அன்ஈஸியா இருந்துச்சு. ப்ளீஸ் என்னை தப்பா நினைக்காதே கீர்த்தி.''

''என்கிட்டே சொல்லுறதுல உனக்கு அன்ஈஸி ஃபீல் வருதா? நாம அப்படியா பழகி இருக்கோம்?'' என்று முறுக்கிக் கொண்ட கீர்த்தியை கெஞ்சி கூத்தாடி ஜோதி சமாதானம் செய்தாள்.

''நேத்து உன் வீட்டுல வச்சு எத்தனை பொய் சொன்னே! சே! எப்படி ஏமாந்து போனேன். மனசுக்குள்ள என்னை கிண்டல் பண்ணி சிரிச்சே தானே!''

''சே! சே! சிரிக்கவெல்லாம் செய்யலை. ஆனா நீ கேட்கிற கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் நான் உன்கிட்ட நல்லா மாட்டிக்கிட்டு முழிச்சேன்.''

''ஸ்ரீதர் சாருக்கு உன் மேல செம லவ் போல!''

''ம்ம்ம் ஆமாம். எப்படி சொல்லுறே?''

''நேத்து அவர் ஜோன்னு உருகினதை தான் பார்த் தேனே! டாலரில் கூட உன் பேரை போட்டு இருக்கார்.''

''ம்ம்ம் அவர் ஆர்டர் குடுத்து அதை செஞ்சு வாங்கினார்.''

''ஆனா கிளாஸில் ஒரு நாள் கூட உன் பக்கம் அவர் திரும்பி பார்த்ததே இல்லையே! இத்தனை நாளும் ரெண்டு பேரும் என்னம்மா நடிச்சு இருக்கீங்க! யார் யாருக்கோ அவார்டு குடுக்குறாங்க. அதை முதல்ல உங்களுக்கு தர சொல்லணும்.'' என்று கீர்த்தி கிண்டல் செய்யவும், ஜோதி புன்னகைத்தாள்.

''சாரோட அண்ணிக்கு உன்னை பிடிக்காதா?''

''ம்ம்ம் இனிமேல் சரியாகிடுவாங்க. இன்னைக்கு வந்து என்கிட்ட ஸாரி கூட கேட்டாங்க. தப்பு பண்ணாத மனுஷங்க யாரு இருக்காங்கன்னு சொல்லு.''

ஜோதி தாரிகா பற்றி எதையும் சொல்ல விரும்ப வில்லை என்பதை புரிந்து கொண்ட கீர்த்தியும் தாரி காவை பற்றி வேறு எதுவும் கேட்கவில்லை.

இரு தினங்கள் கழித்து ப்ராஜெக்ட்டுக்காக நிர்மலின் கம்பெனிக்கு கண்ணனும் ஜோதியும் வந்திருந்தார்கள்.

கண்ணன் கிளம்பி சென்றதும் ஜோதி நிர்மலை தேடிச் சென்றாள். விமலும் அங்கே தான் இருந்தான்.

''எப்படி இருக்கீங்க மேடம்? மேடம் இப்பெல்லாம் செம பிஸி போல! அன்னைக்கு ஃபார்ம் ஹவுஸ்ல பார்த்ததுக்கு அப்புறம் பார்க்கவே முடியலை.'' என்று நிர்மல் தங்கையை கேலி செய்தான்.

''ஆமாண்ணா... கோர்ஸ் முடிய கொஞ்ச நாள் தானே இருக்கு. செம டைட்டா இருக்கு. பயங்கர டயர்டா இருக்கு.''

''உன் முகத்தை பார்த்தாலே தெரியுது. வீட்டுல போய் ரெஸ்ட் எடு.''

''எங்கே இருந்து ரெஸ்ட் எடுக்கிறது? சுனிதா மேடம் அசைன்மெண்ட் குடுத்து இருக்காங்க. அந்த மேடம் ஒரு சாடிஸ்ட். யாராச்சும் சந்தோஷமா இருந்துட்டால் அவங் களுக்கு பிடிக்காது. அவங்களை கஷ்டப்படுத்தி பார்க் கணும்னு நினைக்கிற ஒரு காரெக்டர். எப்போ என்ன மூட்ல இருப்பாங்கன்னே தெரியாது.''



தன் பையில் இருந்த புத்தகத்தை திறந்து, ''அம்பது பக்கத்தை படிச்சு பார்த்து பத்து பக்கமா எழுதணும். இதெல்லாம் ஓவர் நைட்டிலே ஆகிற காரியமா சொல் லுங்க.'' என்றாள்.

''உன் ஹஸ்பண்டை ஹெல்ப் பண்ண சொல்லி கேட்க வேண்டியது தானே!'' என்று விமல் கேட்டான்.

''ஸ்ரீதரா? நீங்க வேற... உன் வேலையை நீ தான் பார்க்கணும்னு அம்பி ராமானுஜமா ரூல்ஸ் பேசுவார். அவர் எனக்கு எக்ஸாம்ல முட்டை போட்டு கொடுத்தார் தெரியும்ல.'' என்று அவள் தான் அன்று அடித்த லூட்டி களை சொல்ல, இருவரும் சிரித்து கொண்டு அவளிடம் கதை கேட்டனர்.

''இதை போய் படிச்சு'' என்று சொல்லிக் கொண்டே அந்த பக்கத்தை எடுத்து பார்த்தவள் குழம்பினாள்.

அடுத்தடுத்த பக்கங்களை திருப்பி பார்த்தாள். முக் கியமான பாயிண்ட்கள் பென்சிலால் குறித்து வைக்கப் பட்டு இருந்தன.

'நேற்று வரை இந்த புக் வீட்டிலே தான் இருந்துச்சு. அப்போ இது கண்டிப்பா ஸ்ரீதர் வேலை தான்.' என்று முடிவு செய்தாள்.

''என்ன ஆச்சு? சடனா ஆஃப் ஆகிட்டே?''

''ஸ்ரீதர் எல்லாத்தையும் மார்க் பண்ணி வச்சு இருக்கார். எனக்கு அதை பார்த்து காப்பி அடிக்கிறது மட்டும் தான் வேலை.''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நீ தான் அவரை ரூல்ஸ் அம்பின்னு கிண்டல் பண்ணின!''

''பாருங்களேன் இந்த அம்பிக்குள்ள ஒரு ரெமோ இருக்கிற விஷயம் எனக்கு தெரியாமல் போச்சு. மச்சான்! சாச்சுப்புட்டியே மச்சான்!'' என்று அவள் ஸ்ரீதரை நக்கல் பண்ணவும்,

அவளது தலையை பிடித்து செல்லமாக ஆட்டிவிட்டு விமல் சென்றான். அவன் சென்ற சில நொடிகளில் நிர்மலின் கைப்பேசியில் குறுஞ்செய்தி வந்தது.

அதை எடுத்து படித்த நிர்மல் ஜோதியிடம், ''இந்த வாரம் சன்டே நாம லஞ்ச்க்கு வெளியே போவோமா?'' என்று கேட்டான்.

''நாமன்னா யாரெல்லாம்?''

''நீ, நான், விமல்.''

''விமல் அண்ணா வருவாங்களா?''

''அவன் தான் மெசேஜ் பண்ணி உன்கிட்ட கேட்க சொல்லி இருக்கான்.'' என்று நிர்மல் தன் அலைபேசியை எடுத்து காட்டினான்.

''விமல் அண்ணாக்கு என்னை பிடிக்க ஆரம்பிச் சுடுச்சோ...?''

''அதுல என்ன உனக்கு டவுட். நீ வரும் நேரமெல் லாம் சரியா என் ரூமிலே வந்து உட்கார்ந்துக்கிறான். அன்னைக்கு ஃபார்ம் ஹவுஸுக்கு என்னை மட்டும் நீங்க எப்படி விட்டுட்டு போகலாம்னு தாத்தா கூட சண்டை போட்டிருக்கான்.

''மறுநாள் அவனும் தாத்தாவோட வர பிளான் பண்ணி இருக்கான். ஆனா ஸ்ரீதர் சென்னை வந்துட்டதால



பிளான் கேன்சல் ஆகிடுச்சு. அதான் இப்போ வெளியே சேர்ந்து போகலாமான்னு கேட்கிறான்.

''இன்னொண்ணு சொல்ல மறந்துட்டேனே! வீட்டுல எங்க அம்மா அவனுக்கு என்ன மாதிரி பொண்ணு பார்க்கணும்னு கேட்டதுக்கு அவன் என்ன தெரியுமா பதில் சொன்னான்? எனக்கு ஜோதி மாதிரி ஒரு பொண்ணு பாருங்கம்மா. அப்போ தான் என் வாழ்க்கை லைவ்லியா இருக்கும்னு சொல்லுறான்.'' என்றதும் ஜோதி பெரிதாக புன்னகைத்தாள்.

''சன்டே வரியா இல்லையா?''

''கண்டிப்பா வரேன்.''

''நான் உன்கிட்ட ஒரு விஷயம் கேட்கட்டுமா ஜோதி?''

''கேளுங்க.''

''உனக்கு ஸ்ரீதரை ரொம்ப பிடிக்குமா?''

''ம்ம்ம் ரொம்ப ரொம்ப பிடிக்கும். ஐ லவ் ஹிம் எ லாட்.''

''உனக்கு கல்யாணம் ஆகி அந்த வீட்டுக்குள்ள போன பொழுது... அந்த வீட்டுல உள்ளவங்க உன்னை எப்படி வெல்கம் பண்ணினாங்க? நான் கேட்கிறதுக்கு உண்மையாய் பதில் சொல்லு.''

''ம்ம்ம் யாருக்குமே என்னை பிடிக்கலை.''

''அப்புறம் எப்படி தைரியமா அவங்களை ஃபேஸ் பண்ணின?''

''அவங்களை நான் பேஸ் பண்ணி தானே ஆகணும்? அவங்க என் ஸ்ரீயோட பேரண்ட்ஸ் இல்லையா?''

''உன் கல்யாணம் எப்படி நடந்துச்சுன்னு எனக்கு தெரியும். உங்க கல்யாணத்தப்போ ஸ்ரீதர் உன்னை காதலிக்கலை. அப்படி இருந்தும் நீ அவரோட அம்மா அப்பாவை உறவா நினைச்சு பொறுமையா வெயிட் பண்ணி இருக்கே! உன்னோட அம்மா அதை ஏன் பண்ணலை?

''கல்யாணம் முடிஞ்ச உடனே எங்களை வந்து பார்த்திருக்க வேண்டாம். நீ பிறந்த பிறகாவது எங்களை வந்து பார்த்து இருக்கலாமில்ல! உங்க அம்மா எங்களை தன்னோட உறவா நினைச்சிருந்தால் சித்தப்பாவை கூட்டிட்டு எங்களை பார்க்க வந்திருப்பாங்க. எங்க சித்தப்பாவை அட்லீஸ்ட் எங்களை பார்க்க அனுப்பி வச்சு இருக்கலாம்.''

''உங்க எல்லோரையும் பார்க்க போனால் எங்க அப்பா திரும்பி வராமல் அங்கேயே இருந்து விடுவாரோன்னு எங்க அம்மா பயந்திருக்கலாம்.''

''எல்லா உறவையும் தன் காதலிக்காக தூக்கி போட்டுட்டு போன எங்க சித்தப்பா அம்மா அப்பா பேச்சை கேட்டு தன் மனைவியையும் குழந்தையையும் தவிக்க விட்டுடுவாரா என்ன?

''அப்போ உங்க அம்மாக்கு எங்க சித்தப்பாவோட லவ்வில் நம்பிக்கை இல்லைன்னு தானே அர்த்தமாகுது. உங்க அம்மா நம்ம தாத்தாவை வில்லனா பார்க்கிற அளவுக்கு நம்ம தாத்தா என்ன செஞ்சார்?

''உங்களுக்கு விருப்பம் இல்லைன்னாலும் நான் அந்த பொண்ணை தான் கல்யாணம் பண்ணுவேன்னு



தாத்தா முகத்துக்கு நேரா சொல்லிட்டு தான் சித்தப்பா போய் இருக்கார். நம்ம தாத்தா ஒரு வில்லனா இருந்திருந்தால் அப்பவே அவரை பிடிச்சு ஒரு ரூமுக்குள்ளே அடைச்சு வச்சு என்ன வேணா பண்ணி இருக்கலாமே! ஆனா தாத்தா அப்படி எதுவும் பண்ணலையே!''

நிர்மல் சொல்வதில் உள்ள நியாயம் புரிந்தபடியால் அவள் அமைதியாக யோசிக்க ஆரம்பித்தாள்.

''ஏதாச்சும் உன்னை ஹர்ட் பண்ணிட்டேனா ஜோதி?''

''இல்லைண்ணா... கொஞ்சம் தெளிவாகி இருக்கேன். இதே ரூட்ல சிந்திக்கிறேன். சீக்கிரமே தெளிவு பிறந்தால் சரி தான்.'' என்றவள் அவனிடம் இருந்து விடைபெற்று வீடு வந்து சேர்ந்தாள்.

''அவர் இன்னும் வரலையா அத்தை?''

''ஸ்ரீதர் வந்துட்டு வெளியே போயிட்டான்மா. காபி வேணுமா?''

''இல்ல அத்தை வேணாம்.'' என்றவள் மாடியேற ஆரம்பித்தாள்.

'வயிறு செமையா வலிக்குதே! பீரியட்ஸ் வர போகுதோ?' என்று எண்ணிக் கொண்டே அவள் தன் வேலைகளை பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் எதிர்பார்த்தபடி பத்து நிமிடங்களில் பீரியட்ஸும் வந்தது.

'வேலை மலை மாதிரி குவிஞ்சு கிடக்கு. இது வேற இப்போ வந்து தொல்லை பண்ணுது' என்று புலம்பிக் கொண்டே சுனிதா மேடம் தந்த அசைன்மெண்ட்டை எழுத ஆரம்பித்தாள். பாதி எழுதி முடிக்கும் போது தான் ஸ்ரீதர் அவர்கள் அறைக்கு வந்தான்.

“எப்படா ஜோ வந்தே?''

“நான் அப்பவே வந்துட்டேன். நீங்க எங்கே போனீங்க?''

“பிரண்டை பார்க்க போனேன்.''

“என் மேல ஸ்ரீதர் சாருக்கு திடீர்னு என்ன அவ்வளவு பாசம்?''

“ஸ்ரீதருக்கு ஜோ மேல எப்பவுமே பாசம் தான்.” என்றவன் படுக்கையில் அமர்ந்து சட்டையை கழட்ட ஆரம்பித்தான்.

“ஜோ மேல இல்ல. உங்க காலேஜ் ஸ்டூடண்ட் ஜோதி மேல! அசைன்மெண்ட் எல்லாம் மார்க் பண்ணி வச்சு இருக்கீங்க.'' என்று கேட்டுக் கொண்டே அவன் அருகே வந்து அமர்ந்தாள்.

“அதை கேட்கிறியா. நாளைக்கு அசைன்மெண்ட் சப்மிட் பண்ணனும்னு நீ சொன்னியா... இன்னைக்கு உனக்கு பீரியட்ஸ் வரும் டேட்டா... அதான் வயிறு வலின்னு நீ சுருண்டு படுத்துடுவியேன்னு மார்க் பண்ணி வச்சேன்.'' என்றதும் அவள் அவனை ஆச்சரிய மாய் பார்த்தாள்.

“என்னடா அப்படி பார்க்கிற?''

“கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி எனக்கு வயிறு வலிக்க ஆரம்பிக்கிற வரைக்கும் எனக்கு கூட தேதி ஞாபகம் இல்லை. ஆனா நீங்க எப்படி ஸ்ரீ அதை ஞாபகம் வச்சு இருக்கீங்க?''

“நீ அவ்வளவு தூரம் வலியால துடிக்கிறியேடா. அதை எப்படி என்னால மறக்க முடியும். என்னால உன் வலியை வாங்கிக்க முடியாது. என்னால முடிஞ்ச ஹெல்ப்பை பண்ணுறேன். அவ்வளவு தான்.''



“Thanks for coming in my life.” என்று சொல்லி அவனது புஜத்தில் சாய்ந்து கொண்டாள்.

அவன் திரும்பி அவளது உச்சியில் அழுத்தமாய் முத்தமிட்டு, “போ! எழுதி முடி. சீக்கிரம் படுத்து தூங்கு!” என்றதும் எழுந்து சென்றாள்.

பாடத்தை வேகமாக எழுதி முடித்தவள் படுக்கையில் சென்று சுருண்டு படுத்துக் கொண்டாள். ஸ்ரீதர் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தான்.

இவர் எப்போ வேலையை முடிச்சுட்டு வருவார்? இவர் என் தலையை வருடினால் தானே எனக்கு தூக்கம் வரும் என அவள் நினைத்து கொண்டிருக்க ஸ்ரீதர் அவளருகே படுக்கையில் வந்து அமர்ந்தான்.

“ஸ்ரீ! உங்க வேலை முடிஞ்சதா?''

“இல்லைடா. பேப்பர் கரெக்ட் பண்ணிக்கிட்டு இருக்கேன். நீ என்னோட மடியிலே படுத்து தூங்கு. நான் பெட்டில் வச்சு வேலை பார்க்கிறேன்.''

அவளை தனது மடியில் படுக்க வைத்து கொண்டான். அவனுடைய இடது கை அவளை விடாமல் வருடிக் கொடுத்தது. வலது கை பேப்பரை திருத்திக் கொண் டிருந்தது.

‘உன் கடமை உணர்ச்சிக்கு ஒரு அளவே இல்லைடா! எனக்கு தேவையான நேரத்திலே எப்படிடா ஒரு அம்மாவா மாறிடுற? லவ் யூடா!’ என மனதோடு கூறிக் கொண்டு அவள் புன்னகைத்தாள்.

"என்னை அப்புறமா சைட் அடிக்கலாம். கண்ணை மூடி தூங்கு."

"திரும்பி பார்க்காமலே எப்படி ஸ்ரீ கரெக்ட்டா சொல்லுறீங்க?"

"என் ஜோ என்ன செய்வாள்னு எனக்கு தெரியாதா?"

அவன் திரும்பி அவள் முகம் பார்த்தான். அவள் தன் உதடுகளை குவித்து காட்டவும், அவன் குனிந்த அந்த குவிந்த உதட்டில் ஒரு முத்தம் வைத்து நிமிர்ந்தான்.

"தூங்குடா ஜோ. அப்போ தான் காலையிலே ஃப்ரெஷா எழுந்து உன்னால காலேஜ் போக முடியும்."

அவள் ஒரு பக்கமாய் திரும்பி அவன் வயிற்றோடு முகம் புதைத்து கொண்டாள். ஸ்ரீதர் அவளது தலையை யும் கன்னத்தையும் விடாது வருடி அவளை தூங்க வைத்தான்.

அவள் தூங்கியவுடன் அவளை நேராக படுக்க வைத்து போர்த்தி விட்டு அவளது உச்சியில் ஒரு முத்தம் பதித்து விலகினான்.

மறுநாள் கல்லூரியில் அசைன்மெண்ட்டை கொடுப்ப தற்காக ஜோதி சுனிதா மேடத்தை தேடி சென்றாள். சுனிதா லேப் ஒன்றின் நடுவே போடப்பட்டிருந்த மேஜையில் அமர்ந்து எதையோ படித்துக் கொண்டிருந் தாள்.

ஜோதி அருகே சென்று நின்று, "எக்ஸ்கியூஸ் மீ மேம்." என்றாள்.

என்ன என்று சுனிதா நிமிர்ந்து பார்க்க ஜோதி தான் கொண்டு போன அசைன்மெண்ட் பேப்பரை நீட்டினாள்.



அதை கையில் வாங்கிய சுனிதா குனிந்து அதை பார்க்காமல் ஜோதியை மேலும் கீழும் பார்வையிட்டாள்.

'டிப்ளமோ முடிச்சுட்டு நடுவிலே வந்தாள். வசதி இல்லாதவள்னு சொன்னாங்க. ஆனா ஆளை பார்த்தால் அப்படி தெரியலையே!' என்று எண்ணமிட்டுக் கொண்டே கையில் இருந்த பேப்பரை திருப்பிக் கொண்டு இருந்தாள்.

"மேம்! அசைன்மெண்ட் பேப்பரில் இருக்கு. என் முகத்தில் இல்லை. என்று ஜோதி கூறிய ஒரு வாக்கியம் தப்பாக போனது."

உடனே அவளது பேப்பரை விட்டெறிந்த சுனிதா, "பொறுக்கிக்கிட்டு போடி!" என்றாள்.

"மேம்! மைன்ட் யுவர் வேர்ட்ஸ்!" என்று ஜோதி கடுப்புடன் கூறிக் கொண்டு இருக்கும் பொழுது, அவர்களது துறையின் ஹெச்.ஓ.டி. ஜோதியின் பேப்பரை கையில் எடுத்துக் கொண்டு அங்கே வந்தார்.

"என்ன பிரச்சனை மிஸ் சுனிதா?"

"ஒரே ஒரு டாபிக்ல அசைன்மெண்ட் எழுத சொல்லி இருந்தேன் சார். அதை கூட ஒழுங்கா எழுதாமல் வந்து நின்னு என் கழுத்தை அறுக்கிறாங்க." என்றதும் ஹெச்.ஓ.டி அதை வாசித்து பார்க்க ஆரம்பித்தார்.

"மிஸ்.சுனிதா! இதை விட பெர்பெக்ட்டா இந்த டாப்பிக்கை எழுத முடியாது. உங்க பிரச்சனை என்ன?"

"இல்லை சார். இவள் எதுக்கும் லாயக்கில்லாதவள்."

"This is not the place for your personal vengeance." என்று சுனிதாவை பார்த்து சொன்னவர், "மார்க்ல கை

வச்சாங்கன்னா என்னை வந்து பாரும்மா!'' என்று ஜோதியை பார்த்து கூறி விட்டு சென்றார்.

ஜோதி ஹெச்.ஓ.டி யின் கூற்றுக்கு 'எஸ் சாரும்' சொல்லவில்லை. சுனிதாவை வெற்றி பார்வையும் பார்க்கவில்லை. அவள் அமைதியுடன் அங்கிருந்து சென்றாள்.

ஆனால் அதற்கே சுனிதா, 'உன்னை ஏதாவது ஒரு விதத்தில் பழி வாங்கலை. என் பேர் சுனிதா இல்லைடி!' என்று மனதிற்குள் சூளுரைத்து கொண்டாள்.

நடந்த விஷயத்தை ஜோதி யாரிடமும்... ஸ்ரீதரிடம் கூட தெரிவிக்கவில்லை. ரெண்டு பேரும் லெக்சரர்ஸ். தேவை இல்லாமல் அவங்களுக்கு இடையே எதுக்கு சண்டை வரணும்? வாழ்க்கையில் இவளை மாதிரி இன்னும் எத்தனை பேரை பார்க்க வேண்டி வருமோ? எது வந்தாலும் சமாளிப்போம் என தீர்மானித்தாள்.



## 29

**ச**னிக்கிழமை மதியத்திற்கு மேல் தெய்வநாயகியிடம் சென்ற ஜோதி, ''அத்தை! நான் எங்க வீடு வரைக்கும் போயிட்டு வரேன்.'' என்றாள்.

''ஏன்? எதற்கு?'' என்று கேட்காமல், ''பத்திரமா போயிட்டு வாம்மா.'' என்று அவளை அனுப்பி வைத்தார்.



தன் தாத்தாவிற்கு தன் சிறு வயது புகைப்படங்களை காட்ட ஜோதி ஆசைப்பட்டாள். அது எதுவும் அவளிடம் இல்லை.

தன் அப்பா வீட்டில் உள்ள அலமாரியை குடைந்தால் கிடைக்கலாம் என நினைத்தாள். அதற்காகவே அவள் அங்கு சென்றாள்.

'எனக்கு தெரிஞ்சு எங்க வீட்டிலே ஆல்பம் கிடையாது. ஆனா அப்பப்போ போட்டோ எடுத்திருக்கோம். அப்பா என்னை ஸ்டுடியோ கூட்டிட்டு போய் போட்டோ எடுத்த ஞாபகம் இருக்கே! அதெல்லாம் எங்கே?'

ஒவ்வொரு அலமாரியாக அவள் புரட்டி பார்த்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது அவளது கையில் சூர்யா அண்ணா என்று எழுதப்பட்ட கவர் ஒன்று சிக்கியது. அது ஒட்டப்பட்டு இருந்தது. கவரை பிரிக்காமல் தன் கைகளால் தடவிப் பார்த்தாள்.

'இது பெரியப்பாவோட பேனா, ஒரு குட்டி டைரி... இது மாதிரி தன் அண்ணன் ஞாபகமா அப்பா வச்சிருந்த பொருட்கள் ஆச்சே!. இதை எதுக்கு அப்பா ஒட்டி வச்சிருக்கார்? அண்ணனை பார்த்து குடுக்க நினைச்சாரா? இல்ல... அண்ணன் நினைப்பு ரொம்ப வருதுன்னு ஒட்டி ஓரமா வச்சாரா? எது எப்படியோ பெரியப்பாவை பார்க்கும் போது அவர்கிட்ட குடுத்துடலாம்' என்று எடுத்து பத்திரப்படுத்தினாள்.

மேலும் தேடிய பொழுது நீள சைஸ் நோட் ஒன்று கிடைத்தது. அவளது தந்தை அவளது புகைப்படங்களை அதில் தான் ஒட்டி வைத்திருந்தார்.

ஒவ்வொரு புகைப்படமும் எங்கே எப்பொழுது எடுக்கப்பட்டது என்று சிறு விளக்கமும் எழுதி வைத்திருந்தார். அதை படித்து பார்த்து மகிழ்ந்தவள் அதை மூடி வைக்கும் பொழுது தான் முதல் பக்கத்தை பார்வையிட்டாள். பார்த்தவள் அதிர்ந்தாள்!

Jothi Prakash

D/o Chandra Prakash என்று அதில் எழுதப்பட்டு இருந்தது.

எல்லா இடங்களிலும் அவள் தன் பெயரை C.Jothi என்று எழுதி தான் அவளுக்கு பழக்கம்.

'ஜோதி பிரகாஷா? நானா? சூர்யபிரகாஷ், சந்திர பிரகாஷ், நிர்மல் பிரகாஷ், விமல் பிரகாஷ் வரிசையில் நானுமா? என் அப்பா என்னை ஜோதி பிரகாஷா பார்க்க ஆசைப்பட்டாரா?' என்று ஆச்சரியம் அடைந்தாள்.

வேற ஏதாச்சும் சிக்குதான்னு பார்ப்போம் என்று இன்னும் முனைப்போடு தேடத் தொடங்கினாள்.

வெளியே இருட்ட ஆரம்பித்தது. அவள் எதையும் பொருட்படுத்தவில்லை. தனக்கு ஒரு விடை கிடைக்காமல் அங்கே இருந்து செல்லக் கூடாது என்று நினைத்தாள்.

அவள் பெயரிடப்பட்ட கடிதம் ஒன்று அவளுக்கு கிடைத்தது. அந்த கடிதத்தை எழுதி இருந்தது அவளுடைய தாய்.

கடிதத்தில் தேதி குறிப்பிடப்பட்டு இருந்தது. அவளது தந்தை இறந்த அடுத்த மாதம் அந்த கடிதத்தை அவள் அம்மா எழுதி இருந்தார்.



''அப்பா இறந்த பின்னால கிட்டத்தட்ட அம்மா ரெண்டு வருஷம் உயிரோட இருந்தாங்க. அப்படின்னா இந்த லெட்டரை எழுதின பிறகு ரெண்டு வருஷம் என் கூட ஒரே வீட்டிலே தானே இருந்தாங்க. இதுல இருக்கிறதை என்கிட்ட நேரிலேயே சொல்லி இருக்கலாமே. இல்லைன்னா லெட்டரை கையிலாவது குடுத்திருக்கலாமே! ஏன் குடுக்கலை?'' என்று புலம்பிக் கொண்டே கடிதத்தை வாசிக்க ஆரம்பித்தாள்.

*அன்புள்ள ஜோதி,*

*உன் அம்மா எழுதிக் கொள்வது. இந்த கடிதம் உன் கையில் சிக்குமா என்று எனக்கு தெரியவில்லை. நான் உயிரோடு இருக்கும் வரை இது உன் கையில் கிடைக்கப் கூடாது என்று நான் இதை மறைத்து வைக்கப் போகிறேன்.*

*நானும் உன் அப்பாவும் காதலித்து மணம் புரிந்த கதை உனக்கு தெரிந்ததே! என் வீட்டில் ஜாதியை காரணம் காட்டி உன் அப்பாவை ஏற்க மறுத்தார்கள்.*

*உன் அப்பாவின் வீட்டில் அந்தஸ்தை காரணம் காட்டினார்கள். மொத்தத்தில் இரு குடும்பத்தாரும் எங்கள் காதலை ஏற்கவில்லை. என்னை திருமணம் செய்வதில் உன் அப்பா பிடிவாதமாய் இருந்தார்.*

*தன்னுடைய ராஜ போக வாழ்க்கையை துறந்து என்னை மணந்த பின் ஒரு சாதாரண வாழ்க்கை வாழ்ந்தார். பிறந்த வீடு மற்றும் புகுந்த வீட்டு சொந்தம் இல்லாத ஒன்று தான் எங்களுக்கு குறையே தவிர... நாங்கள் வாழ்ந்த வாழ்க்கையில் எந்த குறையுமில்லை.*

*தன் செல்வ நிலை குறைந்ததாக ஒரு நாள் கூட உன் அப்பா வருத்தப்பட்டதே இல்லை. நமக்கும் கீழே*

எத்தனையோ பேர் இல்லையா? சந்தோஷம் நம்ம மனசை பொறுத்த விஷயம் என்பார்.

என் பிறந்த வீட்டில் என்னால் கால் வைக்க முடியாது. ஏனென்றால் அவர்கள் ஜாதி வெறி பிடித்தவர்கள். என்னையும் உன் தந்தையையும் வெட்டி போட தயங்க மாட்டார்கள். அதனால் நான் என் பிறந்த வீட்டை மொத்தமாக புறக்கணித்தேன்.

ஆனால் உன் தந்தையின் வீட்டை சேர்ந்தவர்கள் என்ன செய்வார்கள் என்று எனக்கு எந்த ஐடியாவும் இல்லை. அவர்களை போய் பார்க்க எனக்கு மனதில் தைரியம் இல்லை.

நான் எங்க வீட்டுக்கு போய் எங்க அம்மாவை பார்க்கட்டுமான்னு? உங்க அப்பா ஒரு நாளும் என்னிடம் கேட்டதில்லை.

அப்படி அவர் கேட்டிருந்தால் நான் அவரை தடுத்திருக்க மாட்டேன். ஆனால் அவர் அப்படி கேட்டுவிடக் கூடாது என்று ஊரில் உள்ள கடவுள்களை எல்லாம் வேண்டுவேன். தாயை பார்க்க போகிறவர் திரும்ப வராமல் போனால் என்ன செய்வது என்ற பயமே அதற்கு காரணம்.

அவரை விட்டால் எனக்கு வேறு யார் ஆதரவு?

ஒருவேளை என் மனதில் உள்ள பயம் நான் சொல்லாமலே உன் அப்பாவுக்கு புரிந்ததால் தான் உன் அப்பா அவர் வீட்டிற்கு செல்லவில்லையோ என்னவோ! அவரை தவிர வேறு யாரால் என்னை புரிந்து கொள்ள முடியும்?



இத்தனை வருடங்கள் கடந்து என் பயம் நியாயமானது என்று உன் தாத்தா நிரூபித்து விட்டார். உன் அப்பா இறந்த பின்பு அவர் நம்மை தேடி வந்தார். இல்லையில்லை உன்னை தேடி வந்தார். அவர் உன்னை மட்டுமே தன்னோடு அழைத்து செல்ல ஆசைப் படுகிறார்.

அவருக்கு ரத்த சொந்தம் மட்டுமே தேவை. மருமகளான நான் அல்ல.

ஒரு வகையில் எனக்கு சந்தோஷம் தான். என்னோட திருமணத்தால் தான் ஒரு பெற்றோர் தன் பிள்ளையை இழந்தார்கள். ஒரு அண்ணன் தன் தம்பியை இழந்தார். என்னால் அந்த இழப்பை ஈடு செய்ய முடியாது.

அதனால் உன்னை உன் தாத்தாவோடு அனுப்பி வைக்க முடிவு செய்தேன். ஆனால் நீ என்னை விட்டு போக மறுத்து விட்டாய். நான் என்ன செய்ய?

நான் உயிரோடு இல்லாது போனால் தான் நீ உன் தாத்தாவோடு போவாய். அம்மா என்ற இந்த உறவு இல்லாது போனால் தான் உனக்கான உறவுகள் உன்னை தேடி வரும் என்றால் நான் என் உயிரை விட தயாராகவே உள்ளேன்.

எங்கள் திருமணம் முடிந்தவுடன் என்னுடைய இறப்பு செயற்கையானதாக இருக்காது என்று உன் தந்தைக்கு வாக்களித்து இருக்கிறேன்.

இல்லையென்றால் உன்னை உன் தாத்தாவிடம் சேர்ப்பதற்காக நான் என்றோ மரித்திருப்பேன். இன்றில்

*இருந்து நான் கடவுளிடம் என் மரணத்தை எனக்கு வெகு சீக்கிரம் அளிக்குமாறு வேண்டப் போகிறேன்.*

*நான் சீக்கிரம் இறக்க வேண்டும் என்று நினைப்பது உன்னை உன் தாத்தாவிடம் சேர்ப்பதற்காக மட்டும் அல்ல. உன் அப்பாவை விட்டு இருக்க முடியாததாலும் தான்.*

*உன் அப்பா இறந்த அன்றே நான் மனதால் செத்து விட்டேன். உடலால் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக் கிறேன். அதுவும் உனக்காக மட்டுமே என் உயிர் என் உடம்பில் ஒட்டிக் கொண்டிருக்கிறது.*

*ஜோதி என்ற பெயரை நான் தான் உனக்காக தேர்ந்தெடுத்தேன். நீ பிரகாஷ் குடும்பத்து பெண். பிரகாசத்தை தருபவள் என்ற அர்த்தத்தில் தான் உனக்கு இந்த பெயரை சூட்டினேன்.*

*என் இறப்பிற்கு பின் நீ உன் தாத்தாவோடு இணைய வேண்டும். இது தான் உன் அப்பாவின் ஆசையாகவும் இருந்திருக்கும். எங்கள் இருவரின் ஆசையையும் நிறைவேற்று.*

*என் மாமனாரிடம் என்னை மன்னிக்க சொல். அவரின் வாரிசுகளை அவரிடம் இருந்து பிரித்ததற்காக!*

*இந்த கடிதம் நான் உயிரோடு இருக்கும் போது உன் கைக்கு கிடைத்தால் இதில் இருக்கும் விஷயத்தை படித்து என்னுடன் சண்டை போடுவாய் என்று நினைத்தே இதை ஒளித்து வைக்க போகிறேன்.*

*உன் அப்பாவின் வளமான வாழ்க்கை என்னால் தான் கெட்டுப் போனது. ஒரு தாயும் தந்தையும் தாங்கள்*



*பெற்று வளர்த்த பிள்ளையை பிரிய நான் தான் காரணம் என்ற ஒரு குற்ற உணர்வு எப்பொழுதுமே என் மனதை அரித்துக் கொண்டிருக்கிறது.*

*உன் தாத்தாவுடன் நீ இணைவது மூலமாக என் குற்ற உணர்ச்சியில் இருந்து எனக்கு விடுதலை அளி. நீ முழு மனதோடு உன் தாத்தாவுடன் இணையும் பொழுது தான் என் ஆத்மா சாந்தி அடையும்.*

இப்படிக்கு

**உன் அன்பு அம்மா**

என்று முடித்திருந்தார். கடிதத்தை படித்த ஜோதியின் கண்கள் நீரை சொரிந்தன.

வீடு வந்தவள், ''எனக்கு சாப்பாடு வேண்டாம் அத்தை.'' என்று அவர் முகம் பார்க்காமல் கூறிவிட்டு தங்கள் அறைக்கு சென்று படுத்துவிட்டாள்.

நல்லவேளையாக ஸ்ரீதர் வீட்டில் இல்லை. அவளது அம்மாவின் கடித வரிகளே அவளது மூளைக்குள் ஓடிக் கொண்டிருந்தது.

'என்னால அம்மாவோட ஆசையை நிறைவேத்த முடியுமான்னு தெரியலையே! நான் இப்போ என்ன செய்யணும்?'

'நாளைக்கு இந்த லெட்டரை கொண்டு போய் தாத்தாகிட்ட கொடுப்போம். அவர் இதுக்கு எப்படி ரியாக்ட் பண்ணுறாருன்னு பார்த்துட்டு அப்புறமா முடிவு பண்ணுவோம்' என்று தீர்மானித்து கொண்டு உறங்க ஆரம்பித்தாள்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலையில் எழுந்ததும் குளித்து சாப்பிட்டவள் வெளியே கிளம்பினாள்.

சன்டே அதுவுமா எங்கே கிளம்பிட்டே? என்று ஸ்ரீதர் கேட்டான்.

"சன்டே ஒரு நாள் தான் ஃப்ரீ. அதான் பிரண்ட்ஸை பார்க்க போகிறேன்."

"சன்டே மட்டும் தான் என்னாலயும் என் வைஃபோட சுத்த முடியும்."

"காலேஜ் முடிஞ்சதும் என்னால என் பிரண்ட்ஸை பார்க்க முடியாது. எல்லோரும் வேற வேற இடத்துக்கு மாறிடுவாங்க. ஸ்ரீதர் சாருக்கு எப்படி ஐடியா?"

"அம்மா தாயே! நான் உன்னை ஒண்ணும் கேட்கலை. நீ பத்திரமா போயிட்டு வா." என்றதும் சிரித்துக் கொண்டே கிளம்பினாள்.

முதலில் தாத்தாவை சந்தித்து முதல் நாள் தான் எடுத்து வந்தவைகளை அவருக்கு காண்பித்தாள்.

கடிதத்தை படித்தவர், உங்க அம்மாவே சொல்லிட் டாள். "வா வீட்டுக்கு போகலாம்" என்று ஆர்ப்பரித்தால் என்றுமே அவர் இல்லத்திற்குள் கால் வைக்க கூடாது என்று ஜோதி முடிவு செய்து இருந்தாள்.

அதனால் அவள் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

அவர் தன் கண்களை மூடிக் கொண்டு அமைதியாக இருந்தார். மூடிய அவரின் கண்களில் இருந்து இரு சொட்டு கண்ணீர் வெளியே வந்தது.



தாத்தாவின் கண்ணீரை ஜோதி நம்ப முடியாத ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

கண்களை திறந்து தன் பேத்தியை பார்த்தவர், "என் பையன் தான் என்னை தேடி வரணும்னு பிடிவாதமா இருந்து என் குடும்பத்தை இப்படி தள்ளி வச்சுட்டேனே! என் மகனையும் மருமகளையும் இப்படி பறி கொடுத் துட்டேனே! இந்த பாவத்தை நான் எப்படி போக்க போகிறேன்? உங்க அம்மாவால முடிஞ்சா இந்த வயசான கிழவனை மன்னிக்க சொல்லுடா." என்று தழுதழுத் தார்.

முதல் முறையாக தன் தாயை பற்றி அவர் நல்ல விதமாக பேசுவதை கண்ட ஜோதி உருகிப் போனாள். அவரை அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டாள்.

இருவருமே அடுத்தவருக்கு ஆறுதல் சொல்லும் நிலையில் இல்லை. முதலில் ஜோதி தான் தன்னை தேற்றிக் கொண்டாள்.

"கண்டிப்பா அம்மா மன்னிப்பாங்க தாத்து! எங்க அப்பா அம்மாவோட ஆவி இங்கே தான் சுத்திக்கிட்டு இருக்கும். நீங்க பேசுறதை கேட்டு அவங்க சந்தோஷப் பட்டு இருப்பாங்க. நடந்ததை மாத்த முடியாது. எங்க அம்மாவோட விருப்பத்தை நான் நிறைவேத்துறதுன்னு முடிவு பண்ணிட்டேன்." என்றதும் தாத்தாவின் முகம் மலர்ந்தது.

"எப்போ வருவே? இப்பவே வீட்டுக்கு வரியா?"

"ஸ்ரீதர் கூட வரேன் தாத்து. என் எக்ஸாம் முடியட்டும். அவர்கிட்ட உங்க எல்லோரையும் பத்தி சொல்லிட்டு

அவரையும் கூட்டிட்டு நம்ம வீட்டுக்கு வரேன்.'' என்றதும் பேத்தியின் நெற்றியில் முத்தம் பதித்தார்.

அவரிடம் இருந்து விடைபெற்று தன் அண்ணன் களுடன் சேர்ந்து மதிய உணவு உண்பதற்காக அந்த நட்சத்திர உணவு விடுதிக்கு சென்றாள்.

நிர்மலும் விமலும் வந்ததும் மூவரும் தங்களுக் கென்று பதிவு செய்து வைத்திருந்த மேஜையில் சென்று அமர்ந்தனர்.

"தாத்தா உன் அம்மா லெட்டர் பத்தி சொன்னார்" என்று நிர்மல் ஆரம்பித்ததும்,

''அதுக்குள்ள சொல்லிட்டாரா? உங்க ரெண்டு பேருக்கும் நானே சொல்லலாம்னு நினைச்சேன்." என்று ஜோதி கூறினாள்.

''யார் சொன்னால் என்ன? தாத்தா இந்த நாளுக்காக தான் காத்துக்கிட்டு இருந்தார். விஷயம் தெரிஞ்ச பின்னால அவரை அடக்கி வைக்க முடியுமா சொல்லு. நம்ம மூணு பேரையும் மேடை ஏத்தி பேப்பரில் நியூஸ் வர வைக்க ஏற்பாடு பண்ண ஆரம்பிச்சுட்டார்."

''பிரஸுக்கு எல்லாம் தகவல் தரணுமா?''

"ஒவ்வொருத்தரையா கூப்பிட்டா சொல்ல முடியும்? இது தான் ஈஸி.''

அப்பொழுது விமல் அவளிடம், ''சாப்பிட்டு முடிச் சதும் நாம மூணு பேரும் கடைக்கு போறோம். ஒண்ணா டிரஸ் வாங்கிறோம்.'' என்றான்.

"அண்ணா! பெரியம்மாவை உங்களுக்கு சீக்கிரமா பொண்ணு பார்த்து தர சொல்லுறோம். அண்ணி கூட



சேர்ந்து ஒரே டிரஸை உங்க கல்யாணத்துக்கு வாங் கிறதை விட்டுட்டு'' என்று அவள் நக்கல் பண்ணினாள்.

''அதே மாதிரி முக்கியமான ஈவென்ட் தான் நாம மூணு பேரும் மேடை ஏறப் போகிற ஈவென்ட்டும். அதனால ஒண்ணா டிரஸ் வாங்கிறோம்.''

''என்னவோ பண்ணுங்க.''

''அன்னைக்கு என்னை விட்டுட்டு நீங்களெல்லாம் ஃபார்ம் ஹவுசில் கொட்டம் அடிச்சீங்க இல்ல... அத னால நாம மூணு பேரும் வெளியே ஒண்ணா சேர்ந்து சுத்துறோம்.''

''சின்ன வயசில் விட்டதை இப்போ பிடிக்கணும்னு சொல்லுறீங்களா?''

''எஸ் அதே தான். எங்கே போகலாம்னு சொல்லு.''

''நீங்க எங்கே சொல்லுறீங்களோ அங்கே போகலாம்.''

''யூரோப் போகலாமா?'' என்று விமல் கேட்டதும்,

''என்னது யூரோப்பா?'' என்று அதிர்ச்சியோடு கேட் டவள் நிர்மலை பார்க்க, அவன் சிரித்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

''யார் தொந்தரவும் இல்லாமல் சும்மா ஜாலியா இருக் கணும். சின்ன வயசு கதைகளை பேசி... சின்ன வயசில் சேர்ந்து சுத்தாததை எல்லாம் சுத்தி பார்த்து.'' என்று விமல் அடுக்கிக் கொண்டே போக...

நிர்மலை பார்த்த ஜோதி, ''நீங்க எப்படி ஒத்துக் கிட்டீங்க? அண்ணி ஒண்ணும் சொல்ல மாட்டாங் களா?'' என்று கேட்டாள்.

அவள் தான் இவனுக்கு பிளான் போட்டு கொடுத்தாள்.

"சுத்தம்!" என்று முணுமுணுத்த ஜோதி, "அத்தனை நாள் ரெண்டு பேரும் ஆபீஸை விட்டுட்டு வந்துடுவீங்களா?" என்று வேறொரு சந்தேகத்தை எழுப்பினாள்.

"உறவுகளை மதிக்காமல் பணத்துக்கு பின்னாடி போய் என்ன செய்ய போறோம்?" என்று ஜோதி முன்பு கூறியதை இருவரும் ஒரே குரலில் கூறினர்.

"ஆஹா! என் வார்த்தை எனக்கே ரிப்பீட்டா?" என்று கேட்டவள் அமைதியானாள்.

"என்ன ஆச்சு ஜோதி?" என்று நிர்மல் கேட்டான்.

"யூரோப் டூருன்னா... மினிமம் பத்து நாள் ஆகாது? மூணு நாலு நாள்னா தாக்கு பிடிப்பேன். அதுக்கு மேல ஸ்ரீ இல்லாமல்..." என்று இழுத்தவள் தன் நெஞ்சை தொட்டுக் கொண்டே, "மாமன் என் மனசுக்குள்ளே புகுந்து பிராண்ட ஆரம்பிப்பான். ரொம்பவே கஷ்டம்." என்று பாவம் போல் சொல்ல நிர்மல் பக்கென்று சிரித்தான்.

உடனே விமல், "அப்போ மலேசியா போகலாம்." என்றான்.

"எதையோ முடிவு பண்ணுங்க. என்னோட எக்ஸாம் இன்னும் மூணு வாரத்துல ஸ்டார்ட் ஆகிடும். அது முடியட்டும். அப்புறமா தாத்தா சொன்ன பங்ஷன். அப்புறமா டூர். ஓகேவா?"



"டன்." என்று இரு அண்ணன்களும் ஆமோதித்தனர்.

"ஸ்ரீதர்கிட்ட எப்போ விஷயம் சொல்லப் போறே?"

"சொல்லணும். பக்குவமா எடுத்து சொல்லணும். இவ்வளவு பெரிய விஷயத்தை நான் மறைச்சுட்டேன்னு கோபப்படுவார். நிறைய நிறைய சமாதானம் சொல்லணும். எக்ஸாம் முடியட்டுமேன்னு பார்க்கிறேன். இவ்வளவு நாள் கஷ்டப்பட்டு படிச்சது எல்லாம் வீணாகக் கூடாதுல."

அவர்கள் பேசிக் கொண்டே உணவு உண்ண ஆரம்பித்தனர்.



## 30

சுனிதாவின் பணக்கார தோழி ஒருத்தி தன்னுடைய தொழில் வெற்றியை கொண்டாடுவதற்காக தன் தோழிகள் ஐவரையும் அழைத்து விருந்து வைத்திருந்தாள்.

அவர்கள் சாப்பிட்டு முடித்து கிளம்பும் பொழுது சுனிதாவின் கண்களில் ஜோதி சிக்கினாள்.

சுனிதாவிற்கு நிர்மலின் முதுகுப்புறம் மட்டுமே தெரிந்தது. ஜோதி இரு ஆண்களுடன் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள். யார் அவர்கள் என்று கேள்வி அவளது மண்டையை குடைய ஆரம்பித்தது.

சுனிதா தன் தோழியிடம், ''அங்கே உட்கார்ந்து இருப்பது யாரு?'' என்றாள்.

அவள் தோழி, ''இவனுக்கு தான் என்னை கட்டி வைக்கலாம்னு எங்க அப்பா நினைச்சார். எங்க ஸ்டேட்டஸ் கம்மின்னு பையன் வீட்டிலே மறுத்துட்டாங்க.'' என்று நிர்மலை மனதில் வைத்து பதில் கூறினாள்.

''அப்படி உன்னை விட அதிக பணக்காரங்களா என்ன?''

''என்ன சுனிதா இப்படி கேட்டுட்டே? பிரகாஷ் குரூப் கம்பெனி பையன் அவன்.''

'இந்த கம்பெனியில் தானே ஜோதி ப்ராஜெக்ட் பண்ண போறாள். முதலாளிகளோட தனியா சாப்பிட வந்திருக்காளா' என்று சுனிதா எண்ணிக் கொண்டாள்.

சுனிதா சென்ற இரு நிமிடங்களில் நிர்மலின் தாயும் அவன் மனைவி நேஹாவும் அங்கே வந்தனர்.

''வாங்க பெரியம்மா! வாங்க அண்ணி!'' என்று ஜோதி எழுந்து நின்று வரவேற்றாள்.

''உட்காரும்மா. ஸ்கூல் பிள்ளை போல எழுந்துக்கிட்டு.'' என்று சொன்ன அவளின் பெரியம்மா அவளை இருக்கையில் அமர வைத்தார்.

''ஹே குட்டி! அத்தைகிட்ட வாங்கடா செல்லம்.'' என்று நேஹாவின் கையில் இருந்த குழந்தையை ஜோதி வாங்கிக் கொண்டாள்.

''உன்னை பார்க்கணும்னு இத்தனை வருஷமா எனக்கு தோணினதில்லை ஜோதி. உங்க பெரியப்பாக்கு



உன் அப்பா மேல இருந்த கோபம் தான் அதுக்கு காரணம். ஆனா இந்த சில மாசமா உங்க பெரியப்பாவும் நிர்மலும் உன்னை பத்தி சொல்லிக்கிட்டே இருக்கவும் எனக்கும் உன்னை பார்க்கணும்னு ஆசை தான். ஆனா நேரம் தான் கிடைக்கலை.''

''இந்த குட்டி சார் உங்க நேரத்தை எல்லாம் திருடிக்கிறார் இல்லையா?'' என்று மடியில் இருந்த அண்ணன் மகனின் கன்னம் பிடித்து கொஞ்சினாள்.

''சரியா சொன்னே. ஆனா ஃபார்ம் ஹவுஸ் போயிட்டு வந்ததில் இருந்து உங்க பெரியப்பா வார்த்தைக்கு வார்த்தை என் பொண்ணு ஜோதின்னு சொல்லிக்கிட்டே இருக்கார். அதான் இன்னைக்கு நானும் என் பொண்ணை பார்க்க கிளம்பி வந்துட்டேன்.'' என்றதும் ஜோதியின் முகம் சந்தோஷத்தில் ஒளிர்ந்தது.

''நீங்க சொல்லுறதை கேட்கிறதுக்கு எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு பெரியம்மா. என்னோட அம்மாவும் அப்பாவும் உங்க ரெண்டு பேரோட ரூபத்தில் எனக்கு திரும்ப கிடைச்சுட்ட ஃபீல்.'' என்றதும் அனைவருமே சில நொடிகள் அமைதியானார்கள்.

நேஹா நிர்மலிடம், ''டூரை பத்தி முடிவு பண்ணிட்டீங்களா? டிக்கெட் போட சொல்லியாச்சா?'' என்று கேட்டாள்.

''அவளால ரெண்டு வாரம் ஸ்ரீதரை விட்டுட்டு இருக்க முடியாதாம். அதனால மலேசியா போகலாம்னு பிளானை மாத்திட்டோம்.''

'அப்படியா?' என்பது போல் நேஹா ஜோதியை பார்த்தாள்.

"என்ன அண்ணி நிர்மலை விட்டுட்டு ரெண்டு வாரம் ஜாலியா இருக்கலாம்னு நினைச்சேன். என் நினைப்பில் மண்ணை அள்ளி போட்டுட்டியே அப்படிங்கிற மாதிரி பார்க்கிறீங்க." என்று கலாய்த்தாள்.

"என் மனசிலே உள்ளதை எப்படி சரியா சொன்னே?" என்று நேஹா கேட்கவும்,

"அடிப்பாவிங்களா! ரெண்டு பேரும் கூட்டு சேர்ந்துக் கிட்டு எனக்கு ஆப்பா அடிக்கிறீங்க." என்று நிர்மல் அலற, நேஹாவும் ஜோதியும் ஹை பைவ் தட்டிக் கொண்டார்கள்.

அடுத்த அரை மணி நேரம் அவர்கள் அனைவரும் சிரித்து பேசி மகிழ்ந்தனர்.

"சீக்கிரமா வீட்டுக்கு வாடாம்மா." என்று அவளது பெரியம்மா அழைப்பு விடுத்தார்.

"ஸ்ரீதரோட வரேன் பெரியம்மா. இன்னும் கொஞ்ச நாள் பொறுங்க." என்று கூறி ஜோதி விடைபெற்றாள்.

மறுநாள் திங்கட்கிழமை ஜோதி தனக்கு வர போகும் பிரச்சனை பற்றி அறியாமல் சந்தோஷமாக கல்லூரிக்குள் நுழைந்தாள். இரண்டாவது பீரியட் சுனிதா ஜோதியின் வகுப்பிற்குள் நுழைந்தாள்.

பாடம் எடுக்காமல், "இந்த டாபிக்கை படிங்க. நான் கொஞ்ச நேரத்தில் கேள்வி கேட்கிறேன்." என்றாள்.

"பொதுவா இந்த மேடம் இப்படி சொன்னாலே யாரையோ வச்சு செய்ய முடிவு பண்ணிடுச்சுன்னு



தானே அர்த்தம். இன்னைக்கு யார் அந்த பலி ஆடுன்னு தெரியலையே!" என மாணவர்கள் நினைத்து கொண் டார்கள்.

அன்று அசைன்மெண்ட் விஷயத்தால் அது தானாக இருக்க வாய்ப்பு அதிகம் என்று ஜோதிக்கு தோன்றியது.

அதனால் அவள் அந்த டாப்பிக்கை தீவிரமாக படிக்க ஆரம்பித்தாள். ஜோதி எதிர்பார்த்தது போல் சுனிதா திரும்ப திரும்ப ஜோதியிடமே வந்து நின்றாள். ஜோதியும் சளைக்காமல் பதில் சொன்னாள்.

அவளை கேள்வி கேட்டு சிக்க வைக்க முடியாத சுனிதா, "ஆமா நீ டிப்ளமோ முடிச்சு லேட்டரல் என்ட்ரி மூலமா தானே வந்து சேர்ந்தே. ஏன் அப்படி?" என்றாள்.

"எனக்கு வசதி இல்லை மேம். அதனால முதல்ல டிப்ளமோ முடிச்சுட்டு ரெண்டு வருஷம் வேலை பார்த் துட்டு அப்புறமா இங்கே வந்து சேர்ந்தேன்."

"வசதி இல்லாதவள் நேத்து பைவ் ஸ்டார் ஹோட் டலில் ரெண்டு பேர் கூட உட்கார்ந்து சாப்பிட்டுக்கிட்டு இருந்தியே! அது எப்படி? ப்ராஜெக்ட் செய்ய போகிற இடத்திலே அங்கே உள்ளவங்களை வளைச்சு போடுற வேலையா பார்க்கிறே? அவர்களோடு சாப்பிட மட்டும் தான் செஞ்சியா? இல்லை ரூம் போட்டு மேட்டரையும் முடிச்சுட்டியா?" என்றதும் ஜோதி அதிர்ந்து போய் நின்றாள்.

அன்று 'அசைன்மென்ட்டை பொறுக்கிக்கிட்டு போடின்னு சுனிதா சொன்ன பொழுது கூட மைன்ட் யுவர் வேர்ட்ஸ்' என்று திட்டிய ஜோதி... இன்று சுனிதா

இந்த அளவிற்கு அவமானப்படுத்தியும் ஒன்றும் சொல்லாமல் அதிர்ச்சியில் சிலையாய் நின்றிருந்தாள்.

மாணவர்கள் முன் தன்னுடைய நடத்தையை கேவலப்படுத்தி விட்டாளே என்ற அதிர்ச்சியில் கூசிப் போய் நின்றிருந்தாள். அவளுக்கு வாயில் இருந்து வார்த்தைகள் வரவில்லை.

சுனிதா மேற்கொண்டு எதுவும் பேசும் முன் அந்த பீரியட் முடிந்ததை அறிவிக்கும் மணி அலற ஆரம்பித்தது.

'சே! அஞ்சு நிமிஷம் முன்னாடியே பெல் அடிச்சுடுச்சு' என்று திட்டிக் கொண்டே சுனிதா வெளியேறினாள்.

வகுப்பறையில் வைத்து சுனிதா தன்னை கேவலப்படுத்தியதும் ஜோதியால் தாங்கவே முடியவில்லை.

'என் அண்ணன்களோட சேர்ந்து சாப்பிட்டதை எப்படி கேவலப்படுத்திட்டாள். இவ்ளை என்ன செய்யலாம்? நாம யாரு என்னன்னு காட்டிடலாமா? தாத்தாகிட்ட சொல்லி அவளை வேலையை விட்டே தூக்கிடுவோமா?' என யோசிக்க ஆரம்பித்தாள்.

தன் மேல் வீசப்பட்ட தரக் குறைவான வார்த்தைகள் அவளது கண்ணீரை உற்பத்தி செய்தன.

''ஜோதி! அழாதேடி! எல்லோரும் பார்க்கிறாங்க. ஸ்ரீதர் சார்கிட்ட சொல்லுவோமா?''

''வேணாம் கீர்த்தி. அவர்கிட்ட சொல்ல வேணாம்.''

அப்பொழுது கிளாஸ் ரெப்ரசென்டேட்டிவ் மேடை மேல் ஏறி நின்று, ''பிரண்ட்ஸ்! சுனிதா மேடம் ஒரு



மாதிரியா தான் நடந்துக்குவாங்கன்னு நம்ம எல்லோருக்கும் தெரியும். ஆனா இன்னைக்கு நம்ம ஜோதிக்கு நடந்தது அநியாயமான ஒண்ணு.

''நாம சரியா படிக்கலைன்னு ஒரு லெக்சரர் நம்மை கண்டிச்சா அது வேற. ஆனா இன்னைக்கு சுனிதா மேடம் பண்ணது காரெக்ட்டர் அஸாசினேஷன். இதை இப்படியே விடக் கூடாது. நாம நம்மோட எதிர்ப்பை காண்பிச்சே ஆகணும். இல்லைலன்னா... இது தொடர்கதையா தொடர வாய்ப்பு இருக்கு.''

''ஆமா. நாம பிரின்ஸியை சந்திச்சு நம்மோட எதிர்ப்பை சொல்லியே ஆகணும்.'' என அனைவரும் ஆமோதித்தனர்.

ஜோதி எழுந்து நின்று அழுகுரலில், ''பிரண்ட்ஸ்! உங்க சப்போர்ட்டுக்கு தாங்க்ஸ். ஆனால் நான் இதை பெர்சனலா டீல் பண்ணிக்கிறேன்.'' என்றாள்.

''உன்னால தனியா எப்படி ஜோதி ஒரு ஸ்டாப்பை எதிர்க்க முடியும்? ஸ்டூடண்ட்ஸ் மொத்தமா போனால் தான் இதுக்கு நியாயம் கிடைக்கும்.''

''இல்லை பிரண்ட்ஸ்...''

''நீ தனியா போய் கேட்டால் விஷயத்தை அப்படியே சுனிதா மேடம் உல்டா பண்ண சான்ஸ் இருக்கு.''

''நீங்க சொல்ல வருவது எனக்கு புரியுது. என்னால முடியாத பட்சத்தில் நாளைக்கு நாம எல்லோருமே பிரின்ஸியை போய் பார்க்கலாம். ஒரு நாள் மட்டும் வெயிட் பண்ணுங்க.'' என்றதும் மாணவர்கள் சம்மதித்தனர்.

அவர்கள் அனைவரும் தங்களுக்குள் கிசுகிசுக்க ஆரம் பித்தனர். அனைவரின் முகமும் வாடி இருந்தது.

இதுவே ஜோதி இடத்தில் வேறொரு பெண் இருந் திருந்தால் சுனிதா சொன்னதில் உண்மை இருக்குமோ என அவர்கள் சந்தேகப்பட்டு இருப்பார்கள்.

அதே போல் சுனிதா இடத்தில் வேறொரு ஆசிரியர் இருந்திருந்தாலும் விஷயம் உண்மையாய் இருக்குமோ என்று சந்தேகப்பட்டு இருப்பார்கள்.

சொன்னது சுனிதா! அதுவும் ஜோதியை பற்றி என்பதால் யாருமே நம்பவில்லை. அதனால் அனைவர் மனதிலும் கோபம் நெருப்பாய் கொதித்தது.

அனைவரும் கோபத்தோடும் இறுக்கத்தோடும் அமர்ந்திருந்தனர். இன்டர்வல் முடிந்து மூன்றாவது பீரியடுக்கான பெல் அடிக்கப்பட்டது.

அடுத்த வகுப்பை எடுப்பதற்காக ஸ்ரீதர் உள்ளே நுழைந்தான். அனைவரும் எழுந்து நின்று அவனுக்கு மரியாதை செலுத்தி விட்டு பின் அமர்ந்தனர்.

வகுப்பிற்குள் நுழைந்ததும் அவன் என்றுமே ஜோதி யின் புறம் பார்க்க மாட்டான். அதனால் அன்றும் அவன் மாணவிகள் புறம் பார்க்காமல் மாணவர்களை பார்த்து தன் பாடத்தை துவக்க நினைக்க...

அனைத்து மாணவர்களும் தங்களது தலையை குனிந்து கொண்டு அமர்ந்து இருந்தது அவனுக்கு வித்தியாசமாகப் பட்டது.

'என்ன ஆச்சு? எல்லோரும் எதுக்கு தலை குனிஞ்சு உட்கார்ந்து இருக்கானுங்க? பொண்ணுங்ககிட்ட கலாட்டா பண்ணி வாங்கி கட்டிக்கிட்டாங்களா?' என நினைத்து மாணவிகளை ஆராய்ந்தான்.



அவர்களும் அவ்வாறே அமர்ந்து இருக்க... அவன் குழம்பிப் போனான். ஜோதி என்ன செய்கிறாள் என்று பார்த்தான். அவளும் தலையை குனிந்து கொண்டு தான் இருந்தாள்.

கீர்த்தி மெதுவாக நிமிர்ந்து ஸ்ரீதரிடம் ஜோதியை கை காட்டினாள். அவன் என்ன என்பதாய் பார்க்க... சரியாக ஜோதி தன் தலையை நிமிர்த்தி கணவனை பார்த்தாள். ஜோதி தலை நிமிரவும் கீர்த்தி குனிந்து கொண்டாள்.

ஜோதியின் கண்களில் இருந்து கண்ணீர் வழியவும், 'என்ன ஆச்சு?' என்று ஸ்ரீதர் சைகையில் கேட்க அவள் ஒன்றுமில்லை என்பதாய் தலையசைத்து விட்டு மீண் டும் குனிந்து கொண்டாள்.

'என்னமோ நடந்து இருக்கு. இங்கே யாரும் பாடம் கவனிக்கிற மூடில் இல்லை. அதை விட பாடம் சொல் லித் தரும் மூடில் நானும் இல்லை' என நினைத்தான்.

''ஸ்டூடண்ட்ஸ்! எல்லோரும் ஏதோ மூட் அவுட்ல இருக்கீங்கன்னு எனக்கு புரியுது. நான் நாளைக்கு வந்து கிளாஸ் எடுக்கிறேன்.'' என்றவன் விறுவிறுவென வகுப்பை விட்டு வெளியேறினான்.

மாணவர்களில் சிலர் களைந்து செல்ல ஆரம்பித்தனர். ஸ்ரீதர் ஜோதிக்கு போன் செய்தான்.

அவள் அதை எடுத்து இயக்கி காதில் வைத்ததும், ''நம்ம டிபார்ட்மென்டில் இருக்கும் என்னோட ரூமுக்கு வா.'' என்றான்.

"இல்லைங்க..."

''வா!'' என்று உத்தரவு பிறப்பித்து விட்டு அழைப்பை துண்டித்தான்.

ஜோதி போனை காதில் இருந்து எடுத்ததும் கீர்த்தி, "ஸ்ரீதர் சாரா கூப்பிட்டார்? என்ன சொல்லுறார்?" என்று மென் குரலில் கேட்டாள்.

"அவரோட ரூமுக்கு வர சொல்லுறார்.''

"போ ஜோதி. நானும் துணைக்கு வரவா?''

"இல்லை கீர்த்தி. நான் அவர்கிட்ட தனியா பேசணும். இங்கே பேச முடியலைன்னால் வீட்டுக்கு போய் தான் பேசணும். நான் மட்டும் போய் பார்க்கிறேன்.'' என்றவள் வெளியேறினாள்.

தனக்கென ஒதுக்கப்பட்டு இருக்கும் அறை வாயிலில் நின்று கொண்டு ஸ்ரீதர் ஜோதியின் வரவிற்காய் பதட்டத்தோடு காத்திருந்தான்.

அவன் அங்கே நிற்பதை இரு கண்கள் ஆராய்ச்சியாய் பார்ப்பதை ஸ்ரீதர் உணரவில்லை. அது வேறு யாருமில்லை. சுனிதா தான்.

தூரத்தில் ஜோதி வருவதை கண்ட சுனிதா மறைந்து நின்று கொண்டாள்.

'இவ எதுக்கு இங்கே வந்துக்கிட்டு இருக்காள்? அதுவும் கிளாஸ் அவரில்!' என்று சுனிதா யோசித்துக் கொண்டு இருந்தாள்.

ஜோதியின் தலையை கண்டதும் ஸ்ரீதர் அறைக்குள் நுழைந்தான். ஜோதியும் அவன் பின்னே சென்றாள்.



அவள் தாங்கள் பேசுவது வெளியே யாருக்கும் கேட்க வேண்டாம் என நினைத்து அறையின் கதவை கொஞ்சம் மூடினாற் போல் வைத்தாள். அதை கண்ட சுனிதாவிற்கு கொண்டாட்டமாக போனது.

'உனக்கு இன்னைக்கு வைக்கிறேன்டி வேட்டு.' என்று கறுவிக் கொண்டே அந்த அறையை இழுத்து வெளியே தாழ்ப்பாள் போட்டுவிட்டு சென்றாள்.



## 31

**ஸ்ரீ**தரும் ஜோதியும் பேச்சை தொடங்கும் முன்பே அறை கதவு வெளியில் இருந்து மூடப்பட்டது.

''ஏதோ சத்தம் கேட்டுச்சு இல்ல. கதவை யாரோ இழுக்கிற மாதிரி.'' என்று கேட்டுக் கொண்டே ஜோதி கதவை இழுத்துப் பார்த்தாள்.

கதவை திறக்க முடியவில்லை என்றதும், ''ஸ்ரீ! யாரோ நம்மளை உள்ளே வச்சு கதவை லாக் பண்ணி இருக்காங்க.'' என்று அலறினாள்.

''ஜோ! ரிலாக்ஸ்! இப்போ எதுக்கு இவ்வளவு டென்ஷன் ஆகிறே? நான் தானேடா உன் கூட இருக்கேன். எதுக்கு பயப்படுறே?''

''உங்களுக்கு புரியலை ஸ்ரீ. நாம ரெண்டு பேரும் உள்ளே இருக்கிறதை பார்த்தால் கதை கட்டுவாங்க.''

''நாம ரெண்டு பேரும் ஹஸ்பண்ட் அண்ட் வைஃப்டா ஜோ. நீ ஏன் அதை மறந்துட்டு பேசுறே.''

''இல்லை ஸ்ரீ. இந்த காலேஜை பொறுத்தவரை நீங்க லெக்சரர் நான் ஸ்டூடண்ட்.''

''நாம யாருங்கிற உண்மையை சொல்லிட்டால் போச்சு.''

''அது அப்படி இல்லை ஸ்ரீ. காலேஜ் டைமில் வேலை பார்க்காமல் தனி அறையிலே என்ன செஞ்சீங்கன்னு அசிங்கமா பேசுவாங்க.''

''அப்படி யாரு பேசுவா?''

''ஸ்ரீ! முதல்ல இங்கே இருந்து வெளியேற என்ன வழின்னு யோசிங்க.''

அவன் தன் கைப்பேசியை எடுத்து அவனது அறைக்கு வெளியே இருக்கும் அட்டென்டருக்கு அழைத்து பார்த்தான். யாரும் போனை எடுக்கவில்லை.

''அஸ்வினுக்கு கூப்பிட்டு பார்க்கிறேன்.''

''அவருக்கு இந்த அவர் கிளாஸ் இருக்கு. அவர் டிபார்ட்மென்ட்டில் இருக்க மாட்டார்.'' என்று ஜோதி கூறவும் நேரடியாக ஹெச்.ஓ.டி.க்கு அழைத்து பேசினான்.

''நான் ஆள் அனுப்புறேன் ஸ்ரீதர்.'' என்று அவர் அழைப்பை துண்டித்தார்.

''யாராச்சும் இருக்கீங்களா? ஹெல்ப்! ஹெல்ப்!'' என்று ஜோதி கதவை தட்டினாள்.

''ஹேய்! நிறுத்து! நீ கத்துறதை பார்த்தால் எல்லோரும் என்னை வில்லனா நினைச்சு விசாரணையே



இல்லாமல் மொத்திட போறாங்க.'' என்று அவன் பதறினான்.

சப்தமே போடாமல் இருந்தாலும் பிரச்சனை தான் ''ஸ்ரீ. நீங்களும் என் கூட சேர்ந்து சத்தம் போடுங்க. அப்போ யாரும் உங்களை தப்பா நினைக்க மாட்டாங்க.''

நடந்து கொண்டிருந்த குழப்பத்தால் வகுப்பில் என்ன நடந்தது என்பதை கேட்க ஸ்ரீதருக்கு தோன்ற வில்லை.

யார் இப்படி எங்களை மாட்ட வைக்க திட்டம் போடுறாங்க. இதனால என்ன நடக்கும்? இங்கே தொடர்ந்து வேலை செய்ய முடியுமா? வேலை போனால் பிரச்சனை இல்லை. வேற காலேஜ் பார்த்துக்கலாம். ஆனால் ஜோ... அவள் இன்னும் கொஞ்ச நாள் இந்த காலேஜில் தானே இருந்தாகணும். என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

சுனிதா கதவை மூடி பத்து நிமிடங்கள் கடந்த பின்பே கதவு திறக்கப்பட்டது.

வெளியே பத்துக்கும் அதிகமானோர் நின்றிருந்தனர். அதில் ஹெச்.ஓ.டியும் ஒருவர். அவருக்கு ஸ்ரீதரின் திருமண விஷயம் தெரியும் என்பதால் அவர் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

''என்ன ஆச்சு ஸ்ரீதர்?''

''தெரியலை சார். நாங்க ரூமுக்குள்ளே நுழைஞ்சு உடனே யாரோ வெளியே இருந்து லாக் பண்ணிட்டாங்க.''

''ஸ்ரீதர் சார்! உங்களுக்கு இந்த அவர் பைனல் இயர் கிளாஸ் இருக்கே! நீங்க அங்கே இல்ல இருக்கணும்? அங்கே போகலையா? ஸ்டூடண்ட்ஸை உங்க இடத்துக்கே கூட்டிட்டு வந்து கிளாஸ் எடுக்க நினைச்சீங்களா? அதுவும் ஒரே ஒருத்திக்கு மட்டும்.'' என்று சுனிதா எகத்தாளமாய் கேட்க,

''வாட் டூ யூ மீன்?'' என்று ஸ்ரீதர் கோபமாய் கேட்டான்.

ஜோதி தன்னால் முடிந்த மட்டும் சுனிதாவை முறைத்தாள்.

''என்னடி திமிரா பார்க்கிறே? நான் கிளாஸில் வச்சு அவ்வளவு தூரம் உன்கிட்ட சொல்லியும் நீ அடங்கலை இல்ல. அடுத்த ஆம்பிளையை பிடிக்க வந்துட்ட இல்ல...'' என்று ஜோதியை பார்த்து சுனிதா இரைந்தாள்.

''சுனிதா! மைன்ட் யுவர் வேர்ட்ஸ். லேடி ஸ்டாப் ஆச்சேன்னு பார்க்கிறேன். ''என்று ஸ்ரீதர் அவள் முன் சென்று எச்சரித்தான்.

''நீ எப்படி பைனல் இயரை முடிக்கிறேன்னு நான் பார்க்கிறேன்.'' என்று சுனிதா ஜோதியிடம் சவால் விட்டாள்.

'நீ நாளையில் இருந்து எப்படி வேலைக்கு வரேன்னு நானும் பார்க்கிறேன்' என்று மனதில் நினைத்த ஜோதி தெனாவெட்டாய் நின்று கொண்டிருந்தாள்.

சுனிதாவின் பேச்சை கேட்டு கோபம் அடைந்த ஹெச்.ஓ.டி., ''சுனிதா! வாட் இஸ் திஸ்? இப்படி தான் உங்க மாணவர்கள் கிட்டயும் கூட வேலை பார்க்கிறவங்ககிட்டேயும் பேசுவீங்களா? இவங்க ரெண்டு பேரும் ஒரு ரிட்டன் கம்ப்ளையின்ட் கொடுத்தால் நான் உங்க மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் சுனிதா.'' என்று எச்சரித்தார்.



''என்னை எதுக்கு சார் கோபிச்சுக்கிறீங்க? கேடு கெட்ட பொண்ணை கண்டிக்கிறதை விட்டுட்டு...'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே திமுதிமுவென இருபதுக்கும் மேற்பட்டோர் அங்கே வந்தனர்.

அதில் முக்கியமான இருவர் கல்லூரி முதல்வரும் ஜோதியின் தாத்தாவும். ஸ்ரீதருக்கு அவளின் தாத்தாவை அடையாளம் தெரியவில்லை.

'பிரின்ஸிபால் வரைக்கும் விஷயம் போயிடுச்சா? இந்த சுனிதாக்கு ஜோ மேல என்ன கோபம்? கிளாஸில் வச்சு சுனிதா தான் ஜோவை திட்டி இருப்பாளோ?' என்று ஸ்ரீதர் யோசித்துக் கொண்டிருந்தான்.

முதல்வரிடம் சென்ற ஹெச்.ஓ.டி., ''சார்! சின்ன பிரச்சனை தான் சார். நான் சால்வ் பண்ணிடுவேன்.'' என்றார்.

''எல்லாம் தெரிஞ்சு தான் நான் வந்திருக்கேன். சேர்மன் சார் பெர்சனலா டீல் பண்ண வந்திருக்கார். கொஞ்ச நேரம் நீங்க அமைதியா இருங்க.'' என்றதும் ஹெச்.ஓ.டி 'சரி' என தலையாட்டி விட்டு ஒரு ஓரமாய் நகர்ந்து நின்றார்.

ஜோதி தன் தாத்தாவை நிமிர்ந்து பார்த்தாள்.

'உனக்கு இதெல்லாம் தேவையா? நடந்தது நடந்து போச்சு. நான் பார்த்துக்கிறேன்' என்பதாய் அவர் தன் பேத்தியை பார்த்துக் கொண்டிருந்தார்.

ஜோதியின் தாத்தா தன்னருகே இருந்த தன் உதவி யாளர் மகேந்திரனை பார்த்து தலை அசைக்க அவர் பேச ஆரம்பித்தார்.

''போன பீரியட் பைனல் இயர் கிளாஸில் என்ன நடந்துச்சுன்னு இந்த வீடியோ புட்டேஜ்'ல பதிவாகி இருக்கு. காரணமே இல்லாமல் மிஸ் சுனிதா தரக் குறைவான வார்த்தைகளை உபயோகம் செஞ்சு இருக் காங்க.

''அதே மாதிரி மிஸ்டர் ஸ்ரீதர் ரூமையும் அவங்க தான் லாக் பண்ணி இருக்காங்க. அதுவும் அவங்க உள்ள நுழைஞ்சு அடுத்த நொடி.

''அதுக்கான வீடியோ புட்டேஜும் இதிலே இருக்கு. அதனால அவங்க மேல ஒழுங்கு நடவடிக்கை எடுக் கப்பட்டு இந்த காலேஜில் இருந்து அவங்களை நிர்வாகம் டிஸ்மிஸ் பண்ண முடிவு எடுத்து இருக்கு.''

சுனிதா ஏதோ பேச ஆரம்பிக்க...

''இனி பேசுறதுக்கு ஒண்ணும் இல்லை. சந்தேகம் இருக்கிறவங்க இந்த ரெண்டு சிடியையும் போட்டு பார்த்துக்கோங்க.'' என்ற மகேந்திரன் அதை ஹெச்.ஓ.டி யின் கையில் கொடுத்தார்.

''டெர்மினேஷன் லெட்டர் அடிச்சு ரெடியா இருக்கு. கரெஸ் மேம் சைன் பண்ணிட்டாங்கன்னா அந்த லெட்டரை குடுத்து மிஸ்.சுனிதாவுக்கு உரிய பணத்தை



செட்டில் பண்ணி வெளியேத்திடலாம்.'' என்று மகேந்திரன் கடிதம் ஒன்றையும் பேனா ஒன்றையும் நீட்டிக் கொண்டு நின்றார்.

'தாத்து! இப்போ இது அவசியமா? இன்னும் ஸ்ரீதருக்கு விஷயம் தெரியாதே!' என்பது போல் ஜோதி தன் தாத்தாவை பார்க்க அவர் தன் தோளை குலுக்கி கொண்டார்.

'உன்னை அவமானப்படுத்தினவளை உன் கையால் தண்டிப்பது தான் சரி' என்பது அவளது தாத்தாவின் எண்ணம்.

'யூ டு மகேந்திரன் அங்கிள்!' என்று ஜோதி அவரை பார்க்க அவர் உதட்டில் நிறைந்த புன்னகையோடு அசையாமல் நின்றார்.

ஜோதி ஒரு முறை ஆழ மூச்சு எடுத்து தன்னை நிலைப்படுத்திக் கொண்டு, ''எஸ் மிஸ்டர் மகேந்திரன்! அந்த லெட்டரையும் பென்னையும் தாங்க. நான் சைன் பண்ணுறேன்.'' என்றதும் அவர் முகம் கொள்ளா புன் னகையோடு அவளிடம் நீட்டினார்.

'என்னடா நடக்குது இங்கே?' என்று ஸ்ரீதர் குழம்பி போய் பார்த்திருந்தான்.

ஹெச்.ஓ.டியும் பிரின்ஸிபாலும் கூட அதிர்வோடு தான் பார்த்துக் கொண்டிருந்தனர். ஏனென்றால் அவர்களுக்கும் ஜோதி யாரென்று தெரியாது.

அருகே இருந்த மேஜை மேல் வைத்து ஜோதி பிரகாஷ் என்று கையெழுத்திட்டவள், ''ஆர் யூ ஹேப்பி தாத்து?'' என்று அவரிடம் அதை நீட்டினாள்.

அதை வாங்கிப் பார்த்தவர் அவளது பெயரின் பின் அவள் சேர்த்து இருந்த பிரகாஷை கண்டதும் இத்தனை நாளாய் இதுக்காக தானே காத்திருந்தேன் என்று சந்தோஷம் அடைந்தார்.

''வெரி ஹாப்பிடா குட்டிம்மா!'' என்று தன் பேத்தியை தோளோடு அணைத்து கொண்டார்.

ஜோதி சுனிதாவை பார்த்து, ''இந்த காலேஜோட ஓனரா நான் போட்ட முதல் சைனே உன்னோட டெர்மி னேஷன் லெட்டர் தான். என்னோட காலேஜ்க்கு இப்படி ஒரு ஸ்டாப் தேவை இல்லை. ஜஸ்ட் கெட் லாஸ்ட்.'' என்று அதிகாரமாய் கூறினாள்.

''ஓனர்னா என்ன தப்பு வேணா செய்யலாமா?'' என்று அப்பொழுதும் சுனிதா பேச ஆரம்பிக்க,

''மகேந்திரன்! இந்த பொண்ணு சொன்ன குற்றச் சாட்டுக்கு எல்லாம் விளக்கம் சொல்லி வெளியே அனுப் புங்க. இனி அவள் என் பேத்திக்கு எதிரா வாயை திறக்கக் கூடாது.'' என்று தாத்தா மிரட்டவும்,

''நான் பார்த்துக்கிறேன் ஐயா. நீங்க அமைதியா இருங்க.'' என்று மகேந்திரன் கூறினார்.

அங்கே இருந்த இரு பெண்கள் சுனிதாவை அழைத்துக் கொண்டு செல்ல மகேந்திரன் அவர்கள் பின்னே சென்றார்.

தாத்தா அங்கே நின்று கொண்டிருந்தவர்களை பார்த்து, ''இவ என் பேத்தி. ஸ்ரீதர் என் பேத்தியோட புருஷன். எங்க வீட்டு மாப்பிள்ளை.'' என்று அறிவித்து



விட்டு தன் பேரன் பேத்தியை கூட்டிக் கொண்டு நகர்ந்து போனார்.

''வீட்டுக்கு போகலாம் வாங்க!'' என்று அவர்கள் இருவரையும் அழைத்தார்.

''தாத்து! நான் போய் என் பிரண்ட்ஸ்கிட்ட இதை பத்தி பேசணும்.''

''அப்புறமா பேசிக்கோ.''

''அவங்க எல்லாம் ஸ்ட்ரைக்னு முடிவு பண்ணுறதுக்கு முன்னாடி பேசணும்.''

''உனக்காக வெயிட் பண்ணுறேன். பேசி முடிச்சுட்டு போன் பண்ணு. உங்க மாமனாரை பார்க்க உன் கூட வரேன்.''

''மாமா ஈவினிங் தான் தாத்து வீட்டிலே இருப்பார்.'' என்றவள் அவரது காதில், ''உங்களை பத்தி ஏன் சொல்லலைன்னு ஸ்ரீதர் என் மேல கோபமா இருக்கார். நான் முதல்ல அவரை சரி கட்டுறேன். நீங்க ஈவினிங் மாமாவை பார்க்க வாங்க.'' என்றாள்.

''சரி உன் இஷ்டம்.'' என்றவர், ''வரேன் மாப்பிள்ளை.'' என்று விடைபெற்று வேறு பாதையில் நடக்க ஆரம் பித்தார்.

தாத்தா விலகி சென்றதும் ஸ்ரீதர் அதே இடத்திலேயே நின்றுவிட்டான்.

''ஸ்ரீ! நான் உங்களுக்கு விளக்கமா சொல்லுறேன்.'' என்றதும் அவன் முறைத்தான்.

''உங்க கோபம் நியாயமானது தான். ப்ளீஸ் ஸ்ரீ. இப்போ என் கிளாஸில் நான் பட்ட அவமானத்துக்கு பதில்

சொல்லணும். அதுக்கு நீங்க என் பக்கத்தில் இருக்கணும்.''

அவன் அசையாமல் அங்கேயே நிற்க...

''உங்க ஜோவுக்காக... ப்ளீஸ் ஸ்ரீ. நம்ம வீட்டுல வச்சு நீங்க எவ்வளவு வேணா திட்டுங்க. நான் வாங்கிக்கிறேன். பொது இடத்துல வச்சு வேணாம் ஸ்ரீ. நீங்க எனக்கு பக்கபலமா இருக்க வேண்டிய நேரம் இது.''

''வா போகலாம்!'' என்று மட்டும் சொன்னவன் அவளது வகுப்பறையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

மணியை பார்த்தவள் அடுத்த வகுப்பு தொடங்கி இருக்கும் என கணக்கிட்டு, ''இப்போ அஸ்வின் சார் கிளாஸ் எடுத்துட்டு இருப்பார்.'' என்றாள்

''யார் கிளாஸ் எடுத்தால் உனக்கு என்ன? நீ தானே காலேஜ் ஓனர்?''

'இப்போ நான் என்ன பேசினாலும் சரியா வராது' என நினைத்தவள் தன் வாயை மூடிக் கொண்டாள்.

அவர்கள் இருவரும் ஒன்றாய் போய் அவள் வகுப்பறை வாயிலில் நிற்க அஸ்வின் குழம்பினான்.

'ஜோடி போட்டுக்கிட்டு வந்திருக்காங்க. என்ன விஷயம்? என நினைத்தவன் ''எஸ் கமின் இன்!'' என்று ஜோதியை பார்த்து கூற, அவள் அசையாது அங்கேயே நின்றாள்.

ஸ்ரீதர் தன் நண்பனை அருகே வருமாறு அழைக்க அஸ்வின் மேடையை விட்டு இறங்கி அவர்களை நோக்கி நடந்து வந்தான்.



''என்னடா விஷயம்? பாதி கிளாஸில் வந்து நிக்கிறீங்க.''

''சார்! நான் கொஞ்சம் பேசணும்.''

''யார் கூட பேசணும்?''

''என்னோட பிரண்ட்ஸ்கிட்ட.''

''அதுக்கு கிளாஸ் அவர் தானா கிடைச்சது?''

''இது தான் லாஸ்ட் அவர். மதியம் ப்ராஜெக்ட்னு எல்லோரும் கிளம்பிடுவாங்க. இப்போ பேசலைன்னா நாளைக்கு வரைக்கும் பேச முடியாது. சில விஷயங்களை நான் இப்பவே கிளாரிஃபை பண்ணனும். ப்ளீஸ்...''

''என்னடா ஸ்ரீதர்?''

''அவ சொல்லுறதை கேளு. அதான் உனக்கும் எனக்கும் நல்லது.''

''அப்போ நான் கிளம்புறேன்.''

''இல்லை சார். நீங்களும் இவரோடு சேர்ந்து அங்கே வந்து என் கூட நில்லுங்க. என்னோட ப்ராஜெக்ட் ஹெட்டா நீங்களும் சில விஷயங்களை தெரிஞ்சுக்கணும்.'' என்றதும் மூவரும் உள்ளே நுழைந்தனர்.



## 32

ஜோதி வந்ததுமே மாணவர்கள் அனைவரும் அவளது பிரச்னையை பற்றி மீண்டும் பேச ஆரம்பித்து விட்டனர்.

அவள் உள்ளே வந்ததும், ''என்ன ஆச்சு ஜோதி? திரும்பவும் பிரச்சனையா?''

''பிரின்ஸியை பார்ப்போமா?''

''இல்லை ஸ்ட்ரைக் பண்ணுவோமா?'' என்று ஒவ்வொருவராக எழுந்து கேள்வி எழுப்பினர்.

''என்ன ஸ்ரீதர் நடந்துச்சு?'' என்று அஸ்வின் நண்பனை விசாரிக்க,

''ம்ம்ம் அவளே சொல்லுவாள் கேளு!'' என்று அவன் கடுப்போடு மொழிந்தான்.

'இவனுக்கு எதுக்கு இவ்வளவு காண்டுன்னு தெரியலையே!' என நினைத்துக் கொண்டே அஸ்வின் ஜோதியின் பேச்சை கேட்க தயாரானான்.

''பிரண்ட்ஸ்! உங்க அன்புக்கு ரொம்ப நன்றி. நான் சொல்லுறதை எல்லோரும் அமைதியா கேளுங்க. சுனிதா மேடம் பிரச்சனை பண்ணிட்டு போனதும் ஸ்ரீதர் கிளாஸ் எடுக்க வந்தார்.

''நாம எல்லோரும் அமைதியா இருக்கிறதை பார்த்துட்டு... முக்கியமா நான் அழுததை பார்த்துட்டு அவர் கிளாஸ் எடுக்காமல் திரும்ப போயிட்டார்.

''என்ன நடந்துச்சுன்னு கேட்கிறதுக்காக ஸ்ரீதர் என்னை அவரோட ரூமுக்கு வர சொல்லி போன் பண்ணினார். நானும் போனேன். ஆனா நான் அவரோட ரூமுக்குள்ளே நுழைஞ்சு உடனே கதவை வெளியில் இருந்து சுனிதா மேடம் லாக் பண்ணிட்டாங்க.

''நம்ம லேபில் அட்டெண்டர்ஸ் யாரும் இல்லை. அதனால ஸ்ரீதர் ஹெச்.ஓ.டி.க்கு போன் பண்ணி வர



சொன்னார். சாரும் வந்தார். பின்னாடியே சுனிதா மேடமும் அங்கு வந்தாங்க. என்னையும் ஸ்ரீதரையும் இணைச்சு...'' என்று கூறி சில நொடிகள் அமைதியானாள்.

''அந்த சுனிதா கன்னத்திலே ரெண்டு அப்பு அப்புனியா இல்லையா?'' என்று அஸ்வின் கொதித்தான்.

மாணவர்கள் அனைவரும் மீண்டும் எழுந்து ரகளை பண்ணினார்கள்.

''காம் டவுன். இந்த இடத்திலே நான் உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லிக்க ஆசைப்படுறேன். எனக்கு கல்யாணம் ஆகிடுச்சு. என்னோட ஹஸ்பெண்ட் வேறு யாரும் இல்லை. ஸ்ரீதர் தான்.'' என்றதும் ஒரு சலசலப்பு கிளம்பியது.

''எங்க கல்யாண விஷயம் நம்ம பிரின்ஸி, ஹெச்.ஓ.டி அஸ்வின் சார்... இப்படி கொஞ்ச பேருக்கு மட்டும் தெரியும். மறைக்கணும்னு நினைக்கலை. உண்மை தெரிஞ்சா ஸ்ரீதர் எனக்கு பார்ஷியாலிட்டி காட்டுறதா உங்களுக்கு தோணும். அதை அவாய்ட் பண்ணலாம்னு நினைச்சேன். ஏற்கனவே நான் உங்க எல்லோரையும் விட பெரியவள். இதுல கல்யாணம் வேற ஆகிடுச்சுன்னு சொல்லணுமான்னு ஒரு தயக்கம்.''

''எங்களால புரிஞ்சுக்க முடியுது ஜோதி.''

''தாங்க்ஸ். தாங்க்ஸ் எ லாட். சுனிதா மேம்க்கு என்ன தண்டனை தரலாம்னு நீங்க நினைக்கிறீங்க?''

''அவங்களை உன்கிட்ட மன்னிப்பு கேட்க சொல்லணும். இனிமேலும் இது மாதிரி நடந்துக்க மாட்டாங்

கன்னு என்ன நிச்சயம்? அதனால அவங்களை வேலையை விட்டு தூக்க சொல்லி நாம ஸ்ட்ரைக் பண்ணலாம்.''

''ம்ம்ம்ம் பிரின்ஸியும் காலேஜ் ஓனரும் அங்கே வந்தாங்க. அவங்களும் இதையே தான் சொன்னாங்க. அதனால ஸ்ட்ரைக் எல்லாம் தேவை இல்லை.''

''அவங்களை நாம நம்பலாமா ஜோதி?''

''சுனிதா மேடமை வேலையை விட்டு தூக்கியாச்சு. அதுக்கான டெர்மினேஷன் லெட்டரில் சைன் பண்ணிட்டு வந்து தான் நான் உங்ககிட்ட பேசிக்கிட்டு இருக்கேன். என்றதும் அனைவரும் அவளை குழப்பத்தோடு பார்த்தனர்.

''எஸ் பிரண்ட்ஸ்! ஐயம் தி ஓனர் ஆஃப் திஸ் காலேஜ்!'' என்றதும் அனைவரும் அதிர்ச்சியாய் அமர்ந்திருந்தனர்.

''என்னடா ஸ்ரீதர்? உண்மையா?'' என்று அஸ்வின் கேட்க, அவன் ஆமாம் என்பதாய் தலையாட்டினான்.

''இந்த காலேஜ் எங்க தாத்தா என் பேரிலே எழுதி வச்சு இருக்கிற சொத்து. தாத்தான்னா... என்னோட அப்பாவோட அப்பா. அவ்வளவு வசதியானவள் எதுக்காக லேட்ரல் என்ட்ரியில் உள்ளே வந்தாள்னு உங்களுக்கு தோணலாம். எங்க அப்பாவும் அம்மாவும் லவ் மேரேஜ் பண்ணிக்கிட்டாங்க. அதனால ரெண்டு வீட்டு சைடும் அவங்களை ஏத்துக்கலை.

''சோ நான் கஷ்டத்தில் தான் பிறந்து வளர்ந்தேன். என்னோட அம்மா அப்பா போன பின்னால எங்க தாத்தா



வந்து தன்னோடு வந்துடும்படி கூப்பிட்டார். அம்மா அப்பாவை ஏத்துக்கலைங்கிற கோபத்தில் தாத்தாவோட பணத்தையும் நான் ஏத்துக்கலை.

''கொஞ்ச நாள் முன்னாடி தான் இந்த காலேஜ் எங்க தாத்தாவுக்கு சொந்தம்னு எனக்கு தெரிய வந்துச்சு. ஜஸ்ட் இந்த நிமிஷம் தான் நான் கரஸ்பாண்டன்ட் என்ற பதவியில் இருக்க ஒத்துக்கிட்டேன்.''

அந்த உண்மையை ஜீரணிக்க அவர்களுக்கு சில நொடிகள் அவகாசம் கொடுத்து பேசாமல் இருந்தாள்.

''நம்ம கிளாஸில் நடந்த விஷயத்தை நான் எங்க தாத்தாக்கு போன் பண்ணி சொல்லலை. ஆனா பிரச்சனை நடந்த சில நிமிஷங்களில் டெர்மினேஷன் லெட்டர், வீடியோ புட்டேஜ்ன்னு வந்து நின்னு என் தாத்தா கலக்கினார். இது சிசி டிவியால மட்டும் சாத்தியம் ஆகலை.

''உங்களில் ஒருத்தர் என் தாத்தோவோட ஆளா இருக்கணும். அந்த ஒருத்தர் இந்த காலேஜ்ல என்னோட செகண்ட் இயர்ல சேர்ந்த ஒருத்தரா தான் இருக்கணும். அந்த ஆள் என்னோட ஒட்டுப்புல்லா என் கூட வர கண்ணனா தான் இருக்கணும். ஆம் ஐ ரைட் கண்ணன்?''

''எஸ் மேம். யூ ஆர் ரைட்.'' என்று அவன் எழுந்து நின்றான்.

''மேம்? யாரு நானா?'' என்று ஜோதி அதிர்ச்சியோடு கூறினாள்.

''இவ்வளவு நாளும் உங்களை வெளிப்படையா மேம்னு கூப்பிட முடியாமல் தான் மரியாதையா மட்டும்

கூப்பிட்டுக்கிட்டு இருந்தேன். உங்களுக்கு ஷேடோவா இருக்க தான் நான் இந்த கிளாஸில் சேர்ந்தேன். எங்க ஏஜென்சி என்னை அதுக்கு தான் அனுப்பியது.''

''அப்போ நீங்க அல்ரெடி படிச்சு பட்டம் வாங்கின ஒருத்தரா?''

''ஆமா. நான் சும்மா இந்த கிளாஸில் உட்கார்ந்து இருந்தேன். எக்ஸாம்ல எதுவும் எழுத மாட்டேன். அத்தனை பேப்பரும் அரியர். ஆனா வெளியே தெரியுற மாதிரி பாஸ்னு சொல்லிடுவாங்க.

''உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா... எனக்கு மட்டும் இந்த சிறப்பு சலுகை கிடைக்கிறதால நான் நிர்வாகத்தோட ஆள்னு ஹெச்.ஓ.டி பிரின்சிபால் எல்லாம் என்கிட்ட பவ்யமா நடந்துக்குவாங்க.

''உங்களுக்கு கிடைக்க வேண்டிய மரியாதை எல்லாம் எனக்கு கிடைச்சுக்கிட்டு இருந்துச்சு. சம்பளம் வாங்கிக்கிட்டு காலேஜ் லைஃபை என்ஜாய் பண்ண எத்தனை பேருக்கு குடுத்து வைச்சிருக்கும் சொல்லுங்க.

''சுனிதா மேடம் உங்க முகத்திலே அசைன் மெண்ட்டை தூக்கி போட்டுட்டு தரக் குறைவா பேசின விஷயம் யாருக்கும் தெரியாதுன்னு நீங்க நினைச்சுக் கிட்டு இருக்கீங்க. ஆனா எனக்கு தெரியும். உங்களை கண்காணிக்கிறது தானே என் வேலையே!''

'இது எப்போ நடந்துச்சு?' என்று ஸ்ரீதர் ஜோதியை பார்த்தான்.

அவளோ கண்ணன் சொல்வதையே நம்ப முடியாத ஆச்சரியத்தோடு கேட்டுக் கொண்டிருந்தாள்.



''சுனிதா மேடம் உங்களை அட்டாக் பண்ணுவாங் கன்னு நாங்க எதிர்பார்த்துக்கிட்டு தான் இருந்தோம். இன்னைக்கு அவங்க உங்களை கொஸ்டீன் கேட்க ஆரம்பிச்சதும் உங்க தாத்தாவுக்கு நான் தகவல் கொடுத் துட்டேன். ஆனா அவங்க சொன்ன வார்த்தைகளை நாங்க எதிர்பார்க்கலை.''

சில நொடிகள் அமைதியாக இருந்தவள், ''அப்போ எங்க தாத்தாவோட நான் மும்பை போன அன்னைக்கு உங்களுக்கு கண்ணு வலின்னு நீங்க சொன்னது பொய். அப்படி தானே?'' என்றாள்.

''நான் கிளாஸுக்கு வந்தால் உங்க திட்டம் பலிக்கா துன்னு அப்படி பொய் சொன்னேன்.''

''நீங்க என்னோட ப்ராஜெக்ட் மேட் ஆனது தற்செயலா நடந்த விஷயம் கிடையாதா?''

''நீங்களும் நானும் ப்ராஜெக்ட் மேட்டா இருக்கணும். பிரகாஷ் கம்பெனியில் தான் ப்ராஜெக்ட் பண்ணணும். இது எல்லாமே உங்க தாத்தாவோட பிளான் தான்.''

''உங்க நேம் கண்ணன் தானா? இல்ல அதுவும்...''

''என்னோட நேம் வினய். ஜோதிக்கு பக்கத்திலே வரும் பெயரா இருக்கணும்னு கண்ணன்னு பேர் மாத் திட்டாங்க.''

''இவங்க ரவுசு தாங்க முடியலை இல்ல பிரண்ட்ஸ்?'' என்று நண்பர்களை பார்த்து கேட்டவள், கண்ணனை பார்த்து புன்னகைத்தாள்.

''பிரண்ட்ஸ்! நான் உங்ககிட்ட கிளாரிஃபை பண்ண வேண்டிய அடுத்த விஷயம். சுனிதா மேம் நம்ம கிளாஸ்

ரூமில் வச்சு சொன்ன குற்றசாட்டு. நான் ப்ராஜெக்ட் பண்ணப் போன கம்பெனி ஓனர்ஸ்க்கும் எனக்கும் தப்பான தொடர்பு...''

அதற்கு மேல் தொடராமல் தன் கண்களை மூடிக் கொண்டாள். அஸ்வின் வாயடைத்து போய் நின்றான்.

ஸ்ரீதர் மித மிஞ்சிய ஆத்திரத்தில் அவளது கையை பற்றி தன் பக்கமாக திருப்பி, இதை அப்பவே சொல் லுறதுக்கு என்ன? யார் என்ன சொன்னாலும் கேட்டுக் குவியா? ஒரு போன் போட்டு என்கிட்ட சொல்ல மாட் டியா? நான் என்ன செத்தா போயிட்டேன்?'' என்று அத்தனை பேர் எதிரிலும் கோபப்பட்டான்.

"கொஞ்ச நேரம் பொறுமையா இருங்க!'' என்று கூறி தன் கையை அவன் பிடியில் இருந்து விடுவித்துக் கொண்டாள்.

"நான் வெளியே ஒரு கம்பெனியில் போய் ப்ராஜெக்ட் பண்ணினேன்னு உங்க எல்லோருக்கும் தெரியும். ஆனா எந்த கம்பெனின்னு தெரியாது. பிரகாஷ் அண்ட் குரூப் ஆஃப் கம்பெனிஸ்ல தான் ப்ராஜெக்ட் பண்ணினேன்.

"அங்கே போன பின்னாடி தான் எனக்கு ஒரு விஷயம் தெரிஞ்சது. எங்க அப்பா எவ்வளவு பெரிய பணக்கார குடும்பத்தில் பிறந்தவர்னு. எஸ் பிரண்ட்ஸ் அந்த கம்பெனியோட ஓனரில் ஒருத்தர் தான் என் அப்பா சந்திரபிரகாஷ். நான் ஜோதி பிரகாஷ். பிரகாஷ் குரூப் ஆப் கம்பெனிஸோட ஒரே பெண் வாரிசு.''

"இது வேறயாடா? இதெல்லாம் சொல்ல மாட்டி யாடா?'' என்று அஸ்வின் ஸ்ரீதர் காதில் கேட்க...



'எனக்கே இப்போ தான் விஷயம் சொல்லுறாள். இதுல இவன் வேற!' என்று மனதில் நினைத்ததை வெளியே சொல்ல முடியாமல் ஸ்ரீதர் கடுப்பாகி நின்றான்.

''இப்போ உங்களுக்கே புரிஞ்சு இருக்கும். சுனிதா மேடம் சொன்ன அந்த ரெண்டு பேர் என்னோட அண்ணன்கள். எங்க பெரியப்பாவோட பசங்க.''

அனைவரும் அவளை மிரட்சியுடன் பார்க்க ஆரம்பித்தனர்.

''உங்க கண்ணுல தெரியுது பாருங்க ஒரு அந்நியத் தன்மை... இது வேணாமேன்னு தான் நான் இத்தனை நாளா சொல்லாமல் இருந்தேன். எங்க தாத்தாவும் பெரியப்பாவும் பணக்காரங்க. ஆனா எங்க அப்பா மிடில் கிளாஸ் வாழ்க்கை தான் வாழ்ந்தார். என்னையும் அப்படி தான் வளர்த்தார். அதனால மீதி இருக்கிற கொஞ்ச நாட்கள் என்னை விலக்கி வைக்காமல் உங்களில் ஒருத்தியா நினைச்சு பழகுங்க.'' என்றாள்.

அவள் அவ்வளவு தான் என்பது போல் நிற்கவும் கண்ணன் என்ற வினய் வகுப்பின் முன் வந்து நின்று பேச ஆரம்பித்தான்.

''பிரண்ட்ஸ்! இன்னைக்கோட என்னோட டியூட்டி இந்த காலேஜ்ல முடியுது. இனிமேல் மேடம்க்கு தனியா ஷேடோ தேவை இல்லை. அவங்களோட அடை யாளமே அவங்களுக்கு மிகப் பெரிய பாதுகாப்பாய் இருக்கும். சோ நாளையில் இருந்து நான் வர மாட்டேன்.'' இந்த மூணு வருஷமா உங்க கூட இருந்த நாட்களை நான்

மறக்க மாட்டேன்.'' என்றவன் அனைவரிடமும் கை குலுக்கி விடைபெற்றான்.

''சார்! நான் இன்னைக்கு மதியம் வர மாட்டேன். எனக்கு லீவ் வேணும்.'' என ஜோதி அஸ்வினிடம் கேட்க,

''இது கொஞ்சம் ஓவரா இல்ல?'' என்று அவன் திருப்பிக் கேட்டான்.

''சார்! நீங்க தான் என்னோட ப்ராஜெக்ட் ஹெட். நான் உங்ககிட்ட கேட்காமல் லீவ் போட முடியாது சார்.''

''எனக்கு என்ன சொல்லுறதுன்னும் தெரியலை. எப்படி நடந்துக்கிறதுன்னும் புரியலை.'' என்று புலம்பி விட்டு அஸ்வின் அங்கிருந்து சென்றான்.

ஸ்ரீதரும் அவன் பின்னோடு வெளியேறினான். அவனை தடுக்காமல் அவன் செல்வதை சில நொடி கள் பார்த்துக் கொண்டிருந்தவள் கீர்த்தியின் அருகே வந்தாள்.

''ஒரு வார்த்தை சொன்னியாடி? மறைச்சுட்ட இல்ல...''

''நான் இன்னைக்கு தான் ஸ்ரீதர்கிட்டவே சொல்லு றேன். புரிஞ்சுக்கோ கீர்த்தி.''

அவர்கள் அனைவரிடமும் தன்னை பற்றிய விஷயங் களில் எதை வெளியில் சொல்ல முடியுமோ அதை மட்டும் சொன்னாள்.

''உனக்கு எப்போ கல்யாணம் ஆச்சு?'' என்று தோழி ஒருத்தி கேட்க,



''நம்மளோட சிக்த் செமஸ்டர் லீவில்.'' என்று ஜோதி பதிலளித்தாள்.

''அடிப்பாவி! அப்போ ஸ்ரீதர் சார் நமக்கு கிளாஸ் எடுக்க வரும் முன்னாடியேவா?''

''அப்படி இருந்தும் அவர் உனக்கு அட்டென்டன்ஸ் போடாமல் வெறுப்பேத்தினாரா?''

''வீட்டிலே அவரை சும்மாவா விட்டே?'' என்று ஆளுக்கொன்றாய் நக்கல் செய்தார்கள்.

கீர்த்தி ஜோதியிடம், ''என்னோட ஒரு டார்லிங் உன் ஹஸ்பண்ட். இன்னொரு டார்லிங் உன் அண்ணன். என்னை பார்த்து உன் மனசுக்குள்ள எப்படி எல்லாம் சிரிச்சு இருப்ப... இப்படி ஏமாந்துட்டேனே!'' என்று கூறி பெருமூச்சு விடவும், ஜோதி பெரிதாகப் புன்னகைத்தாள்.

மெஸ்ஸில் சாப்பிட போகலாம் என முடிவு செய்த வர்கள் மதிய உணவை உண்டனர். ''நான் நாளைக்கு வரேன் பிரண்ட்ஸ்!'' என்று அனைவரிடமும் விடை பெற்றவள் ஸ்ரீதருக்கு போன் செய்தாள்.

அவன் அவளது அழைப்பை ஏற்கவில்லை. அவளது இரண்டாவது அழைப்பையும் அவன் ஏற்கவில்லை.

'இவரை எப்படி மலை இறக்கிறதுன்னு தெரிய லையே!' என புலம்பிக் கொண்டே மீண்டும் முயன்றாள்.

அவன் இம்முறை அந்த அழைப்பை ஏற்று அமைதி யாக இருந்தான்.

''ஸ்ரீ! நான் உங்ககிட்ட பேசணும். வீட்டுக்கு போக லாமா?''

....

''நான் உங்க கார் பக்கத்திலே நிக்கட்டுமா?''

''.....''

''நான் போய் அங்கே வெயிட் பண்ணுறேன். நான் உங்க ஜோ தான்னு உங்க மனசுக்கு பட்டால் அங்கே வாங்க. இல்லைன்னா வர வேண்டாம். என்றவள் அழைப்பை துண்டித்தாள்.

அவன் கார் அருகே அவள் காத்திருந்தாள். அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் ஸ்ரீதர் அங்கே வந்து சேர்ந்தான்.

அவன் ஓட்டுநர் இருக்கையில் அமரவும் பக்கத்து இருக்கையில் அவள் அமர்ந்தாள்.

சாப்பிட்டீங்களா ஸ்ரீ? என்று அவள் கேட்டதற்கு அவன் பதில் சொல்லவில்லை.

அதற்கு மேல் அவள் எந்த கேள்வியும் கேட்க வில்லை. வெளியே வேடிக்கை பார்த்து கொண்டு அமைதியாக வந்தாள்.



# 33

வீட்டிற்குள் நுழைந்து காரை ஓரம் கட்டி நிறுத்திய ஸ்ரீதர் மடமடவென்று வீட்டினுள் சென்றான்.



''என்னடா ஸ்ரீதர் இன்னைக்கு இவ்வளவு சீக்கிரம் வந்துட்டே?'' என்று தெய்வநாயகி கேட்ட கேள்விக்கு அவன் பதில் அளிக்கவில்லை.

தன்னுடைய மடிகணினி பையை சோபாவின் மேல் விட்டெறிந்தவன் தன் அறை நோக்கி விரைந்தான்.

''என்ன ஆச்சு இவனுக்கு?!'' என தெய்வநாயகி அதிர்வோடு பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, ஜோதி வீட்டினுள் நுழைந்தாள்.

''நீயும் சீக்கிரமாவே வந்துட்டியா? உன் முகம் ஏன் வாடி இருக்கு? அவன் கோபமா போறான். இத்தனை நாளா வீட்டிலே தான் சண்டை போட்டீங்க. இப்போ காலேஜில் போட ஆரம்பிச்சுட்டீங்களா?'' என்றதும் ஜோதி மெலிதாக புன்னகைத்தாள்.

''என்ன தப்பு செஞ்சே? ரொம்ப பெரிய தப்பா?''

அவள் ஆமாம் என்பது போல் தன் தலையை மேலும் கீழுமாய் முதலில் ஆட்டினாள். பின் இல்லை எனும் விதமாய் இட வலமாய் ஆட்டினாள்.

''எல்லா பக்கமும் தலையாட்டுறே! அப்படி என்ன பண்ணினே?''

''நான் போய் முதல்ல அவர்கிட்ட மன்னிப்பு கேட் கிறேன் அத்தை. அதுக்கு அப்புறம் உங்ககிட்டயும் மாமாகிட்டயும் மன்னிப்பு கேட்கிறேன். மாமாவை சீக்கிரமா ஆபீஸில் இருந்து வர சொல்லுங்க. ரொம்ப முக்கியமான விஷயம்னு சொல்லுங்க.'' என்றவள் தங்கள் அறை நோக்கி சென்றாள்.

கட்டிலில் கண் மூடி ஸ்ரீதர் அமர்ந்திருந்தான். அவன் அருகே சென்று ஜோதி அமைதியாய் அமர்ந்தாள்.

அவன் அவளை கண்டுகொள்ளாது அப்படியே அமர்ந்து இருக்கவும் ஜோதி அவனை தொட்டு உலுக்கினாள். அவன் அவளது கையை தட்டிவிட்டான்.

“இப்ப எதுக்கு ஸ்ரீ உங்களுக்கு இவ்வளவு கோபம்? நான் உண்மையை மறைச்சுட்டேன்னா? எனக்கே இப்போ தானே உண்மை தெரியும். எங்க அப்பா வசதியான குடும்பத்தில் பிறந்தவர்னு எனக்கு தெரியும். ஆனால் அவரோட குடும்ப பின்னணி பத்தி எனக்கு எதுவும் தெரியாது.

“என்கிட்டே எங்க அப்பா சொன்னதில்லை. மொத்தமா அவர் தன்னோட குடும்பத்தில் இருந்து விலகி தான் இருந்தார்.

“எங்க அப்பா இறந்த பின்னால எங்க தாத்தா வந்து என் அம்மாவை விட்டுட்டு தன் கூட வர சொல்லி கேட்டார். நான் எப்படி எங்க அம்மாவை விட்டுட்டு போக முடியும்? முடியாதுன்னு சொல்லிட்டேன். அதனால எங்க அம்மா உயிரோட இருந்த வரைக்கும் அவர் என் பக்கம் திரும்பி பார்க்கலை.

“எங்க அம்மாவும் இறந்த பின்னால வந்து சொத்துக்களை ஏத்துக்கோன்னு சொன்னார். எங்க அம்மா அப்பாவுக்கு தேவைப்படாத சொத்து எனக்கு எதுக்குன்னு நான் வீம்பா வேணாம்னு சொல்லிட்டேன். எங்க அம்மாவை ஏத்துக்காத அவர் கூட போகிறதில் எனக்கு இஷ்டமில்லை.



‘‘எங்க அப்பா எந்த குடும்பத்தை சேர்ந்தவர்ங்கிற விபரம் எனக்கே நான் பிரகாஷ் கம்பெனியில் ப்ராஜெக்ட் பண்ண போன போது தான் தெரிஞ்சது. என் தாத்தாவும் விரிவா எதுவும் சொன்னதில்லை.

‘‘இந்த சில மாசமா நான் உங்ககிட்ட சொல்லாமல் மறைச்சேன் தான். எனக்கு என்ன செய்யுறதுன்னு தெரியலை ஸ்ரீ. அதான் விஷயமே தவிர உங்ககிட்ட நான் மறைக்க நினைக்கலை.’’ என்று விளக்கம் கொடுத்தாள்.

அவ்வளவு தூரம் அவள் எடுத்து சொல்லியும் அவன் அசைவதாக இல்லை என்றதும் கடுப்பானாள்.

‘‘என்னோட பதினேழாவது வயசில் என் அப்பா இறந்து போனார். அப்போ இருந்து என் வாழ்க்கை ஒரு போராட்டமா மாறிடுச்சு. எந்த நேரமும் குனியத்தை வெறிச்சுக்கிட்டு பேச மறந்த போன என்னோட அம்மாவோட ரெண்டு வருஷப் பொழுதை நான் கழிச்சேன்.

‘‘கேம்பஸில் கிடைச்ச வேலையில் சேர்ந்து கஷ்டப்பட்டு சம்பாதிச்சேன். அப்புறமா திரும்பவும் காலேஜ். ஈவினிங் டைமில் என் வீட்டோட இருந்த கடையில் வச்சு மிக்ஸி டிவின்னு ரிப்பேர் பண்ணி குடுத்து சம்பாதிச்சேன். நானும் எவ்வளவு தான் கஷ்டபடுறது?

‘‘பாதியிலே என்னை தவிக்க விட்டுட்டு போன அப்பா அம்மா எங்க மூணு பேரையும் மனுஷ பிறவிகளா கூட மதிக்காத ஒரு தாய் மாமா தம்பி மேல உள்ள கோபத்தில் என் பக்கம் திரும்பி கூட பார்க்காத ஒரு பெரியப்பா அவர் பேச்சை அப்படியே பின்பற்றுகிற பெரியம்மா...

''மூத்த தலைமுறை எப்படி வேணா அடிச்சுக்கட்டும். உனக்காக நாங்க இருக்கோம்னு என்னை தேடி வராத என்னோட ரெண்டு அண்ணன்கள் சொத்தை ஏத்துக் கிட்டால் தான் நான் உனக்கு சொந்தத்தை தருவேன்னு அடம் பிடிக்கிற தாத்தா இவங்களெல்லாம் தான் என்னோட உறவுகள். இதுல யாரை பத்தியாவது நான் பெருமையா வெளியே சொல்லிக்க முடியுமா?

''சரி பிறந்த வீடு தான் இப்படின்னு பார்த்தால்... புகுந்த வீடு? என் ஹஸ்பண்ட்..?'' என்றவள் கேலியாய் சிரிக்க, ஸ்ரீதர் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

''எவளையோ காதலிச்சுட்டு அவ கூட சேர்வதுக்கு அவ சொன்ன இத்துப் போன ஐடியாவை ஃபாலோ பண்ணுறதுக்காக என் கழுத்திலே தாலி கட்டின ஒருத்தர்.

''எப்போ கண்ணுல பட்டாலும் என்னை தூக்கி போட்டு மிதிக்கிற ஒரு ஓரகத்தி. வாழ்க்கை எனக்கு உறவுகளை ரொம்பவே தேர்ந்தெடுத்து குடுத்து இருக்கு இல்ல?

''இத்தனையும் தாங்கிக்கிட்டு நான் நடமாடினதே பெரிய விஷயம். இதுல நீ ஏன் அப்படி செஞ்சே இப்படி செஞ்சேன்னு ஆள் ஆளுக்கு என்னை பந்தாடாதீங்க. முடியலை. என்னால முடியலை.'' என்றவள் மடமட வென்று அறையை விட்டு வெளியேறினாள்.

கீழே வந்தவள் வரவேற்பறை சோபாவின் முன் தரையில் அமர்ந்து அந்த சோபாவில் முகம் புதைத்து குலுங்கி குலுங்கி அழ ஆரம்பித்தாள்.



அவளது வாழ்க்கையில் நடந்த எல்லாவற்றையும் எண்ணி பார்த்து அழுதாள்.

ஸ்ரீதரின் அன்பையே பார்த்து பழகி இருந்தவளுக்கு அவனுடைய புறக்கணிப்பை தாங்க முடியவில்லை. அவன் ஒற்றை வார்த்தை கூட பேசாமல் மௌனமாய் இருந்ததால் அவள் மனம் புண்பட்டது.

இதற்கு முன்பு ஸ்ரீதர் அவள் மேல் கோபப்பட் டிருக்கிறான் தான். ஆனால் அந்த கோபத்தில் ஒரு அக் கறை இருக்கும். இம்முறை அவன் அவளை வேண்டா வெறுப்பாய் பார்ப்பதாய் அவளுக்கு தோன்றியது.

தற்செயலாய் அறையை விட்டு வெளியே வந்த தெய்வநாயகி மருமகள் அழுவதை பார்த்து அதிர்ந்து போய் நின்றுவிட்டார். இத்தனை மாதத்தில் ஜோதி அழுது அவர் பார்த்ததே இல்லை.

'ஐயோ! இவ எதுக்கு இப்படி அழுகிறாள்? இந்த பையன் என்ன சொல்லி தொலைச்சான்னு தெரியலையே!' என அவர் மாடியை பார்க்க....

ஸ்ரீதர் ஜோதியை சமாதானம் செய்வதற்காக படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்தான்.

'என்னடா இது?' என்று சைகையில் கேட்ட தெய்வ நாயகியை பார்த்து அசட்டு சிரிப்பொன்றை உதிர்த்த ஸ்ரீதர் ஜோதியின் அருகே சென்று அமர்ந்தான்.

அவளது தலையில் கை வைத்து, ''ஜோ! நம்ம ரூமுக்கு வா. அம்மா பயந்து போய் பார்க்கிறாங்க. அம்மா பார்த்தால் கூட பரவாயில்லை. அண்ணி வீட்டிலே இருக்காங்களான்னு தெரியலை. அவங்க முன்னாடி நாம

சண்டை போடக் கூடாது. எதுவா இருந்தாலும் நம்ம ரூமிலே வச்சு பேசிக்கலாம். வா!'' என்றதும் ஜோதி விருட்டென்று எழுந்து தங்கள் அறை நோக்கி போனாள்.

'நான் பார்த்துக்கிறேன்மா!' என்று ஸ்ரீதர் தெய்வநாயகி பார்த்து சைகை செய்துவிட்டு மனைவியின் பின்னே நடை போட்டான்.

தெய்வநாயகி தன் கணவருக்கு ஏற்கனவே போன் செய்து ஜோதி கூறிய விஷயத்தை தெரிவித்து இருந் தார்.

'என்ன விஷயம்னு தெரியலையே! அகல்யா விவ காரமோ?' என குழம்பிப் போன அன்பரசுவிற்கு வேலை இடத்தில் இருப்பு கொள்ளவில்லை.

அதனால் அவர் ஏற்கனவே அலுவலகத்தில் இருந்து வீட்டிற்கு கிளம்பிவிட்டார். மீண்டும் தெய்வநாயகி போன் செய்யவும் பதட்டத்தோடு பேச ஆரம்பித்தார்.

"என்ன தெய்வா? நான் வீட்டுக்கு தான் வந்துக்கிட்டு இருக்கேன். என்ன விஷயம்?''

"நம்ம ஜோதி அழறாள். ஹாலில் உட்கார்ந்து தனியா அழுதுகிட்டு இருந்தாள். அவ இப்படி அழுது நான் பார்த்ததே இல்லை.''

காரில் டிரைவர் இருப்பதால் அன்பரசுவால் வெளிப் படையாய் பேச முடியவில்லை. அவரது மனதில் தன் மகனது வாழ்க்கையில் பூகம்பம் வெடித்து விட்டதோ என்ற பயம் எழுந்தது.

"அப்புறம் என்ன நடந்தது?''



''ஸ்ரீதர் மாடியில் இருந்து வந்தான். என்னமோ சொன்னான். உடனே மேலே எழுந்து போயிட்டாள். அவனும் அவள் பின்னாடியே போயிட்டான். எனக்கு பயமா இருக்குங்க.''

''இன்னும் கொஞ்ச நேரத்திலே நான் வந்துடுவேன். பாதி வழி வந்துட்டேன்.'' என்று மட்டும் கூறி அழைப்பை துண்டித்தார்.

அறைக்குள் நுழைந்த ஜோதி கட்டிலில் அமர்ந்து கொண்டாள்.

அவள் அருகே அமர்ந்த ஸ்ரீதர், ''ஸாரிடா ஜோ! நீ அழறதை பார்க்க எனக்கு கஷ்டமா இருக்குடா.'' என்றான்.

அவள் அவன் சட்டை காலரை பற்றி, ''எனக்குன்னு உன்னை விட்டால் யாருடா இருக்கா? நீயும் எதுக்குடா என்னை கஷ்டப்படுத்துறே?'' என்று கேட்டாள்.

''எல்லோருக்கும் விஷயம் தெரியும் போது தான் எனக்கும் விஷயம் தெரியுதுன்னா... நான் உனக்கு எல்லோரையும் மாதிரி தானா? நான் ஸ்பெஷல் இல்லையான்னு ஒரு கோபம்டா ஜோ. அவ்வளவு தான்.'' என்றதும் அவன் சட்டை காலரை விட்டவள் அவன் மீது சாய்ந்து கொண்டாள்.

அவளை தன்னோடு இறுக்கி அணைத்தவன், ''உன் கிளாஸில் வச்சு நான் ஜோதி பிரகாஷ்னு பெருமையா சொன்னியா... அப்போ நீ ஜோதி ஸ்ரீதர் இல்லையான்னு ஒரு பொறாமை வந்துச்சா...'' என்றதும் அவள் அவ னோடு மேலும் ஒன்றினாள்.

“நான் என்னைக்குமே உங்களோட ஜோ தான். அதுல உங்களுக்கு சந்தேகமே வேண்டாம்.'' என்றதும் அவளது உச்சியில் அழுத்தமாய் ஒரு முத்தம் பதித்தான்.

“சுனிதா பிரச்னையை நீயா வந்து என்கிட்ட சொல் லலையேன்னு வேற கோபம்...''

“பிரச்சனை நடந்து முடிஞ்ச பத்தாவது நிமிஷத்தில் நீங்க கிளாஸ் எடுக்க வந்துட்டீங்க. அதுக்கு இடையிலே கிளாஸ் ரெப் ஸ்டூடண்ட்ஸ் கிட்ட என்ன செய்யலாம்? ஸ்ட்ரைக் பண்ணலாமான்னு எல்லாம் கேட்க ஆரம்பிச் சுட்டான். அவங்களை அமைதிப்படுத்த வேண்டியதா போச்சு. உங்ககிட்ட சொல்லாமல் நான் வேற யார்கிட்ட ஸ்ரீ சொல்லுவேன்?''

“அசைன்மெண்ட் விஷயத்தையும் நீ சொல்லலைல.”

“ஒரே ஜாப்ல இருக்கீங்க. என்னால நீங்க ரெண்டு பேரும் சண்டை போட்டுக்க வேண்டாம்னு நினைச் சேன்.''

“என்னமோ சடனா நான் உனக்கு அந்நியமாகிட்ட மாதிரி ஒரு ஃபீல்.''

“நீங்க அந்நியன் இல்ல ஸ்ரீ. ரெமோ! என்னோட ரெமோ. ரொமான்ஸ் ஃபீலே இல்லாத ரெமோ.''

“யாருக்கு ரொமான்ஸ் இல்ல?''

“உங்களுக்கு தான்.''

“உன் காலேஜ் படிப்பு முடியட்டும். அப்புறமா சொல்லு எனக்கு ரொமான்ஸ் ஃபீல் ஜாஸ்தியா இல்ல கம்மியான்னு.''



“இப்படி தான் நீங்க சொல்லுவீங்கன்னு எனக்கு தெரியும். எங்க தாத்தாக்கு என் பிள்ளையை எடுத்து கொஞ்சணுமாம். அந்த வாத்தி விடமாட்டான்னு நான் சொன்னேன்.''

“அடிப்பாவி! அப்படியா சொன்னே?''

“ம்ம்ம் பெரியப்பா என்னை அடிக்க கை ஓங்கினார். நிர்மல் அண்ணா காதை பிடிச்சு திருகினாங்க. அவங்க எல்லோரும் இந்த ஸ்ரீதர் மாப்பிள்ளைக்கு ஃபுல் சப்போர்ட்.'' என்றதும் அவன் தன் காலரை பெருமையாக தூக்கி விட்டுக் கொண்டான்.

“ஸ்ரீ! கிளாஸில் அந்த கண்ணன் சொன்னதை கேட் டீங்க இல்ல. அன்னைக்கு பீஸ் கட்ட பணம் இல்லைன் னதும் நான் அவன்கிட்ட கேட்போமான்னு முதல்ல யோசிச்சேன். அவனும் என்னை மாதிரி கஷ்டப்படுற ஃபாமிலின்னு நினைச்சு தான் கேட்கலை.''

“நல்ல வேளைடா ஜோ. நீ மட்டும் அவன்கிட்ட பணம் கேட்டு இருந்தால் கதையே மாறி இருக்கும். வேற யாரோ என் லைஃப்பிலே வந்திருப்பாங்க. நான் உன்னை மிஸ் பண்ணி இருப்பேன். நீ இல்லாத ஒரு வாழ்க்கை... என்னால கற்பனை கூட பண்ணி பார்க்க முடியலை.'' என்றவன் அழுத்தமாய் அவளது கன்னத்தில் முத்தம் பதித்தான்.

“ஒரு விஷயம் நோட் பண்ணினியா ஜோ. நீயும் நானும் பணம் வேணாம்னு விலகிப் போனால் கூட அது நம்மை தேடி வருது.”

“ஆமா ஸ்ரீ. ஆனா நாம என்னைக்கும் அதுக்கு மயங்கிடக் கூடாது. மனசளவில் நாம மிடில் கிளாஸ்

என்கிற நினைப்போடு தான் வாழணும். முடிஞ்ச அள வுக்கு இந்த பணத்தை வச்சு நாலு பேருக்கு உபயோகமா ஏதாச்சும் செய்வோம்.''

''கண்டிப்பாடா!''

வீட்டிற்கு வந்த அன்பரசுவால் மகனும் மருமகளும் கீழே இறங்கி வந்து விஷயம் சொல்லுவார்கள் என்று பொறுமையாய் காத்திருக்க முடியவில்லை. அதனால் அவர் மகனது கைப்பேசிக்கு முயற்சி செய்தார்.

''என்ன பிரச்சனைடா ஸ்ரீதர்?''

''ஒண்ணும் இல்லைப்பா. அம்மா ஏதாச்சும் சொன்னாங்களா?''

''ஜோதி அழறாள். வீட்டுக்கு வாங்கன்னு சொன்னாள். நானும் வந்துட்டேன்.''

''உங்க மருமகள் கண்ணுலே இருந்து வந்த வாட்டர் டேங்கை நான் அப்பவே நிறுத்திட்டேன்பா!'' என்றதும் ஜோதி அவனை கிள்ளி வைத்தாள்.

'ஆ!' என்று அலறியவன், ''அப்பா! அழுகை போயிந்தி! உங்க மருமகளோட அழிச்சாட்டியம் ஸ்டார்ட்டட். எங்க சண்டையை முடிச்சுட்டு கொஞ்ச நேரத்திலே நாங்களே கீழே வரோம்.'' என்றவன் அழைப்பை துண்டித்தான்.

''என்ன சொல்லுறான்?'' என்று தெய்வநாயகி வருத்தமாய் கேட்டார்.

''நானே வரேன்னு சொன்னான். உன் மருமகள் வன்முறையில் இறங்கிட்டாள் போல! ஆன்னு கத்துறான்.''



''அப்போ வழக்கமான சண்டை தானே. பெருசா எதுவும் இருக்காதே!''

''அப்படி தான் நினைக்கிறேன். ஆனா நம்மகிட்ட எதுக்காக மன்னிப்பு கேட்கணும்னு சொன்னாள். சீக்கிரம் எதுக்கு வர சொன்னாள்னு தெரியலை. அவளே வந்து சொல்லட்டும்.'' என சொன்னவர் படுக்கையில் படுத்து ஓய்வெடுக்க ஆரம்பித்தார்.

மீண்டும் ஒரு குளியல் போட்டு வேறு புதிய உடை ஒன்றை அணிந்து கொண்டு தாத்தாவை வரவேற்க ஜோதி தயாரானாள்.

'உங்க மாமா வீட்டுக்கு வந்துட்டாரா?' என்று அவள் தாத்தா போன் செய்து தெளிவுபடுத்திக் கொண்டார்.

தாத்தா வரும் முன் தன் மாமனார் மாமியாரிடம் விஷயத்தை சொல்வதற்காக ஜோதி கீழே இறங்கி சென்றாள்.



## 34

அன்பரசுவும் தெய்வநாயகியும் தங்கள் மகன் மற்றும் மருமகளுக்காக வரவேற்பறை சோபாவில் அமர்ந்து காத்திருந்தனர்.

''ஸாரி மாமா! ரொம்ப நேரமா காத்திருக்கீங்களா? உங்க பையனை சமாளிக்க லேட் ஆகிடுச்சு. அதான்...''

அங்கே இருந்த சின்ன பிளாஸ்டிக் ஸ்டூலை எடுத்துக் கொண்டு சென்று அவர்கள் முன் போட்டு அதில் அமர்ந்து கொண்டாள். அப்பொழுது ஸ்ரீதரும் அங்கே வந்து தன் தந்தையின் அருகே அமர்ந்து கொண்டான்.

''பக்கத்திலே உட்காரும்மா.'' என்று தெய்வநாயகி கூப்பிட்டார்.

''உங்க ரெண்டு பேரையும் பார்த்துக்கிட்டு பேச எனக்கு இது தான் வசதி.'' என்றாள்.

தெய்வநாயகியின் ஒரு கையையும் தன் மாமனாரின் ஒரு கையையும் பற்றியவள், ''நான் இப்போ சொல்ல போகிற விஷயம் உங்களை ஆச்சர்யப்படுத்தலாம். ஏன் எங்ககிட்ட முன்னாடியே சொல்லலைன்னு நீங்க என்னை தப்பா மட்டும் எடுத்துக்க கூடாது. ஏன்னா எனக்கே கொஞ்ச நாள் முன்னாடி தான் விஷயம் தெரியும்.'' என்று ஆரம்பித்தாள்.

''சுத்தி வளைக்காமல் நேரா விஷயத்தை சொல்லும்மா. நான் உன்னை நம்புறேன்.'' என்று அன்பரசு உறுதி அளித்தார்.

''நான் படிச்சுக்கிட்டு இருக்கிற காலேஜ் எனக்கு சொந்தமானது. அதாவது என் தாத்தா... அப்பாவோட அப்பா எனக்கு எழுதி வச்சு இருக்கிற சொத்து.'' என்றாள்.

அன்பரசுவும் தெய்வநாயகியும் வியந்து போய் அவளை பார்த்தனர்.

''அது என் காலேஜ்னு தெரியாமல் அதுக்கு ஃபீஸ் கட்ட முடியாமல் செய்யக் கூடாததை எல்லாம் செஞ்சு...



ஆனா என்னோட தப்புகளில் மிக அழகான தப்பு அது தான்!'' என்றவள் நிமிர்ந்து கணவனை பார்க்க,

அவன் தன் உதடுகளை குவித்து அவளுக்கு பறக்கும் முத்தம் ஒன்றை பரிசளித்தான். ஒரு வெட்க புன்முறுவல் அவளது உதடுகளில் உதயமானது.

''ஒரு காலேஜுக்கே ஓனர்ன்னா உன் தாத்தா அவ்வளவு பெரிய ஆளாம்மா?'' என்று தெய்வநாயகி கேட்டார்.

அப்பொழுது தருண் வீட்டினுள் நுழைந்தான். தன் தாத்தா யார் என்று விளக்கம் சொல்லும் முன் வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. காரில் வந்திருப்பது யார் என்று பார்ப்பதற்காக தருண் சென்றான்.

'தாத்தா வந்துட்டாரு போல!' என நினைத்த ஜோதி, ''ஒரு நிமிஷம்! இதோ வந்துடுறேன்.'' என்று சொல்லி வெளியே சென்றாள்.

அங்கே தருண் ஜோதியின் தாத்தாவை பார்த்து, ''சார்! நீங்க எங்க வீட்டுக்கு... வாங்க! வாங்க!'' என்று வர வேற்றுக் கொண்டிருந்தான்.

தருணின் சப்தமான, ஆர்ப்பாட்டமான வரவேற்பை கேட்டு அங்கே வந்த அன்பரசுவும் தன் பங்குக்கு, ''சார்! வாங்க! வாங்க!'' என்று வரவேற்றார்.

'மாமாக்கும், தருண் மாமாக்கும் தாத்தாவை தெரிஞ்சு இருக்கே! பிசினஸ் சர்க்கிள் ஆளுங்களுக்கு தாத்தா நல்ல பரிச்சயம் போல! ஸ்ரீதருக்கு தான் தெரியலை' என்று ஜோதி நினைத்துக் கொண்டாள்.

தாத்தாவை பார்த்து புன்னகைத்தவள் வீட்டிற்குள் நுழைந்தாள். ஸ்ரீதரும் அவரை வரவேற்றான்.

டிரைவர் கொண்டு வந்து தந்த பையை வாங்கி பிரகாஷ் தெய்வநாயகியின் கையில் கொடுத்தார்.

அன்பரசு தன் இரு மகன்கள் மற்றும் மனைவியோடு அந்த நீண்ட சோபாவில் அமர்ந்து கொண்டார். அவருக்கு எதிரே ஜோதியின் தாத்தா அமர்ந்து கொண் டார்.

அங்கே நின்று கொண்டிருந்த பேத்தியை தன்னருகே அமருமாறு அவள் தாத்தா சோபாவை தட்டிக் காண்பித்து கூப்பிட்டார்.

'அவர் ரொம்ப பெரிய ஆள். அங்கே போகாதே!' என்று அன்பரசுவும் தருணும் கண்ணால் எச்சரிக்கை விடுத்தார்கள்.

அவர்கள் சொல்ல வருவது புரியாத ஜோதி தன் தாத்தாவின் அருகே சென்று அமர்ந்து கொண்டு, "என்ன மாமா சொல்லுறீங்க?" என்று கேட்டாள்.

அன்பரசு ஜோதியின் தாத்தாவிடம், "இது என்னோட சின்ன மருமகள்." என்று அறிமுகப்படுத்தியவர்,

தன் மருமகளிடம், "ஜோதி! இவர் ரொம்ப பெரிய பிசினஸ் மேன்மா. நீ எழுந்து வந்து அத்தைக்கு பக்கத் திலே உட்கார்!" என்றார்.

"தாத்து! என்னை பார்த்தா எங்க மாமாக்கே சின்ன பிள்ளையா தெரியுது. நீங்க என்னடான்னா என்னை யானையை கட்டி மேய்க்க சொல்லுறீங்க! காலேஜ், கம்பெனி இதெல்லாத்தையும் என்னால நிர்வாகம் பண்ண முடியுமா தாத்து?" என்று மெல்லிய குரலில் புலம்பினாள்.



"உன்னால முடியும்டா குட்டிம்மா. என் ரத்தம் உன் உடம்பிலும் ஓடுதுடா!" என்றவர் பேத்தியை தன் தோளோடு அணைத்துக் கொண்டார்.

அவர்கள் என்ன பேசினார்கள் என்பது அவர்களின் காதில் விழவில்லை என்றாலும்... அவரின் செய்கை அன்பரசுவிற்கும் அவர் மனைவிக்கும் உண்மையை விளக்கியது.

'இவரா ஜோதியின் தாத்தா?' என்று அன்பரசு ஆச்சரியம் அடைந்தார். தருண் மட்டும் விழித்தான்.

தாத்தா அன்பரசுவிடம், "வீட்டுக்கு வந்தவர்கிட்ட சின்ன பிள்ளைத்தனமா நடந்துக்கிறாள்னு நினைக்கிறீங் களா. அதான் இல்ல. இவ என் ரெண்டாவது பையன் சந்திரபிரகாஷோட ஒரே பொண்ணு ஜோதி பிரகாஷ்." என்று பெருமையாக கூறவும்,

"என்னது?! நம்ம ஜோதி பிரகாஷ் பேமிலி பொண்ணா?!" என்று தருண் ஆச்சரியத்தில் கூவினான்.

அன்பரசு தாத்தாவிடம், "நீங்க எப்படி ஜோதி-ஸ்ரீதர் கல்யாணத்தை ஒத்துக்கிட்டீங்க? உங்க அந்தஸ்துக்கும் என்னோட அந்தஸ்துக்கும் ஏணி வச்சால் கூட எட்டாதே!" என்றார்.

"அந்தஸ்து பார்த்த ஆள் தான் நான். ஆனா என் பையனும் அவன் பெத்த பொண்ணும் அதெல்லாம் தூசுடான்னு நிரூபிச்சுட்டாங்களே!

"என் மகன் போன உடனே நான் என் மருமகளுக்கும் பேத்திக்கும் வெளி ஆண்களால் தொந்தரவு வந்துடக் கூடாதுன்னு இவங்களை பாதுகாக்க ஒரு ஆளை ஏற்

பாடு பண்ணி இருந்தேன். ஆனா பக்கத்திலே இருந்து உளவு பார்க்க ஆளை ஏற்பாடு பண்ணாமல் போயிட்டேன்.

''என் மூத்த பையனுக்கு பைபாஸ் சர்ஜரி பண்ணனும்னு சொன்னதும் எனக்கு ஹார்ட் அட்டாக் வந்து நானும் படுத்துட்டேன். எங்களை சுத்தி இருந்த எல்லோரும் ஸ்தம்பிச்சு போன காலகட்டத்திலே தான் இவள் தானா போய் கல்யாணம் பண்ணி இருக்காள்.

"இவ கல்யாணம் பண்ணிக்கிட்ட விஷயம் தெரிஞ்சும் என் பி.ஏ மகேந்திரன் எனக்கு எதுவும் ஆகிடக் கூடாதுன்னு நினைச்சு என்கிட்ட இருந்து மறைச்சுட்டான். ரிசப்ஷன் முடிஞ்ச பின்னாடி தான் சொன்னான்.

"எனக்கு கோபம் வந்துச்சு. விசாரிச்சு பார்த்ததில் நீங்க நல்ல குடும்பம்னு தெரிஞ்சது. அன்னைக்கு தேதியில் என் பேத்திக்கும் உங்களுக்கும் உள்ள அந்தஸ்து கூட ஏணி வச்சால் எட்டாதது தானே!

"நீங்க என் பேத்தியை ஏத்துக்கும் போது நான் ஏத்துக்க மாட்டேனா? அது மட்டுமில்ல என் பேத்தி வார்த்தைக்கு வார்த்தை என் ஸ்ரீதர் என் ஸ்ரீதர்னு உருகினாள். அதுக்கு மேல சொல்லுறதுக்கு என்ன இருக்கு?'' என்று கேட்டார்.

ஜோதி நிமிர்ந்து தன் கணவனை ஏறிட்டாள். அவனுக்கு அவளை இழுத்து அணைத்து முத்தமிட வேண்டும் போல் தோன்றியது. சுற்றிலும் அனைவரும் இருக்க ஒன்றும் செய்ய முடியாமல் அவளையே காதலோடு பார்த்துக் கொண்டிருந்தான்.



''ஜோதி உங்க பேத்தி தான்னு ஏன் முன்னாடியே சொல்லலை?'' என்று தருண் வினவ,

''எல்லாம் வீம்பு தான். இந்த தாத்தனுக்கு இருக்கிற வீம்பு என் பேத்திக்கும் இருக்கும்ல.'' என்று அவர் தன் பெரிய மீசையை தடவிக் கொண்டார்.

ஜோதி தன் தாத்தாவை பார்த்து, ''அப்படி தான் வீம்பு பிடிப்பேன். இன்னைக்கு நான் இவர் கொடுக்கிற சொத்தை ஏத்துக்கிறேன்னு சொன்னதும் வாயிலே இருந்து ஆயிரம் குட்டிம்மா வழுக்கிக்கிட்டு வருது. இத்தனை நாளில் ஒரு தடவையாச்சும் சொன்னாரா? சொத்தை ஏத்துக்கிட்டால் தான் சொந்தம்னு சொன்னார். அதான்... நீங்களும் வேணாம். உங்க சொத்தும் வேணாம்னு நானே தனியா சமாளிச்சேன் தெரியுமா?'' என்றாள்.

''ஆமா ஆமா நல்லா சமாளிச்சே!'' என்று தாத்தா கிண்டல் பண்ணினார்.

"இப்ப எதுக்கு தாத்து கிண்டல் பண்ணுறீங்க. நான் ஆபீஸ்ல ரெண்டு வருஷம் வேலை பார்த்து சம்பாதிச்சேன். அப்புறமா டிவி ரிப்பேர் பண்ணி பார்ட் டைம் ஜாப் எல்லாம் பண்ணினேன்.''

''ஆபீஸ் தானே! நீ தானே!'' என்று கிண்டலாக வினவியவர் அன்பரசுவை பார்த்து பேச ஆரம்பித்தார்.

''பாலிடெக்னிக் முடிச்சு வேலைக்கு சேர்ந்தவங்க எவ்வளவு சம்பளம் வாங்குவாங்க?''

''ஒரு ஏழாயிரம் பக்கத்திலே சம்பளம் வாங்குவாங்க.'' என்று அன்பரசு பதில் அளித்தார்.

“உங்க மருமகள் எவ்வளவு சம்பளம் வாங்கினாள்னு கேளுங்க!’’

அன்பரசு ஜோதியை பார்க்க... அவள் குழப்பத்தோடு, ‘‘இருபதாயிரம் வாங்கினேன்.’’ என்றாள்.

‘‘இவளை மட்டும் அந்த கம்பெனி கேம்பஸில் செலக்ட் பண்ண வச்சு நான் இவளுக்கு தனியா சம்பளம் குடுத்தேன். என்னைக்கு என்னோட திருகுதாளம் தெரிஞ்சு இவ வேலையை விட்டு போவாள்னு நான் பக் பக்னு உட்கார்ந்து இருந்தேன்.

“பயபுள்ள ரெண்டு வருஷம் முடியுற மட்டும் கண்டு பிடிக்கவே இல்லை. இவகிட்ட எப்படிடா கம்பெனி பொறுப்பை குடுக்கிறதுன்னு நான் ஆடிப் போயிட்டேன் தெரியுமா.’’ என்று கிண்டல் செய்தார்.

“தாத்து! எல்லாம் உங்க வேலையா?’’ என்று அவரது புஜத்தில் செல்லமாக அடிக்க ஆரம்பித்தாள்.

அனைவரும் புன்னகையோடு கதை கேட்டுக் கொண்டிருந்தனர்.

“எல்லோரும் பழைய ஸ்கூட்டியை வாங்கி புதுசாக்கு வாங்க. ஆனா நான் புதுசாய் வாங்கி அதை பழசு மாதிரி மாத்தி இவளுக்கு பத்தாயிரம் ரூபாய்க்கு தள்ளி விட்டேன்.’’

“அப்போ நான் வச்சு இருந்தது புது ஸ்கூட்டியா? இது தெரியாமல் என் பர்த் டேக்கு மாமா வாங்கி தந்த புது ஸ்கூட்டியை ஓட்டிப் பார்த்த நான் ‘என்னோட செகண்ட் ஹாண்ட் ஸ்கூட்டி மாதிரி தான் ஓடுது. இதுக்கு எதுக்கு



மாமா இத்தனை ஆயிரம் செலவு பண்ணினாருன்னு நினைச்சேன்.’’ என்றதும் அனைவருமே வாய்விட்டு சிரித்தனர்.

‘‘அப்புறம் என்னமோ சொன்னாளே... டிவி ரிப்பேர் கடை. எங்க ஆபீஸில் வேலை செய்யுற ஸ்டாப்ஸ் வீட்டில் உள்ள நல்லா ஓடிக்கிட்டு இருக்கிற டிவியையும் மிக்ஸியையும் கோளாறாக்கி இவ கிட்ட அனுப்புறத்துக்கு ஒரு டீமே உண்டு தெரியுமா?’’ என்றதும் ஸ்ரீதர் அடக்க மாட்டாமல் சப்தமாக சிரிக்க ஆரம்பித்தான்.

‘‘சிரிக்காதீங்க ஸ்ரீ!’’ என்று ஜோதி சொல்லிப் பார்த்தாள்.

அவன் நிறுத்தவில்லை என்றதும் அவனை அடிக்க ஓடினாள். அவன் அவளிடம் இருந்து தப்பித்து ஓடினான்.

‘‘இவங்க சண்டை எங்க வீட்டுல எப்பவும் நடக்கிறது தான்.’’ என்று கூறிய தெய்வநாயகி வந்தவருக்கு சாப்பிட கொடுப்பதற்காக எழுந்து சமையல் அறைக்கு சென்றார்.

ஸ்ரீதர் தன் அறைக்குள் நுழைந்தான். அவன் பின்னோடு அறைக்குள் நுழைந்த ஜோதியை இறுக அணைத்துக் கொண்டான்.

‘‘நீ இத்தனை நாளும் தனியா இருக்கலை. பாதுகாப்பான வளையத்துக்குள்ளே தான் இருந்து இருக்கன்னு நினைக்கிறப்போ ஐயாம் சோ ஹாப்பிடா.’’ என்றான்.

கணவனை நிமிர்ந்து பார்த்து அவள் புன்னகைக்க அவனது பார்வை மாறியது.

"ஸ்ரீ! கீழே எல்லோரும் நமக்காக வெயிட் பண்ணுறாங்க.''

"நான் கூட தான் ஜோ குட்டி ரொம்ப நாளா வெயிட் பண்ணுறேன். இன்னைக்கு ஒரு பொண்ணு வேற எனக்கு ரொமான்ஸ் பத்தலைன்னு சொல்லிட்டாள்.'' என்றவன் அவளது உதடுகளில் கவிதை படைக்க ஆரம்பித்தான்.

அந்த முத்தம் தந்த கிறக்கத்தில் அவள் தன்னையே மறந்து நின்ற போது கீழே உள்ளவர்களா நினைவிற்கு வருவார்கள்.

அவளது உதடுகளை விடுவித்தவன் அவளை இறுக அணைத்துக் கொண்டான். எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் அவள் அவனுக்குள் அடங்கி நின்றிருந்தாள்.

சில நிமிடத்திற்கு பின் அவளது காதில், "ஜோ குட்டி!" என்று கூப்பிட்டான்.

"ம்ம்ம் என்ன ஸ்ரீ?'' என்று கிசுகிசுப்பாய் கேட்டாள்.

"கீழே போவோமா?''

''வேணாம்.'' என்றவள் கணவனிடம் மேலும் ஒன்றினாள்.

"இதுக்கு மேல நாம போகாமல் இருந்தால் எல்லோரும் நம்மை கேலியா பார்ப்பாங்க. போலாம்டா ஜோ!'' என்றதும் கணவனின் கன்னத்தில் முத்தமிட்டு விலகியவள் கீழே செல்ல ஆரம்பித்தாள்.

வரவேற்பறையில் தாத்தாவிற்கு சாப்பிட சிற்றுண்டியும் குடிப்பதற்கு டீயும் தெய்வநாயகி கொடுத்து



கொண்டிருந்தார். ஜோதி தன் தாத்தா அருகே அமர்ந்து கொண்டாள்.

''நீ சாப்பிடுறியாடா குட்டிம்மா?''

''வேணாம் தாத்து. நீங்க சாப்பிடுங்க.'' என்றவள் கவலையோடு அமர்ந்திருந்தாள்.

''ஏன்டா குட்டிம்மா சோகமா இருக்கே?''

"நான் எதுக்குமே லாயக்கு இல்லையா தாத்து?"

''உனக்கு வெளி உலகம் தான்டா தெரியலை. அதனால தான் சம்பள விஷயம் உனக்கு புரியாமல் போச்சு. நம்ம ஆபீஸில் இருந்த டிவி ரிப்பேர் டீம் என்ன தெரியுமா சொல்லுவாங்க.

''உங்க பேத்தி இது வரைக்கும் எதையுமே சரி பண்ணாமல் கை விரிக்கலை. அந்த அளவுக்கு அவங்களுக்கு விஷய ஞானம் இருக்குன்னு தான் சொன்னாங்க. இவ்வளவு ஏன் உன் அண்ணனே நீ ப்ராஜெக்ட் பண்ணுறதை பார்த்துட்டு நீ பிரில்லியண்ட்னு தான் சொன்னான்.'' என்று சொல்லி பேத்தியின் தலையை தடவி கொடுத்தார்.

''நிஜமாவா? சும்மா என்னை சமாதானம் பண்ண சொல்லுறீங்களா?''

''நிஜம் தான்டா குட்டிம்மா. மீன் குஞ்சுக்கு நீந்த கத்துக் குடுக்கணுமா என்ன?" என்று அவர் கேட்டுக் கொண்டிருக்கும் போது ஜோதியின் கைப்பேசி அலறியது.

''யாருடா குட்டிம்மா?''

''மிஸ்டர் நிர்மல் பிரகாஷ்!'' என்று சொன்னவள் சற்றே விலகி சென்று அந்த அழைப்பை ஏற்று, ''சொல் லுங்கண்ணா!'' என்றாள்.

''இன்னைக்கு உன் கிளாஸில் என்ன நடந்துச்சு? உன்னையும் என்னையும் இணைச்சு தப்பா பேசினாங் களா?''

''ஆமாண்ணா. உங்களுக்கு யார் சொன்னாங்க?''

''யார் சொன்னாங்க என்பது இப்போ முக்கியம் இல்லை. நீ விஷயத்தை தாத்தாகிட்ட சொன்னியா? அவர் ஏதாச்சும் ஸ்டெப் எடுத்தாரா? நான் ஏதாச்சும் பண்ணனுமா?''

''விஷயத்தை சொன்னவங்க உங்ககிட்ட பாதியை தான் சொல்லி இருக்காங்க. தாத்தா வந்தார். காலே ஜோட கரெஸ்ங்கிற முறையிலே நானே டெர்மினேஷன் லெட்டர்ல சைன் பண்ணி அவங்களை வெளியே அனுப்பிட்டேன்.''

''தட் சவுண்ட்ஸ் கிரேட். ஐ லைக் இட். இன்னைக்கு தான் நீ பிரகாஷ் பேமிலி பொண்ணுன்னு நிரூபிச்சு இருக்க. லவ் யூடா. எனக்கு முக்கியமான மீட்டிங் இருக்கு. நான் அப்புறமா பேசுறேன்.'' என்றவன் அழைப்பை துண்டித்தான்.

''தாத்து! ஐயம் சோ ஹாப்பி. அண்ணா என்கிட்ட லவ் யூடான்னு சொன்னாங்க.''

பேத்தியின் முகத்தில் தாண்டவமாடும் சந்தோஷத்தை பார்த்து புன்னகையோடு அவள் தாத்தா அமர்ந்திருந் தார்.



தருண் தன் தம்பியின் காதில் மிக மெதுவான குரலில், ''அந்த நிர்மல் பிரகாஷ் இருக்கானே... அவன் என்ன தோரணையா இருப்பான் தெரியுமா. செம விறைப்பானா ஆளு. அப்படி திரும்பி பார்ப்பான் பாரு ஒரு பார்வை. சான்ஸே இல்லை. அவன் தங்கச்சி நம்ம வீட்டு பொண்ணா? நம்ப தான்டா முடியலை.'' என்றான்.

''நானும் அந்த நிர்மலை என் காலேஜில் பார்த்து இருக்கேன் தருண்.''

''உங்க காலேஜுக்கு கெஸ்ட்டா வந்தானா?''

''இல்லை தருண். ஓனர் சார்பா வந்தான்.''

''அவன் தான் உன் காலேஜ் ஓனரா?''

''இல்லை. அவன் தங்கை ஜோதி தான் காலேஜ் ஓனராம்.''

''என்னடா சொல்லுறே நம்ம ஜோதியா...?''

''ஆமா. இன்னைக்கு தான் ஜோதி இந்த விஷயத்தை சொன்னாள்.''

''டேய் ஸ்ரீதர்! எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக் குடா. தாரிகா அடிக்கடி நீ அதிகமா சம்பாதிக்கலைன்னு குறை சொல்லிக்கிட்டே இருப்பாள். அப்போ எல்லாம் நான் அவ்வளவு வருத்தப்பட்டு இருக்கேன். இப்ப தான்டா எனக்கு மனசு நிம்மதியாச்சு. இனிமேல் அவளால வாயை திறக்க முடியாதில்ல..'' என்று தருண் மகிழ்ச்சி அடைந்தான்.

தம்பியின் செல்வ நிலை உயர்வதை கண்டு பொறாமைப்படாமல் உண்மையான சந்தோஷத்தை

அவன் முகம் பிரதிபலித்தது. அதை கண்ட ஸ்ரீதருக்கு சந்தோஷமாக இருந்தது.

தாத்தாவின் அலைபேசி அலறியது. நிர்மல் தான் போன் பண்ணி இருந்தான். அவனிடம் பேச ஆரம்பித்தவர் பேசி முடிக்கும் வரை ''ம்ம்ம், சரி'' என்பதை மட்டுமே கூறிக் கொண்டு இருந்தார்.

''உங்க அண்ணன் தான். நாளைக்கு மதியம் காலேஜில் உன்னை எல்லோருக்கும் அறிமுகப்படுத்தணுமாம். இந்த வாரத்திலேயே பிரகாஷ் குடும்ப வாரிசுகளை அறிமுகப்படுத்துற பங்க்ஷனும் நடக்கணுமாம். அடுத்த நாள் பேப்பர்ல அது வரணுமாம்.''

“இது அவசியமா தாத்து?''

“கண்டிப்பாடா. இனி ஒரு பேச்சு இப்படி கிளம்பக் கூடாது. நீ என் பேத்தின்னு ஊர் அறிய சொல்லியே ஆகணும்.'' என்றவர்,

''ஸ்ரீதரிடம் திரும்பி, நீங்க என்ன சொல்லுறீங்க மாப்பிள்ளை?'' என்று கேட்டார்.

காலையில் சுனிதா விஷயம் நடக்காமல் போய் இருந்தால் நானும் ஜோ மாதிரி இது அவசியமான்னு தான் கேட்டிருப்பேன். ஆனா இப்போ... கண்டிப்பா நடக்கணும் தாத்தா. ஒவ்வொருத்தர்கிட்டேயும் போய் ஜோ யாரு என்னன்னு சொல்லிக்கிட்டு இருக்கிறதை விட... இது பெஸ்ட் ஐடியா.'' என்று ஸ்ரீதரும் அவர் கருத்தை ஆதரித்தான்.

“நாளைக்கு காலையிலே நீ நம்ம வீட்டுக்கு வரணும்டா. இத்தனை நாளும் தான் என் மேலே கோபமா இருந்தே! இப்போ தான் உன் கோபம் போயிடுச்சே! உன்னோட வரவுக்காக தான் நானும் அந்த வீடும் காத்துக்கிட்டு இருக்கோம்.''



''நாளைக்கா? ஸ்ரீதர்க்கும் எனக்கும் காலேஜ் இருக்கே!''

“சீக்கிரமா வாங்க. ஒரு பீரியடை மட்டும் கட் பண்ணுங்க.'' என்றதும்,

அவள் நிமிர்ந்து ஸ்ரீதரை பார்த்தாள். அவன் சரி என தலையசைக்கவும் அவளும் தன் சம்மதத்தை தெரிவித்தாள்.

''அப்போ நீங்க எல்லோரும் நாளைக்கு ரெடியா இருங்க. நான் வந்து கூட்டிட்டு போறேன்.''

''நீங்க அலைய வேண்டாம் தாத்தா. நாங்களே வந்துடுவோம்.'' என்று ஸ்ரீதர் கூறினான்.

''ஒரு நிமிஷம் இருங்க வரேன்.'' என்றவர் தன் கைப்பேசியை எடுத்துக் கொண்டு வெளியே சென்றார்.



## 35

ஜோதியின் தாத்தா பிரகாஷ் தன் உதவியாளர் மகேந்திரனிடம் பேச தான் வெளியே சென்றார்.

"ஐயா! தெருவுக்குள்ளே நுழைஞ்சுட்டேன். இப்ப வந்துடுவேன்." என்று மகேந்திரன் சொல்லவும் வாசல் வரை சென்றார்.

"ஐயா! நீங்க ஏன் இங்கே வந்து எனக்காக நிக்கி றீங்க?"

"இப்போ தான் நான் வெளியே வந்தேன். நீயும் வந்துட்ட. வா போகலாம்!" என்றார்.

அப்பொழுது இன்னொரு கார் வந்து அங்கே நின்றது. அதில் இருந்து தாரிகாவின் தந்தை இறங்கினார். தோளில் தூங்கிக் கொண்டு இருக்கும் தீப்தியோடு தாரிகாவும் இறங்கினாள்.

தாரிகாவின் தந்தைக்கும் ஜோதியின் தாத்தாவை நன்கு தெரியும் என்பதால், "ஐயா! நீங்க எங்கே இங்கே? வாங்க! வாங்க! இது என் சம்பந்தி வீடு தான்." என்று வரவேற்றார்.

ஜோதியின் தாத்தா இப்பொழுது தான் உள்ளே செல்ல போகிறார் போல என அவர் நினைத்துக் கொண்டார்.

"சம்பந்தி! யார் வந்திருக்காங்கன்னு பாருங்க!" என்று உற்சாகமாய் குரல் கொடுத்தார்.

தாத்தாவை பார்க்க வாசலுக்கு வந்த ஜோதி தாரிகாவின் தந்தையை கண்டதும் உள்ளே திரும்பினாள்.

"உட்காருங்க!" என்று ஜோதியின் தாத்தாவை உட் காரச் சொன்ன தாரிகாவின் தந்தை தானும் அவர் அருகே சென்று அமர்ந்து கொண்டார்.

'இந்த அல்டாப்பா!' என்பது போல் அனைவரும் அவரை அசுவாரஸ்யமாய் பார்த்திருந்தனர்.



தாரிகா குழந்தையோடு நின்று கொண்டிருப்பதை பார்த்த அவள் தந்தை, ஏய் ஜோதி! குழந்தையை வாங்கி கொண்டு போய் படுக்கையில் படுக்க வை! என்று உத்தரவிட்டார்.

'நீ மட்டும் இன்னைக்கு போன... மகளே செத்தே!' என்று ஸ்ரீதர் கண்களால் மிரட்டினான்.

'இந்த ஆள் பேச்சுக்கெல்லாம் நான் அடிபணிய மாட்டேன் ஸ்ரீ' என்று அவள் கண்ணாலே பதில் சொல் லிக் கொண்டிருந்தாள்.

அசையாமல் நின்றிருந்த ஜோதியை பார்த்து தாரி காவின் தந்தை, "நான் சொல்லுறது காதிலே விழலை. வா வந்து குழந்தையை தூக்கு." என்று சொல்லிவிட்டு,

அவள் தாத்தாவிடம் திரும்பி, "வேலைக்கார பொண்ணு. இவங்களை எல்லாம் அதட்டி மிரட்டி வேலை வாங் கணும். அது மட்டுமில்லை. நம்மளை மாதிரி பணக் காரங்க இருக்கிற இடத்திலே நிக்க விடக் கூடாது." என்று தோரணையாக சொன்னார்.

இதற்கிடையில் தெய்வநாயகி தாயம்மாவை விட்டு குழந்தையை தூக்கிச் சென்று தங்களது அறையில் படுக்க வைக்க சொன்னார்.

"சார்! உங்களுக்கு என்னை தெரிஞ்சு இருக்காது. உங்க கம்பெனிக்கு தான் நான் மெட்டீரியல் சப்ளை பண்ணிக்கிட்டு இருக்கேன்." என்று தாரிகாவின் தந்தை கூறினார்.

ஜோதியின் தாத்தா சோபாவை விட்டு எழுந்து சென்று அன்பரசுவின் அருகே அமர்ந்து கொண்டார்.

'நீ வா!' என்பது போல் தன் பேத்தியை பார்த்தார். அவளை தன்னருகே அமர வைத்துக் கொண்டார்.

அவர் தாரிகாவின் தந்தையை பார்த்து, ''இவ யாருன்னு சொன்னீங்க.... வேலைக்காரியா? இவள் யாருன்னு நான் சொல்லட்டுமா? மூணு தலைமுறையா பெண்களே பிறக்காத எங்க குடும்பத்திலே பிறந்த மகாலஷ்மி! எங்க பிரகாஷ் குடும்பத்தோட இளவரசி. என் ரெண்டாவது பையனோட ஒரே பொண்ணு.'' என்றார்.

'என்னது இந்த ஜோதி பிரகாஷ் குடும்ப வாரிசா?! ஒண்ணுமில்லாத அநாதை இல்லையா?' என்று தாரிகாவின் தந்தை ஆடிப் போய் அமர்ந்திருந்தார்.

தாரிகாவும் 'ஜோதி என்னை விட பணக்காரியா?' என்று அதிர்ந்தாள்.

''மகேந்திரன்! அதை குடுங்க!'' என்று தாத்தா சொன்னதும், அவர் ஒரு பெரிய பை ஒன்றை தூக்கி கொண்டு வந்து தாத்தா முன் நீட்டினார்.

ஜோதியின் தாத்தா அதை அன்பரசுவிடம் நீட்டி, ''என் பேத்தியோட நகைங்க.'' என்றார்.

''அதை அவகிட்டயே குடுத்துடுங்க சம்பந்தி.'' என்று அன்பரசு கூறியதும் தாத்தா அதை ஜோதியிடம் ஒப்படைத்தார்.

மகேந்திரன் இன்னுமொரு சிறிய பையும் தனியாக ஒரு நகைப் பெட்டியும் நீட்டினார்.

சிறிய பையை கொண்டு போய் ஸ்ரீதரிடம் நீட்டி, ''மாப்பிள்ளை! இது உங்களோடது.'' என்றார்.



''எனக்கு எதுக்கு தாத்தா? நான் என்ன பொண்ணா?''

''அதான் மாப்பிள்ளை உங்க பை சின்னதா இருக்கு.'' என்று சிரித்தவர்,

மகேந்திரன் தந்த இன்னொரு நகை பெட்டியை பேத்தியிடம் நீட்டி, ''உன் பையிலே உள்ள எந்த நகை பிடிக்கலைன்னாலும் நீ அழிச்சு செஞ்சுக்கோ. ஆனா இதை மட்டும் அழிக்காதே!''

''நீ பிறந்த விஷயம் தெரிஞ்ச உடனே உன் பாட்டி ஆசையா இதை செஞ்சாள். ஆனா உன் அப்பன் கடைசி வரைக்கும் எங்களை பார்க்காமலே போயிட்டான்.

''உன்னோட ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் நான் இந்த நகையோட தான் உன்னை பார்க்க வருவேன். நீ என் சொத்தை ஏத்துக்கிறேன்னு சொன்னதும் இதை உன் கழுத்திலே போட்டு ஆசீர்வாதம் பண்ணனும்னு நினைப்பேன். நீ தான் பிடிவாதக்கார உன் அப்பனுக்கு பிறந்தவள் ஆச்சே...'' என்று சலித்துக் கொண்டார்.

''எனக்கும் எங்க அப்பாவுக்கும் இந்த பிடிவாதம் யார்கிட்ட இருந்து வந்துச்சாம்?'' என்று ஜோதி சிணுங்கவும், அவர் வாய்விட்டு சிரித்தார்.

அவள் அந்த நகை பெட்டியை திறந்து பார்த்தாள். அதன் ஜொலிப்பே அது வைரம் பதித்த நகை என்று சொல்லியது.

''பாட்டியோட பரிசுன்னு சொல்லிட்டீங்க. அப்புறம் எப்படி தாத்து இதை நான் தூக்கி போடுவேன். நான் நாளைக்கு பங்ஷனுக்கு போட்டுக்கிறேன் தாத்து.'' என்றதும் அவர் முகம் மலர்ந்தார்.

''உன்னோட நகைகளை ஒப்படைச்சுட்டேன். உன்னோட சொத்துக்களை ஒரு வாரத்தில் ஒப்படைக்கிறேன். எந்தெந்த சொத்தை உன் பேரிலே எழுதனும். எதை மாப்பிள்ளை பேரிலே எழுதனும்னு ஆடிட்டர்கிட்ட கலந்து பேசி முறையா ரிஜிஸ்டர் பண்ணிடலாம்.''

''உங்க இஷ்டம் தாத்து!''

''இன்னைக்கு தான் என் பேத்தி என்னை திட்டாமல் தன்மையா பதில் சொல்லி இருக்காள்.'' என்று அவர் சிரித்தார்.

''மகேந்திரன்! சாருக்கு குடுக்க ஏதாச்சும் வச்சு இருக்கீங்களா?'' என்று தாரிகாவின் அப்பாவின் பக்கம் தாத்தா கை காட்டவும்,

''எஸ் ரெடி சார்!'' என்று என்று தாத்தாவிடம் சொன்ன மகேந்திரன்,

தாரிகாவின் அப்பாவின் முன் ஐ-பேடை நீட்டி, ''உங்களோட டீலிங்கை எங்க கம்பெனி முடிச்சுக்க விரும்புது. அதுக்கான உத்தரவு தான் இது. நாளைக்கு உங்க கையிலே கிடைக்கும்.'' என்றார்.

தாரிகாவின் அப்பா ஆடிப் போய் அமர்ந்திருந்தார். லட்சக் கணக்கில் பொருள் ஈட்டித் தரும் ஒரு ஆர்டர் கேன்சலானால்... அவரால் கற்பனை கூட செய்ய முடியவில்லை.

''மகேந்திரன் அங்கிள்! வாட் இஸ் திஸ்?'' என்று ஜோதி கேட்க,

''என்னால எதுவும் செய்ய முடியாது.'' என்று அவர் உறுதியாக கூறினார்.



''தாத்து! இது என்னோட வீடு. இங்கேயும் உங்க ஆட்டத்தை காட்டணுமா?''

''எனக்கு மன்னிக்க தெரியாதுடா குட்டிம்மா. மிகப் பெரிய பொறுப்புகள் உனக்காக காத்திருக்கு. இந்த மாதிரி ஆளுங்களுக்கு எல்லாம் நீ பரிதாபப்படக் கூடாது. உன் சம்பாத்தியத்துல பாதி பணத்தை நீ நல்ல காரியத்துக்காக செலவு பண்ணு. நான் உன்னை ஏன்னு கேட்க மாட்டேன்.

''ஆனா தகுதி பார்த்து அதை செய். எப்பவும் உதவி உரியவங்களுக்கு தான் போய் சேரணும். இந்த மாதிரி தகுதி இல்லாத ஆளுங்களுக்கு இல்லை. நான் வரேன்டா குட்டிம்மா! நாளைக்கு பார்க்கலாம்.'' என்று எழுந்து நின்றார்.

''வரேன் சம்பந்தி!'' என்றவர் அங்கிருந்த அனைவரிடமும் விடைபெற்று சென்றார்.

தாத்தா சென்றதும் தாரிகாவின் தந்தையும் சென்று விட்டார். வீட்டு ஆட்கள் மட்டுமே எஞ்சி நின்றனர்.

தெய்வநாயகி தன் சின்ன மருமகளிடம், ''உங்க தாத்தா உன் பேரிலே காலேஜ் எழுதி வச்சிருக்கிற விஷயம் உனக்கு முன்னாடியே தெரியும். அவ்வளவு வசதியான நீ எப்படி தாரிகாவோட புடவையை அயர்ன் பண்ணி குடுத்தே?'' என்று கேட்டார்.

''என் காலேஜ் என் கம்பெனி... இதெல்லாம் இந்த வீட்டுக்கு வெளியே தான் அத்தை. இந்த வீட்டை பொறுத்த வரை அவங்க மூத்த மருமகள். நான் இளைய மருமகள். அன்புக்கு நான் என்னைக்குமே கட்டுப் படுவேன்.''

தாரிகா என்ன சொல்வதென்று தெரியாமல் மாடி யேறி சென்றுவிட்டாள்.

ஜோதி தருண் முன் வந்து நின்று தயக்கத்துடன், ''தருண் மாமா! எங்க தாத்தா அப்படி பண்ணினது உங்களுக்கு வருத்தமா இருக்கா? ஐயாம் ஸாரி.'' என்றாள்.

''என் மாமனார் தான் பேசின பேச்சுக்கு வாங்கிக் கட்டிக்கிட்டார். இதுல நான் ஏன் வருத்தப்படப் போறேன்? உங்க தாத்தா நல்லது தான் பண்ணி இருக்கார்.

''அவ அப்பா இருக்கிற தைரியத்துல தானே தாரிகா அந்த ஆட்டம் ஆடினாள். இனிமேல் கொஞ்சம் அடக்கி வாசிப்பாள் இல்ல.

''உன்கிட்ட வந்து தாரிகா தாங்க்ஸ் சொன்னதா அம்மா சொன்னாங்க. இப்போ தான் கொஞ்சமா மனசு மாறிக் கிட்டு இருக்காள். முழுசா மாறட்டுமே!

''நானும் எவ்வளவு நாளைக்கு தான் வலிக்காத மாதி ரியே நடிக்கிறது. எனக்கு இந்த நல்லவன் பட்டம் வேண் டாம்.'' என்று அவன் வடிவேலுவாய் மாறி கலாய்க்க அனைவரும் சிரித்தனர்.

''தாத்தா இருக்கும் போது... ஏதோ காலேஜில் சுனிதா வால பிரச்சனைன்னு சொல்லிக்கிட்டு இருந்தீங்களே. என்னடா அது?'' என்று அன்பரசு விசாரித்தார்.

வகுப்பறையிலும் டிபார்ட்மென்டிலும் வைத்து சுனிதா தன்னிடம் நடந்து கொண்ட முறையை ஜோதி விவரித்தாள்.



இப்படியும் மனிதர்களா? வாய் கூசாமல் எப்படி இப்படி எல்லாம் ஒரு பெண்ணால் பேச முடிந்தது? என்று வியந்தனர்.

பின் அனைவரும் தங்களது அறையை நோக்கி செல்ல ஆரம்பித்தனர். ஜோதி அறைக்குள் வந்த பொழுது ஸ்ரீதர் அந்த நகை பையை பீரோவில் பத்திரப்படுத்திக் கொண்டிருந்தான்.

அவனுக்கு பின்னால் நின்று கொண்டு, ''ஸ்ரீ!'' என்று ஜோதி அழைத்தாள்.

''சொல்லுடா ஜோ.''

''என்னை நகை கடைக்கு கூட்டிட்டு போறீங்களா?''

'பெரிய பை நிறைய வெறும் நகை டப்பாவா இருக்கு. அதை திறந்து கூட பார்க்காதவள் கடையிலே போய் எதை வாங்கப் போகிறாள்?' என்று அவன் ஆச்சரியமாய் திரும்பிப் பார்த்தான்.

''இத்தனை நாளும் தாலியை வெளியே தெரியாமல் மறைக்கணும்னு நினைச்சு மெல்லிய செயினில் போட்டு இருந்தேன். இப்போ தான் எல்லோருக்கும் தெரிஞ்சுடுச்சே. நாளைக்கு பங்ஷன் போகும் முன்னாடி இந்த செயினை மாத்தணும்.

''தாத்தா குடுத்த பையில் தாலி செயின் கூட இருக் கலாம். ஆனால் அது எனக்கு வேணாம். நீங்க வாங்கி தரீங்களா?'' என்றதும் அவனது முகம் மலர்ந்தது.

அவளது இடுப்பில் கை போட்டு தன்னருகே இழுத் தவன், நீ என்னை விட எவ்வளவு வேணா சம்பாதிச் சுக்கோ. ஆனால் என்னைக்குமே உனக்கு தேவையான

பொருள் என்னோட சம்பாத்தியத்துல வாங்கினதா இருக்கணும். இப்போ நீ சொல்லுற இந்த தாலி செயின் மாதிரி உன் பர்த் டே டிரஸ், உன் காலேஜ் பீஸ், உன் மெடிக்கல் பில் இப்படி...'' என்று அவன் விளக்கினான்.

எம்பி அவனது கன்னத்தில் அழுத்தமாய் முத்தம் பதித்தவள், ''ஐ லவ் யூ ஸ்ரீ.'' என்றாள்.

"ஐ லவ் யூ டூ ஜோ." என்றவன் அவளை இறுக்கமாய் அணைத்துக் கொண்டான்.



## 36

அவர்கள் வெளியே சென்று அந்த தாலி செயினை வாங்கினார்கள். அதில் தாலியை கோர்த்து வாங்கி அணிந்து கொண்டவள் கணவனுடன் வீடு திரும்பி னாள்.

''காலையிலே சீக்கிரம் எழுந்துக்கணும். அதனால சீக்கிரமா தூங்கலாம்.'' என்று ஸ்ரீதர் சொல்லவும் படுக்கையில் படுத்துக் கொண்டனர்.

"ஸ்ரீ! உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்ல மறந்துட் டேன். விமல் அண்ணா என்னை யூரோப் டூர் கூப்பிட் டாங்க.''

" உன்னை மட்டுமா? இல்ல என்னையும் சேர்த்தா?"



''நோ. நான், நிர்மல் அண்ணா, விமல் அண்ணான்னு மூணு பேர் மட்டும்.''

''அடிப்பாவி! எப்போடா உன் எக்ஸாம் முடியும் ஹனிமூன் போகலாம்னு நான் காத்திருக்கேன். நீங்க அண்ணன் தங்கச்சி தனி டூரா போட நினைக்கிறீங்க? அதெல்லாம் முடியாது.''

''நேஹா அண்ணி ஒத்துக்கிட்டாங்க தெரியுமா?''

''அவங்க ரெண்டு பேரும் ஹனிமூன் முடிச்சு பிள்ளையும் பெத்துக்கிட்டாங்க. நாம அப்படியா?''

''நான் விமல் அண்ணாகிட்ட என்ன தெரியுமா சொன் னேன்? ரெண்டு வாரமெல்லாம் என் ஸ்ரீதர் இல்லாமல் என்னால இருக்க முடியாதுன்னு.''

''தட்ஸ் மை கேர்ள்!'' என்றவன் அவளது கன்னத்தில் அழுத்தமாய் முத்தம் பதித்து அவளை அணைத்துக் கொண்டு அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்து கொண்டான்.

''நான் முழுசா சொல்லி முடிக்கலை. என்னால ரெண்டு வாரம் வர முடியாது. நாலு நாள் வேணா வரேன்னு சொன்னேன். சோ மலேசியா போகலாம்னு சொல்லி இருக்காங்க.''

அவளை விட்டு விலகி அவள் முகம் பார்த்தவன், ''அப்போ நிஜமாவே போகப் போறீங்களா? எக்ஸாம் முடிஞ்சு லீவ் விட்டதும் நான் முதல்ல உன்னை கடத் திட்டு போயிடுவேன்.'' என்றான்.

''லீவிலே உங்களுக்கு வேலை எதுவும் வந்துடுச் சுன்னா என்ன செய்வீங்க?''

“லீவில் என்ன வேலை வரும்?”

“இப்போ அன்னைக்கு நான் எங்க தாத்தா கூடவும் பெரியப்பா கூடவும் டைம் ஸ்பெண்ட் பண்ணனும்னு நினைச்சதால உங்களுக்கு ஹைதிராபாத்திலே வேலை வரலியா? அப்படி சடனா வேலை வந்துட்டால்?” என்றதும் அவன் படுக்கையில் எழுந்து அமர்ந்தான்.

“அடப்பாவிங்களா! அதெல்லாம் உங்க வேலையா? வெரி டேன்சரஸ் பெல்லோஸ். தெய்வங்களா! கொஞ்சம் என் மேல கருணை காட்டி என் வைஃப்போடு என்னை ஹனிமூன் அனுப்பி வைங்க.”

“இப்படி தன்மையா கேட்டால் உங்க ஆசை கன்சிடர் செய்யப்படும். இல்லைன்னா... நாங்க வச்சு செஞ்சுடு வோம் பார்த்துக்கோங்க!” என்றவள் எழுந்து அமர்ந்து அவனை கட்டிக் கொண்டு நகைத்தாள்.

அவளை இறுக அணைத்துக் கொண்டவன் அவளது உச்சியில் அழுத்தமாய் முத்தமிட்டான்.

மறுநாள் காலையில் ஜோதி மெல்லிய ஜரிகை கரையிட்ட பட்டுப்புடவை ஒன்றை கட்டிக் கொண்டு தன் பாட்டி தனக்காக செய்து வைத்த நகையை அணிந்து கொண்டு தன் தாத்தாவின் வீட்டிற்கு கிளம்பினாள்.

மருமகளை கண்ட தெய்வநாயகி, “நானே உன்னை புடவை கட்ட சொல்லுவோம்னு இருந்தேன். நீயே கட்டிட்டு வந்துட்ட.” என்றார்.

“நான் சுரிதார் தான் போடலாம்னு இருந்தேன். அதை பார்த்துட்டு நீங்க எனக்கு மாமியாரா மாறி போய் புடவை கட்டு ஜோதின்னு உத்தரவு போட்டு... நான் திரும்ப



போய் டிரஸ் மாத்தி டைம் வேஸ்ட் பண்ண வேண்டாமேன்னு தான் நானே புடவை கட்டிட்டு வந்துட்டேன்.” என்றதும் அவர் முறைத்தார்.

“ஆனா உன்னால இப்படியே காலேஜுக்கு போக முடியுமா?”

“இல்லத்தை. பேகில் சுரிதார் வச்சு இருக்கேன். அங்கே போய் மாத்திக்கிறேன்.”

அவர்கள் அனைவரும் இரு கார்களில் கிளம்பி அவளது தாத்தா வீட்டை அடைந்தார்கள். ஜோதியும் ஸ்ரீதரும் அவனது காரில் பயணித்தனர்.

“ஸ்ரீ! வீடு ரொம்ப பிரம்மாண்டமா இருக்கும் போல! உங்க வீட்டை பார்த்தே நான் மிரண்டேன். இது அதை விட பெருசா இருக்கே.” என்று அவனிடம் புலம்பினாள்.

“வீட்டை பார்க்காதே. அங்கே இருக்கிற மனுஷங்களோட மனசை மட்டும் பாரு.” என்றதும் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு இறங்கினாள்.

வீடு மொத்தமும் மாவிலை தோரணம் கட்டி இருந்தார்கள். வாசலில் பெரிய கோலம் போடப்பட்டு இருந்தது.

‘பயங்கர வரவேற்பா இருக்கே!’ என நினைத்து கொண்டே வீட்டை நோக்கி நடந்தாள்.

அனைவரும் வாயிலுக்கு வந்து வரவேற்றனர். அவர்கள் இருவரையும் ஒன்றாக நிற்க வைத்து நேஹா ஆலம் சுற்றி முடிக்கவும் வீட்டிற்குள் அழைத்து சென்றனர்.

ஜோதியும் ஸ்ரீதரும் முதலில் தாத்தாவின் காலிலும் பின் அவளது பெரியப்பா பெரியம்மா கால்களிலும்

விழுந்து வணங்கினர். நிறைந்த மனதோடும் முகம் கொள்ளா புன்னகையோடும் அவர்கள் ஆசீர்வதித்தனர்.

''ஜோதி! என் கூட வா. நான் உனக்கு வீட்டை சுத்தி காட்டுறேன்.'' என்று விமல் அழைக்கவும் ஜோதி அவனுடன் சென்றாள். கூடவே நிர்மலும் சென்றான்.

''வாங்க மாப்பிள்ளை. நாம அங்கே உட்கார்ந்து பேசிக் கிட்டு இருப்போம்.'' என்று ஸ்ரீதரை அவள் பெரியப்பா அழைத்து சென்றார்.

ஜோதி, நிர்மல், விமல் தவிர மீதி உள்ள அனைவரும் அந்த மிகப் பெரிய வரவேற்பறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

அந்த வீட்டின் பிரம்மாண்டத்தை கண்டு தாரிகா மிரண்டு போய் அமர்ந்திருந்தாள்.

ஜோதி விமலுடனும் நிர்மலுடனும் பேசிக் கொண் டிருந்தாள். நேஹா ஸ்ரீதரை அழைத்துக் கொண்டு அவர் களருகே வந்தாள்.

''ஸாரி ஸ்ரீதர்! உங்களை விட்டுட்டு வந்துட்டோம்.'' என்று நிர்மல் கூறினான்.

''நீங்க மூணு பேரும் ஒண்ணா சுத்த ஆசைப்படு வீங்கன்னு தான் நான் இவ்வளவு நேரம் அங்கேயே இருந்தேன். தாத்தா தான் அனுப்பி வச்சார்.''

''நிர்மல் அண்ணா! நான் ரொம்ப நாளா ஒரு விஷயம் கேட்கணும்னு நினைச்சேன். அன்னைக்கு காலேஜ் ஓரியன்ட்டேஷன் டே அப்போ மேடையில் உட்கார்ந்து கிட்டு ஸ்ரீதரை எதுக்கு முறைச்சீங்க? இல்லைன்னு



பொய் சொல்லாதீங்க. நான் நல்லாவே நோட் பண்ணினேன்.''

''நான் ஏன் பொய் சொல்ல போறேன்? என் தங் கச்சியை கேட்காமல் அவ கழுத்திலே ஒருத்தன் தாலி கட்டினால் நான் அப்படி தான் முறைப்பேன்.''

''ஐயோ! அது நான் இல்லை.'' என்று ஸ்ரீதர் அலறவும், அனைவரும் சிரித்தனர்.

''அன்னைக்கு மேடை பக்கத்திலே நின்னுக்கிட்டு ஸ்ரீதரை பார்த்து நீ விட்ட ஜொள்ளை பார்த்துட்டு தான் என் டென்ஷன் கொஞ்சம் குறைஞ்சது.''

விமல் ஸ்ரீதரிடம், ''அத்தான்! அன்னைக்கு ஜோதி உங்களை பார்த்து விட்ட ஜொள்ளை வீடியோ கவரேஜ் பண்ணி வச்சிருக்கோம். அப்புறமா உங்களுக்கு காட்டு றேன்.'' என்றான்.

நிர்மல் ஸ்ரீதரை விட வயதில் பெரியவன் என்பதால் இயல்பாக பெயர் சொல்லி அழைத்தான். விமல் சின் னவன் என்பதால் அத்தான் என்று அழைத்தான்.

''வீடியோ கவரேஜா?'' என்று ஜோதி ஆச்சரியப்பட,

''ஆமா! உங்க ரெண்டு பேரை மட்டும் தனியா கவர் பண்ணி இருக்கோம். ஜூம் போட்டு'' என்று விமல் கிண்டல் செய்தான்.

''ஜோதி! உனக்கு அத்தானை விட யாரை அதிகம் பிடிக்கும்?'' என்று விமல் கேட்க,

''ஸ்ரீதர் விமலிடம், ஏன்? இல்லை ஏன்னு கேட் கிறேன்? உனக்கு என் மேல அப்படி என்ன காண்டு?'' என்று கேட்டான்.

''ஓகே கூல் அத்தான். எப்படியும் அவ உங்களை விட யாரையும் தனக்கு பிடிக்கும்னு சொல்ல மாட்டாள்.'' என்று ஸ்ரீதரை பார்த்து கூறிய விமல்,

நிர்மல் புறம் திரும்பி, ''ஜோதி அன்னைக்கு என்ன அண்ணா சொன்னாள் மூணு இல்லை நாலு நாள்னா என்னால ஸ்ரீயை பார்க்காமல் சமாளிக்க முடியும். அதுக்கு மேலன்னா மாமன் மனசுக்குள்ள பிராண்ட ஆரம்பிச்சுடுவான்.'' என்று தங்கையை போல் சொல்லிக் காட்டினான்.

உடனே நிர்மல் தன் பங்கிற்கு, ''என் மூடை மாத்துற மந்திரக்கோல் ஸ்ரீ கையிலே தான் இருக்கு. அவர் மேஜிக் பண்ணி என்னை சரியாக்கிட்டார்.'' என்று கிண்டல் செய்தான்.

''அண்ணா!'' என்று சிணுங்கிய ஜோதி,

ஸ்ரீதரிடம் திரும்பி, ''பாருங்க ஸ்ரீ! ரெண்டு பேரும் என்னை எப்படி கிண்டல் பண்ணுறாங்கன்னு.'' என்று சொல்லி அவன் புஜத்தில் சாய்ந்து கொண்டாள்.

ஸ்ரீதர் அவளை தோளோடு அணைத்து கொண்டு புன்னகைத்தான்.

''சரி ஜோதி. அத்தானுக்கு அப்புறமா உனக்கு யாரை ரொம்ப பிடிக்கும்?''

''ஸ்ரீதருக்கு அப்புறமான்னா நான் தாத்தா பேரை தான் சொல்லணும். ஆனா அவருக்கும் எனக்கும் ரத்த சம்பந்தம் இருக்கு. அதனால எங்களுக்கு இடையே இருக்கிற பாசம் நார்மலானது.



''பதினெட்டு வயசு பொண்ணுக்கு தன் அம்மாவோட துணை ரொம்பவே தேவைப்படும். ஆனா அதை எனக்கு தரும் நிலையில் அன்னைக்கு எங்க அம்மா இல்லை. நான் தான் அவங்களை பார்த்துக்கிற நிலையில் இருந்தேன்.

''எங்க அம்மா எனக்கு தர வேண்டிய அன்பையும் அரவணைப்பையும் மட்டுமில்லாமல்... என்னோட எல்லா விஷயத்தையும் ஷேர் பண்ண கூடிய ஒரு நல்ல பிரண்டா... என்னை அதட்ட வேண்டிய நேரத்தில் கூட கடினமா நாலு வார்த்தை பேச தெரியாமல் முறைக்க மட்டுமே செய்ய தெரிஞ்ச என்னோட மாமியார் பெயரை தான் நான் சொல்லுவேன்.

''இன்ஃபாக்ட் அவங்க என்னை முறைச்சதை விட நான் அவங்களை உரிமையா முறைச்சது தான் அதிகம். ஸ்ரீக்கு அடுத்தபடியா எங்க அத்தையை தான் எனக்கு ரொம்ப பிடிக்கும்.'' என்றாள்.

அவள் பேசுவதை அனைவரும் ஒரு புன்னகையோடு கேட்டுக் கொண்டிருந்தனர்.

அவர்களை தேடி அங்கே வந்த அவளின் தாத்தா அவள் பேசியதை கேட்டு மகிழ்ந்து போனார். இதை விட தன் பேத்திக்கு என்ன வேண்டும் என்று அவருக்கு தோன்றியது.

அவர்கள் அனைவரும் பேசி சிரித்துக் கொண்டே வரவேற்பறைக்கு வந்தனர்.

வீட்டை சுற்றிப் பார்த்துவிட்டு வந்த பேத்தியிடம் அவள் ''தாத்தா, பாட்டியோட ஆசீர்வாதம் வாங்கிக்

கோடா!'' என்று அவளை பூஜை அறைக்கு அழைத்து சென்றார்.

அங்கே தெய்வங்களின் படங்கள் ஒரு சுவர் முழுவதும் மாட்டப்பட்டு இருந்தன. இன்னொரு சுவரில் அவளது பாட்டியின் பெரிய படம் ஒன்று மாட்டப்பட்டு இருந்தது. அதற்கு அருகே அவளது தாய் தந்தையின் புகைப்படமும் மாட்டி இருப்பதை கண்டவள் இனிதாய் அதிர்ந்தாள்.

கண்களில் நிறைந்த நீரோடு தன் தாத்தாவை திரும்பிப் பார்க்க ''இந்தக் கிழவனுக்கு கொஞ்சம் லேட்டா தான்டா புத்தி வந்திருக்கு.'' என்றார்.

"தாங்க்ஸ் தாத்து!'' என்று அவரை கட்டிக் கொண்டாள்.

பூஜை அறையில் இருந்த அனைத்து தெய்வங்களின் முன்பும் விழுந்து வணங்கினாள்.

"அம்மா! நான் உங்களுக்கான இடத்தை வாங்கி குடுத்துட்டேன்னு நினைக்கிறேன். இப்போ நீங்க ஹாப்பியா?" என்று தன் தாயிடம் மானசீகமாய் பேசினாள்.

அங்கே வந்த தீப்தி, ''ஸ்ரீ சித்தி! இது யாரோட போட்டோ?'' என்றாள்.

"இவங்க தான்டா என்னோட அம்மாவும் அப்பாவும்."

"நான் அவங்களை எப்படி கூப்பிடணும்?''

"தாத்தா பாட்டின்னு கூப்பிடு.''

தீப்தி அந்த புகைப்படத்தின் முன் சென்று, ''பாட்டி! தாத்தா! நீங்க ரெண்டு பேரும் சாமிகிட்ட போயிட்டீங்கன்னு சித்தி சொன்னாங்க. நீங்க சித்தியை உங்க கூட கூப்பிட்டுக்காதீங்க. சித்தி இங்கேயே இருக்கட்டும்.



எனக்கு சித்தி வேணும். நான் அவங்களை நல்லா பார்த்துக்கிறேன். என்னால முடியலைன்னா சித்துகிட்ட ஹெல்ப் கேட்கிறேன்.'' என்றாள்.

முகம் கொள்ளா புன்னகையுடன் குனிந்து தீப்தியின் கன்னத்தில் முத்தமிட்ட ஜோதி, ''உன்னால முடியலைன்னா தான் சித்துகிட்ட ஹெல்ப் கேட்பியா? சூப்பர்டா புஜ்ஜு!'' என்றாள்.

அனைவரும் காலை உணவை சாப்பிட்டு முடிக்கவும், பெரியப்பா! ''திஸ் இஸ் டூ யூ. உங்க தம்பி உங்களுக்காக வச்சுட்டு போய் இருக்கார்.'' என்று தன் வீட்டில் இருந்து எடுத்து வந்த கவரை நீட்டினாள்.

''நீ ஒண்ணும் இதை பிரிச்சு பார்த்துடலையே!'' என்று அவள் பெரியப்பா கேட்க,

''அவளுக்கு தெரியாமல் உங்ககிட்ட ஏதாச்சும் ரகசியம் இருக்கா என்ன?'' என்று விமல் கிண்டல் பண்ண, ஜோதி அவன் கையை தட்டி ஹை பைவ் கொடுத்தாள்.

''நான் பிரிக்கலை. ஆனால் உள்ள என்ன திங்ஸ் இருக்குன்னு என்னால லிஸ்ட் அவுட் பண்ண முடியும். ஒவ்வொரு பொருளோட பின்னணி கதையையும் என்னால சொல்ல முடியும்.''

அவளது பெரியப்பா தன் இரு கைகளையும் தூக்கி கும்பிட்டு, ''அம்மா தாயே! அப்பப்போ உன் லெவலை மறந்து ஏதாச்சும் பேசிடுறேன். என்னை மன்னிச்சுடு!'' என்றார்.

ஜோதி தன் வலது கையை ஆசீர்வதிப்பது போல் உயர்த்தி, மன்னித்தேன் மகனே! ''உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்!'' என்றாள்.

அவளது பெரியப்பா ஒரு தீவிரத்துடன், ''எனக்கு என் தம்பியோட திரும்ப வாழணும். அவன் உன் வயித்தில் வந்து பிள்ளையா பிறப்பான். அவனை தூக்கி வச்சு நான் கொஞ்சணும்.'' என்றார்.

அனைவருமே என்ன சொல்வதென்று தெரியாமல் அமைதியாகி விட்டனர்.

ஜோதியின் பின்னால் நின்று கொண்டிருந்த ஸ்ரீதர் குனிந்து ஜோதியின் காதில், ''அப்போ எந்த சதி வேலையும் பண்ணாமல் நம்மளை ஹனிமூனுக்கு அனுப்பி வைக்க சொல்லு! நான் தீயா வேலை பார்த்து அவர் ஆசையை நிறைவேத்தி வைக்கிறேன்.'' என்றான்.

ஜோதி தன் கைகளை பின்னே செலுத்தி அவனை இடித்தாள்.

ஜோதி புடவையில் இருந்து சுரிதாருக்கு மாறினாள். இன்னொரு நாள் நிதானமாக வருவதாக கூறி அனைவரும் அவர்களிடம் விடைபெற்றனர்.

கல்லூரிக்கு ஸ்ரீதரோடு காரில் வந்து ஜோதி இறங்கினாள். ஸ்ரீதர் அவளிடம் விடைபெற்று சென்றான்.

ஜோதியின் தாத்தா அவளை அழைத்து மதியம் நடக்கப் போகும் விழா குறித்து பேசினார்.

அவரிடம் பேசி முடித்து மணியை கூட பார்க்காமல் அவள் வகுப்பறைக்கு சென்றாள். ஸ்ரீதர் தன் பாடத்தை துவக்கி இருந்தான்.



''எக்ஸ்கியூஸ் மீ சார்.''

அவன் பாடத்தை நிறுத்திவிட்டு அவளை பார்த்தான். பின் தன் வாட்ச்சில் மணி பார்த்தான். அவளும் தன் வாட்ச்சை அப்பொழுது தான் திருப்பி மணி பார்த்தாள்.

''ஸாரி சார்! ஐ டிட்டின்ட் நோட்டிஸ் த டைம்.''

''டென் மினிட்ஸ் லேட் என்றால் உள்ளே அலோவ் பண்ணிட்டு ஆப்சென்ட் மார்க் பண்ணுவேன். நீங்க செவன்டீன் மினிட்ஸ் லேட்டா வந்திருக்கீங்க. யூ பெட்டர் ஸ்டே அவுட்.''

மாணவர்கள் அனைவரின் இதழ்களிலும் கேலியான முறுவல் பிறந்தது. ஆனால் ஸ்ரீதர் எவ்வித சலனமும் இல்லாமல் தன் பாடத்தை தொடர்ந்தான்.

''அட வாட்ச்சுக்கு பிறந்த என் வாத்தி!'' என்று ஜோதி தன் மனதினில் திட்டிக் கொண்டே அந்த இடம்விட்டு நகர்ந்தாள்.

'இன்னைக்கு வீட்டுல வச்சு இவன் காதல் பாடம் எடுக்கிறானோ இல்லையோ இந்த பாடத்தை கண்டிப்பா எடுப்பான். இப்படி மாட்டிக்கிட்டேனே!' என மனதிற்குள் புலம்பினாள்.

அவள் வெளியே தனியே நின்று கொண்டிருப்பதை அந்த வழியாக வந்த ஹெச்.ஓ.டி பார்த்து விட்டு அவளருகே வந்து, ''கிளாஸ் போகலையா? ஏன் இங்கே தனியா நிக்கிறீங்க?'' என்று கேட்டார்.

''கிளாஸுக்கு லேட்டா வந்தேன்னு சார் என்னை உள்ளே அலோவ் பண்ண மாட்டேன்னு சொல்லிட்டார்.''

“எந்த சார்?'' என்று அவர் பதட்டத்தோடு விசாரிக்க,

“ஸ்ரீதர் சார்.'' என்று அவள் சொன்னதும் அவர் நமட்டாய் சிரித்துவிட்டு அந்த இடம் விட்டு நகர்ந்தார்.

அவள் தெய்வநாயகியை போனில் அழைத்தாள்.

“என்ன ஜோதி உனக்கு கிளாஸ் இல்லையா? இப்போ போன் பண்ணி இருக்க.''

“வாழ்க்கையிலே படிப்பை விட உன் வருங்கால வாழ்க்கை நல்லா இருக்கணும்னா மாமியாரை சோப்பு போடுற வேலையை பாருன்னு உங்க பிள்ளை தான் அத்தை சொன்னார்.''

“படிப்பு முக்கியம் இல்லைன்னு ஸ்ரீதர் சொன்னானாக் கும். இதை நான் நம்பணும். நீ என்ன செஞ்சே? அவன் என்ன சொன்னான்?''

“கிளாஸுக்கு லேட்டா போயிட்டேனாம். பதினேழு நிமிஷம்னு நிமிஷ கணக்கு சொல்லுறார். வெளியே அனுப்பிட்டார்.''

“அப்போ இன்னைக்கு வீட்டுக்கு வந்ததும் சண்டை போட உங்களுக்கு ஒரு காரணம் கிடைச்சுடுச்சுன்னு சொல்லு. அப்பாடா! இப்போ தான் எனக்கு நிம்மதியா இருக்கு.''

“சண்டையை பார்க்க ரொம்ப ஆவலா காத்துக்கிட்டு இருக்கிற மாதிரி தெரியுது.''

“ஆமா. இல்லைன்னா எங்களுக்கு பொழுது போகா துல்ல!''

“எல்லாம் என் நேரம். அடுத்த பீரியட் ஆரம்பிக்கிற வரைக்கும் பொழுது போகணுமேன்னு உங்களுக்கு



போன் போட்டால்... நீங்க என்னை வெறுப்பேத்துறீங்க?'' என்று புலம்பினாள்.

“பொழுது போகலைன்னா உன் பிரண்டு யாருக் காச்சும் போன் பண்ண வேண்டியது தானே!''

“நீங்க தானே அத்தை என்னோட பிரண்டு. இன் னைக்கு காலையிலே என்னோட அண்ணன்கள்கிட்ட நான் என்ன தெரியுமா சொன்னேன்...'' என்றவள் அதை விளக்கினாள்.

“எனக்கு ஆனந்த கண்ணீர் வருது போ. உங்க மாமா என்கிட்ட என்ன தெரியுமா சொல்லுவார்... ‘என் மரு மகள் ஜோதி என் மேல எவ்வளவு மதிப்பு வச்சிருக்காள். நான் என்ன சொன்னாலும் உடனே சரின்னு தலையாட்டி கேட்டுக்குவாள்னு' பெருமை பேசுவார். இன்னைக்கு அவர் வரட்டும். நீ சொன்னதை சொல்லி அவரை வெறுப்பேத்துறேன்.''

“பாருங்களேன்! உங்களுக்குள்ள ஒரு ஜோதி ஒளிஞ்சிருக்கிற விஷயம் எனக்கு தெரியாமல் போச்சு. ஸ்ரீதரை வெறுப்பேத்த நினைக்கிற ஜோதி மாதிரியே பேசுறீங்க.''

“உன் கூட சேர்ந்த பின்னாடி தான் நான் இப்படி மாறிட்டேன். எல்லாம் சகவாஷ தோஷம் தான் காரணம்.'' என்று கூறி தெய்வநாயகி சிரித்தார்.

“என்னோட சேர்ந்துட்டீங்க இல்ல. இனிமேல் உங்க வாழ்க்கை எப்படி மாறுதுன்னு மட்டும் பாருங்க. ஒகே பை அத்தை.'' என்று சொல்லி அழைப்பை துண்டித் தாள்.

அந்த வகுப்பு முடியும் வரை இங்கும் அங்கும் உலாத்தினாள். அந்த வகுப்பு முடிந்து ஸ்ரீதர் வெளியேறியதும் அவள் உள்ளே நுழைந்தாள்.

அனைவரும் அவளை பார்த்து சப்தமாக நகைத்தனர்.

"ஜோதி! நாளைக்கு சார் கிளாஸுக்கு வரக் கூடிய நிலமையில் இருப்பாரா?"

"இல்ல சில பல கட்டுகளோடும் பிளாஸ்ட்டரோடும் வருவாரா?'' என்று அவளை கிண்டல் செய்தனர்.

"பிரண்ட்ஸ்! அங்க தான் நீங்க சாரை புரிஞ்சுக்கலை. இதுக்கு முன்னாடி எனக்கு அவர் ஆப்செண்ட் மார்க் பண்ணதில்லையா என்ன? டெஸ்ட் பேப்பர்ல முட்டை போட்டே குடுத்தார்.

''மறுநாள் ஒரு கீறல் கூட இல்லாமல் வந்தாரா இல்லையா? இந்த விஷயத்துல எல்லாம் அவரை அசைக்க முடியாது.'' என்று கூறி அவள் பெருமூச்சு விட, மொத்த வகுப்பும் சிரித்தது.

அப்பொழுது ஸ்ரீதர் அவள் வகுப்பறைக்குள் நுழைந்து முதல் பெஞ்சில் அமர்ந்திருந்த மாணவனிடம், ''சாரி! உங்க பென்னை குடுக்க மறந்துட்டேன்.'' என்று சொல்லி பேனாவை கொடுத்தான்.

ஜோதி அவனை பார்க்க... ஸ்ரீதர் அவளை முறைத்துக் கொண்டே அங்கே இருந்து செல்லவும், ஜோதி தன் தலையில் கை வைத்தாள். மொத்த வகுப்பும் மீண்டும் நகைத்தது.



''நான் நாளைக்கு சேதாரம் இல்லாமல் வரேனான்னு பாருங்க. இப்போ கிளாஸில் ஏடுத்த இந்த டாப்பிக்கை இன்னைக்கு என் மண்டைக்குள்ள ஏத்தாமல் விட மாட்டார். வசமா சிக்கிட்டேன்.'' என்றதும் அனைவரும் சிரிக்க ஆரம்பித்தனர்.

அவர்களின் அந்த சிரிப்பு உங்களின் வாழ்க்கையிலும் என்றும் நிலைக்கட்டும் என்ற பிரார்த்தனையோடு உங்களிடம் இருந்து விடைபெறுகிறேன்.


நீ வருவாய் என...
பிரேமா